# MALAYSIAN Indian BLUEPRINT



2017

© பிரதமர் அலுவலகம் 2017

காப்புரிமைச் சட்டத்தின் கீழ் இந்நூல் பதிவு செய்யப்பட்டுள்ளது. வெளியீட்டாளரின் எழுத்து மூலமான ஒப்புதல் இன்றி, இந்நூலை மறுஉருவாக்கம் செய்யத் தடை செய்யப்பட்டுள்ளது.

மலேசிய இந்தியர் பெருந்திட்டம் ஆங்கிலம், மலாய் மற்றும் தமிழ் மொழிகளில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், மலாய் மற்றும் தமிழ் மொழிகளில் ஏதாகிலும் வேறுபாடு இருந்தால், ஆங்கில பதிப்பே சரியானதாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

**மலேசிய இந்தியர் பெருந்திட்டம்**

பதிப்பு:

மலேசிய இந்தியர் பெருந்திட்டச் செயலகம்
பிரதமர் அலுவலகம்
பெர்டானா புத்ரா கட்டிடம்
மத்திய அரசாங்க நிர்வாக மையம்
62502 புத்ராஜெயா
www.mib.my

# மலேசிய இந்தியர் பெருந்திட்டம்

# முன்னுரை



பல ஆண்டுகளுக்கு முன்பு, தோட்டப்புறங்களிலிருந்து இடம்பெயர்க்கப்பட்டதினால் ஏற்பட்ட மாற்றங்களினால், நாடுதோறுமுள்ள பல மலேசிய இந்தியக் குடும்பங்கள் குறிப்பிட்ட சவால்களை எதிர்நோக்கி வருகின்றனர். 2009ஆம் ஆண்டு முதல், இச்சவால்களை அடையாளங்காணும் நோக்கில் அரசாங்கம் துணிச்சலான நடவடிக்கைகளையும் குறிப்பிடத்தக்க தலையீடுகளையும் மேற்கொண்டு வருகிறது. கீழ்நிலையிலுள்ள 40% மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில், முயற்சிகள் மற்றும் இலக்குகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து செயல்திறன்மிக்க நடவடிக்கைத் திட்டத்தை அமல்படுத்த இப்பெருந்திட்டம் முனைகிறது.

மேலும், மலேசிய இந்தியர்கள் முழுமையான சமூகப்பொருளாதார மேம்பாட்டை அடையும் பொருட்டு அதற்கேற்றவாறு கொள்கைகளும் செயல்திட்ட இயங்குமுறைகளும் தேவை என்பதை இப்பெருந்திட்டம் வலியுறுத்துகிறது.

அத்தகைய கொள்கைகள் மற்றும் இயங்குமுறைகள் இந்தியர் விவகாரங்களுக்கான சிறப்பு அமைச்சரவைக் குழு (CCIC)–இன் கீழ் ஏற்கெனவே தொடங்கப்பட்டன. குடியுரிமை, அடையாள ஆவணங்கள், தமிழ்ப்பள்ளிகள் மற்றும் வணிகத்துறை போன்ற பிரிவுகளில் மலேசிய இந்திய சமூகம் எதிர்க்கொள்ளும் சவால்களைக் களைய சிறப்பு செயலாக்கப் பணித்திட்டக் குழு (எஸ்ஜதிஎஃப்), தமிழ்ப்பள்ளிகளுக்கான மேம்பாட்டுத் திட்ட வரைவுக்குழு (பிடிஎஸ்டி) மற்றும் இந்திய தொழில்முனைவர் மேம்பாட்டுத் திட்ட சிறப்புச் செயலகம் (சீட்) போன்ற பிரிவுகள் பிரதமர் துறையின் கீழ் துவங்கப்பட்டன. மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம், மலேசிய இந்தியர்களுக்கு நேர்மறையான பயன்களை விளைவிக்கும் இந்தியர் சமூகப்பொருளாதார மேம்பாட்டு சிறப்புப் பிரிவு சமீபத்தில் தோற்றுவிக்கப்பட்டது.

முந்தைய அரசாங்க அணுகுமுறையைக் காட்டிலும், மக்களுடன் இணைந்து அவர்களின் சவால்களை எதிர்க்கொண்டு முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் புதிய அணுகுமுறையை இப்பிரிவுகள் குறிப்பிட்ட வள ஒதுக்கீட்டுடன் மேற்கொண்டு வருகின்றன. அரசாங்க நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் மூலம் அரை மில்லியனுக்கும் மேற்பட்ட மலேசிய இந்தியர்கள் நேரடி பயனுற்றுள்ளனர். இதன்வழி ஏற்கெனவே அடையப்பெற்ற முடிவுகள் மிகவும் நம்பிக்கையாகயும் உள்ளன. அரசாங்க ஊழியர்களின் கூட்டமைப்பில், இவ்வெற்றிகளை நாடுதோறுமுள்ள மக்களின் வாசற்படிக்குக் கொண்டுச் செல்வதில் பல அரசு சாரா அமைப்புகள் மற்றும் சமூகத் தலைவர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். அமைச்சுகள், அரசாங்கத் துறைகள் மற்றும் சமூகப் பங்கேற்பாளர்கள் தங்களின் நீண்டக்கால கற்றலின் அடிப்படையில், கடந்த 8 ஆண்டுகளில் பல நனிச்சிறந்த பயிற்சிகளை உருவாக்கியுள்ளனர். அவை தற்பொழுது சிரமப்படும் குடும்பங்களுக்கு பயன்தகு வகையில் வழங்கப்பட வேண்டியுள்ளது. இந்த இலக்கின் நோக்கில், கடந்த சில ஆண்டுகளாக பின்பற்றப்பட்ட புதிய மற்றும் புத்தாக்க அணுகுமுறைகளை, அரசாங்கத்தின் தேசிய இயங்குமுறையில் ஒருங்கிணைப்பதை உட்பட்டு இன்னும் நிறைய தேவைகள் திட்டமிடப்படவும் செயல்படுத்தப்படவும் வேண்டுயுள்ளதை நாம் அறிகிறோம்.

இதுவரை அடைந்த சாதனைகள் மட்டுமின்றி மக்களின் தேவைகள் மற்றும் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்து முன்னிறுத்துவதே இப்பெருந்திட்ட மேம்பாட்டின் அடிப்படைக் கூறுகளாகும்.
அரசியல், அரசாங்கம் மற்றும் பல்வேறு பிரிவினைச் சார்ந்த தலைவர்கள் உட்படுத்திய என்னுடைய வலுவான அணி, இப்பெருந்திட்டத்தின் உருவாக்கத்திற்காக கடந்த இரண்டு ஆண்டுக்காலங்களாக பல்வேறு ஆலோசனைகள் மற்றும் வெளிப்படையான கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். பல்வேறு ஆய்வுகள், விவாதங்கள், கருத்தரங்குகள் மற்றும் பட்டறைகளின் முடிவே இந்த விரிவான மலேசிய இந்தியர் பெருந்திட்டமாகும். இப்பெருந்திட்டத்தில் நான்கு முக்கியப் பெருந்தூண்கள் அமையப்பெற்றுள்ளன. முதல் பெருந்தூண்: அடிப்படைத் தேவைகளை அணுகுதல், இரண்டாவது பெருந்தூண்: ஒவ்வொரு குழந்தையின் ஆற்றலையும் வெளிக்கொணர்தல், மூன்றாவது பெருந்தூண்: வாழ்வாதாரத்தையும் சொத்துடைமையையும் வளப்படுத்துதல் இறுதியாக நான்காவது பெருந்தூண்: சமூகத்தில் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்.

இப்பெருந்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகள், செயலாக்க காலவரையோடு சம்பந்தப்பட்ட அமைச்சுகள் மற்றும் அரசாங்கத்துறைகளின் குறியிலக்காக நிர்ணயிக்கப்படும். இவை அரசாங்கம் கொண்டுள்ள வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பினை பிரதிபலிக்கின்றன. மேலும் இந்த இலக்குகளின் நிறைவேற்றுதலை கண்காணிக்கவும் செயல்படுத்துவதற்கும் பிரதமர் துறையின் கீழ் ஒரு சிறப்புப் பிரிவு அமைக்கப்படும். அதுமட்டுமின்றி, இப்பிரிவின் செயலாக்கத்திற்காக சுயேட்சையான ஒரு இயங்குமுறையை அமைக்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ளது. தேவைக்கேற்ப அதிகாரம், மனித வளம் மற்றும் பொருள் வளம் இப்பிரிவுகளுக்கு வழங்கப்படும். 2018ஆம் ஆண்டு துவங்கி, இப்பெருந்திட்ட இலக்குகளின் அடைவுகள் வருடாந்திர செயல்திறன் அறிக்கையில் வெளியிடப்படும். கடந்த சில ஆண்டுகளில், இந்தியர்களுக்கான அரசாங்கத் திட்டங்களின் அடைவுநிலையின் அடிப்படையில், அடுத்துவரும் பத்தாண்டுகளில் இப்பெருந்திட்டத்தில் இடம்பெற்றிருக்கும் அனைத்து இலக்குகளையும் நிச்சயம் அடைய முடியும் என எனக்கு பெரும் நம்பிக்கையுள்ளது.

அரசாங்கம் மற்றும் மலேசிய இந்திய சமூகத்திற்கிடையே உள்ள நம்பிக்கையை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இப்பெருந்திட்டம், நிச்சயமாக இந்நாட்டிலுள்ள இந்தியர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திடும் வலுவான திட்டமாக அமையும் என்று நான் பெரிதும் எதிர்ப்பார்க்கிறேன். மேலும், உலகின் 20 தலைசிறந்த நாடுகளின் பட்டியலில் மலேசியா இடம்பெற அரசாங்கம் வகுத்துள்ள தேசிய உருமாற்றத் திட்டம்
TN50 பயனை அடைய இந்திய சமுதாயத்தின் முழு பங்கினையும் இப்பெருந்திட்டம் மூலம் வெளிக்கொணர முடியும்.

**ஒரே மலேசியா "மக்களுக்கு முன்னுரிமை, அடைவுநிலைக்கு முக்கியத்துவம்"**



(டத்தோ ஸ்ரீ முகமட் நஜிப்)



# உள்ளடக்கம்

இயல்


**01**
அறிமுகம்

08 அறிமுகம்

**02**
அடிப்படைத் தேவைகளை அணுகுதல்

30 நவீன வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளை நிறைவு செய்தல்

**03**
ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்

54 கல்வி & பயிற்சி வழி மேம்பாடு

**04**
வாழ்வாதாரத்தையும் சொத்துடைமையும் வளப்படுத்துதல்

92 வேலை வாய்ப்பும் வணிக வாய்ப்பும்

**05**
சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்

114 மலேசியாவின் பண்பாட்டுப் பல்வகைமையின் அங்கமாகவும் உரிமை உள்ளவர்களாகவும் விளங்குதல்

**06**
மலேசியப் பெருந்திட்டப் பகிர்வு

138 செயலாக்கம் & ஆளுமை





# இயல் 1

# அறிமுகம்



# அறிமுகம்

மலேசிய இந்தியர்கள் இந்நாட்டின் சமூகப் பின்னணியில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கின்றனர். மலேசிய நீண்ட நெடிய வரலாற்றில், இந்தியர்கள் பொருளாதார மேம்பாட்டிற்கும் பண்பாட்டு வளப்பத்திற்கும் பெரும் பங்காற்றியுள்ளனர். இந்நாட்டிலுள்ள பல்வேறு சமூகங்களிடையே இந்திய சமூகம் ஒரு முக்கிய அங்கமாக விளங்குவதை, அன்றாட வாழ்க்கை முறையின் செயல் பாடுகளிலும் சமூகக் கட்டமைப்பிலும் உணவு முறைகளிலும் பேச்சு வழக்கிலும் பிறருடனான தொடர்பாடல்களிலும் காண முடியும்.



நாட்டின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார வளர்ச்சியில், மலேசிய இந்தியர்களும் தொடர்ந்து மேம்பாடு கண்டே வந்துள்ளனர். கடந்த 44 ஆண்டுகளில் (1970 முதல் 2014 வரையில்), மலேசிய மக்களின் இடைநடு மாதாந்திர குடும்ப வருமானம், ஆண்டிற்கு 7.8 விழுக்காடாக வளர்ச்சி கண்ட நிலையில், மலேசிய இந்தியர்களின் இடைநடு மாதாந்திர குடும்ப வருமானம் அதே காலக்கட்டத்தில் ஆண்டிற்கு 7.5 விழுக்காடாக உயர்வு கண்டது.[1]

தற்போது பூமிபுத்ராக்களின் மாதாந்திர குடும்ப வருமானம் ரி.ம.4,214 ஆகவும் சீனர்களின் மாதாந்திர குடும்ப வருமானம் ரி.ம.5,708 ஆகவும் உள்ள நிலையை ஒப்பிடுகையில் இந்தியர்களின் இடைநடு மாதாந்திர குடும்ப வருமானம் ரி.ம.4,627 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.[2]







1 2014 குடும்ப வருமான ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை

2 Ibid.

**இனங்கள் வாரியான இடைநடு வருமானம், 1970–2014**




**இனங்கள் வாரியான சராசரி வருமானம், 1970–2014**




பூமிபுத்ராக்கள் சீனர்கள் இந்தியர்கள் தேசிய நிலை



மலேசிய புள்ளிவிவரத் துறையினர் மேற்கொண்ட அதே வருமானக் கணக்கெடுப்பு ஆய்வில், மலேசிய இந்தியர்களின் மாதாந்திர சராசரி குடும்ப வருமானம் ரி.ம.6,246–ஆகவும் மலாய்க்காரர்களின் மாதாந்திர சராசரி குடும்ப வருமானம் ரி.ம.5,548–ஆகவும் மலேசிய சீனர்களது மாதாந்திர சராசரி குடும்ப வருமானம் ரி.ம.7,666–ஆகவும் இருந்துள்ளமை தெரியவருகின்றது.[3]

எவ்வாறாயினும், இச்சமுதாயம் பல்வேறு பெரும் சிக்கல்களைச் சந்தித்தே வருகின்றது. இந்திய சமூகத்தின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார அடைவு நிலை அச்சமூகத்தின் உட்பிரிவுகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படையாகக் காட்டவில்லை.[4] இது பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்ட இந்தியச் சமூகத்தினர், இந்நாட்டில் பல்வேறு காலக்கட்டங்களில் வரலாற்றுத் தொடக்கங்களை உடையவர்கள் என்பதை பிரதிபலிக்கிறது. இவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் பல தலைமுறைகளாக தொடர்ந்து நிலவினால், தாங்கள் புறக்கணிக்கப்பட்ட அல்லது அநீதியாக நடத்தப்படுவது போன்ற எண்ணத்தை அவர்களுள் ஏற்படுத்தக்கூடும்.

பொதுவாக, பெரும்பாலான மலேசிய இந்தியர்களுக்கு தங்கள் சமூகம் அடைந்து வரும் முன்னேற்றத்தில் நேர்மறைச் சிந்தனை இருந்தாலும், இதர சமூகத்தினருடன் ஒப்பிடுகையில் அந்நம்பிக்கையின் வலிமை குறைந்தே காணப்படுகிறது. இதற்குக் காரணம் 74% விழுக்காடு பூமிப்புத்ரா மற்றும் சீனப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தங்களை விட வளர்ச்சியடைந்துள்ளனர் என நம்பும் வேளையில் 64% விழுக்காட்டு இந்திய பெற்றோர்கள் மட்டுமே தங்கள் பிள்ளைகள் தங்களைக் காட்டிலும் வளர்ச்சியடைந்துள்ளனர் என நம்புகின்றனர்.[5]

அண்மைய ஆண்டுகளில், இப்பிரச்சனையைக் களையும் பொருட்டு அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புகளைச் செயல்படுத்தி வந்திருக்கின்றது. நாட்டின் வரலாற்றில் முதன் முறையாக, 2008–ஆம் ஆண்டில் Cabinet Committee on Indian Participation in Government Programs and Projects (CCIC) எனப்படும் இந்திய விவகாரங்களுக்கான சிறப்பு அமைச்சரவைக்குழு அமைக்கப்பட்டு, இப்பிரச்சனைகளுக்கு உயர்மட்ட நிலையில் கவனம் செலுத்தப்பட ஆவன செய்யப்பட்டுள்ளது. முன்பிருந்த நிலையைக் காட்டிலும் இம்முயற்சிகள் முன்னேற்றத்திற்கு வித்திட்டாலும், பல காலமாக நிலவி வரும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சீரற்ற சமூக முன்னேற்ற நகர்ச்சி ஆகியவற்றைக் களையவும், நீண்ட கால அடிப்படையில், இனப் பாகுபாடு அற்ற அரசாங்க செயல்திட்டங்களின் வழி இக்குறைகள் நீக்கப்பட நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் வெற்றி பெறச்செய்யவும் புதிய உத்வேகமான செயல்பாடுகள் மிகவும் அவசியமாகும்.

3 Ibid.

4 இந்த இயலில் வரும் பொருளாதார சவால்கள் எனும் துணைப் பகுதியைப் பார்க்கவும்

5 Climbing the Ladder; Socioeconomic Mobility in Malaysia. Khazanah Research Institute, October 2016

# சூழல்

2016 வரையில், 31–மில்லியன் கொண்ட மலேசிய மக்கள் தொகையில், குடியுரிமை பெற்ற இந்தியர்களின் எண்ணிக்கை 1.99 மில்லியன் அல்லது 7% ஆகும்.[6] மலேசியாவில் சீனர்களுக்கு அடுத்து, இரண்டாம் நிலையில் இருக்கும் சிறுபான்மை இனத்தினராக இந்தியர்கள் திகழ்கின்றனர்.



மலேசிய இந்திய சமூகத்தினர், அவர்கள் பேசும் மொழி, கடைப்பிடிக்கும் சமய உட்பிரிவுகள் ஆகியவற்றால் தங்கள் பூர்வீகத்தை அடையாளம் காட்டிக் கொள்கின்றனர். இந்திய துணைக் கண்டத்திலிருந்து வந்தவர்களுள் பெரும்பான்மையோர் தமிழர்களாவர். எஞ்சியவர்களாக தெலுங்கர்கள், மலையாளிகள், பஞ்சாபியர்கள், குஜராத்தியர்கள், சிந்தியர்கள், சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள் மற்றும் வேறு சில இந்திய வம்சாவழியினரும் உள்ளனர். மலேசிய இந்தியர்களுள் பெரும்பான்மையோர் இந்துக்களாவர். மேலும் கிருஸ்துவம், இஸ்லாம், புத்தம், சீக்கியம், மற்றும் சமண மதத்தைச் சார்ந்த இந்தியர்களும் நம் நாட்டில் உள்ளனர்.

இந்தியர்கள் பல நூற்றாண்டுக்காலமாக மலாய்த் தீவுக்கூட்டங்களுடன் வணிகத்தின் மூலமாகவும் அரசாட்சி செலுத்துவதன் மூலமாகவும் தொடர்பினைக் கொண்டிருந்தனர். இத்தகைய தொடர்புகள் கிறிஸ்து பிறப்பிற்கு முன் இரண்டாம் நூற்றாண்டு முதல் இருந்து வந்துள்ளதை, சீன வரலாற்றுக் குறிப்புக்களும், கிறிஸ்துவுக்குப் பின் நான்காம் நூற்றாண்டு முதலே தொடர்புகள் இருந்து வந்துள்ளதைப் பூஜாங் பள்ளத்தாக்குப் பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற சான்றுகளும் காட்டுகின்றன. கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டில் இந்திய வணிகர்கள் பலர் வணிகம் செய்ய மலாக்காவிற்கு வந்துள்ளனர்.

எவ்வாறாயினும், தற்போது உள்ள மலேசிய இந்தியர்களில் பெரும்பாலானோர் மலாயா தீபகற்பத்திற்கு 19–ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் ரப்பர் மற்றும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கொண்டு வரப்பட்டவர்களின் பின் வழித் தோன்றல்களே.[8] பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் தோட்டத் துறைகளே இந்தியர்களுக்கு வருமானத்தை ஈட்டித்தரும் முதன்மைத் துறையாக விளங்கிய போதிலும், இந்தியர்கள் போக்குவரத்துத் துறையிலும் ஈடுபட்டிருந்திருந்தனர். தீபகற்ப மலேசியாவில் உள்ள பெரும்பாலான சாலைகளும் இரயில் தண்டவாளங்களும் இந்தியர்களால் நிர்மாணிக்கப் பட்டவையே. தொடக்கக் காலங்களில் இந்தியா மற்றும் இங்கிலாந்தில் (யுனைட்டட் கிங்டம்) பயிற்சிபெற்ற இந்திய மருத்துவர்களே நாடு முழுவதுமுள்ள பொது, மாவட்ட மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவம் பார்த்து வந்துள்ளனர். நிர்வாகத் துறையைப் பொருத்தமட்டில், ஆங்கிலக் கல்வி பயின்ற இந்தியர்கள் மலேசியப் பொதுச் சேவைத்துறையில் பல உயரிய பதவிகளை வகித்து வந்திருக்கின்றனர்.[9]

6 மலேசிய குடிமகன் அல்லாதவர் உட்பட எ.கா: புலம்பெயர்ந்த தொழிலாளர்கள். மூலம்: மக்கள் தொகை கணிப்பு, மலேசிய புள்ளி விபரத்துறை.

7 Moorthy, Ravichandran (2016) "Ethnic Indians in Malaysia: History and Issues of Development" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: KITA, pp. 39-56.

8 Ibid.

9 Ibid.

20–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மலேசிய இந்தியச் சமூகத்தினர் இரு பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படலாம்: ஒன்று சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள தோட்டப்புறங்களில் வாழ்வோர், மற்றொன்று சமூகப் பொருளாதாரத்தில் கீழ், நடுத்தரம் முதல் உயர்நிலை வரை இருந்த, நகர்ப்புறங்களில் வாழும் மக்கள். சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள மக்களுள் பெரும்பான்மையோர் தொடர்ந்து வறுமை நிலையிலேயே இருந்து வருகின்றனர். இந்தப் பிரிவினருக்கும் அவர்களது சமூகப் பொருளாதார முன் நகர்வுக்கும் இந்தப் பெருந்திட்டம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தின்போது, சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்த இந்தப் பிரிவினர் தோட்டப்புறங்களில் ஒப்பந்தக் கூலிகளாக வேலை செய்தனர். தோட்டத் தொழிலாளர்கள், தங்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள், தமிழ்ப்பள்ளி மற்றும் சமய, சமூக, அரசியல் நிகழ்வுகள் நடைபெறும் இடமாக விளங்கும் கோயில் போன்ற குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழ்வதில் மனநிறைவு கொண்ட பாமர மக்களாய் இருந்து விட்டனர்.[10] அதுமட்டுமின்றி ரப்பர் மரங்களின் இயற்கைச் சூழமையில் ஏற்பட்ட பிடிப்பு, இவர்களுக்கும் பிற இனத்தவர்களுக்கும் இடையே பிரிவை ஏற்படுத்திவிட்டது.[11] இந்த வாழ்க்கை முறையே, பல தலைமுறைகள் கடந்து பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்துக்குப் பின்னரும் நிலைத்துவிட்டது. வேறு எந்தத் தொழில் திறனும் கல்லாத நிலையில், இவர்கள் தொடர்ந்து வறுமைப் பிடியிலிருந்து தப்ப இயலாதவர்களாக விளங்கினர்.[12]





சுதந்திரத்துக்குப் பின், இந்நிலையை மாற்ற பல்வேறு பொதுக் கொள்கைகள் அறிமுகம் செய்யப்பட்டன – "தேசியக் கல்வி முறைமையின் கீழ் அதிக எண்ணிக்கையிலான இந்தியர்கள் கல்வி கற்க வாய்ப்பு பெற்றதனால், புதிய வகைத் தொழில் மற்றும் பொருளாதார வாய்ப்புகளையும் பெற்றனர்.[13] ஆனாலும், கடந்த கால வரலாற்றுப் பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளாததாலும், முனைப்பற்ற நிலையாலும், இவர்களிடையே முன்னேற்றச் சூழலைப் பரவலாகக் காண இயலவில்லை.[14]

1966–இல், மொத்தம் 70.4% விழுக்காட்டு இந்திய தொழிலாளர்களுள், 67.8% விழுக்காட்டுத் தொழிலாளர்கள் தோட்டத்துறைகளிலும், எஞ்சிய 2.6% விழுக்காட்டுத் தொழிலாளர்கள் சுரங்கத்துறையிலும் பணியாற்றி வந்தனர்.[15] இருப்பினும், இவ்விரு துறைகளும் மிகவும் துரித மாற்றத்தையும் பின்னடைவையும் எதிர்நோக்கியது. தோட்டத் துண்டாடல்களாலும், வெளிநாட்டு முதலாளிமார்கள் பெரும்பாலான தோட்டங்களை விற்றதாலும், பலர் தங்கள் வேலைகளை இழந்தனர். தொடர்ந்து பணியாற்றியர்களும் மிகவும் குறைந்த வருமானத்தையே பெற்றனர். அதுமட்டுமின்றி அவர்களுடைய அடிப்படை வசிப்பிட வசதிகள் மிகவும் மோசமான அளவிற்குக் குறைக்கப்பட்டன.[16]

பல தோட்டங்களில் ரப்பர் மரங்களுக்குப் பதிலாக செம்பனை மரங்கள் நடப்பட்டன. செம்பனைத் தோட்டங்களில் வேலைச்செய்ய அதிக எண்ணிக்கையிலான வேலையாட்கள் தேவைப்படாததால் அதிகமான தொழிலாளர்கள் வேலையை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். எஞ்சி இருந்த வேலைகளும்கூட குறைவான ஊதியத்துக்கு வேலை செய்யும் இந்தோனேசிய தொழிலாளர்களுக்குப் படிப்படியாக வழங்கப்பட்டது.[17] நாட்டின் மேம்பாடு மற்றும் தொழில்மயமாக்கல் திட்டத்தால் விவசாய நிலங்கள் தொழில் பேட்டைகளாகவும் புதிய நகர்களாகவும் 1980களிலும் 1990களிலும் உருமாறின. இக்காலக்கட்டத்தில் ரப்பர் தோட்டங்களின் எண்ணிக்கை துரிதமாகக் குறையத் தொடங்கியது.[18]

10 Ibid.

11 Ibid.

12 Ibid.

13 Ibid.

14 Ibid.

15 Marimuthu, T (2016) "The Malaysian Indian Community: Continuing Concerns" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: Institute of Ethnic Studies UKM, pp. 95-107.

16 Ibid.

17 Ibid.

18 Ibid.



மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய இம்மேம்பாட்டுத் திட்டங்களால் பல்லாயிரக்கணக்கான இந்திய தோட்டத் தொழிலாளர்கள், தங்கள் வேலையையும் வாழ்க்கையையும் தொலைத்த நிலையில் தோட்டத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர். "இவர்கள் தங்கள் வேலைகளை மட்டும் இழக்கவில்லை, மாறாக, அவர்களுடைய வீடுகள், அடிப்படை வசதிகள், சமூகப் பண்பாட்டு வசதிகள் மற்றும் சமூக ஆதரவு கட்டமைப்புகள் முதலிய அனைத்தையுமே இழந்தனர்".[19]

தோட்டங்களில் ஓரினமாகத் தனித்து வாழ்ந்து வந்த மலேசிய இந்தியர்கள் அங்கிருந்து கட்டாயமாக வெளியேற்றப்பட்ட போது பட்டணங்களுக்கும் மாநகர்களுக்கும் குடிபெயர்ந்தனர். அவர்களுள் பெரும்பாலானோருக்குத் தேவையான கல்வித்தகுதியோ தொழில்திறன்களோ இல்லாததால் முறையான வேலை கிடைக்காமல் அவதியுற்றனர்.

கடந்த காலங்களில் ஒரே இனமாகத் தனித்து வாழ்ந்ததாலும், அறியாமையாலும், கல்வி அறிவு இன்மையாலும் மற்றும் பல நடைமுறைச் சிக்கல்களாலும் பலர் வேலைக்கு அவசியமாகத் தேவைப்படும்,[20] நீல அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தவறி விட்டனர்.[21] இதனால் பெரும்பாலோர் கூலி வேலை செய்து பிழைப்பவர்களாயினர்.

நகர்ப்புறங்களின் வாழ்க்கைச் செலவினங்களைத் தாள இயலாத நிலையில் இவர்கள், ஒதுக்குப்புறமான பகுதிகளில் புறம்போக்குக் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டனர். அதன் பின்னர் இவர்களுள் பலர், பல காலங்கள் கழித்து, அதிக அளவில் மக்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்குக் குடிபெயர்ந்தனர். இதனால் நகர்ப்புறங்களில் வாழும் கடைநிலை மக்கள் பிரிவொன்று உருவாக்கத்திற்கு வழிவகுத்தனர் எனலாம்.[22] இடப்பெயர்வு, கல்வி அறிவு இல்லாமை, கவனிப்பாரற்ற நிலை ஆகியவற்றின் காரணமாக இப்புறம்போக்குப் பகுதிகளில் வாழ்வோரிடையே அதிக அளவிலான சமுதாயச் சிக்கல்கள் ஏற்பட்டன. குடும்பப் பிளவுகள், மோசமான இருப்பிட வசதிகள், வேலையின்மை, வன்முறை, குண்டர் கும்பல்களில் ஈடுபடுதல், வறுமை, வீடற்ற நிலை, போதைப்பொருள் பழக்கம் முதலிய பிரச்சனைகள் இப்பகுதி மக்களிடையே பெருமளவு காணப்பட்டன.[23] போதிய சமுதாய அரவணைப்பு இல்லாத காரணத்தால், இப்பகுதியில் வாழும் இளம் மலேசிய இந்தியர்கள் தீயச் செயல்களிலும் குற்றச்செயல்களிலும் அதிக அளவில் ஈடுபடுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.[24]

மலேசிய இந்தியர்களின் வளர்ச்சிக் குன்றிய நிலையை இரு வகையாகப் பிரிக்கலாம்: ஒன்று, தோட்டத்திலிருந்து குடிபெயர்ந்த நிலையில் அண்மைய காலமாக உருவாக்கம் கண்ட நகர்ப்புற கடைநிலை மக்கள் பிரிவினர். மற்றொன்று, புற நகர்களிலேயே வாழ்ந்து தோட்டத்தொழில்களிலும் விவசாயம் சார்ந்த மூலத்தொழில்களிலும் தொடர்ந்து ஈடுபடும் மக்கள் பிரிவினர் ஆவர். மலேசிய இந்தியர்களுள் சமூகப் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள இப்பிரிவினர் எதிர்நோக்கும் சிக்கல்களை விரைவாகவும் எளிதிலும் களைந்துவிட இயலாது. இருப்பினும் இச்சமூகத்தினரின் நிலையையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் கண்டறியும் தக்கத் தருணம் தற்பொழுது வந்துவிட்டது.

---

19 Nagarajan, S (2009) "Marginalisation and Ethnic Relations: The Indian Malaysian Experience" in Lim, TG; Gomes, A & Rahman, A (Eds.) Multiethnic Malaysia: Past, Present and Future, Petaling Jaya: SIRDC.

20 மூர்த்தி, op. cit.

21 மாரிமுத்து, T, op. cit.

22 Ibid.

23 Ibid.

24 மூர்த்தி, op. cit.

# தற்போதைய சவால்கள்

மலேசிய இந்திய சமுதாயம், குறிப்பாக கீழ்மட்டத்தில் இருக்கும் 40% விழுக்காட்டு இந்தியர்கள் (B40) எதிர்நோக்கும் சவால்கள் பல பரிமாணங்களைக் கொண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையனவாகவும் உள்ளன. அவை மூன்று முக்கிய பரிமாணங்களின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன: வருவாய் மற்றும் சொத்துக்களை உள்ளடக்கிய பொருளாதார சவால்கள், தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்விச் சவால்கள் மற்றும் பல்லின மக்களைக் கொண்ட மலேசியச் சூழலில் இந்தியச் சமூகம் ஏதிர்நோக்கும் பல்வேறு சிக்கல்கள் அடங்கிய சமூகச் சவால்கள் ஆகியனவாகும்.

## பொருளாதாரச் சவால்கள்



ஏற்கனவே குறிப்பிட்டிருந்ததைப்போல, ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் நிலையில், மலேசிய இந்தியர்களின் மொத்த குடும்ப வருமானம், மற்ற இனத்தவர்களுடன் ஒப்பிடக்கூடிய நிலையிலேயே இருக்கின்றது. இருப்பினும், வருவாய்ப் பகிர்வு என்று பார்க்கும் நிலையில், அது மேல் நிலையில் இருக்கும் 20% விழுக்காட்டு இந்தியர்களையும் (T20) நடுத்தர நிலையில் இருக்கும் 40% விழுக்காட்டு இந்தியர்களையும் மட்டுமே (M40) மையமிட்டிருக்கின்றது. இவ்விரு நிலையிலும் இருக்கும் இந்தியர்களின் வருமானம் ஒட்டுமொத்த இந்திய சமுதாயத்தின் வருமானத்தில் 83% விழுக்காடாக இருக்கின்றது. ஒட்டுமொத்த இந்திய சமுதாயத்தின் வருமானத்தில் மீதமுள்ள 17% விழுக்காட்டு வருமானம் மட்டுமே B40 நிலையில் இருக்கும் கீழ்மட்ட இந்தியர்களின் வருமானமாக இருக்கின்றது.[26]

அண்மையில், 2012–ஆம் ஆண்டில், இனங்களுக்கிடையிலான வருமான சமநிலையின்மை பதிவில் மலேசிய இந்தியர்களே முன்னணியில் இருந்தனர். அந்த ஆண்டில் இந்தியர்களுக்கான ஜீனி குணகம் (Gini coefficient) 0.44–ஆகவும் பூமிபுத்ராக்கள் மற்றும் சீனர்களின் இனங்களுக்கிடையிலான வருமான சமநிலையின்மை 0.42–ஆகவும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இருப்பினும், ஆகக் கடைசியாக 2014–ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடும்ப வருமானக் கணக்கெடுப்பு புள்ளிவிவரத்தில், இந்தியர்களின் இனங்களுக்கிடையிலான வருமான சமநிலையின்மை தற்போது பூமிபுத்ராக்களுக்கு ஈடாக 0.39–ஆக குறைந்திருந்தது. ஆனால், சீனர்களின் இனங்களுக்கிடையிலான வருமான சமநிலையின்மை 0.41–ஆக மிகவும் உயர்ந்து காணப்பட்டது[28] (இந்நிலை சம்பள முறைமையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தாலோ பிற வருமானங்களின் உயர்வுநிலையாலோ ஏற்பட்டது என்று கூறுவதைக் காட்டிலும், பெரும்பாலும் Bantuan Rakyat 1Malaysia அல்லது பிரிம் உதவித்தொகையால் ஏற்பட்டது என்றால் மிகையில்லை).[29]

B40 பிரிவில் ("IB40") ஏறக்குறைய 227,600 இந்திய குடும்பத்தினர் இருக்கின்றனர். இந்த வர்க்கத்தினரின் மாதாந்திர சராசரி குடும்ப வருமானம்

25 பிரதமர் துறை அமைச்சர், டான் ஸ்ரீ வாஹிட் ஓமார் அம்பாங் எம்பி சூரைடா கமருதீனுக்கு அனுப்பிய குடும்ப வருமானம் மற்றும் செலவுகள் 2014 அறிக்கை எனும் எழுத்துப்பூர்வ பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. . As reported in "Bumis majority of top earners - but disparity widest, too" (2015, November 26) Malaysiakini. Accessed at: https://www.malaysiakini.com/news/321081

26 2015/2016 பொருளாதார அறிக்கை மலேசிய வருமானப் பிரிவுகளில் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்புகள் பின்வருமாறு: கீழ்நிலை 40%-இன் வருமானம் ரிம.3,855, நடுநிலை 40%-இன் வருமானம் ரிம.3,855 - ரிம.8,319க்கும் இடையில், மேல்நிலை 20%த்தினரின் வருமானம் ரிம.8319க்கும் மேல்.

27 ஜீனி குணவகம், 0–1 குறியீட்டின் மூலம் வருமான சமமின்மையைக் குறிக்கும். என் கூடினால், சமமின்மையும் கூடும்.

28 2014 குடும்ப வருமான ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை

29 பிரிம் நிதியுதவி, வருமான சமமின்மையும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பங்குகளை குறைக்கும். International studies such as Joumard I, Pisu M, Bloch D (2012), Tackling Income Inequality: The role of taxes and transfers, OECD Journal and the Malaysia Economic Report 2016/2017

30 2014 குடும்ப வருமான ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை

## பக்கப்பட்டியல்: மலேசிய இந்தியர்களின் வருமான பிரிவுகள், ஒரு பார்வை

### இனங்கள் வாரியாக

வருமானப் பிரிவுகள்










மூலம்: குடும்ப வருமான கணக்கெடுப்பு, 2014



ஏறக்குறைய 57,624 இந்திய குடும்பத்தினர் அல்லது மொத்த இந்திய குடும்பத்தினரில் 10% விழுக்காட்டினர் ரி.ம.2,000–க்கும் குறைவான மாத வருமானத்தைப் பெறுகின்றனர், 71,148 இந்திய குடும்பத்தினர் அல்லது மொத்த இந்திய குடும்பத்தினரில் 12% விழுக்காட்டினர் மொத்த குடும்ப வருமானமாக மாதத்திற்கு ரி.ம.2,000 முதல் ரி.ம.3,000 வரை பெறுகின்றனர். 112,896 இந்திய குடும்பத்தினர் அல்லது மொத்த இந்திய குடும்பத்தினரில் 19% விழுக்காட்டினர் மாதத்திற்கு மொத்த குடும்ப வருமானமாக ரி.ம.3,000 முதல் ரி.ம.4,000 வரை பெறுகின்றனர்.[31] ஏறக்குறைய 3,528 இந்திய குடும்பத்தினர் அல்லது மொத்த இந்திய குடும்பத்தினரில் 0.6% விழுக்காட்டினர் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ளவர்கள் என வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.[32]

இன்றைய நிலையில், 89% விழுக்காட்டு இந்தியர்கள் நகர்ப்புறங்களில் வாழ்ந்து வரும் வேளையில், 11% விழுக்காட்டு இந்தியர்கள் மட்டுமே கிராமப்பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.[33] அதிகமான இந்திய சமூகத்தினர் நகர்ப்புறங்களில் வாழ்வதால் குறைந்த வருமானம் மற்றும் வறுமைநிலை சிக்கல்கள்யாவும் நகர்ப்புற மக்களின் சிக்கல்களாகக் கருதப்படுகிறது.

இருப்பினும் நகர்ப்புறங்களில் நிலவும் வறுமைநிலை, குறிப்பாக, அடிமட்ட இந்திய சமூகத்தினரின் வறுமை நிலை குறித்து விரிவான ஆய்வுகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. நகரங்களில் இருக்கும் அடிமட்ட மக்களின் நிலையைக் காட்டிலும், தோட்டப் பாட்டாளிகளின் சிக்கல்களைக் குறித்து ஆய்வதிலேயே கல்வியாளர்களும் ஆய்வாளர்களும் கவனம் செலுத்தியுள்ளனர்.[34] ஆகவே, நகர்ப் புறங்களில் வறுமையில் வாழும் இந்தியர்களின் நிலை குறித்து உடனடியாக கண்டறிந்து, அவர்கள் எதிர்நோக்கும் குறிப்பிட்ட சவால்களைக் களையும் விதத்தில் கொள்கைகளையும் திட்டங்களையும் வடிவமைப்பது மிகவும் அவசியமானதாகும்.

31 Ibid.

32 Ibid.

33 2010 மக்கள் தொகை பரவல் மற்றும் அடிப்படை மக்கள்தொகை கணக்கெடுப்பு, மலேசிய புள்ளி விபரத் துறை

34 மாரிமுத்து, op. cit.

## குறைந்த வருமானம் பெறும் இந்தியர்களின் மீதான ஒரு பார்வை

### இந்தியர்களின் குடும்ப வருமான பிரிவுகள்




B40–இல் குடும்பங்களின் எண்ணிக்கை

**227,600**

### IB40 வருமான வரம்பு




குறிப்பு : B40–இன் அதிகபட்ச வருமானம் ரி.ம. 3,579 ஆகும்.

### முக்கிய வேலை வகைகள்



தொழிற்சாலை/இயந்திரங்களை இயக்கும்



உபரி பாகங்களைப் பொருத்துபவர்கள்



சேவை மற்றும் விற்பனைத்துறை சார்ந்த பணியாளர்கள்

மூலம்: குடும்ப வருமான கணக்கெடுப்பு, 2014 (வரைபடத்தில் காட்டப்பட்டிருக்கும் எண்ணிக்கைகள் குடும்ப வருமான கணக்கெடுப்பு, 2012–இல் இருந்து எடுக்கப்பட்டவை)

பொதுவாகவே, குறைவான கல்வித்தகுதி, போதுமான பயிற்சியின்மை, உயர்மதிப்புடைய திறன்கள் ஏதும் இல்லாமையே குறைவான வருமானத்திற்கு அடிப்படைக் காரணங்களாகும். வேலை செய்யும் மலேசிய இந்தியர்களுள் 50% விழுக்காட்டு இந்தியர்கள் குறைவான வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களிலேயே ஈடுபட்டிருக்கின்றனர். அவர்கள் சேவை மற்றும் விற்பனை முகவர்களாகவும் (17.4%) தொழிற்சாலை/இயந்திரங்களை இயக்கும் ஊழியர்களாகவும், தயாரிப்புப் பாகங்களைப் பொருத்துபவர்களாகவும் (22.5%) தொடக்கநிலை ஊழியர்களாகவும் (10.2%) தொழிற்துறை, போக்குவரத்துத்துறை, மொத்த அல்லது சில்லறை வணிகத்துறை ஆகியவற்றில் பணிபுரிகின்றனர்.[35] இவர்கள் போட்டிகளையும் பணிநீக்க அபாயத்தையும் எதிர்நோக்கவும் வேண்டியிருக்கின்றது - அவர்களில் பெரும்பாலானோர் வெளிநாட்டுப் தொழிலாளர்களுடன் வேலைக்குப் போட்டிப்போட வேண்டிய சூழல் நிலவுகின்றது. இன்னும் சிலர் தேவைகள் குறைந்துவரும், ஆள்பலத்திற்குப் பதிலாக மேம்படுத்தப்பட்ட கூடுதல் அறிவாற்றல் மிக்க முறைமைகள், செயற்பாங்குகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பயன்பாட்டால் வரும் காலங்களில் வேலைகளை இழக்கும் அபாய நிலையில் உள்ளனர். [36]

இதனையடுத்து மறுபக்கம் பார்க்கையில், வேலையில்லா திண்டாட்டம் இந்திய சமூகத்தினரிடையே மிகவும் அதிகமாக இருக்கின்றது. ஒட்டுமொத்தமாக மலேசிய ஆண்களின் வேலையில்லா விழுக்காட்டை (2.9%) ஒப்பிடுகையில் மலேசிய இந்திய ஆண்களின் மத்தியில் நிலவும் வேலையில்லா நிலை 4.0% விழுக்காடாக உள்ளது. ஒட்டுமொத்தமாக மலேசிய பெண்களின் வேலையில்லா விழுக்காட்டை (3.2%) ஒப்பிடுகையில் மலேசிய இந்திய பெண்களிடையே நிலவும் வேலையில்லா நிலை 5.2% விழுக்காடாக உள்ளது. [37]

35 தொழிலாளர் வள ஆய்வு அறிக்கை, 2014

36 Professor Mahendhiran Nair (2014)"Equitable & Inclusive Economic Development: The Current State of Socioeconomic Development of Malaysian Indians"

37 Lin, Mui Kiang (2016) "Millennium Development Goals & The Indian Community: Focus On The Bottom 40 Percent" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: Institute of Ethnic Studies UKM, pp. 239-262.




மலேசிய இந்திய இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் மிகவும் கவலைக்குறியதாகும். வேலையற்ற இந்திய இளையோரில், 15 முதல் 19 வயதுடைய இளையோர்கள் 10% விழுக்காடும், 20 முதல் 24 வயதுடைய இந்திய இளையோர்கள் 9% விழுக்காடும் உள்ளனர். மலேசிய இளையோர்களிடையே வேலையில்லா நிலையைக் கூடுதலாக காட்டும் புள்ளி விவரங்கள் பள்ளிப் படிப்பைத் தொடராத மாணவர்களின் எண்ணிக்கையோடு தொடர்புப்படுத்தத் தக்கது மட்டுமல்லாமல் கவலையளிக்கும் வகையில் குண்டர்கும்பல் நடவடிக்கைகள், குற்றச்செயல்கள் முதலியவற்றில் ஈடுபட்டு பெரும்பான்மை மலேசியச் சமூகத்தோடு ஒட்டி வாழாத நிலையை உருவாக்கும் என்பது மறுக்கவியலாது.

தொழில் முனைவுகளில் மலேசிய இந்தியர்கள் பெருமளவு ஈடுபடாததும், அவர்கள் குறைவான வருமானம் பெறுவதற்கு முக்கியக் காரணங்களுள் ஒன்றாகும். வேலை செய்யும் இந்தியர்களின் மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் ஏறக்குறைய 14.3% விழுக்காட்டு இந்தியர்கள் மட்டுமே தொழில் முனைவர்களாவர், பூமிபுத்ராக்களுள் 22.4% விழுக்காட்டினரும் சீனர்களுள் 23.2% விழுக்காட்டினரும் தொழில் முனைவர்களாவர்.[39] பெரும்பாலான நிறுவனங்கள் மிகவும் சிறியவையாகும்: 2005–2013 ஆண்டு வாக்கில் 37,896 மலேசிய இந்தியர்களின் நிறுவனங்கள் 'முனைப்பாக' இயங்கி வந்திருப்பதாக நிறுவன பதிவு இலாகா புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன, அவற்றுள் 91% விழுக்காட்டு நிறுவனங்கள் சிறு வணிகத்தை (microbusiness) சார்ந்தவையாகும்.[40] பெரிய நிறுவனங்களாகப் பட்டியலிடப்பட்டவற்றுள் மலேசிய இந்தியர்களின் பங்குரிமை கடந்த பத்தாண்டுகளில் 1.5% முதல் 1.6% விழுக்காடு வரையிலேயே இருந்து வருகின்றது, இது பிற இன மக்களின் பங்குரிமையோடு ஒப்பிடுகையில் மிகப் பெரிய இடைவெளியைக் காட்டுகின்றது. மலேசிய இந்தியர்களிடையே தனியார் மட்டுரிமை (Private limited) பெற்ற நிறுவனங்களின் உரிமை மலேசியாவின் ஒரு சில பெரும் வணிகர்கள் கையில் மட்டுமே இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.[41]

2010–இல் செல்வ நிலை மற்றும் சொத்துடைமையில் 56% விழுக்காட்டு இந்திய குடும்பங்கள் மட்டுமே சொந்த வீடுகளைப் பெற்றிருந்தனர்.[42] பூமிபுத்ராக்களிடையே வீட்டுடைமை 62% விழுக்காடாகவும், சீனர்களிடையே வீட்டுடைமை 61% விழுக்காடாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதை ஒப்பிடுகையில் இந்தியர்களின் வீட்டுடைமை விழுக்காடு மிகவும் குறைவானதாகும். 2007–இல் B40 பிரிவினரைப் பொருத்தவரை, அதிக அளவில் B40 சீனர்களே 12% விழுக்காட்டு வீட்டுடைமையைப் பெற்றிருந்த வேளையில் பூமிபுத்ராக்கள் 7% விழுக்காட்டு வீட்டுடைமையைப் பெற்றிருந்தனர். இவர்களுடன் ஒப்பிடுகையில் இந்தியர்கள் வெறும் 3% விழுக்காட்டு வீட்டுடைமையை மட்டுமே பதிவு செய்திருந்தனர்.[43]

வருமானம் மற்றும் சொத்துடைமையை மேம்படுத்த வேண்டுமெனில், குறிப்பாக கீழ்நிலை வருமானம் பெறும் 40% விழுக்காடு இந்தியக் குடும்பத்தினைச் (IB40) சேர்ந்த பிரிவினரிடையே வேலைவாய்ப்பு மற்றும் தொழில்முனைப்பு எண்ணிக்கையை மேம்படுத்தப்பட வேண்டும். B40 பிரிவினரின் இந்தத் தேவையைக் கருத்தில் கொண்டே அரசாங்கம் பல திட்டங்களைச் செயல்படுத்தியும் செயல்படுத்தவும் உள்ளது. இந்தப் பெருந்திட்ட வரைவு இத்தகைய முன்னெடுப்புகளில் மலேசிய இந்தியர்கள் விகிதாசார பிரதிநிதித்துவம் பெற வேண்டும் என்ற நோக்கத்தையே கொண்டதாகும்.

38 2015 இனம் மற்றும் வயது வாரியான வேலைவாய்ப்பு விகிதங்கள், தொழிலாளர் வள ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை

39 தொழிலாளர் வள ஆய்வு அறிக்கை, 2014

40 மலேசிய நிறுவன ஆணையம் (SSM), 2009 – 2013

41 11ஆவது தேசிய வரவு செலவுத் திட்டத்திற்காக, சீட் வழங்கிய மலேசிய இந்தியர் பொருளாதார மேம்பாட்டு அறிக்கை

42 2010 குடும்பத்தினர் இயல்புகள் ஆய்வு, மலேசிய புள்ளி விபரத்துறை

43 Muhammed Abdul Khalid, PhD, UKM, (2011) "NEP to NEM: Who Cares? Wealth Distribution in Malaysia"

# கல்வியியல் சவால்கள்



சிறந்த கல்வியும், பயிற்சியும், மதிப்புள்ள திறன்களை அடைய வழிவகுப்பதோடு ஒரு சமுதாயத்தின் முன்னகர்வுக்கு அடித்தளமாக விளங்குகிறது. கல்வி வாய்ப்பினை மேம்படுத்தியதன் மூலம் இன்று மலேசியா பாகுபாடுகளைக் களைந்து சமூக முன்னகர்வின் உச்சத்தை அடைந்துள்ளது எனலாம். குழந்தைளுக்கான ஆவணங்கள் தொடர்பான சிக்கல்கள் இருந்த போதிலும் அவர்களை ஏற்றுக்கொண்டு, தொடக்கக் கல்வி கிட்டத்தட்ட அனைவருக்கும் உரிய ஒன்று என்ற நிலையை உருவாக்கியுள்ளது. 2013–2025–க்கான மலேசியக் கல்விப் பெருந்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, கல்வித் தரத்தை மேம்படுத்தி கல்வி அடைவினை மேம்படுத்துவதில் இப்பொழுது கவனம் செலுத்தப்படுகிறது.

பொதுவாக, மலேசிய இந்திய சமூகம், குறிப்பாக இந்தியக் குழந்தைகளிடையே காணப்படும் குறைந்த அளவிலான கல்வியடைவு ஒரு ஏற்புடைய சவாலாகவே கருதப்படுகிறது. 20 முதல் 24 வயதுடைய மலேசியர்களிடையே உள்ள கல்வி அடைவினை ஒப்பிடுகையில் மலாய் மாணவர்கள் 6% விழுக்காட்டு குறைந்த கல்வி அடைவினைப் பெற்றுள்ள நிலையில் (கீழ்நிலை இடைநிலைப் பள்ளி வரை) சீன மாணவர்கள் 5% விழுக்காட்டு குறைந்த கல்வி அடைவினைப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. ஆனால் இந்திய மாணவர்கள் 9% விழுக்காட்டினர் குறைந்த கல்வி அடைவினையே பெற்றுள்ளனர். இதைப்போலவே 25 முதல் 29 வயது உடையவர்களை (கீழ்நிலை இடைநிலைப் பள்ளி வரை) ஒப்பிட்டு பார்த்தோமானால் மலாய்க்காரர்கள் 9% விழுக்காட்டினர் குறைந்த கல்வித் தகுதி உடையவர்களாகவும் சீனர்களுள் 7% விழுக்காட்டினர் குறைந்த கல்வித் தகுதி உடையவர்களாகவும் இருக்கும் வேளையில் இந்தியர்களில் 13% விழுக்காட்டினர் குறைந்த கல்வித் தகுதி உடையவர்களாக இருக்கின்றனர். இதிலும் இந்தியர்கள் குறைந்த கல்வியடைவினை உடையவர்களாகவே காணப்படுகின்றனர். [44]

இத்தகையச் சாவால்கள், குழந்தையின் ஆரம்ப வளர்ச்சிக் காலங்களிலேயே தொடங்கிவிடுகிறது. ஒரு குழந்தையின் கல்வியியல் வெற்றியும் அதற்கப்பாற்பட்ட நிலையையும் உறுதிச் செய்வதில் தொடக்கக் கல்வியே பெரும் பங்காற்றுகிறது என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.[45] எனினும், 5 முதல் 6 வயது வரையுள்ள மலேசிய இந்திய குழந்தைகளுள் 55% விழுக்காட்டினர் மட்டுமே பாலர்பள்ளியில் சேர்க்கப்படுகின்றனர்.[46] இந்த இடைவெளி 2020–ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய நிலையில் பாலர்ப்பள்ளியில் குழந்தைகள் சேர்க்கப்படும் இலக்கை அடைவதற்கு எதிரானதாக உள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.[47] குறிப்பாக, IB40 குழந்தைகள், தொடக்கக் கல்வி இல்லாததால், தேசிய பள்ளிகளில் நுழையும் போது, மொழி பிரச்சனைகளின் காரணமாக அவர்களுக்கு ஏற்படும் சாதகமற்ற நிலை இரட்டிப்பாகிறது.[48]



இருப்பினும், ஓரளவு பெரிய எண்ணிக்கையிலான மலேசிய இந்தியக் குழந்தைகளுக்கு மொழி கற்றல் அடிப்படையில் ஏற்படும் சாதகமற்ற நிலை சில ஆண்டுகள் வரை நீடிக்கலாம்: 2011–ஆம் ஆண்டில் 56% விழுக்காட்டு இந்திய குழந்தைகள் தமிழ்ப் பள்ளிகளில் (SJKT) சேர்ந்த வேளையில், 38% விழுக்காட்டினர் தேசியப் பள்ளிகளில் (SRK) சேர்க்கப்பட்டனர். மேலும் 6% விழுக்காட்டு மாணவர்கள் மெண்டரின் மொழிப் பள்ளிகளான சீனப் பள்ளிகளில் (SJKC) சேர்க்கப்பட்டனர்.[49]

---

44 மக்களின் கல்வி மற்றும் சமூக இயல்புகள் (2010) மலேசிய புள்ளி விபரத் துறை

45 Bennett, J (2008) Early Childhood Services in the OECD Countries: Review of the literature and current policy in the arly childhood field: UNICEF Innocenti Research Centre and Duncan, JG, Magnuson, K (2013) Investing in Preschool Programs: Journal of Economic Perspective Vol.27 No.2 pp. 109-132 (24)

46 தமிழ்ப்பள்ளிகளின் எதிர்காலத்திற்கான மேம்பாட்டுத் திட்ட வரைவு (பிடிஎஸ்டி) 2014

47 மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013–2025

48 டத்தோ டாக்டர்.என்.எஸ் ராஜேந்திரனுடனான நேர்க்காணல் (பிடிஎஸ்டி & செடிக்)

49 மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013–2025



தமிழ்ப்பள்ளிகளில் நிலவும் வசதிகள் குறைபாட்டு நிலை ஒரு நீண்டக்கால சிக்கலாகக் கருதப்படுகிறது. தமிழ்ப்பள்ளிகளில் கட்டமைப்புகளையும் பிற வசதிகளையும் மேம்படுத்த 2009 முதல் 2016 வரையில் ரி.ம.800 மில்லியனை அரசு வழங்கியுள்ளது.[50] 2012–இல், தமிழ்ப்பள்ளிகளில், உறுதியான குறிப்பாக அரசாங்க உதவி பெறும் பள்ளிகளில், அரசாங்கத்தால் வழங்கப்படும் நிதியினால் ஏற்படும் பயன்விளைவுகளைத் தெளிவாக உறுதிசெய்ய, பிரதமர் துறையின் கீழ் தமிழ்ப்பள்ளிகளுக்கான மேம்பாட்டுத் திட்ட வரைவுப் பிரிவை அரசாங்கம் நிறுவியது.[51] இன்று பல தமிழ்ப்பள்ளிகள் பெரிதும் மேம்பட்டுள்ள நிலையில், அப்பள்ளிகள் மலேசிய இந்திய சமூகத்தினரின் தேர்வுப் பள்ளிகளாக விளங்குகின்றன. இருப்பினும், பல பள்ளிகளில் இன்னமும் கவனம் செலுத்தப்பட வேண்டிய நிலை இருக்கவே செய்கின்றது.

வளர்ச்சிகள் ஒருபுறம் இருக்க, தமிழ்ப்பள்ளி மாணவர்கள், மலாய் மொழியைப் பயிற்று மொழியாகவும் பெரும்பான்மையோரின் அன்றாடத் தொடர்பு மொழியாவும் கொண்டுள்ள தேசிய இடைநிலைப் பள்ளியில் கல்வியைத் தொடரும்போது மொழி மற்றும் நிலைமாற்றச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். UPSR தேர்வில், மலாய் மொழிப்பாடத்தில் தேர்ச்சி அடையாவிடில், தமிழ்ப்பள்ளி மாணவர்கள் இடைநிலைப் பள்ளியின் முதல் ஆண்டில் புகுமுக வகுப்பில் (kelas peralihan) சேர வேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆயினும், இந்த வகுப்புகள் நேர்மறை விளைவுகளை விட எதிர்மறை விளைவுகளையே அதிகமாக ஏற்படுத்தும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.[52]

ஒட்டுமொத்த கல்வி அடைவின் அடிப்படையில், மலேசிய இந்திய மாணவர்கள், தேசிய சராசரி அடைவு நிலையை விட குறைவாகவே தேர்ச்சி அடைகின்றனர் என்பதை இத்திட்ட வரைவு கண்டறிந்துள்ளது. 2015–ஆம் ஆண்டில், தேசிய நிலையில் UPSR தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சியடைந்தோர் விழுக்காடு 66% –ஆக இருந்த வேளையில் தமிழ்ப்பள்ளிகளில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி அடைந்தோர் விழுக்காடு 54%–ஆக இருந்தது. SPM தேர்வில் தேசிய அளவில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி அடைந்தோர் விழுக்காடு 55%–ஆக இருந்த வேளையில் 44% விழுக்காட்டு இந்திய மாணவர்கள் மட்டுமே எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சிப்பெற்றனர்.[53] இத்தகைய குறைவான அடைவுநிலை IB40 குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படலாம் என நம்பப்படுகிறது.



மேலும், மலேசிய இந்திய மாணவர்கள் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் விழுக்காட்டினரில் அதிகமாக உள்ளனர். மொத்த எண்ணிக்கையில் 13% விழுக்காட்டினர் அல்லது 1,000 இந்திய மாணவர்கள் தொடக்கப் பள்ளியிலேயே படிப்பைப் பாதியில் நிறுத்திவிடுகின்றனர் என மதிப்பிடப்பட்டுள்ளது.[54] இடைநிலைப் பள்ளியில் 8% விழுக்காட்டினர் அல்லது 4,300 மாணவர்கள் பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே விட்டு விடுகின்றனர்.[55] தங்கள் ஆயுட்காலம் முழுவதும் இவர்கள் குண்டர் கும்பல் மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும் இந்திய மாணவர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடும் எண்ணிக்கையைக் குறைக்கவும் தீவிர முயற்சிகள் மேற்கொள்வது அவசியமாகும்.

50 கல்வி அமைச்சு, ஆசிரியர்களின் சம்பளத்திற்கான மேம்படுத்தப்பட்ட இயங்குமுறை செலவினங்கள் இதில் உள்ளடங்காது

51 அரசாங்க உதவி பெறும் பள்ளிகள், அரசு சார்பற்ற பங்குதாரர்களால் நிறுவப்பட்டு அரசின் பகுதி உதவியுடன் இயங்கி வருகிறது. அரசாங்கப் பள்ளிகள் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகிறது

52 Nagappan, R; Maniam, M; Periasamy, S; Rao, R; Devarajoo, K & Velu, J (2012) Exploring Remove Classes in Malaysia; A Study to Evaluate Their Effectiveness Kuala Lumpur: EWRF.

53 கல்வி அமைச்சு

54 2014– கல்வி அமைச்சின் கீழ் பதியப்பட்ட பள்ளிகளில் இந்திய மாணவர்களின் பதிவு புள்ளியியல், மலேசியக் கல்வி அமைச்சு

55 Ibid.



இதன் காரணமாக, பல்கலைக்கழகங்களில் மேற்கல்வியைத் தொடரும் மலேசிய இந்தியர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாகவே உள்ளனர் என்பதில் வியப்படைவதற்கில்லை. பொதுப் பல்கலைக்கழகங்களில் 74% பூமிபுத்ராக்களும் 13% விழுக்காட்டுச் சீனர்களும் பயிலும் வேளையில் இந்திய மாணவர்கள் 4.5% விழுக்காடு மட்டுமே உள்ளனர். மேலும் மொழித்திறன், தொழில்நுட்பத் திறன்கள், கணினித் திறன்கள், மென்திறன்கள் (soft skills) ஆகியவற்றில் அடைவு நிலை குறைபாடுகள் இருப்பதால் மலாய், சீன பட்டதாரிகளோடு ஒப்பிடுகையில் இந்தியப் பட்டதாரிகள் குறைந்த அளவிலேயே பணியமர்த்தப்படுகின்றனர்.[57]

மலேசிய இந்தியர்களின் கல்வி நிலை தொடர்ந்து முன்னேற்றம் அடைந்தாலும் இன்றைய சூழலில், குறிப்பாக மற்ற இனத்தவருடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க இடைவெளி இன்னமும் இருக்கவே செய்கின்றது. IB40 பிரிவினரிடையே கல்விப்பேறு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தாவிடில் இந்திய சமூகத்தினரிடையே வருமானத்தில் இடைவெளி அதிகரிக்கும் என்பதோடு, நடுத்தர மற்றும் உயர்நிலை வருமானம் பெறும் இந்தியர்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்தும் IB40 பிரிவினரிடையே வளர்ச்சியில் தேக்க நிலையும் ஏற்படும். இந்தக் கல்வி அடைவுநிலை இடைவெளியைக் குறைப்பது, குறிப்பாக IB40 பிரிவினரிடையே கல்வியியல் மேம்பாடுகளைக் கொண்டு வருவதே இந்தப் பெருந்திட்டத்தின் முக்கிய இலக்காகும்.

56 பொதுப் பல்கலைக்கழகங்கள், உயர்க்கல்வி பொது பல்கலைக்கழகங்கள் (IPTA) எனவும் குறிப்பிடப்படுகிறது

57 Ismail, Noor Azina (2011) "Graduates' Characteristics and Unemployment: A Study Among Malaysian Graduates", International Journal of Business and Social Science, Vol. 2 No. 16, p. 94.

# சமுதாயச் சவால்கள்



மலேசிய இந்திய சமூகம் எதிர்கொள்ளும் எண்ணிலடங்கா சமூகச் சிக்கல்கள் ஏற்படுவதற்கு ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்ட மூன்று காரணங்கள் உள்ளன. முதல் காரணம், சுதந்திரத்துக்கு முன்னர் இந்தியாவிலிருந்து மலாயாவிற்குத் தோட்டத் தொழிலாளர்களாக புலம்பெயர்ந்த வரலாற்றுப் பின்னணி. இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டது போல, தோட்டப்புற இந்திய சமூகத்தினர் தங்களுக்குள்ளாகவே தனியொரு இனமாக வாழ்ந்ததோடு பிற இனத்தவரோடு கலக்காமல் தனித்தே வாழ்ந்தனர். இந்தப் பிரிவினை, பல வேளைகளில் குடியுரிமை ஆவணங்கள் இல்லாமல் போனதற்குக் காரணமாய் ஆனது. அதுமட்டுமல்லாமல் இந்நிலை பல தலைமுறைகளாகத் தொடர்ந்ததோடு குடும்பத்தினருக்கு நாடற்ற நிலையை உருவாக்கியது. பெரும்பாலான புலம்பெயர்ந்த இந்தியர்கள் சுதந்திரத்திற்குப் பின்னர் வெற்றிகரமாக மலேசியர்களாகத் தங்களைப் பதிந்துகொண்டுள்ளனர். ஆனாலும் அறியாமை, கல்வியறிவின்மை மற்றும் நடைமுறை சவால்களின் காரணமாகச் சிலர் தங்களை மலேசியராகப் பதிந்துக்கொள்ள இயலாமல் இருக்கின்றனர்.

> தற்போது, 25,000 இந்தியர்களுக்குக் குடியுரிமை அல்லது ஆவணப் பிரச்சனைகள் உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது[58]

நாடற்றவர்கள் எனக் கருதப்படும் குழந்தைகளும் இளைஞர்களும் அரசு வழங்கும் சமூக நலன், கல்வி, மருத்துவம் முதலிய சேவைகளைப் பெற இயலாமல் பெரும் சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். குடியுரிமை இல்லாதவர்கள் முறையான வேலை அல்லது வணிக உரிமம் பெறுவதற்கு மிகுந்த சவாலை எதிர்நோக்குகின்றனர். இதனால் இவர்களின் வறுமை நீடித்து வருகிறது.

வரலாற்றின் அடிப்படையில் இந்தியர்கள் நேரடியாக எதிர்நோக்கும் மற்றொரு சவால் புலம்பெயர்க்கப்பட்ட மற்றும் வயதான தோட்டத் தொழிலாளர்களின் மறு குடியேற்றமாகும். மேலே குறிப்பிட்டுள்ளது போல, கடந்த காலங்களில் தோட்டப்புறங்கள் விற்கப்பட்டு குடியிருப்புப் பகுதிகளாகவோ தொழில் பேட்டைகளாகவோ மாற்றம் அடைந்த போது இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை வேலையிழக்கச் செய்ததோடு நகர்ப்புறங்களில் உள்ள புறம்போக்குக் குடியிருப்புகளிலும் தற்காலிக நீண்ட வீடுகளிலும் தஞ்சம் புகச் செய்தது.[59] அதிக அளவிலான வெளிநாட்டு தொழிலாளர்களின் வருகையின் காரணமாக இந்திய தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது என்றாலும், இன்னும் 36% விழுக்காடு, ஏறக்குறைய 16,000 இந்தியக் குடும்பங்கள் இன்றும் தோட்டத் தொழிலாளர்களாக உள்ளனர்.[60] மறுமேம்பாட்டிற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதால் இந்தக் குடும்பங்கள் இடைப்பட்ட கால அடிப்படையிலோ நீண்ட கால அடிப்படையிலோ வேறு இடங்களுக்கு மாற்றப்படும் அபாயம் இன்னும் இருக்கவே செய்கிறது. இச்சிக்கல்கள் தவிர்க்கப்பட வேண்டுமெனில் மறுகுடியேற்ற முயற்சிகள் முறையாகத் திட்டமிடப்பட்டு, பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டு, அவர்களுக்கு முறையாக மாற்றிடங்கள் வழங்கப்பட வேண்டும்.[61] தற்போது இருப்பதைப் போன்றே தோட்டங்கள் தொடர்ந்து நிலைத்திருந்தாலும், வயதான தோட்டத் தொழிலாளர்கள், அவசியம் புலம்பெயர வேண்டிய சிக்கலை எதிர்நோக்குவது திண்ணமாகும்.



58 டிரா எனப்படும் Development of Human Resources for Rural Areas' அரசு சார்பற்ற அமைப்பு அடையாள ஆவணப் பிரச்சினைகளைக் கையாளுகிறது. நாடற்றவர், தற்காலிக அடையாள அட்டை (சிவப்பு நிற அடையாள அட்டை) இருந்தும் மலேசியாவில் தங்களின் பிறப்பை நிரூபிக்கவும் நிரந்த அடையாள ஆவணங்களை பெறவும் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இருப்பினும், நாடு தழுவிய நிலையில் அடையாள ஆவணங்கள் இல்லாத இந்தியர்களின் சரியான எண்ணிக்கை கணக்கெடுப்பு அமலாக்க அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்

59 குறைந்த செலவிலான வீடுகளில் தோட்டத் தொழிலாளர்களை மறுகுடியேற்ற, தோட்ட நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு சமீபத்திய ஆண்டுகளில் பெருமளவு முயற்சித்து வருகிறது, பல தரப்புகளுடன் நீடித்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின் பிரச்சினைகளின் அடிப்படைக்கேற்ப தீர்வுக் காணப்படுகிறது.

60 இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (2015), தொழிலாளர் துறை

61 பலக் காலங்களாக மறுகுடியேற்பு செய்யப்படாத இந்தியர்கள் இன்றளவும் புறம்போக்கு பகுதிகளிலும் தற்காலிக நீண்ட வீடுகளிலும் வசிக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை தெரியா விட்டாலும், அரசின் பூஜ்யம் புறம்போக்கு வீடுகள் என்ற கொள்கைக்கேற்ப இவர்களின் எண்ணிக்கை குறைந்துக் கொண்டே வருகிறது என்பது களப்பணியாளர்களின் கருத்து.

62 10ஆவது மலேசியத் திட்டப் பரிந்துரைகள்: மலேசிய இந்தியர்கள் & புதிய பொருளாதார மாதிரி, இன ஆய்வுகள் இன்ஸ்டிடுயூட், மலேசிய தேசியப் பல்கலைக்கழகம் (யூகேஎம்)

இரண்டாவது காரணி, சமூகப் பொருளாதார தகு நிலைகள் (status) நவீன சமூகத்தின் மீது அழுத்தங்களைத் துரிதப்படுத்துவதால் சமூகத்தின் அடிப்படை கூறாக விளங்கும் குடும்பங்களுக்குப் பெரும் சவால்களை ஏற்படுத்துகின்றன. 100,000–க்கும் மேற்பட்ட மலேசிய இந்தியர்கள் உருக்குலைந்த குடும்பங்களில் வாழ்கின்றனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது; குடும்ப வன்முறை, தம்பதியர் பிரிந்து வாழ்வது மற்றும் திருமணமுறிவு, மது அல்லது போதைப்பொருள் பயன்பாடு, குற்றச் செயல்களில் ஈடுபாடு, தற்கொலை முதலிய பிரச்சனைகள் மலிந்து காணப்படுகினறன. 2014–ஆம் ஆண்டில், பதிவுசெய்யப்பட்ட குடும்ப வன்முறை வழக்குகளில் 21% விழுக்காட்டு வழக்குகள் இந்திய குடும்பங்களைச் சார்ந்தவையாகும். அதே ஆண்டில், பதிவுசெய்யப்பட்ட வழக்குகளில் 518 இந்திய குழந்தைகளுக்கு அல்லது 12% விழுக்காடு குழந்தைகளுக்குப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புத் தேவைப்படுவதாக அறியப்பட்டது. இந்தப் புள்ளி விவரங்கள், முறையாகச் செயல்படாத குடும்பம் மற்றும் விரிசலடைந்த குடும்ப உறவுகளால் எழுந்தவை என்பதைக் குறிக்கின்றதன.



உருக்குலைந்த குடும்பங்கள் அல்லது முறையாகச் செயல்படாத குடும்பங்களினால் நிலவும் குற்றச்செயல்களும் அதன் பாதிப்புக்கு இலக்காகும் இளையோர்களும் இந்திய சமூகத்திற்குப் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். வலிமையற்ற குடும்ப ஆதரவுகள் குழந்தைகளின் வாழ்வில் உறுதியற்ற நிலையை உருவாக்குகிறது. அதுமட்டுமன்றி அவர்களுடைய இளமைக்கால வாழ்வில் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தவும் முக்கிய காரணமாகத் திகழ்கின்றது. நாட்டில் உள்ள குண்டர் கும்பல் உறுப்பினர்களுள் சுமார் 70% விழுக்காட்டினர் இந்தியர்கள் என்று மதிப்பிடப்படுகிறது. பள்ளிக்காலம் முடிந்த பின்னர் சில இந்திய இளைஞர்கள் குண்டர் கும்பல் நடவடிக்கைகளில் இருந்து விடுபட்டாலும், வாய்ப்புகளும் வசதிகளும் குறைந்த குடும்பங்களிலிருந்தும் உருக்குழைந்த குடும்பங்களிலிருந்தும் வரும் பல இளைஞர்கள் தொடர்ந்து குண்டர் கும்பல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இன்னும் கடுமையான குற்றங்களைப் புரிகின்றனர் என நிபுணர்கள் கூறுகின்றனர். அரச மலேசிய காவல் துறையின் (PDRM) 2014–ஆம் ஆண்டிற்கான புள்ளி விவரப்படி, குற்றச் செயல்களுக்காக கைது செய்யப்பட்ட மலாய்க்காரர்கள் 51% விழுக்காட்டினராகவும் சீனர்கள் 11% விழுக்காட்டினராகவும் இருக்கும் நிலையை ஒப்பிடுகையில் (ஒட்டு மொத்த தேசிய மக்கள் தொகையில் 7% விழுக்காட்டினராக உள்ள நிலையில்) மலேசிய இந்தியர்கள் குற்றச்செயல்கள் புரிவதில் 31% விழுக்காட்டினராக இருக்கின்றனர்.

மலாய்–முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள நாட்டில் இந்தியர்கள் சிறுபான்மையினர் என்பது மூன்றாவது காரணி ஆகும். பல்லின மக்களைக் கொண்ட நாடான மலேசியாவில், பெரும்பாலும் மக்கள் மன ஒருமைப்பாட்டோடு வாழ்ந்தாலும், சிறுபான்மை இனத்திற்குக் குறிப்பிட்ட சில சவால்கள் எழவே செய்கின்றன. ஒன்று, சமயத்தையும் பண்பாட்டையும் கடைப்பிடிப்பதைச் சார்ந்த சவால்களாகும். இந்து மதம் அல்லது பிற மதங்களைச் சார்ந்த சடங்குகளுக்குப் பொது மண்டபங்களைப் பயன்படுத்துவதற்கு எதிர்க்கப்படுவதோடு தடை விதிக்கப்படுவது ஓர் இனம் ஒடுக்கப்படுவதைப் போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகின்றது.

பிறர் நிலத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட பதிவுபெறாத கோவில்கள் மற்றும் சிறு வழிபாட்டுத் தலங்களின் நிலங்கள் குடியிருப்புக்கும் மேம்பாட்டிற்கும் கோரப்படும்போது பூசல்கள் ஏற்படுகின்றன. பெரிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இவ்வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்படும்போதோ இடமாற்றம் செய்யப்படும்போதோ அதன் தொடர்புடைய பணிகள் முறையாக கையாளப்படவில்லை என்றால், மக்களிடையே பதற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தும். பெரும்பான்மை மக்களின் மன உணர்வுகளைக் கருத்தில் கொள்வதோடு விதிமுறைத் தேவைகளை நன்கறிந்து செயல்பட்டுத் தங்கள் சமய உரிமைகளை உறுதிப்படுத்துவதில் இந்துக்கள் சவால்களை எதிர்நோக்குகின்றனர். அதே வேளையில், இந்தியர்கள் சார்ந்த சமய அமைப்பான கோயில்கள்; கல்வி, நன்மதிப்பு, சமூக நலன் ஆகியவற்றில் சமூகத்திற்குத் தங்கள் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும்.

இறுதியாக, இந்திய இனத்தவராக இருப்பது பெருமைக்குரியதென்றாலும்; குற்றச்செயல்கள் புரிதல், குண்டர் கும்பல்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மதுவிற்கு அடிமையாதல், வன்முறையில் ஈடுபடுதல், குறைந்த கல்வியைப் பெற்றிருத்தல் மற்றும் வறுமைப் பிடியில் சிக்கியிருத்தல் போன்ற சில பிரிவினரால் சமூகத்தின் ஒட்டுமொத்த தோற்றத்திற்கும் நன்மதிப்பிற்கும் களங்கத்தை ஏற்படுத்துகிறது. சமூகத்தின் மீது பரவலாகக் குற்றம் சுமத்தப்படுவதைத் தவிர்த்து, இந்திய சமூகத்தினரை ஒட்டுமொத்தமாக முத்திரை குத்தும் எதிர்மறை கருத்துக்கள் (sterotypes) உருவாக்கம் பெற்றுவிட்டதால், பள்ளிகளில் மாணவர்கள் ஒதுக்கப்படுவதோடு வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்கும் வாழ்நாள் முழுவதும் சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தங்கள் சமூகத்தின் மீது குத்தப்பட்டுள்ள இத்தகைய எதிர்மறை கருத்துக்களை (sterotypes) உண்மையென நம்பி ஏற்றுக்கொள்ளும் இந்தியர்களின் முன்னேற்றமும் தடைப்படும்.

தொடர்ந்து வரும் இயல்களில் சிக்கல்களைக் களைய இப்பெருந்திட்ட வரைவு மேற்கொள்ளும் திட்டங்களும் அதன் இலக்குகளும் விளக்கப்படும்.

63 10ஆவது மலேசியத் திட்டப் பரிந்துரைகள்: மலேசிய இந்தியர்கள் & புதிய பொருளாதார மாதிரி, இன ஆய்வுகள் இன்ஸ்டிடியூட், மலேசிய தேசியப் பல்கலைக்கழகம் (யூகேஎம்)

64 Attributed to Bukit Aman's CID director, as reported in "Indian gangs originated from Chinese triads" (2013, August 27) The Sun Daily. Accessed at: http://www.thesundaily.my/news/808352

65 அரச மலேசிய காவல் துறையுடன் நேர்க்காணல்

66 கொலை, கொலை முயற்சி, கற்பழிப்பு, கூடா ஒழுக்கம், ஆயுதக் கொள்ளை அல்லது வன்மம் உட்பட்ட குற்றச்செயல்கள்.
குறிப்பு: இதர இனத்தினர் வன்முறை குற்றச்செயல் கைதுகளில் எஞ்சியுள்ள 7 விழுக்காட்டினராவர்

# பெருந்திட்டத்தின் மதிப்புகள்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள, பொருளாதார, கல்வி மற்றும் சமூகச் சவால்களைக் களைய முயற்சிகள் மேற்கொள்ளப்படாமல் போனால், இந்தியர்கள் தொடர்ந்து மலேசியாவின் முதன்மை நீரோட்டத்திலிருந்து விலகிவிட்ட ஒரு தனிப்பிரிவினராகத் திகழும் சூழல் மேலும் வலுவடையும். இது தனிமனித ஆற்றலை விரயம் அடையச் செய்வதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரத்திற்குப் பின்னடைவை ஏற்படுத்த வல்லதாகவும், தேசிய இன நல்லிணக்கத்திற்கு அச்சுறுத்தலாகவும் விளங்குகிறது.



2008–ஆம் ஆண்டு முதல், இந்த முதன்மை சவால்களைக் களைய, அரசு படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. குறிப்பிட்ட சிக்கல்களைக் களைய பிரதமர் துறையின் கீழ், அரசு திட்டங்களிலும் பங்கெடுக்க ஊக்குவிக்கும் பொருட்டு இந்திய சமூகத்திற்கான அமைச்சரவைக் குழு (CCIC) அமைக்கப்பட்டதோடு குறிப்பிட்ட சிக்கல்களைக் களைய மேலும் நான்கு சிறப்புப் பிரிவுகள் நிறுவப்பட்டன. அவை: குடியுரிமை மற்றும் பிறப்பு ஆவணங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில் முக்கியப் பங்காற்றும் சிறப்பு செயலாக்க பணித்திட்டக் குழு (SITF), தமிழ்ப்பள்ளிகளுக்கான மேம்பாட்டுத் திட்ட வரைவுக்குழு (PTST), இந்திய தொழில்முனைவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் ஆதரவு வழங்கும் இந்திய தொழில்முனைவர் மேம்பாட்டுத் திட்ட சிறப்புச் செயலகம் (SEED), இந்திய சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி வழங்கிவரும் இந்தியர்களுக்கான சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு (SEDIC) ஆகியவையாகும்.

மலேசிய இந்திய சமூகத்தினரின், குறிப்பாக IB40 பிரிவினரின் நிலையை மேம்படுத்த மேலும் கூடுதலாகப் பலவற்றைச் செய்ய இயலும் என அரசு கருதுகிறது. இறுதியாக பல துறைகளில் மலேசிய இந்தியர்களின் குறைவான பிரதிநிதித்துவத்தையும், திறன் வெளிப்படுத்தலையும் களையும் பொருட்டு பல பரிமாணங்களைக் கொண்ட அரசின் முழுமையான அணுகுமுறைகளை உள்ளடக்கியுள்ளதாக மலேசிய இந்தியர்களின் பெருந்திட்ட வரைவு விளங்குகிறது.

# இந்தப் பெருந்திட்ட வரைவு பின்வரும் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வகுக்கப்பட்டுள்ளது:

தலைமுறைகளுக்கிடையிலான இடர்பாடு மற்றும் சமூக முன்னகர்வு குறைகளை உடனடியாகக் களைதல்;

நடைமுறை அரசு கொள்கைகள், நடவடிக்கைகள், செயல் திட்டங்கள் ஆகியவற்றில் இம்முயற்சிகளை உட்புகுத்தி பயன்தகு புதிய திட்டங்களில் ஒருங்கிணைப்பதை உறுதி செய்தல்.

தேசிய சராசரி அடைவு நிலைக்கும், மலேசிய இந்திய சமூகத்தின் அடைவு நிலைக்கும் இடையிலுள்ள இடைவெளியைக் குறைக்க முற்படும் முயற்சிகள் யாவும், சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களின், அமைச்சுகளின் முக்கியத்துவம் வாய்ந்த நீண்டக்கால குறிக்கோள்கள், இலக்குகள் ஆகியவற்றின் ஒரு பகுதியாக விளங்குவதை உறுதிச்செய்தல்.

புள்ளிவிவர அடிப்படையில், காலத்திற்கேற்றாற் போல் மக்களுக்குத் தேவைப்படும் மேம்படுத்தப்பட்ட சேவையை சிறப்பான நடைமுறையின் வழி தொடர்ந்து வழங்குதை உறுதிசெய்தல்.

# பெருந்திட்டத்தின் அமைப்பு முறை

இந்தப் பெருந்திட்டம், மலேசிய இந்திய சமூகத்திற்குப் பின்வரும் விளைபயன்களைக் கொண்டுவர முற்படுகிறது:

- பிரத்தியேகமாக IB40 பிரிவினரிடையே, தனிப்பட்ட நிலையிலும் ஒப்பீட்டு நிலையிலும் மேம்படுத்தப்பட்ட வருவாய் மற்றும் சொத்துடைமை.
- இனங்களுக்கிடையில் இடைவெளியற்ற மேம்படுத்தப்பட்ட கல்வி அடைவு நிலை.
- ஒட்டுமொத்த மலேசிய சமூகக் கட்டமைப்பில் தாங்களும் உள்ளடங்கி இருக்கின்றோம் என்ற இந்திய சமூகத்தின் மேம்பட்ட எண்ணம்.

மேற்கண்டவற்றை அடைய, இந்தப் பெருந்திட்டம், அதன் அணுகுமுறைகளையும், சிந்தனைகளையும், நடவடிக்கைகளையும் நான்கு முக்கிய பெரும் தூண்களாகப் பகுத்து அமைந்துள்ளது:




## அடிப்படைத் தேவைகளை அணுகுதல்

பொருளாதாரத்திலும் சமூக அமைப்பிலும் விளைபயன்மிக்க வகையில் பங்காற்றுவதற்கு, முதலில் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். இதுவே பிற முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும். அதனால், இந்த பெருந்தூண் நவீன வாழ்க்கையின் கட்டமைப்பை உருவாக்கும் நோக்கத்தை உள்ளடக்கியதாகும். இதன் வழி மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் சமூக நல உதவிகளைப் பெறுவதற்கும், புலம்பெயர்க்கப்பட வேண்டிய ஆபத்தை எதிர்நோக்கியுள்ள வயதான தோட்ட தொழிலாளர்கள் போன்றோருக்கு பாதுகாப்பிடங்களுக்கு அல்லது வீடுகளுக்கு ஏற்பாடுகளைச் செய்து தருவதற்கும், ஆரோக்கியமான மற்றும் நிலையான வீட்டு சூழலை குடும்பங்கள் பெற்றிருக்க உதவி செய்வதற்கும் பெரிதும் வழி வகுக்கும்.

'அடிப்படைத் தேவைகளை அணுகுதல்' பற்றிய விளக்கம் இந்தப் பெருந்திட்டத்தில் அடங்கியுள்ள இரண்டாம் இயலில் கொடுக்கப்பட்டுள்ளது.




## ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்

வறுமைப்பிடியில் இருந்து விடுபடுவதற்கும் வளமான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும் கல்வியும் பயிற்சியும் மிகவும் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இந்தப் பெருந்தூண், மலேசிய இந்தியர்களின் தொடக்கப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரையிலான கல்வி அடைவு நிலையில் அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் களையும் திட்டங்களை உள்ளடக்கியதாகும். அதுமட்டுமின்றி மிகுந்த பாதிப்புள்ளாகும் நிலையில் உள்ள இளைஞர்களுக்கு உதவும் மற்றும் மறுவாழ்வளிக்கும் நோக்கத்தை உள்ளடக்கியதாகும்.

'ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்' பற்றிய முன்னெடுப்புகளின் விளக்கம் இந்தப் பெருந்திட்டத்தில் அடங்கியுள்ள மூன்றாம் இயலில் விவரிக்கப்பட்டுள்ளது.




## வாழ்வாதாரம் மற்றும் சொத்துடைமையை வலுப்படுத்துதல்

IB40 பிரிவினரின் வருமானத்தை அதிகரிப்பதாலும் பொருள்வளத்தை மேம்படுத்துவதாலும் அவர்கள் மலேசிய பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதோடு அறிவு–முனைப்பியலான பொருளாதாரத்திற்கும் அதிக–வருமானத்தை குறுயிலக்காகக் கொள்ளும் பொருளாதாரத்திற்கும் முக்கியத்துவம் வழங்கக் கூடியவர்களாக விளங்குவர். மிகக் குறைத்த பணித்திறன் பெற்றிருத்தல், அதனால் குறைந்த வருமானம் பெறுதல் ஆகியவற்றிலிருந்து விடுபட மறுதிறனடைவு பயிற்சிகள், வேலை வாய்ப்புகள், மற்றும் தொழில் முனைவுகள் ஆகியவற்றிற்கு இப்பெருந்தூண் முக்கியத்துவம் வழங்குகிறது.

'வாழ்வாதாரம் மற்றும் சொத்துடைமையை வலுப்படுத்துதல்' பற்றிய முன்னெடுப்புகளின் விளக்கம் இந்தப் பெருந்திட்டத்தில் அடங்கியுள்ள நான்காம் இயலில் விவரிக்கப்பட்டுள்ளது.




## சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்

மலேசிய இந்தியர்கள் எதிர்நோக்கும் சமூகச் சிக்கல்கள் தாங்கள் ஒதுக்கப்பட்டவர்கள் என்ற உணர்வினையும் இந்நாட்டின் மீது உரிமையற்றவர்கள் என்ற எண்ணத்தையும் அதிகரிக்கக்கூடும். உண்மையிலேயே மலேசிய இந்தியர்கள் தனித்து நில்லாமல் மலேசிய சமூகத்தோடு இரண்டறக் கலந்தவர்கள் என்ற எண்ணம் ஏற்பட வேண்டுமானால் அவர்கள் எதிர்நோக்கும் குடியுரிமை ஆவணங்கள் இல்லாத நிலை, சமயத்தை முறையாக கடைப்பிடிக்காத நிலை, பிற இனத்தவரிடையே இந்திய சமூகம் பற்றிய தாழ்வான எண்ணம் முதலியவை களையப்படவேண்டும்.

'சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்' எனும் தலைப்பின் கீழ் எண்ணிலடங்கா சிக்கல்களைக் களைய முற்படும் இப்பெருந்தூணை ஒட்டிய முன்னெடுப்புகளின் விளக்கம் இந்தப் பெருந்திட்டத்தில் அடங்கியுள்ள ஐந்தாம் இயலில் விவரிக்கப்பட்டுள்ளது.

# மலேசிய இந்தியர் பெருந்திட்டம்: கட்டமைப்பு

## 4 முக்கிய அம்சங்கள்

### A

- பாதிப்படைந்த மக்களுக்கு சமூகநல உதவி
- மலிவு விலை வீடுகளுக்கான ஒதுக்கீடுகளை அடைதல்
- பிரச்சினைக்குரிய குடும்பங்களுக்கு ஆதரவு

### B

- அனைத்து வயதிலும் கல்வி மற்றும் திறன் அடைவை மேம்படுத்துதல்
- சவால்மிக்க இளைஞர்களை அடையாளங் காணுதல்

### C

- மறுதிறன் அல்லது மேம்படுத்தும் திட்டம்
- பொருந்தும் வேலைகள்
- வணிகம்

### D

- அடையாள ஆவணங்கள்
- குற்றச்செயல்களிலிருந்து வெளிப்படுதல்
- சமயக் கடைப்பிடிப்பு
- சமுதாயத்தின் மீதான பார்வை



இந்தப் பெருந்திட்டத்தின் அமலாக்கம், அதன் வளர்ச்சிக்கு ஏற்ப, முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்தப்பட வேண்டும். இப்பெருந்திட்டத்தின் நான்கு பெருந்தூண்களுடன் 2017 முதல் 2026 வரையுள்ள, அமலாக்கத்தின் 10 ஆண்டுக் காலக்கட்டத்தில் அடையவிருக்கும் பல்வேறு இலக்குகள் உடன் இடம்பெற்றுள்ளன. நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் கூறுகள் இப்பெருந்திட்டத்தின் ஆறாம் இயலில் விளக்கப்பட்டுள்ளன.

மலேசிய இந்தியர்களின் பெருந்திட்டம் இன்றைய சூழலில் மலேசிய இந்தியர்கள் எதிர்நோக்கும் உண்மையான சவால்களை முறையாகத் தொகுத்து அவற்றைக் களைவதற்காக அரசாங்கம் மேற்கொள்ளும் முயற்சிகளை மக்களுக்கு வெளிப்படுத்தவும், இச்சிக்கல்களை களைய உதவும் 'இரண்டாம் தலைமுறை' கொள்கைகள் அல்லது திட்டங்களை அடையாளம் கண்டு வெற்றிகளின் அடைவு நிலைகளை உறுதிப்படுத்தும் இலக்குகளை முன்வைக்கும் நோக்கங்களையும் கொண்டுள்ளது.

அது மட்டுமல்லாமல், இந்தப் பெருந்திட்டம், மலேசிய இந்திய சமூகத்தின், குறிப்பாக IB40 பிரிவினரிடையே காணப்படும் சமூகப்பொருளாதார இடைவெளியைக் குறைத்து, வளர்ச்சியடைந்த நாடாக மாற்றத்தை நோக்கி பீடுநடை போடும் மலேசியாவின் பயணத்தில் மலேசிய இந்தியர்களையும் ஒருங்கிணைத்து உடன் அழைத்துச் செல்லும் உன்னத நோக்கத்தைக் கொண்டதாகும்.





# இயல் 2

# அடிப்படைத் தேவைகளை அணுகுதல்



# நவீன வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகளை நிறைவு செய்தல்

**சமூக அமைப்பிலும் பொருளாதாரத்திலும் தனிநபர்கள் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு முன், நவீன வாழ்க்கைக்குத் தேவையான அடித்தளத்தை உறுதி செய்வதோடு அடிப்படைத் தேவைகளையும் நிறைவுப் பெற்றிருக்க வேண்டும்.**

ஆகையால் மலேசிய இந்தியப் பெருந்திட்டத்தில் 'அடிப்படைகளை அணுகுதல்' எனும் திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அது செயல் வடிவம் பெறும்போது, குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பப் பிரிவுகளுக்கு துணையாக இருக்கும்.

ஏழைகள் என வரையறுக்கப்பட்டிருக்கும், தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழ் இடம்பெற்றவர்கள் அல்லது அதற்கும் குறைவாக வருமானம் பெறும் இந்தியக் குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய போதிய உதவிகள் பெறுவதை உறுதி செய்வது 'அடிப்படைத் தேவைகளை அணுகுதல்' என்ற செயல்திட்டத்தின் முதல் படியாக அமையும்.[67] மலேசியா, கடுமையான வறுமை நிலையினை பெரும்பாலும் ஒழித்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.[68] அடுத்தக்கட்ட ஏழ்மை நிலையில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதை உறுதி செய்து, அவர்கள் நீண்டகால சமூகப்பொருளாதார முன்னகர்வை நோக்கி செயல்பட அடித்தளம் அமைத்துத் தருவதே நமது தற்போதைய கடமையாகும். அதற்குத் தேவையான கருவிகளையும் வசதிகளையும் இக்குழுவினருக்கு வழங்குவதன்வழி ஏற்படுத்தப்படும் பாதுகாப்பு வலையால் இவர்களைப் பொருளாதார அதிர்வுகளிலிருந்து பாதுகாக்க முடியும்.

'அடிப்படைத் தேவைகளை அணுகுதல்' திட்டத்தின் இரண்டாவது கட்டச் செயல் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் உறைவிடங்கள் மற்றும் குடியிருப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வுக் காணுதலாகும். ஏழ்மை நிலையில் உள்ள அனைவருக்கும் (பாதிக்கப்பட்ட அனைத்து இனங்களுக்கும்) மலிவு விலை வீடுகளை வழங்குவது ஒரு சவாலாக அமையும் வேளையில், தோட்டத் தொழிலாளர்களின் மறுகுடிபெயர்ப்பு இந்திய சமூகம் எதிர்நோக்கும் முக்கிய சிக்கலாகும். இன்றளவில், ஏறக்குறைய 16,000 இந்தியர்கள் தோட்டத்தொழிலாளர்களாக பணிப் புரிகின்றனர் என்று கணிக்கப்பட்டுள்ளது.[69] இவர்களுள் பெரும்பாலானோருக்கு தோட்டப்புறமே அவர்கள் அறிந்த ஒரே சமூகப் பொருளாதாரச் சூழலாகும். தோட்டப்புறங்கள் நாட்டின் சொத்துடைமை மேம்பாட்டிற்கு வழிவகுப்பதால், இத்தொழிலாளிகள் உடலளவிலும் சமூகவியலளவிலும் இடம்பெயரும் பாதிப்புண்டு. இவர்களை பொருத்தமான குடியிருப்புகளில் அதாவது புதிய சமூக மற்றும் சூழலை எதிர்கொள்ளும் தேவைகளுடன் குடிபெயர்ப்பு செய்யத் தவறினால், குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் வறுமைநிலை தொடர்ந்து நீடிக்கும்.

குறிப்பாக குழந்தைகள் உள்ள குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களில் நிலவும் சீர்க்குலைந்த சூழலை எதிர்க்கொண்டு அல்லது தீயச் சூழலிலிருந்து விடுபட்டு, நிலையான குடும்பச் சூழலை உருவாக்குவதே 'அடிப்படைத் தேவைகளை அணுகுதல்' திட்டத்தின் மூன்றாவது கட்டச் செயலாகும்.



சிறு தவறுகளைப் புறக்கணிப்பதில் துவங்கி, குடிப்பழக்கத்திற்கு அடிமையாகுதல், முறைக்கேடான செயல்கள் முதலியவை தீய நடத்தைகளாகக் கருதப்படும். வழக்கமாக, குடும்ப நிலைத்தன்மை அல்லது அதன் குறைபாடு ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவையாகக் கருதப்படாவிட்டாலும், இப்பெருந்திட்டத்தில் இடம்பெற்றுள்ள, கல்வி அடைவுநிலை, இளைஞர்களுடைய அபாயநிலை மற்றும் குற்றச் செயல்கள் போன்ற பல சிக்கல்களின் முக்கியப் பகுதிகளாக விவரிக்கப்பட்டுள்ளன.[70]

ஆகையால், குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் தற்போதைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் தலைமுறையினர்களுக்கிடையில் நிலவும் சமூகப்பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, குடும்ப நிலைத்தன்மையை அடித்தளத் தேவையாக மலேசிய இந்தியப் பெருந்திட்டம் கருதுகிறது.

---

67 மனிதர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் உடல்நலம், கல்வி, வீட்டு வாடகை, துணி, போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு வசதியின்றி அவதியுறுவதே வறுமை என மலேசிய அரசாங்கம் வறுமை என வகைப்படுத்தியுள்ளது. இப்பிரிவுகளில் மிகக்குறைந்த நிலையையே வறுமைக்கோடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூலம்: மலேசிய நகர்ப்புற வறுமையும் சமமின்மையும்: அயலார் சார்ந்த சமூக சேவைத் திட்டத்தின் மூலம் மலேசிய இந்தியர்களை மேம்படுத்துதல், Chamhuri Siwar எழுதிய 'Contemporary Malaysian Indians' எனும் புத்தகம்

68 வறியநிலை ஏழ்மை என்பது வாழ்வாதாரத்திற்கான அடிப்படைத் தேவை ஆதரவின்றி அவதியுறுவதைக் குறிப்பதாகும். வறுமைக்கோட்டின் பாதியளவில் அதாவது ரிம.465இல் இது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூலம்: 11ஆவது மலேசியத் திட்டம்

69 இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்கள் எண்ணிக்கை (2015), மலேசிய தொழிலாளர் துறை

70 அரசாங்க அதிகாரிகள், அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் இதர கூட்டமைப்பாளர்களுடனான நேர்க்காணல்கள்

# ‘அடிப்படைத் தேவைகளை அணுகுதல்’ : இலக்குகள்

மலேசிய இந்தியப் பெருந்திட்டமானது, 11–வது மலேசிய திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்ட இலக்குகளை அவற்றைச் சார்ந்த அமைச்சு மற்றும் அரசு சார்ந்த அமைப்புகளின் துணைக்கொண்டு கீழ்க்காணும் இலக்குகளை அடையும்.

## அ. வறுமை ஒழிப்பு

- வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருக்கும் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களை இ–காசே தகவல்தளத்தில் பதிவு செய்தலோடு தேவையான சமூகநல உதவிகளைப் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
- மலேசிய இந்திய ஏழைக் குடும்பங்களின் சராசரி மாத வருமானம் தற்போதைய தேசிய PLI (ரிம.950)– ஐக் காட்டிலும் இரட்டிப்பாவதை உறுதிப்படுத்துதல்.[71]
- மலேசிய இந்தியப் பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்ட 5 வருடங்களுக்குள், குறைந்தது 50% பதிவு செய்யப்பட்ட ஏழ்மை நிலைக் குடும்பங்களில் சேமிப்பு உயர்வை உறுதிப்படுத்துதல்.[72]

## ஆ. வீடமைப்பு

- குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்கள் நகர்ப்புறங்களிலுள்ள மலிவு வீடமைப்புத் திட்டங்களிலும் வாங்க இயலக்கூடிய பொது வீடுகள் திட்டங்களிலும் உரிய பங்கு பெற்றிருப்பதை உறுதி செய்தல்
- மலேசிய இந்தியப் பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்ட 5 வருடங்களுக்குள், முந்தைய இந்திய தோட்டத் தொழிலாளிகளின் மறுகுடியேற்றப் பிரச்சினைகளுக்குத் தீர்வுக் காண்பதை உறுதிசெய்யும்.[73]
- வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் இந்திய தோட்டத் தொழிலாளிகளின் குடிப்பெயர்ப்பு திட்டங்களை விரைவாகவும் நியாயமான முறையில்

## இ. குடும்ப நிலைத்தன்மை

- மலேசிய இந்தியக் குடும்பங்கள் மற்றும் தேசிய சராசரி குடும்ப நலக் குறியீடு ஆகியவற்றுக்கிடையிலான இடைவெளியை குறைத்தல்.
- மலேசிய இந்தியக் குடும்பங்களில் பதிவு செய்யப்பட்ட முறைக்கேடு மற்றும் வன்முறை வழக்குகள் குறைவதை உறுதிப்படுத்துதல்.[74]

---

71 11ஆவது மலேசியத் திட்டத்தின் இலக்கிற்கேற்ப 2020க்குள் கீழ்நிலை வருமானம் பெறும் 40% இந்தியர்களின் நிகர மற்றும் சராசரி மாத வருமானத்தை இரட்டிப்பாக்குதல்

72 இ–காசே தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட மலேசிய ஏழை இந்தியக் குடும்பங்களின் சேமிப்பின் தொடர்பான ஆய்வின் அடிப்படையில் 2017இல் அடித்தளம் நிர்ணயிக்கப்படும்

73 2017ஆம் ஆண்டுக்கு முந்தைய பதிவுகள்

74 2016ஆம் ஆண்டு முடிவின் அடித்தள அடிப்படையில்

# அ. வறுமை ஒழிப்பு

மனிதர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறைவிடம் மற்றும் இதர தேவைகளைப் பெறுவதற்கு போதிய பொருளாதார வசதியின்றி அவதியுறுவதே வறுமை என வரையறுக்கப்பட்டுள்ளது. சுதந்திரம் பெற்றது முதல், உள்நாட்டு நிகர உற்பத்தி (GDP) மற்றும் வருமானத்தின் தொடர்ச்சியான உயர்வு தீவிர வறுமையை பெருமளவு குறைத்துள்ளது – ஏறத்தாழ 100% மலேசிய குடும்பங்களில், மிக அடிப்படையிலானத் தேவைகளை பூர்த்தி செய்ய முடிகிறது.[75]

இருந்தபோதிலும், பணவீக்கத்தின் விளைவும் நகர்ப்புற வாழ்வின் தேவைகளும், இன்றைய ஏழ்மை நிலையின் வரையறையை விரிவாக்கம் செய்துள்ளது. நவீன வாழ்க்கை முறையில் கல்வி, உடல்நலம், போக்குவரத்து மற்றும் தொடர்பு முறை ஆகியவை அடிப்படைத் தேவைகளாக விவரிக்கப்பட்டுள்ளன.[76] மலேசிய குடும்பங்கள் இவ்வாறான அடிப்படைத் தேவைகளை அடைவதை உறுதிப்படுத்துதலே இப்பகுதியின் மையப் பொருளாகும்.








தற்போதைய, மலேசிய வறுமைக்கோடு வருமானம் (PLI) நிர்ணயத்தின் படி – மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு, ரிம.950 ஒரு சராசரி குடும்பத்திற்கு மாதந்தோறும் தேவைப்படும் வருமானமாகும்.[77] நகர்ப்புற ஏழை மக்களின் தொடக்கநிலை வருமானம் ரிம. 960–ஆக நிர்ணயிக்கப்பட்ட வேளையில் ரிம.910–க்கும் குறைவாக மாத வருமானம் பெறும் புறநகர் ஏழைகள் இதில் உள்ளடங்குவர். வருமான வறுமைக் கோட்டிற்கு (PLI) கீழ் வருமானம் பெறும் குடும்பங்களை, ஏழ்மை நிலை குடும்பங்கள் என்று வகைப்படுத்துவதோடு பண ஆதரவு, வீடு மற்றும் தேவைக்கேற்ப உதவிகள் உள்ளிட்ட சமூகநலன் உதவிகளுக்கு தகுதியானவர்கள் என்று கருதப்படுகின்றனர்[78]

75 வறிய நிலை மொத்த குடும்பங்களில் 0.1% ஆகும். மூலம்: 11ஆவது மலேசியத் திட்டம்

76 வறுமைக் குறியீட்டில் ஏற்பட்டிருக்கும் பல பரிமாண மாற்றத்தில் பிரதிபலிக்கிறது. 11ஆவது மலேசியத் திட்டம்

77 சராசரி குடும்ப அளவு 4.3 அங்கத்தினர் ஆவர். மூலம்: செயலாக்க ஒருங்கிணைப்புப் பிரிவு

78 ஒவ்வொரு குடும்பத்தாரின் வறுமைக் கோட்டின் நிலை இடம், குடும்ப அளவு, குடும்பத்தின அங்கத்தினர் போன்றக் காரணங்களால் மாறுபட்டிருக்கும். ஒரு குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேல் சம்பாதித்தாலும் கூட ஏழைகள் என கருதப்படுவர். எ.கா. அவர்களது தனிப்பட்ட வறுமைக் கோடு, குடும்பத் தன்மைகளையும் சார்ந்துள்ளது.



0.6% அல்லது 3,500 மலேசிய இந்தியக் குடும்பங்கள் ஏழைகள் என வரையறுக்கப்பட்டுள்ளனர்.[79] அதே நேரத்தில் மாதத்திற்கு ரிம.1,000க்கும் கீழ் வருமானம் பெற்று வாழ்க்கைச் சவால்களை எதிர்நோக்கும் ஏறத்தாழ 22,700 மலேசிய இந்தியக் குடும்பங்களும் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு முக்கியப் பிரிவினராவர்.[80]

பெரும்பாலான மலேசிய இந்தியர்களின் வறுமை, நகர்ப்புறத்தின் முக்கியப் பிரச்சனையாகும்; PLIக்கும் குறைவான வருமானம் பெறும் 80% மலேசிய இந்தியக் குடும்பங்கள், நகர்ப்புறங்களில் வசித்தும் வேலை செய்தும் வருகின்றன.[81]

குறைந்த கல்வியறிவு, திறன் குறைபாடு, தோட்டங்களில் இருந்து இடம் பெயர்தல் மற்றும் ஒதுக்கப்படுதல் ஆகியவை இந்திய ஏழ்மை நிலை குடும்பங்கள் உருவாவதற்கும் நிலைத்திருப்பதற்கும் காரணமாகின்றன.

ஏழ்மை நிலை குடும்பங்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய, அவை சமூகநல உதவி பெறுவதற்கு அடையாளம் காணப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துவது முக்கியமானதாகும். இவர்களின் குறைந்தப்பட்ச அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அப்பால், நிலையான வருமானம் ஈட்டும் திறனை வளப்படுத்திக் கொண்டு ஏழ்மை நிலையிலிருந்து விடுவிக்க உதவுவதும் முக்கியமாகும்.




79 குடும்ப வருமான ஆய்வு 2014. மலேசிய புள்ளி விபரத் துறை

80 குடும்ப வருமான ஆய்வு, 2012. மலேசிய புள்ளி விபரத் துறை. 19,000 குடும்பங்களுக்கிடையிலான வித்தியாசம் குடும்பத்தின் அளவு, அமைப்பிடம் மற்றும் இதர காரணிகளின் வேறுபாடுகளை பிரதிபலிக்கிறது.

81 பூமிபுத்ராக்களின் வறுமைப் பிரச்சினை நகர்ப்புறம் மற்றும் புறநகருக்கிடையில் சரிசமமாக வேறுபட்டுள்ளது. மூலம்: குடும்ப வருமானம் மற்றும் அடிப்படை வசதிகள் ஆய்வு 2014

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

மலேசிய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை பதிவு செய்யும், இ–காசே எனப்படும் தேசியத் தரவுத்தள பதிவகத்தில் சுமார் 30,600 மலேசிய இந்தியக் குடும்பங்கள் பதிவு செய்துள்ளன. இந்தத் தரவுத் தள வாயிலாக, அமலாக்க ஏஜென்சிகள் உதவித்திட்ட பெறுநர்களையும் பங்கேற்பாளர்களையும் தேர்வு செய்கின்றன.[82] இந்த உதவித்திட்டம், தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்தக் குடும்பங்களிலிருந்து 5% விழுக்காட்டினரை பிரதிபலிக்கின்றது.



இத்தரவுத்தளத்தில், மலேசிய இந்திய குடும்பங்களைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யும் முயற்சிகள் காலந்தவறாமல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பயிற்சியற்ற கள பணியாளர்கள் அல்லது சமூக அமைப்பாளர்கள் திரட்டும் முக்கிய பின்னணித் தகவல்களில் தவறுகள் மற்றும் பற்றாக்குறையைத் தவிர்க்க இம்முயற்சிகள் தரவுக் காப்பகமான, (ICU)வுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். குறிப்பாக பல்கலைக்கழக ஆய்வாளர்கள் போன்ற பயிற்சிப் பெற்ற கூடுதலான தன்னார்வலர்கள், குடும்பத் தகவல்களை பதிவதற்கும் உறுதி செய்வதற்கும், (ICU)க்கு துணைப்புரியலாம்.

இந்திய சமூகம், இ–காசேவைப் பற்றித் தெரிந்துக் கொண்டு, தங்களையோ அல்லது தாங்கள் அறிந்த ஏழைக் குடும்பத்தினரையோ நேரடியாகப் பதிவு செய்ய ஏதுவாக, அதைப் பற்றிய பரப்புரை பிரச்சாரங்கள் சிறந்த முறையில் வடிவமைக்கப் பெற்று, இலக்குக் குழுவினரைச் சென்றடைய வேண்டும். (குறைந்த வருமானம் பெறும் IB40 குடும்பத்தினரின் மொழி ஆற்றல் நிலையைக் குறிக்கும் வரைப்படத்தைக் காணவும்) அரசாங்க செயல்முறை பற்றிய போதிய விழிப்புணர்வு மற்றும் அனுபவ குறைபாடு உள்ளவர்கள், அதிலும் குறிப்பாக கல்வியறிவு குறைந்தவர்களுக்கிடையே, தாங்கள் முன்வந்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் வண்ணம், பரவல் பிரச்சாரமானது தெளிவாகவும் எளிமையாகவும் இருக்க வேண்டும்.[83] பள்ளிக்கூடங்கள், கோவில்கள் மற்றும் இதர சமய அமைப்புகளையும் தகவல்கள் வழங்கும் பொது இடங்களாக பயன்படுத்தலாம்.

கொள்கை விதிமுறையின்படி, இ–காசே தகவல் தளம் மலேசிய குடிமக்களுக்கு மட்டுமே உரியதாகும். அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதையே மிகக் கடுமையான சவாலாக எதிர்க்கொண்டு, குடியுரிமை ஆவணங்கள் குறித்த நாடற்ற சவாலை எதிர்நோக்கும் ஏறத்தாழ 25,000 இந்தியர்களை இக்கொள்கை பாதிக்கிறது. குடியுரிமை ஆவணங்கள் பற்றாக்குறை, நலன் உதவிகள் அடங்கிய அரசாங்க சேவைகளை முறையாகப் பெறுவதில் தடையை உண்டாக்கும்.[84] இக்குடும்பங்களின் குடியுரிமை ஆவணங்களுக்கான விண்ணப்பம் பரிசீலனையில் இருக்கும் வேளையில், இது போன்ற அடையாளம் காணும் நடவடிக்கையும் அதற்கேற்ற ஒதுக்கீடும், அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஆதரவாக அமையும்.[85]

---

82 செயலாக்க துறைகளின் திட்டத் தேர்வுகளின் மூலங்களில் இ–காசே முதன்மையாகும். மூலம் செயலாக்க ஒருங்கிணைப்புப் பிரிவு

83 உதாரணத்திற்கு, பிரிம் பொதுமக்கள் விழிப்புணர்வுக்கு காரணம், எளிதான மொழி மற்றும் பல்வேறு ஊடகங்களில் நடத்தப்பட்ட பிரச்சாரங்கள். மூலம்: களப் பணியாளர்களுடனான நேர்க்காணல்

84 செயலாக்கத் துறைகள் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அடையாள ஆவணமற்ற இந்தியர்களுக்கு உதவலாம்.

85 அடையாள ஆவணங்கள் இயல்4, சமூகத்துடன் சேர்ந்திருத்தலை அதிகரித்தல்–இல் முழுமையாக கவரப்பட்டுள்ளது

## கூடுதல் தகவல்: IB40 மொழி ஆற்றல் நிலை

தமிழ் மற்றும் மலாய் மொழி அதிகமாகப் புரிந்துக் கொள்ளப்படுகின்றன. ஊடகத் தேர்வு, விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவம் பூர்த்தி செய்வதில் நடைமுறை தாக்கங்கள்

தமிழ், மலாய் மொழி, ஆங்கிலம் ஆகியவற்றுள் 'நல்ல' நிலையிலான திறமை உள்ளவர்களில் IB40–இன் %




மூலம்: பெருந்திட்ட செயலகம் மேற்கொண்ட தீபகற்ப IB40 மக்களுடன் நேருக்கு நேர் ஆய்வின் பங்கேற்பாளர்கள் எண்ணிக்கை=2,087
75%க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் மாதத்திற்கு ரிம.2,000க்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பத்தைச் சார்ந்தவர்கள்



இ–காசே பதிவிற்கும் அப்பால், மற்றொரு முக்கிய சிக்கல் என்னவெனில் நடைமுறையில் உதவிகளைப் பெறுதலாகும்.[86] விரிவாகச் சொல்லாப்போனால் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கும் குடும்பங்களுக்கு இரு வகை உதவிகள் வழங்கப்படுகின்றன: அன்றாடச் செலவுகளை ஈடுகட்டுவதற்கான சமூகநல உதவிகள் மற்றும் வறுமை நிலையிலிருந்து தங்களை மீட்டுக்கொள்ள திறன்களை வளர்த்துக் கொள்ள உதவுதல். ஏறத்தாழ 123,000 மலேசிய இந்தியர்களுள் அதாவது கிட்டத்தட்ட 25,000 குடும்பங்கள் சமூக நலத்துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட KAR1SMA போன்ற சமூக நலத் திட்டங்களின் வாயிலாக ஆதரவு பெற்றுள்ளன.[87] இந்த அளவிலான மலேசிய இந்தியர்களின் பங்கேற்பு மலேசிய இந்திய மக்கள் தொகையினை நியாயமாகப் பிரதிபலிக்கின்றன.

86 தரவுத்தளத்திலுள்ள பதிவு நேரடியாக உதவிகளுக்கு மாற்றலாகாது, மாறாக செயல்திட்ட துறைகள் திட்டத்திற்கேற்றாற் போல் தேர்ந்தெடுப்பர்.

87 மூத்த குடிமக்கள், ஏழைக் குழந்தைகள், உடல் செயலிழப்பு, போலீஸ் அல்லது இராணுவத்தைச் சேர்ந்த வாழ்க்கைத் துணையை இழந்தவர்களுக்கு ஆக்கப்பூர்வமான சமூக நல உதவிகளை வழங்கும் 1 மலேசிய மக்கள் சமூகநலத் திட்டம் (KAR1SMA) மூலம்: 1.Malaysia.com

இருப்பினும், திறன்களை வளர்த்துக்கொள்ள நடத்தப்பட்ட திட்டங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாடுகின்ற, குறிப்பாக மலேசிய இந்திய குடும்பங்களின் பங்கேற்பு குறைவாகவே காணப்படுகின்றது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பங்களை இலக்காகக் கொண்டு கூடுதல் வருமானம் ஈட்ட மேற்கொள்ளப்பட்ட உதாரணத்திற்கு 1Azam பொருளீட்டும் திட்டத்தில், மொத்த பங்கேற்பாளர்களுள் 2% விழுக்காடு மலேசிய இந்தியர்கள் மட்டுமே பங்கேற்றனர். இது 7% விழுக்காடு மலேசிய இந்திய மக்கட்தொகையைப் பிரதிநிதிக்கவில்லை எனலாம். இ–காசே தரவு தளத்தில் பரம ஏழைகள் மற்றும் ஏழைகள் எனக் கருதப்படும் 6 விழுக்காட்டு இந்திய பதிவாளர்கள் மட்டுமே 1Azam பொருளீட்டும் திட்டத்தில் சேர்ந்துள்ளனர். பிற இனங்களோடு ஒப்பிடும்போது இத்திட்டத்தில் 10% மலாய்க்காரர்களும் 11% சீனர்களும் சேர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.[88]

## 1 AZAM பங்கேற்பாளர்களின் இனரீதியிலான பிரிவுகள்






இந்த இடைவெளியை நிறைவு செய்ய, ஏழை இந்தியக் குடும்பங்களை இலக்காகக் கொண்டு பல அரசுசாரா இயக்கங்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட திறன் வளர்க்கும் பயிற்சி திட்டங்களுக்கும் மற்றும் கூடுதல் வருமானம் ஈட்டும் செயல்திட்டங்களுக்கும், குறிப்பிட்ட வரையறைக்குள் செடிக் நிதிவுதவி வழங்கியுள்ளது.

வறுமையில் வாடும் குடும்பங்களுக்காக அரசு மேற்கொள்ளும் திட்டங்களில் இந்தியர்களின் பங்கேற்பைக் கண்காணிக்க அமலாக்க ஏஜென்சிகளுக்கு ஆதரவளிப்பதோடு, இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் கூடுதல் முயற்சிகள் செய்ய வேண்டும். பங்கேற்பாளர்களின் எண்ணிக்கையில் கண்காணிப்பும் கவனமும் இருந்தால், திட்டங்களில் பங்கேற்பாளர்கள் தேர்வு செய்யப்படும் முறை மற்றும் திட்ட செயல்முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும்.[89]

இறுதியான முக்கிய சிக்கலாகத் திட்டங்களின் வடிவமைப்பும் விளைபயனும் கருதப்படுகின்றன. சில திட்டங்கள் திறன்களைக் கருத்தில் கொள்ளாமல் கருவிகளுக்கும் மானியத்திற்கும் மட்டுமே முன்னுரிமை வழங்குகின்றன என்று விமர்சிக்கப்பட்டுள்ளன. அதே வேளையில் ஒரு சில திட்டங்கள் மட்டுமே பங்கேற்பாளர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் மேம்படுத்துகின்றன. மேலும், பெரும்பாலான திட்டங்கள் தொழில்முனைவர்களாவதற்கும் அல்லது விவசாயத் துறையைச் சார்ந்ததாகவும் இருக்கின்றன. இது வேலை வாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களுக்கு பொருந்தாமல் போகலாம். இத்திட்டங்களில் பங்கெடுப்பவர்கள் போதிய நிதி நிர்வாகத் திறன் பெற்றிராததால், நிதி நெருக்கடியின் அதிர்ச்சியைத் தாங்க இயலாமல் மீண்டும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படும் சாத்தியங்கள் அல்லது அபாயங்கள் உண்டு.[90]

88 மகளிர், குடும்ப மற்றும் சமூக நல மேம்பாட்டு அமைச்சு (KPWKM)

89 உதாரணத்திற்கு, பயன்படுத்தப்பட்ட மொழி

90 அரசாங்க அதிகாரிகள் மற்றும் கள தொழிலாளர்களுடனான நேர்க்காணல்கள்



அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்ய வழங்கப்படும் உதவிகள், சமூகப் பொருளாதார மேம்பாட்டுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் அங்கீகரிக்கிறது. நடப்பிலுள்ள 'ஆக்கப்பூர்வமான சமூகநலம்' என்னும் கொள்கை வழி, அனைத்துத் தகுதியான பெறுநர்களும் சமூகநல உதவித் திட்டத்திலிருந்து 2 வருடத்தில் விலக்கப்படுவர்.[91] இந்த மாபெரும் குறிக்கோளை அடைவதற்கு இதன் தொடர்புடைய திட்டங்களின் தாக்கங்கள் கண்காணிக்கப்பட வேண்டும். பங்கேற்பவர்களுடைய திறனுக்கும் ஆர்வத்திற்கும் ஏற்ப அத்திட்டங்களை அவ்வப்போது தொடர்ந்து மறு சீரமைப்புச் செய்து வர வேண்டும். வருமானத்தை உயர்த்தக்கூடிய திட்டங்கள், பொருளாதார மாற்றங்களை எதிர்ப்பார்த்து அதற்கேற்ப பொருத்தமான வேலை அல்லது வணிக வாய்ப்புகளை நீண்டக் கால அடிப்படையில் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

திறன் உருவாக்கம் மற்றும் வருமானப் பெருக்கம் ஆகிய திட்டங்களை மேற்கொள்ளும் போதே, நிதி நிர்வாக வழிகாட்டல்களும் வழங்கப்படுவதோடு, எதிர்காலத்தில் பங்கேற்பாளர்கள் பொருளாதார அதிர்ச்சிகளை எதிர்க்கொள்ளும் வகையில் நிதியை வளப்படுத்துவதை உறுதிப்படுத்தவும் ஆதரவளிக்கப்பட வேண்டும். மலேசிய இந்தியப் பெருந்திட்ட செயலகம் மேற்கொண்ட, குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்கள் குறித்த ஆய்வின்படி, மாதந்தோறும் ரி.ம1000.00க்கும் கீழே சம்பாதிப்பவர்களில் 10% விழுக்காடு மட்டுமே நீண்டகால சேமிப்பு வைத்திருந்தனர். [26] அதே வேளையில், மாதத்திற்கு ரி.ம1000.00க்கும் குறைவாகச் சம்பாதிக்கும் 84% குடும்பத்தினர் மூன்று மாத கால வாழ்வாதாரத்திற்குக்கூடத் தேவையான சேமிப்பு வைத்திருக்கவில்லை.[92]

பண்பாடு அல்லது மொழிக் காரணமாக, மலேசிய இந்திய ஏழை குடும்பங்களுக்கு ஏற்ப தீட்டப்படும் திட்டங்கள், வடிவமைப்புக் கூறுகள் அமலாக்கப் பிரிவினரோடு பகிர்ந்துக் கொள்ளப்பட வேண்டும். விரிவான அரசாங்கத் திட்டங்கள், இந்திய மக்களுக்கு மேலும் விளைபயன்மிக்கதாக இருப்பதை உறுதி செய்யும்.[93]

---

91 'ரிந்திஸ்' திட்ட நிர்வாக விதிமுறைக் குறிப்புகள், 2 வருடத் திட்டம், சமூகநலத் துறை, 2014

92 2016 ஜூலை முதல் செப்டம்பர் வரை தீபகற்ப மலேசியாவில் 2,087 கீழ்நிலை வருமானம் பெறும் மலேசிய இந்தியர்களுடன் நேருக்கு நேராக நடத்தப்பட்ட ஆய்வு. எம்ஐபி செயலகம்

93 ibid

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

அரசாங்கத்தின் விரிவான நோக்கங்களுக்கு ஏற்ப, மலேசிய ஏழை இந்தியக் குடும்பங்கள் தங்கள் அடிப்படை வாழ்வாதரத்தை நிறைவு செய்துக் கொள்வதோடு, வறுமைப் பிடியிலிருந்து நிரந்தரமாக வெளியேறுவதற்குத் துணைபுரிவதை மலேசிய இந்தியப் பெருந்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நோக்கத்தை அடைவதற்குக் கீழ்க்காணும் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

- வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்கள் இ–காசே தரவு தளத்தில் பதிவு செய்திருப்பதோடு தேவையான சமூகநல உதவிகளைப் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
- ஏழை இந்தியக் குடும்பங்களின் மாத வருமானத்தைத் தற்போதைய தேசிய PLI (ரிம. 950)ஐவிட இருமடங்கு கூடுதலாக இருப்பதை உறுதி செய்தல்.[94]
- பதிவு செய்யப்பட்ட ஏழை குடும்பங்களில் குறைந்தபட்சம் 50%, இப்பெருந்திட்ட அமலாக்கத்தின் ஐந்து வருடத்திற்குள் சேமிப்பில் உயர்வைக் காண்பிப்பதை உறுதிசெய்தல்.[95]

இந்த நோக்கங்களை அடைவதற்கு மலேசிய இந்தியப் பெருந்திட்டம் கீழ்க்காண்பவற்றை மேற்கொள்ள வேண்டும்:



### 1. இ–காசே மற்றும் சமூகநல உதவி பதிவிற்கான பிரச்சாரம்

சமூக ஊடகங்களின் வழி விழிப்புணர்வு மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டு, மலேசிய இந்திய ஏழைக் குடும்பங்களைக் கண்டறிந்து அவர்கள் இ–காசே தரவு தளத்தில் பதிவு செய்யப்படுவர். அதைத் தொடர்ந்து இப்பெருந்திட்டத்தின் அமலாக்கப்பிரிவு சமூகநல உதவிக்கான தேர்வை முன்னிறுத்தி, ICU மற்றும் சமூகநலத்துறையுடன் இணைந்து செயல்படும். அவற்றுள் சில நடவடிக்கைகள் பின்வருமாறு:

(i) பொதுத்தொலைபேசி (hotline), சமூக ஊடகங்கள், தமிழ் வானொலி மற்றும் பிற கருவிகள் வாயிலாகச் சமூகப் பரிந்துரைகளை ஊக்குவித்தல்.

(ii) KR1M மற்றும் இதர பங்குதாரர்களோடு இணைந்து பிரச்சாரத் தகவல்களை இன்றியமையாத உணவுப் பொருள்களின் மேல் அச்சடித்தல்.

(iii) பயிற்சி பெற்ற தன்னார்வலர்கள் மற்றும் சமூக அமைப்பாளர்களைக் கொண்டு கண்காணித்தல், அடையாளம் காணுதல் மற்றும் சரிபார்த்தல் போன்ற பணிகளை அதிகரித்தல்.

(iv) குடியிருப்புகளில் உள்ள பள்ளிக்கூடம் மற்றும் ஆலயங்கள் போன்ற பொது இடங்களை இலக்காகக் கொண்டு மக்களைச் சென்றடையும் பிரச்சாரங்களை நடத்துதல்.



94 11ஆவது மலேசியத் திட்ட இலக்கிற்கேற்ப

95 இ–காசே தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட மலேசிய ஏழை இந்தியக் குடும்பங்களின் சேமிப்பின் தொடர்பான ஆய்வின் அடிப்படையில் 2017இல் அடித்தளம் நிர்ணயிக்கப்படும்

## 2. வருமானம் ஈட்டும் திட்டங்களை மறுவடிவமைத்து, மதிப்பிட்டு மற்றும் மறுசீரமைப்புச் செய்தல்

அதிகமாக ஏழை இந்தியர்கள்/ குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்கள் வாழும் பகுதிகளில் இப்பெருந்திட்டத்தின் செயல்திட்டப்பிரிவு சமூகநலத் துறையுடன் இணைந்து வருமானம் ஈட்டும் திட்டங்களை மறுவடிவமைத்து, மதிப்பிட்டு மற்றும் மறுசீரமைப்புச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை வழிநடத்தத் துணைபுரியும். கீழே கொடுக்கப்பட்டுள்ளவை ஆற்றல்மிக்க மறுசீரமைப்புச் செயல்களுள் அடங்கும்:



(i) தகுதியுடைய குடும்பங்கள் அல்லது தனிநபரை அடையாளங்கண்டு அவர்களைத் தொடர்புக்கொள்ள நம்பிக்கையான உள்ளூர் சமூகத்தலைவர்கள்/ பெரியோர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெறுதல்.

(ii) பங்கேற்பாளர்களின் தற்போதைய இல்லறக் கடமைகள், ஆர்வம் மற்றும் திறமை ஆகியவற்றைத் திட்டங்களின் உள்ளடக்கங்களோடு ஒன்றிணைத்தல்.

(iii) திட்டங்களில் பங்கேற்பவர்களுடன் எளிதில் தொடர்புக் கொள்ளும், அவர்களிடையே நம்பிக்கையை உருவாக்கும் ஆற்றலுடைய நபர்கள் வழி உள்ளூர் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(iv) நிதி நிர்வாகத் துணைக் கையேடுகளை வழங்குதல்.

(v) திட்டத்தில் பங்கேற்றப் பின், தன்முனைப்பும் ஊக்கத்தையும் தொடர்ந்து அளிக்கும் வகையில் பங்கேற்பாளர்களிடையே ஆதரவு குழுக்களை அமைத்து தொடர்புவலையை ஏற்படுத்துதல்.

(vi) குறிப்பிட்ட கால கண்காணிப்பு மற்றும் அதன் தாக்கத்தை அளவிடுதல்.

## 3. சேமிப்புப் பழக்கத்தை துவக்குதல் மற்றும் ஆதரித்தல்

குறிப்பாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் சேமிப்பைத் திடப்படுத்த 500 மில்லியன் பிஎன்பி பங்குகள் துவக்க நிதி தோற்றுவிக்கப்படும். குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களுக்காகக் குறிப்பிட்ட பிஎன்பி அமானா சஹாம் பங்குகள் துவக்கநிதி செயல்திட்டங்கள் உருவாக்கப்படும். மேலும், பங்கேற்பாளர்களுக்கு அவர்களுடைய வருமானம் மற்றும் சேமிப்புத் தொகையைப் பொருத்து இந்நிதியிலிருந்து கூடுதல் பங்குகள் வழங்கப்படும்.[96] இந்த நிதிகள் குறுகிய காலத்திற்கு முடக்கப்படும். ஆனால், அவசர வேளைகளிலும் பொருளாதார நெருக்கடியின் போதும் அவர்கள் இப்பணத்தை மீட்டுக்கொள்ளலாம்.

புத்தாக்கத் திட்டங்கள் வழி ஏழ்மையில் வாழும் மற்றும் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் சேமிப்பை அதிகரிக்க தனியார் மற்றும் அரசு சாராத் துறைகளை இப்பெருந்திட்டத்தின் செயல்திட்டப் பிரிவு வரவேற்கும். கையடக்க தொழிற்நுட்பம் மூலம் சிறியளவிலான சேமிப்பு வசதி மற்றும் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் பயனீட்டாளர் தன்மையைப் ஆழமாகப் புரிந்துக் கொள்ளுதலும் மேற்குறிப்பிடப்பட்ட புத்தாக்கத் திட்டங்களில் அடங்கும்.



96 பெருந்திட்ட செயலாக்க பிரிவு மற்றும் பொருளாதார அமைச்சு உள்ளடக்கிய குழு பொருத்தமான விகிதத்தை நிர்ணயித்தல்

## ஆ . வீடமைப்பு

வீடுகள் மற்றும் உறைவிடம் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகும். வசதிகளுடன் பாதுகாப்பான சூழலுடைய வீடமைப்புப் பகுதி ஒரு நல்ல குடும்ப வாழ்க்கைக்கு முக்கியமாகும். குறிப்பாக, குழந்தைகள் வளர்ப்பிற்கும் பாதுகாப்பிற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வீடுகளும் சமூகச்சூழலும் முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. நடுத்தர மற்றும் உயர் வருமானம் பெறும் குடும்பங்கள் இத்தேவைகளை நேரடியாகவோ அல்லது வேறுவழியாகவோ பணம் செலுத்திப் பெறுகின்றனர்.



1970 முதல் 1990 வரையில் ஆயிரக்கணக்கான இடம்பெயர்ந்த இந்திய தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய உறைவிடத்திற்கான தேவைகளைச் சட்டவிரோத குடியிருப்புப் பகுதிகளை உருவாக்குவதன் மூலம் நிறைவேற்றிக்கொண்டனர். நல்ல வசதிகளுடன் பொது வீடமைப்புப் பகுதிகளில் மறுகுடிபெயர்ப்புச் செய்வதற்கு ஏதுவாக, 1998இல் அரசாங்கம் அறிவித்த புறம்போக்குக் குடியிருப்பு இல்லாமை கொள்கையானது புறம்போக்கு வீடுகளின் எண்ணிக்கையை பெருமளவில் குறைத்தது. இருப்பினும், இது மக்கள் நெரிசல், பல்லினச் சமூக உறவு மற்றும் சமூகப் பிரச்சினைகள் போன்ற வேறுவிதமான சிக்கல்களைத் தோற்றுவித்தது.

# முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

புறம்போக்கு நிலங்களில் குடியிருப்புகள் குறைந்தபோதிலும் தங்கள் சக்திக்கு ஏற்ப வீடுகள் வாங்குவது இன்னும் சவாலாகவே உள்ளது. இப்பிரச்சினை அனைத்து சமூகங்களிடையேயும் காணப்படுகின்றது. ஆனால், மலேசிய இந்திய சமூகத்தினரிடையே மட்டும் வீட்டுரிமை நிலை சமமற்ற அளவிலே உள்ளது.

பிற இனங்களோடு ஒப்பிடும்போது 56% மலேசிய இந்திய குடும்பங்கள் மட்டுமே சொந்த வீடுகள் கொண்டுள்ளனர். அதே வேளையில் 62% பூமிபுத்ரா குடும்பங்களும் 61% சீனக் குடும்பங்களும் சொந்த வீடுகளைப் பெற்றுள்ளன.[97] சொத்துடைமையைப் பொருத்த வரையில் பிற இனங்களோடு ஒப்பிடும்போது, B40 பிரிவில் உள்ளவர்களுள் புமிபுத்ராக்கள் 7%, சீனர்கள் 12% ஆக உள்ளனர். ஆனால், இந்தியர்கள் 3% மட்டுமே வகிக்கின்றனர். இது இந்தியர்கள் மிகக் குறைவான சொத்துடைமை உரியவர்கள் என்பதைக் காட்டுகின்றது.[98]

வருமானத்திற்கு ஏற்ப வீடுகள் மற்றும் மலிவு வீடுகள் தேசிய அளவில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது; 11வது மலேசியத் திட்டத்தில் அனைத்து மலேசியர்களும் 2020க்குள் நிலையான சொந்த வீடுகள் அல்லது வாடகை வீடுகளில் வசிக்க இயலும் என்று அரசாங்கம் உறுதியளித்துள்ளது. மத்திய அரசின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல வீடமைப்புத் திட்டங்கள், B40 பிரிவில் உள்ள குடும்பங்கள் சொந்த வீடுகள் பெறுவதற்கும் வாடகை வீடுகளில் வசிப்பதற்கும் துணைப் புரிந்தது. எடுத்துக்காட்டிற்கு, வீட்டுதவித் திட்டம் (Program Bantuan Rumah), மக்கள் வீட்டுத் திட்டம் (Program Perumahan Rakyat), ஒரே மலேசிய அன்பு இல்லத் திட்டம் ( Rumah Rakyat Mesra 1 Malaysia) மற்றும் கூட்டரசுப் பிரதேச வீடுகள் (Rumah Wilayah Persekutuan).[99] இவையும் மற்றும் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட பிற வீடமைப்புத் திட்டங்களும் B40 பிரிவில் உள்ள குடும்பங்களுக்கு வாங்கும் சக்திக்கு ஏற்ற வீடுகள் பெற உதவியுள்ளதுடன் சொத்துடைமை அடிப்படையில் பங்கினை உயர்த்த உதவியுள்ளது. இருப்பினும், நிலங்களின் விலையேற்றச் சூழல் வாங்கும் சக்திக்கு ஏற்ப போதுமான வீடுகளை வழங்குவதில் மிகப் பெரிய சவாலாக இருக்கிறது.






97 குடும்ப இயல்புகள் ஆய்வு,2010 மலேசிய புள்ளி விபரத் துறை

98 'NEP to NEM: Who Cares? Wealth Distribution in Malaysia', Muhammed Abdul Khalid, UKM, 2011

99 11ஆவது மலேசியத் திட்டம்



வாங்கும் சக்திக்கு ஏற்ப வீடுகள் போதுமான அளவில் இல்லாதது அனைவராலும் அறியப்பட்ட ஒரு செய்தியாகும். இச்சிக்கலைக் களைய பல கோணங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒதுக்கீடு செய்வதே இப்பெருந்திட்டத்திற்கு மிக முக்கியமான சிக்கலாகும். மலேசிய இந்தியர்களுக்கு வழங்கப்படும் மலிவு வீடுகளின் எண்ணிக்கையைக் கண்காணிக்கவும் நியாயமான முறையில் வழங்கப்படுவதையும் உறுதி செய்ய மேலும் தீவிர முயற்சிகள் எடுக்க வேண்டும். 2016இல் இப்பெருந்திட்டத்தின் செயலகம் மேற்கொண்ட குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் ஆய்வின்படி, ஆய்வில் பங்கேற்றவர்கள் வீட்டுடைமை பெறுவதற்கு அதிக உதவிகள் தேவைப்படுகின்றன என்று கூறியுள்ளனர். புள்ளியலின்படி இந்தத் தேவை இரண்டாம் நிலையில் உள்ளது. ஆய்வில் பங்கேற்ற ஏறக்குறைய 47 விழுக்காட்டினர் மலேசிய இந்தியர்களுக்கான வீடுகளின் ஒதுக்கீடு நியாயமற்ற முறையில் உள்ளதாகக் கருதுகிறார்கள்.[100]

இன்றுவரை ஒதுக்கீடுகளுக்கான கண்காணிப்பு ஒரு செயல்முறையைப் பின்பற்றாமல் தேவைக்கேற்ப அமைந்துள்ளது. இது முறையாக நடந்தேறுவதற்கு மாநில மற்றும் மத்திய ஏஜென்சிகள் குறிப்பாக இனங்களுக்கிடையேயான வீட்டுடைமையினில் நிலவும் இடைவெளியினைக் குறைப்பதை இலக்காகக் கொள்ள வேண்டும். வீடு வாங்கும் நோக்கில் வாடகை செலுத்தும் முறையிலான நிதியுதவித் திட்டம் வழங்கப்பட வேண்டும், குறிப்பாக வசதியின்மை என்ற காரணத்தைத் தவிர்த்து, வணிக அடிப்படையில் அடமானம் வைத்து வாங்க இயலாதவர்களுக்கு நிதி தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.[101]

மலிவு வீடுகளைப் பெறுவதைத் தவித்து, தோட்டத் தொழிலாளர்களின் மறுகுடியேற்பு மலேசிய இந்தியர்களின் ஒரு முக்கியமான சிக்கலாகக் கருதப்படுகிறது. கடந்த காலங்களில் தோட்டங்கள் விற்கப்பட்டுத் தொழிற்மயம் அல்லது வீடமைப்புத்திட்டங்களாக மாறியது ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களை வேலையிழக்கச் செய்தது. இதனால் அவர்கள் தோட்டத்தை விட்டு வெளியேறி நகர்புறப் புறம்போக்கு நிலங்களில் அல்லது தற்காலிக நீண்ட வீடுகளில் வசிக்கும் கட்டாயத்திற்குள்ளாகினர்.[102] இவர்கள் புதிய சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ள எந்த உதவியும் வழங்கப்படவில்லை. இன்று, குறிப்பிடத் தக்க எண்ணிக்கையில், மலேசிய இந்தியர்களை நகர்ப்புற ஏழைகள் என்ற நிலைக்கு இது கொண்டுச் சென்றுள்ளது.

100 2016 ஜூலை முதல் செப்டம்பர் வரை தீபகற்ப மலேசியாவில் 2,087 கீழ்நிலை வருமானம் பெறும் மலேசிய இந்தியர்களுடன் நேருக்கு நேராக நடத்தப்பட்ட ஆய்வு. எம்ஜபி செயலகம்

101 வருமான ஆவணங்கள் குறைவு, குறிப்பாக கூலி அல்லது நாள் அடிப்படை வேலைகள் உட்பட காரணங்களாகும்

102 பொது மக்களின் கவனத்தால், சமீபகாலமாக தோட்டப்புற நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகள் தோட்டத் தொழிலாளர்களை மலிவு விலை வீடுகளுக்கு மறுகுடிப்பெயர்வு செய்யும் முயற்சிகளில் முன்னேற்றம் காண்கிறது. இது பெரும்பாலும் பல தரப்பட்ட பேச்சுவார்த்தைக்குக்கான வெற்றி தனிப்பட்ட பிரச்சினையின் அடிப்படையிலே சார்ந்திருக்கும்



இன்று சுமார் 36% தோட்டத்தொழிலாளர்களில் அதாவது கிட்டத்தட்ட 16,000 குடும்பங்கள் இந்திய குடும்பங்கள் ஆகும்.[103] இப்பிரச்சினை பொதுமக்களின் கவனத்தை ஈர்த்ததால், அண்மைய வருடங்களில் தோட்ட நிறுவனங்களும் மற்றும் அரசாங்கமும் கூடுதல் முயற்சிகள் எடுத்துத் தோட்டத் தொழிலாளர்களைப் புதிய மலிவு வீடு திட்டங்களில் மறுகுடியேற்பு செய்வதற்கும் வயதான தோட்டத் தொழிலாளர்களுக்கு வசதிகள் ஏற்படுத்தித் தருவதற்குமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுடைமை வசதிகள் வழங்க, இல்லாவிடில் IB40 குடும்பங்களின் வீட்டுடைமைத் தேவைகளை நிறைவு செய்ய CCIC உறுதியளித்துள்ளது. இருப்பினும், நேர்மையான முறையில் தோட்டத் தொழிலாளர்களை மறுகுடியேற்பு செய்வது, தோட்ட நிறுவனங்களின் ஆற்றல், எண்ணம், விருப்பம் ஆகியவற்றைப் பொருத்தே இருக்கிறது.[104] சில சூழல்களில் மறுகுடியேற்புச் சிக்கல்கள் பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்பட்டன. மாறாக பல சூழலில் தோட்டத் தொழிலாளர்கள் தங்களை புதிய சூழலுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளவதில் உள்ள தேவைகள் மற்றும் ஆற்றல்கள் கருதப்படவில்லை. சில மறுகுடியேற்பு வீடமைப்புகள் மற்றும் சமூகச்சூழல்கள் தோட்டத்தில் வாழ்ந்ததைவிட இன்னும் மோசமாக இருக்கின்றன.[105]



2011 இல் அரசாங்கம் ‘தோட்டத் தொழிலாளர்கள் சிறப்பு வீடமைப்புத் திட்டம்’ (SKRE) என்ற அமைப்பின் கீழ் ரிம. 50 மில்லியனைத் தோட்டத் தொழிலாளர்கள் வீடு வாங்குவதற்காக ஒதுக்கியது. இந்தத் திட்டத்தின் மூலம் ரிம. 120,000.00க்கும் குறைவான வீட்டினை வாங்குவதற்கு ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சம் ரிம. 100,000.00யைக் கடனுதவிப் பெற முடியும்.[106] இருப்பினும், ஒரு வட்டாரத்தில் போதிய மலிவு வீடுகள் இருந்தால் மட்டுமே இத்திட்டம் பயனுள்ளதாக அமையும்.[107] இந்த விலையிலான வீடுகள் மிகக் குறைவாகவே உள்ளன: எடுத்துக்காட்டிற்கு, 2014 இல் ரிம. 100,000.00க்கும் குறைவான விலையில் 8,780 மலிவு விலை வீடுகள் கட்டுவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது.[108] ஆகையால், தற்போதைய தகுதி விதிகளுக்குட்படாத தோட்டத் தொழிலாளர்கள் கடனுதவி பெற கடனுதவி திட்டத்தின் தகுதி விதிகளை மறுசீராய்வு செய்ய வேண்டும்.[109]

மறுகுடியேற்புப் பேச்சுவார்த்தையை முடிவிற்குக் கொண்டு வரும் வேளையில், தோட்டத் தொழிலாளர்களின் பயத்தைப் போக்கி தேவைகளை சமரசம் செய்வது மிகவும் இன்றியமையாததாகும். வெற்றிகரமான மறுகுடியேற்புக்கு, முன் திட்டமிடுதலும் மற்றும் மாநில, மத்திய அரசாங்கம் உட்பட பல பொறுப்புதாரர்களின் (stakeholders) உள்ளார்ந்த ஈடுபாடும் அவசியமாகும். புதிய சூழலுக்கு ஏற்ப தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள ஆதரவும், சம்பந்தபட்ட திறன் பயிற்சிகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவசியம் தேவைப்படுகிறது.

---

103 இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (2015) மலேசியத் தொழிலாளர் துறை
104 தேசிய தோட்டத்துறை தொழிற்சங்க வேலையாட்கள் மற்றும் கள நிபுணர்களுடன் நேர்க்காணல்
105 Ibid.
106 தற்போதைய தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுடைமை உதவிப்புரிய, தொழில் வளத்துறை மேற்கொண்ட முயற்சியாகும். மூலம்: “தோட்ட தொழிலாளர்களின் சமூகப்பொருளாதார நிலை மற்றும் SKRE–உடனான தொடர்புக் குறித்த ஆய்வ”, தொழில்வளத் துறை, 2014
107 விண்ணப்பதாரர்கள், வங்கியாளர் பங்குதாரர்களால் கடன் மதிப்பீட்டிற்கும் ஒப்புதலுக்கும் உட்பட்டுள்ளனர், சிம்பானான் நேஷனல் வங்கி. உயர் நிராகரிப்பு விகிதங்களால் (81%) விதிமுறைகள் மறு ஆய்வு செய்யப்படலாம்
108 நகர்ப்புற நல்வாழ்வு, வீடமைப்பு, ஊராட்சித் துறை அமைச்சு
109 குறைந்தப்பட்ச வருமான நிலை, வேலை நிலை மற்றும் தோட்ட அளவில் நிலவி வரும் காரணம்

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

சமூகத்தில் குறிப்பாக மிகவும் மோசமான நிலையில் உள்ள குழுவினருக்கு வீடமைப்புத் தொடர்பாக அரசாங்கம் மற்றும் CCIC ஆகியவற்றின் உறுதிமொழிகளை நிறைவேற்ற, இந்த மலேசிய இந்தியப் பெருந்திட்டம் பின்வரும் இலக்குகளை அடைய வேண்டும் என்று எண்ணங் கொண்டுள்ளது:

- நகர்ப்புற வளாகங்களில் குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்கள் சரிநிகரான மலிவு வீடுகள் மற்றும் வாங்கத் தக்க பொது அமைப்பு வீடுகள் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
- இப்பெருந்திட்டத்தினை அமல்படுத்தி ஐந்து வருடங்களுக்குள் தோட்டத் தொழிலாளர்களின் முந்தைய மறுகுடியேற்புச் சிக்கல்களுக்குத் தீர்வுக் காணுதல்.[110]
- வருங்காலத்தில் இந்திய தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்கவிருக்கும் மறுகுடியேற்புச் சிக்கல்களுக்கு நேர்மையான முறையில் தீர்வு காணுதல்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்கள் அடிப்படையில் இப்பெருந்திட்டம் தனது இலக்குகளை விளைபயன் மிக்க வகையில் வழங்குவதற்கு எண்ணங்கொண்டுள்ளது

### 1. IB40 வீடமைப்பு நிலவர தரவுத்தளம் மற்றும் கண்காணித்தல்

குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் வீட்டுடைமை நிலவரத்தைக் கண்டறிய (ஏழ்மை நிலையில் உள்ள பிற குடும்பங்களும்) இப்பெருந்திட்டத்தின் செயல்திட்டப் பிரிவு காலந்தவறாமல் குறிப்பாக, மலிவு வீடமைப்புத் திட்டங்களில் விண்ணப்பம் செய்தவர்களின் எண்ணிக்கை அல்லது தகுதி பெற்றவர்கள் எண்ணிக்கை முதலியவற்றைத் தொடர்ந்து கண்காணித்து வரும். வீட்டுடைமைத் திட்டத்தில் முன்னேற்றத்தை உறுதிசெய்ய இப்பெருந்திட்டத்தின் அமலாக்கப் பிரிவு தொடர்புடைய உள்ளூர் அதிகாரிகள், மாநில மற்றும் மத்திய ஏஜென்சிகள் ஆகியவற்றோடு நெருக்கமாக ஒருங்கிணைந்து செயலாற்றும். இதன்வழி குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களிடையே நிலவும் வீட்டுடைமை இடைவெளியை, குறிப்பாக விண்ணப்பதாரர்கள் மற்றும் ஒதுக்கீடு முறையில் மிகத் தெளிவாகக் காணப்படும் வேறுபாடுகளைக் குறைக்க இயலும். ஆகையால், நிலுவையில் உள்ள மற்றும் வருங்கால மறுகுடியேற்பு குடும்பங்களைப் பற்றிய தரவுத்தளம் உருவாக்க இப்பெருந்திட்ட செயல்திட்டப் பிரிவு அடிப்படை ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும்.




### 2. தொழில்திறன்மிக்க நடுநிலைமையும் வழிக்காட்டலும்

மறுகுடியேற்றத் திட்டத்தை செயல்முறைப்படுத்தவும், பேச்சுவார்த்தைகளில் பாரபட்சமின்றி உதவுவதற்கும் இப்பெருந்திட்டத்தின் செயல்திட்டப் பிரிவின் கீழ் பயிற்சி பெற்ற குழு ஒன்று தோற்றுவிக்கப்படும். இந்தக் குழு தொழிலாளிகளின் பிரதிநிதிகள், தோட்ட நிறுவனங்கள், மலேசிய தொழிலாளர் துறை (Jabatan Tenaga Kerja, JTK), மாநில அரசாங்கங்கள், மத்திய வீடமைப்பு ஏஜென்சிகள் ஆகியவற்றோடு இணைந்து செயலாற்றும். மேலும், மறுகுடியேற்புச் சிக்கல்களைக் களைவதற்கு வழிகாட்டும். இவற்றுள் மலிவு வீடமைப்புத் திட்டம் அல்லது பராமரிப்பு வசதிகள் ஆகியவற்றைக் குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் நிர்வகிப்பதும் அடங்கும். குறைந்த சேவைகள் வழங்கப்படும் இடங்கள் கண்டறியப்பட்டு வீடமைப்பு அல்லது பராமரிப்பு வசதிகள் வழங்கும் வகையில் தனியார் நிறுவனங்களோடு கூட்டமைப்பு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்



110 2017ஆம் ஆண்டுக்கு முந்தைய பதிவுகள்





## 3. கொள்கையும் முறையான மறுபரிசீலனையும்

நீண்டக் கால மறுகுடியேற்புச் சிக்கல்களை அணுக இப்பெருந்திட்டத்தின் செயல்திட்டப் பிரிவு ஆய்வு ஒன்றினை மேற்கொண்டு ஒரு கொள்கை வடிவத்தைப் பரிந்துரைக்கும். அதோடு, முறையான மாற்றங்களை உறுதிப்படுத்த தெளிவான வலுவான வழிகாட்டலையும் மறுகுடியேற்றத்திற்குத் தொடர்பானவற்றைச் செயலாற்ற பரிந்துரைக்கும். இந்தக் கட்டமைப்பு நடுநிலை கால அவகாசத்தையும் மறுகுடியேற்பு விதிமுறைகளையும் நியமான நஷ்ட ஈடு, பிற வீடமைப்பு அல்லது பராமரிப்பு வசதிகள், புதிய சூழலுக்கு மாற ஆதரவு வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கும்.

SKRE திட்டத்தின் தகுதி தேவைகளை நிறைவு செய்ய இந்த மறுசீராய்வைத் தொடர்ந்து இப்பெருந்திட்டத்தின் அமலாக்கப் பிரிவு மலேசிய தொழிலாளர் துறையுடன் (Jabatan Tenaga Kerja, JTK) இணைந்து வடிவமைப்பினை மறுசீராய்வு செய்யும்.



## 4. மறுகுடியேற்றத்திற்குப் பிறகு மாற்றங்களை எதிர்க்கொள்ளும் ஆதரவு

இந்தப் பெருந்திட்டத்தில் இடம்பெற்றுள்ள குடும்பம் மற்றும் வருமானம் தொடர்பான முயற்சிகளின் வழி, பெருந்திட்டசெயல்திட்டப் பிரிவு மறுகுடியேற்றப்பட்ட இந்திய குடும்பங்கள் புதுச் சூழலில் வாழும் மாற்றங்களை எதிர்க்கொள்ள ஆதரவு அளிக்கும்.

# இ. குடும்ப நிலைத்தன்மை

**சமூகக் கட்டமைப்பில் குடும்பம் ஒரு மையக்கரு. தனிநபரின் சமூக, பொருளாதார மற்றும் உளவியல் தேவைகளைக் குடும்பம் நிறைவு செய்கிறது. குடும்ப உறுப்பினர்களின் வலுவான அல்லது வலுவற்ற உறவு அவர்களின் முழு ஆற்றலை உணர்ந்து செயல்படும் திறனில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும்.**

குடும்பங்களில் நிலையற்றத்தன்மையானது பல அடிப்படைச் சிக்கல்களுக்குக் காரணிகளாக அமைகின்றன என்பதை இந்தப் பெருந்திட்ட வரைவில் எடுத்துரைக்கப்படுகின்றன. குறிப்பாக கல்வி அடைவுநிலை, இளைஞர்களிடையே காணப்படும் பிரச்சினைகள் மற்றும் குற்றச் செயல்கள் முதலியவைகளாகும்.[111] குடும்பங்களின் நிலைத்தன்மையை இப்பெருந்திட்டம் ஓர் அடிப்படைத் தேவையாகக் கருதுகிறது. ஏனென்றால், குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்களின் தற்போதைய மற்றும் தலைமுறையினரிடையே காணப்படும் சமூகப் பொருளாதார நிலையை இது உயர்த்தக் கருதுகிறது. சிக்கல் நிறைந்த குடும்பம் என்பது குடும்ப வன்முறைகள், மது மற்றும் போதைப் பொருள் பயன்பாடு, குண்டர் கும்பல் நடவடிக்கைகள் முதலியவற்றை உள்ளடக்கும். இது வாலிப சமூகத்தின் செயல்திறனை வீணடிப்பதுடன், சிறார்களின் கல்வியில் குறைந்த அடைவுநிலையை விளைவிக்கிறது.[46]

2011இல் மகளிர், குடும்பம் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு (KPWKM) குடும்ப நலத்தை மதிப்பிட அனைத்துலக ஆய்வைப் பயன்படுத்தி குடும்ப நலக் குறியீடு ஒன்றைக் கொண்டு மலேசிய குடும்பங்களின் நலத்தை அளவிட்டது. குடும்ப உறவின் ஆரோக்கியம், குடும்பப் பொருளாதாரம், குடும்ப உடல்நலம், குடும்ப பாதுகாப்பு, குடும்பமும் சமூகமும் மற்றும் குடும்பமும் சமய வாழ்க்கை அல்லது ஆன்மீகம் ஆகியவற்றை இக்குறியீடு உள்ளடக்கியது.[113] இந்தக் குறியீட்டினைக் கொண்டு முதல்முறையாக நடத்தப்பட்ட ஆய்வின்படி இந்திய பெற்றோர்கள் மிகக் குறைந்த நிலையில் (7.23/10) இருந்தார்கள். ஆனால், மலாய் பெற்றோர்கள் (8.04/10)ஆகவும், சீனப் பெற்றோர்கள் (7.29/10)ஆகவும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

## குடும்ப நலக் குறியீடு 2011

இன ரீதியிலான பெற்றோர்களின் மதிப்பெண்




111 அரசாங்க அதிகாரிகள், அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் இதர கூட்டமைப்பாளர்களுடனான நேர்க்காணல்கள்

112 'Aspirations of Malaysian Indians Towards 2020' written by Dr. Denison Jayasooria, 2015

113 மலேசிய குடும்பநலன் குறியீடு , 2011



மலேசிய இந்தியர்களிடையே காணப்படும் அதிகபட்சமான குடும்ப வன்முறைகள் மொத்த இந்திய மக்கட்தொகையோடு ஒப்பிடும்போது அபாய நிலையைக் காட்டுகிறது; 2014இல் மகளிர், குடும்பம் மற்றும் சமூகநல மேம்பாட்டு அமைச்சில் (KPWKM) பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் 22% இந்திய குடும்பங்களில் நடைபெற்றன. (7% மலேசிய இந்திய மக்கள் தொகையைக் காட்டிலும்) அதே வேளையில் மலாய்க் குடும்பங்களில் 56% மற்றும் சீன குடும்பங்களில் 13% வன்முறைகள் நடந்துள்ளன என்று காட்டப்படுகிறது.[114] மலேசிய இந்திய சமூகத்தினரிடையே முதல் மூன்று குடும்ப வன்முறை காரணிகளுள் மதுபானம் அருந்துதல் முதன்மையாக விளங்குகிறது.[115] மேலும், பராமரிப்பு பாதுகாப்பு தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ள சிறார் வழக்குகளில் 12% மலேசிய இந்திய சிறார்களாவர்.[116]

## குடும்ப வன்முறை புகாரின் பதிவுகள் இன ரீதியில் 2014






114 சமூகநலத்துறை கணக்காய்வு அறிக்கை 2014

115 Ibid.

116 Ibid.

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

சிக்கல்கள் நிறைந்தக் குடும்பங்கள் அடிக்கடி ஒன்றுக்கும் மேற்பட்ட மனஅழுத்தத்தை உருவாக்கும் நிகழ்வுகளை எதிர்க்கொள்வர். இவ்வகை குடும்பங்களுக்குப் பல திட்டங்கள் தற்பொழுது இருந்த போதிலும் அவை குறுகிய காலத்திற்கு மட்டுமே தீட்டப்பட்ட திட்டங்களாகும்.[117] அதோடு மட்டுமின்றி, தற்போது இந்தியக் குடும்பங்களை தொடர்புக் கொள்ளும் முயற்சிகள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஆனால் கடந்தக் காலத்தில் தமிழர்கள் அல்லது தமிழ் பேசும் அதிகாரிகள் அதிகமாக இருந்ததால் குடும்ப நலத் திட்டங்கள் தோட்டப்புறங்களில் ஒரு இலக்கோடு மேற்கொள்ளப்பட்டன.[118] மேலும் இந்திய மக்களைத் தொடர்புக் கொள்வது எளிதாக இருந்தது. இந்திய தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்கள் நகர்ப்புறங்களுக்கு மறுகுடியேற்றம் செய்ததால் இவர்களைத் தொடர்புக் கொள்வது இன்னும் சிரமமாக இருந்தது. அணுக முடிந்தவர்களோ நம்பிக்கை குறைவினால், பண்பாட்டுப் பிணக்குகளால் அல்லது வெட்கத்தின் காரணமாக உதவிகளை மறுத்து வருகின்றனர்.[119]



இந்த மறுப்பிற்கு மற்றொரு காரணம் சில பண்பாட்டுக் கூறுகளின் சிக்கல்களாகும். குறிப்பாக அதிமாக மது அருந்தும் பழக்கம் ஒரு வழக்கமாகக் காணப்படுகின்றது. தற்போது ஏறக்குறைய 18 வயதிற்கும் மேற்பட்ட 11.2% இந்தியர்கள் குடிப் பழக்கத்திற்கு ஆளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. அதே வேளையில் 62.5% இந்தியர்கள் குடிப்பழக்கதிற்கு அடிமையாகவுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.[120]

தற்போது இருக்கும் அணுகுமுறை ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தினாலும் நீண்ட கால குடும்ப ஆதரவினையும் மற்றும் திட்டங்களுக்கு எதிர்ப்புக் கூறும் குடும்பங்களுக்கும் இப்பிரச்சினையைக் களைய மேலும் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். முதல் படியாக, உள்ளூரில் பயிற்சிபெற்ற சமூக ஆர்வலர்கள் இப்பணிகளுக்கு அமர்த்தப்பட வேண்டும். இவர்கள் சிக்கல்கள் நிறைந்த குடும்பங்களை அடையாளங்கண்டு அவர்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதோடு அவர்கள் மீண்டு வருவதற்கு ஒரு முறையான திட்டத்தை வகுக்க வேண்டும். அந்தக் குடும்பங்களின் உலக வாழ்க்கை பற்றிய பொதுச் சிந்தனையை அந்தச் சமூகச் சேவையாளர் புரிந்துகொள்ள வேண்டும். இந்தச் சிந்தனை அவர்களின் சமூகப் பொருளாதாரத்தில் நிலையில் மட்டும் அல்லாமல், அவர்களுடைய சமூக உறவு, பண்பாடு மற்றும் மதத்திலும் காணப்படுகின்றது.

இரண்டாவதாக, மலேசிய இந்திய சமூகத்தினரிடையே காணப்படும் சிக்கல்களைக் களைய குடும்பங்கள் ஆற்ற வேண்டிய பங்கினைப் பற்றிய விழிப்புணர்வை அடிக்கடி பேசி நினைவுறுத்தி வர வேண்டும். பொதுவாக ஒரு சமூகமும் குடும்பமும் காணப்படும் சிக்கல் மிகுந்த நடத்தைகளைக் களைவதைச் சவால்களாகக் கருத வேண்டும். சில வேளைகளில் மனநலம் கூட ஒரு காரணியாக அமையலாம். இம்மாதிரியான சம்பவங்களை முறையான நபர்களிடம் பரிந்துரைக்க வேண்டும், மற்றும் மருத்துவ நிபுணர்கள் ஏற்புடைய ஆதரவை வழங்க உறுதி செய்ய வேண்டும்.

117 ஏஜென்சிகள் மற்றும் சமூகத் தொழிலாளர்களுடனான நேர்க்காணல்கள்
118 அரசாங்க அமைப்புகளுடன் நேர்க்காணல்கள்
119 Ibid.
120 'Binge Drinker' என்றால் ஒற்றை அமர்வில் (ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட) மதுபானங்களை அதிக அளவில் எடுத்துக்கொள்பவரைக் குறிக்கிறது. 'Current Drinker' கடந்த 12 மாதங்களாக மதுபானங்களை உட்கொள்ளபவர் என்று வரையறுக்கப்படுகிறது. மூலம்: தேசிய சுகாதார ஆய்வு 2015 – தொற்றாத நோய்கள், அபாய காரணிகள் மற்றும் மற்றும் சுகாதார சிக்கல்கள், சுகாதார அமைச்சு

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

குடும்ப மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சின் (KPWKM) குடும்ப மேம்பாட்டு முயற்சிகளுக்கு மலேசிய இந்தியப் பெருந்திட்டம் முழு ஆதரவு வழங்குவதோடு மலேசிய இந்திய குடும்பங்கள் தற்போதைய திட்டங்கள் வாயிலாக நன்மைகள் பெறுவதை உறுதி செய்யும். அதோடு, அவர்களிடையே தொடர் மேம்பாட்டினைக் காண ஆர்வம் கொண்டுள்ளது. இந்தக் குறியிலக்கை அடைய பின்வரும் இலக்குகளை வகுத்துள்ளது :

- மலேசிய இந்தியர்களிடையே காணப்படும் இடைவெளியையும் மற்றும் தேசிய சராசரி நன்னலக் குறியீட்டையும் களைவது.
- மலேசிய இந்திய குடும்பங்களில் நிகழும் முறைகேடான மற்றும் வன்முறை பதிவுகள்/வழக்குகள் படிப்படியாகக் குறைக்கப்படும்.[121]

கீழே கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்கள் அடிப்படையில் இப்பெருந்திட்டத்தின் தனது இலக்குகளை விளைபயன் மிக்க வகையில் வழங்குவதற்கு எண்ணங்கொண்டுள்ளது:



### 1. வழிகாட்டலும் குடும்பங்களை மீட்டு வருதலும்

இந்தத் திட்டம் குடும்பங்களில் காணப்படும் பல்வகையான சிக்கல்களைக் களைய கைகோர்த்துச் செயல்படவும் குடும்பத் திறன்களை வளர்த்துப் பல முக்கிய இலக்குகளை அடையவும் எண்ணங்கொண்டுள்ளது. எடுத்துக்காட்டிற்கு: கல்வித்துறையில் வளர்தல், உற்பத்தி மிக்க தொழில் ஆற்றுதல், வன்முறையைத் தவிர்த்தல் மற்றும் பிற. தமிழில் நன்கு உரையாடக் கூடிய அல்லது பிற மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய பயிற்சி பெற்ற நல்ல அனுபவமிக்க பணியாளர்கள் முன்னமே சம்மதம் தெரிவித்த குடும்பங்களோடு இணைந்து குடும்ப மேம்பாட்டு திட்டத்தில் செயலாற்றுவர். மேலும், இத்திட்டத்தில் சமுதாய விழுமியங்களையும் ஆன்மீகக் கூறுகளையும் இணைத்துக் கொள்வர். சமூகத்தின் தூண்களாகக் கருதப்படும் பள்ளிகளும் ஆலயங்களும் இத்திட்டத்தின் பங்காளிகளாக விளைபயன் மிக்க வகையில் தேவைப்படும் இடங்களில் இணைத்துக் கொள்ளப்படும்.

இந்தத் திட்டத்தில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு காலத்திற்குப் போதிய பட்ஜெட்டுடனும் மூலங்களோடும், பல அரசுசாரா இயக்கங்களின் பங்காளித்துவத்தோடும், சமூக நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகள் ஆதரவோடும் வழிகாட்டப்படும். இந்த முதல் திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட சில சிறந்த செயற்பாடுகள் மகளிர், குடும்ப மற்றும் சமூகநல மேம்பாட்டு அமைச்சோடும் (KPWKM), பிற முக்கிய அரசாங்க நிறுவனங்களோடும் பகிர்ந்துகொண்டு அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பங்கள் சிக்கல்களிலிருந்து வெளியேறுவதற்குத் துணைபுரியும்.

121 2016ஆம் ஆண்டு முடிவின் அடித்தள அடிப்படையில்

## IB40 குடும்ப முன்னேற்ற முன்னோட்டத் திட்டம் (எடுத்துக்காட்டு)

### நோக்கம்

- அடையாளம் காணுதலும் சென்று அடைதலும்
- தள பணியாளர்கள் மற்றும் குடும்பங்கள் இடையே, தீவிர குடும்ப ஆதரவு சேவைகள், பொருள் முறைகேட்டு பயன்பாடு ஒழித்தல், குடும்பத்தை வலிமையாக்கும் திட்டம், திறன் பயிற்சி, வேலை வாய்ப்பு ஆகியவை உள்ளடங்கிய ஒப்பந்தம் கொண்ட குடும்ப முன்னேற்றத் திட்டம்
- விளைவுகளை மதிப்பிடுதல்

### மைல்கல்கள்/ இலக்குகள்

**2016-2020**

- 95% கல்வி அடைவு
- வேலையில்லாத குடும்ப உறுப்பினர்களுக்கு 3–6 மாத தொடர் வேலை

**2016-2026**

- இளையோர் குற்றச் செயல் 50% வரை குறைதல்
- சமூகத்திற்கு எதிரான நடத்தை (குடும்ப வன்முறை உட்பட)

### கொள்கைகள்

- ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு முகவர்/தொடர்பாளர்
- நடைமுறை பயிற்சி ஆதரவு
- நீண்டகால அணுகுமுறை - குறைந்தது 2 ஆண்டுகள்; கட்டுப்பாட்டுக்கான பயிற்சியும் உள்ளடங்கியது
- ஒவ்வொரு சிக்கலாகவோ ஆட்களாகவோ கையாளுவதை விடுத்து - முழு குடும்பத்தையும் காணல்.
- வழக்கமான நோக்கம் மற்றும் ஒப்புக்கொண்ட நடவடிக்கை

### வளங்கள்

| | |
|---|---|
| மக்கள் | துறை நிபுணர்கள் - முழு நேர குடும்ப அதிகாரிகள், தகவல் சேகரிப்பை பார்வை இடவும் நிர்வகிக்கவும், செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு |
| சமூகப் பங்கேற்பாளர்கள் & கூட்டமைப்பாளர்கள் | சேவை வழங்குபவர்கள் / அரசாங்கம் அல்லாத அமைப்பு: நன்கொடையாளர்கள்; கூட்டமைப்பாளர்கள் |
| வசதிகள் | பள்ளிக்கூடங்கள், கோவில்கள், பொது மண்டபங்கள் |

### 2. "முதலில் குடும்பம்" என்ற பிரச்சாரமும் ஆதரவு தளமும் தோற்றுவித்தல்

முன் குறிப்பிட்டது போல பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வுகள் குடும்பங்கள் மீண்டு வரும் திட்டத்திற்குத் துணைபுரியும். மேலும், சிக்கல்கள் நிறைந்த குடும்பங்களிடையே மாற வேண்டும் என்னும் ஆவலை மேலோங்கச் செய்யும் மற்றும் பொதுவான மலேசிய இந்திய சமூகம் ,குறிப்பாக எப்போதும் மது அதிகமாகக் குடிப்பவர் இயல்புநிலைக்கு மாறுவதையும் வன்முறையையும் எதிர்க்கும்.[122] ஆனால், விழிப்புணர்வு பிரச்சாரமானது தகவல்கள் வழங்குவதோடு முன் வந்து கேள்விகள் அல்லது உதவிக்கான வேண்டுகோள்களை விடுக்கும் குடும்பங்களுக்குச் சேவைகளோடு ஆதரவும் வழங்கும் மையங்களை/ தளங்களைப் பரிந்துரைக்கும்.

---

122 அதிக குடிப்பழக்கத்திற்கு எதிரான தலையீடுகள் 'சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்' இயலில் வழங்கப்பட்டுள்ளது

## கூடுதல் தகவல்: குடும்பங்களை வலிமையாக்கும் திட்டம் (USA)

சிக்கல்கள் கொண்ட குடும்பங்களின் பெற்றோரும் பிள்ளைகளுக்குமான அளவுகோல் திட்டம்

குடும்ப உறவுகளை பலப்படுத்தி மது அல்லது முறைகேடாகப் பொருளைப் பயன்படுத்துவது போன்ற சிக்கலான நடத்தைகளைக் குறைக்கும், குடும்பங்களை வலிமையாக்கும் திட்டம், பெற்றோரியல் திறனை மேம்படுத்த வடிவமைக்கப்பட்டது.

இத்திட்டம் தொடங்கப்பட்டு 5 வருடங்கள் வரை எடுக்கபட்ட தொடர் ஆய்வின்படி மது, புகை, போதை போன்ற அபாயகரமான நடவடிக்கைகள் குறைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டம் 35 நாடுகளுக்கும் மேலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

### அடையாளம் காணுதல் & சென்றடைதல்

- தேவாலயம், பள்ளிக்கூடம் போன்ற திட்ட பங்குதாரரின் பரிந்துரையின்படி இலக்கு குடும்பங்களை அடையாளம் காணுதல். “குடும்பத்தை இலக்காக அடைய மாணவரை இலக்காகக் கொள்ளுதல்”.
- திட்டத்தில் பங்கேற்பவர்களுக்கு குழந்தை பாதுகாப்பு, உணவு, போக்குவரத்து உதவித்தொகை போன்றவற்றை சலுகையாக
- வழங்குதல்.
  பள்ளிக்கூடங்கள், மளிகைக்கடைகள் மற்றும் இதர சமூகத்தினர் திரளும் இடங்கள் ஆகியவற்றின் வழியிலான விளம்பர முயற்சி.

### பாடத்திட்டம்

- பயன்பாட்டுக்கு எளிதான பொருட்கள் மற்றும் வழி முறை, எ.கா. விளையாட்டு, திறன் பயிற்சி குடும்ப திட்டங்கள்
- பெற்றோர்: கேட்டல், உதவி பெறுதல், போன்றவை.
- இளையோர்: பெற்றோரின் சவால்களை புரிந்து கொள்ளல், சகா வயதுடையோர் தரும் அழுத்தத்திற்கான எதிர்ப்புத் திறன், போன்றவை.
- குடும்பங்கள்: ஒருவருக்கொருவர் புரிந்துணர்வோடு இலக்கை நிர்ணயித்தல், சிக்கல்களை இணைந்து தீர்த்தல்,



### வளங்கள்

- தேசிய மற்றும் மாநில அரசின் மானியங்கள் மற்றும் ஊக்க ஆதரவு போன்றவை வழியிலான நிதியுதவி.
- திட்ட பங்கேற்பாளர்களுக்கு ஊக்க ஆதரவு அளிக்கும் சலுகைகள்.
  திட்டத்தின் நம்பகத்தன்மையை
- உறுதிபடுத்த, நடத்துனர்கள் பயிற்சிப் பெற்றுள்ளனர்; ஒவ்வொரு 3 வருடமும் சான்றிதழ் புதுப்பிக்கப்பட்ட வேண்டும்.
- திட்ட அமர்வுகள் பள்ளிக்கூடங்களிலும் சமுருக மையங்களிலும் நடைபெறும்.
- பாடத்திட்ட பொருட்கள் இருமொழியில் இருத்தல் – தாய்மொழி மற்றும் ஆங்கிலம்.

### கண்காணிப்பு & மதிப்பீடு

- திட்டத்திற்கு முன்னும் பின்னரும் நடத்தப்படும் சோதனை: தொடர் மதிப்பீட்டு பார்வையீடு.
  அமர்வுகளின் தரத்தை உறுதிப்படுத்த பார்வையாளர்கள்
- நியமித்தல்
  விளைவை இலக்காக்குதல்: குறைந்த வன்மையான
- நடத்தை, உயர் பள்ளிக்கூட அடைவுகளை, குறைந்த மது மற்றும் போதைப்பொருள் பயன்பாடு வழக்கம், குறைந்த மன அழுத்த அறிகுறி போன்றவை.

மூலம்: குடும்பங்களின் திட்டத்தை வலுப்படுத்துதல்





# இயல் 3

# ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்



# கல்வி & பயிற்சி வழி மேம்பாடு

**கல்வியின் முக்கியத்துவம் அனைவரும் நன்குணர்ந்த ஒன்றாகும். தரமான கல்வியினால் பயனடைந்த மக்கள், பொதுவாக, வாழ்க்கையில் நிறைய வாய்ப்புகளையும், அதிக வருமானத்தையும், சிறந்த நலத்தையும், வாழ்க்கை தரத்தையும் பெற்றிருப்பார்கள். கல்வி ஒரு நாட்டின் ஆக்கத்திறனையும் மற்றும் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும் சக்தி கொண்டது என்றால் அது மிகையாகாது. மேலும், அது சமூக, பொருளாதார, அரசியல் சமத்துவதிற்கு ஊன்று கோலாகவும் அமைகிறது.**

மக்கள் தொகையில் கீழ்மட்டத்திலுள்ள 40 விழுக்காடு மக்களின் சமூகப் பொருளாதார, நிலையை மேம்படுத்துவதற்குக் கல்வி மிக முக்கியமான ஒன்றாகும். தவிர, அது சமூகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சமநிலைப்படுத்தும் ஆற்றலையும் கொண்டதாகும். "இடைநிலை கல்விக்குப் பிறகு தொடரப்படும் கல்வியானது, பெற்றோரின் பொருளாதார நிலை, அவர்களது பிள்ளைகளுக்கும் தொடராமல் இருப்பதை உறுதிசெய்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், கல்வியானது மக்களின் பொருளாதார ஆற்றலையும், சமூக நீதியையும் சமூகத்தில் படிநிலை நகர்ச்சியையும் ஊக்குவிக்கிறது.[123]

ஒட்டுமொத்த மலேசியர்களின் கல்வி அடைவு நிலையை மேம்படுத்தும் முயற்சிகள் நிறைவேற்றப்பட்ட போதிலும், மலேசிய இந்தியர்கள் மத்தியில் அந்நிலையை மேலும் மேம்படுத்த நிறைய வாய்ப்புகள் உள்ளதை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, இந்திய இளைஞர்களிடையே காணப்படும் கல்வி அடைவு நிலையானது ஆழ்ந்து கவனிக்க வேண்டிய, ஒன்றாக வலியுறுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 20 – 24 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் மத்தியில் ஒப்பிடுகையில், 9 விழுக்காடு இந்திய இளைஞர்கள் குறைந்த கல்வியறிவு நிலையைப் பெற்றுள்ளனர். (கீழ்நிலை இடைநிலைக் கல்வி மட்டும்), இந்த நிலை மலாய் மற்றும் சீன சமூகத்தினர் மத்தியில் 6 விழுக்காடாகவும் 5 விழுக்காடாகவும் உள்ளது. இதேபோல், 25–29 வயதிற்கு உட்பட்ட இளைஞர்கள் மத்தியில், 13 விழுக்காடு இந்திய இளைஞர்கள் குறைந்த கல்வியறிவைப் பெற்றிருக்கின்றனர். (கீழ்நிலை இடைநிலைக் கல்வி மட்டும்). இப்பிரிவினரை மலாய், சீன இளைஞர்களோடு ஒப்பிடுகையில், மலாய்க்காரர்கள் 9 விழுக்காடும் சீனர்கள் 7 விழுக்காடு அடைவு நிலையையும் கொண்டுள்ளனர்.[124]





இந்தப் பெருந்திட்ட அறிக்கையின் குறிக்கோள் யாதெனின், சமூகங்களுக்கு இடையிலான கல்வி அடைவு நிலை வேறுபாட்டைக் களைவதோடு, அனைத்து இந்தியக் குழந்தைகளும் குறைந்தபட்சக் கல்வித் தகுதியைப் பெற்றிருப்பதையும் உறுதி செய்வதாகும். இந்தக் குறிக்கோளானது, மலேசியக் கல்வி பெருந்திட்டம் (MEB), மற்றும் 11–வது மலேசிய திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள மலேசிய கல்வி முறையை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சிகளுக்கும் துணை புரியும் என்றும் துணிந்துக் கூறலாம். மலேசியக் கல்விப் பெருந்திட்டம் மற்றும் 11–வது மலேசிய திட்டத்தைச் சார்ந்து எடுக்கப்படும் முயற்சிகள் மலேசிய இந்திய சமூகத்தினர், அதிலும் குறிப்பாக IB40 மக்களுக்கு, சென்றடையவும் அதனால் அவர்கள் பயனடையவும் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க மலேசிய இந்தியப் பெருந்திட்டம் துணை செய்யும்.

123 Haveman, Robert & Smeeding, Timothy (2006) "The Role of Higher Education in Social Mobility" The Future of Children Vol. 16 No. 2 pp. 125-150

124 மக்களின் கல்வி மற்றும் சமூகத் தன்மைகள் (2010) மலேசிய புள்ளி விபரத் துறை

## மக்கள் மத்தியில் உயர்ந்தக் கல்வி நிலை வயது 20–24 இனரீதியாக, 2010






தற்போதுள்ள இந்தியர்களை மையப்படுத்தும் நடவடிக்கைகளை இன்னும் மேம்படுத்த முனையும் இப்பெருந்திட்டம், அண்மையில் உருவாக்கப்பட்ட முதல் முயற்சியாகும். நாடு முழுவதிலுமுள்ள தேசிய வகை தமிழ்ப் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்கும் தமிழ்ப்பள்ளிகளுக்கும், பிற பள்ளிகளுக்கும் இடையிலான இடைவெளியைக் களைவதற்கும்[125], பிரதமர் துறை அமைச்சின் கீழ், தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டுத் திட்ட வரைவு (PTST)[126] என்னும் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு தமிழ்ப்பள்ளிகளின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் ஒட்டுமொத்த மேம்பாட்டையும் உறுதி செய்வதற்காகத், 'தமிழ்ப்பள்ளிகளின் எதிர்காலத்திற்கான செயல்திட்டம்' ஒன்றினை தயாரிக்கப் பணிக்கப்பட்டது. பிப்ரவரி 2014–இல் அமலுக்கு வந்த இச்செயல்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப்பள்ளிகளுக்கான பரிந்துரைகள் இப்பெருந்திட்டத்தில் இடப்பெற்றுள்ளன.

இந்தியர்களை மையமாகக் கொண்ட பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், அரசு சார்பற்ற இயக்கங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் சமூக உதவி புரிய, 2014–ஆம் ஆண்டு 'செடிக்' என்னும் பிரிவு அமைக்கப்பட்டது.[127] இதன் திட்டங்களுள், மலேசிய இந்திய மாணவர்களும் இளைஞர்களும் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீட்கும் உதவிகளும் உள்ளடங்கும். அவற்றுள் சில, தமிழ்ப்பள்ளிகளிலிருந்து மலாய் மொழி இடைநிலைப்பள்ளிக்குச் செல்லும் மாணவர்களின் சவால்கள்; உயர்க்கல்விக்கு விண்ணப்பித்தல் மற்றும் தகுதி பெறுதல், குறைந்த தேர்ச்சி, பாதியிலேயே பள்ளிப் படிப்பை கைவிடல், குண்டர் கும்பல், பயனற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல் ஆகியவை அடங்கும். இவ்வகை தலையீட்டு நடவடிக்கைகள் மூலம் ஓரளவு முன்னேற்றம் தெரிந்தாலும், இது இன்னும் தொடக்க நிலையிலேயே உள்ளது. இந்திய சமூகத்தினரின் கல்வி அடைவு நிலையை குறைந்தப்பட்சம் தேசிய சராசரி நிலைக்கு நிகராக அடைவதற்கு மேலும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். துவக்கக்கட்ட தலையீடுகள் பிரச்சினைகளுக்கு பயனுள்ள விளைவை ஏற்படுத்தும் வேளையில் தீர்வாகவும் அமையும் என்ற நம்பிக்கை இப்பெருந்திட்டத்தின் பரிந்துரைகளில் மேலோங்கியுள்ளது. அதன் பேரில், இந்நடவடிக்கைகளின் பயனில் எந்தவொரு சிறாரோ அல்லது 18 வயதிற்குக்கீழ் உள்ள இளைஞரோ விடுபடாமல் இருப்பர் என்பது உறுதிசெய்யப்படும்.

125 மழலையர் கல்வி, உள்கட்டமைப்பு, வசதிகள், ஆசிரியர்கள் & ஆசிரியர் பயிற்சி, மாணவர்கள், கல்வி அடைவு, பள்ளிகளின் அமைப்பிடங்கள், பாடத்திட்டம், சிறப்புக் கல்வி, தலைமைத்துவம், பெற்றோர் மற்றும் சமூக ஈடுபாடு மற்றும் நிதி விவகாரங்கள் உட்பட்ட பகுதிகளில் நிலவும் இடைவெளி

126 பிடிஎஸ்டி

127 இந்திய சமுதாயத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு

# ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்: இலக்கு

11–வது மலேசியத் திட்டம் மற்றும் மலேசிய கல்விப் பெருந்திட்டத்தின் (MEB) இலக்கினை உறுதி செய்வதற்கு, MIB பின்வருவனவற்றை அடைய எண்ணியுள்ளது:

## ஒட்டுமொத்தம்: IB40 சிறார்கள் மற்றும் இளைஞர்கள்

- மலேசிய இந்தியப் பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் IB40 குழந்தைகளின் எழுத்தறிவு மற்றும் கணக்கறிவு அடைவுநிலை, யு.பி.எஸ்.ஆர்., எஸ்.பி.எம் தேர்வுகளில் குறைந்தபட்சம் தேசிய சராசரி நிலைக்கு நிகராக இருப்பதை உறுதி செய்தல்.
- தொடக்கப் பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளியில் பயிலும் IB40 மாணவர்கள், பாதியிலேயே பள்ளிப் படிப்பை விட்டு விலகும் விழுக்காடு குறைவதை உறுதி செய்தல்.[128]
- மலேசிய இந்தியப் பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் IB40 இளைஞர்கள் மத்தியில் (TVET உள்ளடங்கிய) உயர்க்கல்விக் கழகங்களில் சேர்வதிலும் பட்டப்படிப்பை மேற்கொள்வதிலும், 30 விழுக்காடு அதிகரிப்பை உறுதி செய்தல்.[129]

## மழலையர் கல்வி

- வருமானம் மற்றும் ஆவணங்கள் நிலையை பொருட்படுத்தாமல் 4 முதல் 6 வயதிலான இந்திய குழந்தைகளுக்கு, குழந்தைப் பராமரிப்பும் மழலையர் கல்வியும் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.[130]
- MIB தொடங்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் மழலையர் பள்ளிக்கு ஏற்புடையதாக அடையாளங் காணப்படும் தமிழ்ப்பள்ளிகளில், போதுமான மழலையர் பள்ளி வகுப்புகள் நிறுவப்படுதலை உறுதி செய்தல்
- இந்தியர் மழலையர் பள்ளிகளில் எ.கா. தேசிய வகை தொடக்கத் தமிழ்ப்பள்ளிகள், ஆலயங்கள், தனியார் இடங்களில் போதுமான மழலையர் பள்ளித் தகுதிகளையும் பயிற்சியையும் பெற்ற ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்துதலை உறுதி செய்தல்

## தமிழ்ப்பள்ளிகள்

- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், யு.பி.எஸ்.ஆர் தேர்ச்சி நிலை, எழுத்தறிவு, எண்ணறிவு பாடங்களில் தமிழ்ப்பள்ளிகளுக்கும், சீன மற்றும் மலாய்ப் பள்ளிகளுக்கிடையிலான இடைவெளி முற்றாகக் களைவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், தமிழ்ப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு, பணியாளர் நியமனம், பள்ளியின் தரத்தை குறிக்கும் இதர முக்கியக் குறியீடுகள் ஆகியவற்றில் குறைந்தபட்சத் தரத்தை அடைவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- அனைத்து தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும், முறையாக வகுக்கப்பட்ட பணித்திற மேம்பாட்டுத் திட்டங்களையும் தெளிவான தொழில் வளர்ச்சி பாதையையும் துணையாகக் கொண்டு அவர்களது பணியில் முன்னேற்றம் காண்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- MIB தொடங்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தங்களது மொழித் திறனை மேம்படுத்திக் கொண்டு இடைநிலைப் பள்ளிக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதையும் புகுமுக வகுப்பை தவிர்ப்பதையும் உறுதிப்படுத்துதல்.

---

128 TVET–இல் அடையாளங்காணப்பட்டவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான சிறார்கள் & இளையோர் திட்டங்களில் நுழைவுப் பெற்றவர்கள் பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களின் எண்ணிக்கையில் உட்படுத்தப்படவில்லை.

129 2016/17 அடிப்படைகளுக்கெதிராக அளவிடப்பட்டுள்ளது

130 2020க்குள் 100% பாலர் பள்ளி மாணவர்கள் நுழைவை உறுதிப்படுத்தும் மலேசியக் கல்விப் பெருந்திட்ட இலக்கிற்கேற்ப அமைந்துள்ளது

## தேசியப் பள்ளிகள்

- MIB செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் யூபிஎஸ்ஆர் தேர்விலும், எழுத்தறிவு, கணக்கறிவு பாடங்களிலும் தேசியப் பள்ளியிலுள்ள இந்திய மாணவர்கள், தேசியப்பள்ளியில் பயிலும் பிற மாணவர்கள், தமிழ்ப்பள்ளி மற்றும் சீனப்பள்ளி மாணவர்களோடு ஒப்பிடுகையில் கல்வி அடைவு நிலையில் இடைவெளியைக் களைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

## இடைநிலைப்பள்ளிகள்

- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் PT3, SPM தேர்வுகளில் இந்திய மாணவர்களுக்கும் பிற சமூக மாணவர்களுக்கும் இடையிலான அடைவுநிலை இடைவெளியைக் களைவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- பிடி3 தேர்வு/ இடைநிலைக் கல்விக்குப் பிறகு, இந்திய மாணவர்கள் மற்றும் அவர்தம் பெற்றோர்களுக்குத் திறன் பயிற்சி, தொழிற்பயிற்சி/ வேலை வாய்ப்புகள் தொடர்பான ஆரம்பக்கட்ட வழிகாட்டுதல் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.

## உயர்க்கல்வி

- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் அனைத்து அரசாங்கக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், தொழிற்பயிற்சி கல்லூரிகளிலும், இதர மேல்நிலைக் கல்விக் கூடங்களிலும், நுழைவு விதிமுறைகளுக்குட்பட்டு குறைந்தபட்சம் 7 விழுக்காடு இந்தியர்களின் நுழைவு அனுமதிக்கப்படுவதை உறுதி செய்தல்
- நிதி உதவி தேவைப்படும் தகுதியுடைய இந்திய இளையோர்களுக்கு கல்வி உபகாரச் சம்பளம் அல்லது கல்விக்கடனுதவி கிடைக்கப்பெறுவதை உறுதிப்படுத்துதல்.

## அபாயத்தை எதிர்நோக்கும் சிறார்கள் & இளையோர்

- குற்றச் செயல்களில் இந்திய இளையோர் ஈடுபடுவதையும் இளம் குற்றவாளிகள் எண்ணிக்கையை குறைப்பதற்கு உறுதிப்படுத்துதல்.
- இந்தியச் சிறார், இளையோரிடையே தீயச்செயல்களில் ஈடுபடுதல், குற்றம் புரிதல் போன்ற நடவடிக்கைகளின் எண்ணிக்கையை குறைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.[131]

131 களப் பயிற்சியாளர்கள் அடையாளங்கண்ட குடும்ப சூழல், பொருள் பயன்பாடு, தனிப்பட்ட மனநிலை போன்ற ஆபத்துக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, ஆபத்து மதிப்பீட்டுக் கருவிகள் மேம்படுத்தப்பட்டு 2017/18 செயல்படுத்தப்பட வேண்டும்.

## அ. ஒட்டுமொத்தம்: IB40 சிறார்கள் மற்றும் இளையோர்

சமூகப் பொருளாதார குறைபாடுகள், பள்ளிக் குழந்தைகளின் பின்தங்கிய கல்வி அடைவு நிலைக்குக் காரணமாக அமைவதோடு அந்நிலையே அடுத்தத் தலைமுறையினருக்கும் எதிர்மறையான விளைவுகளை உண்டு பண்ணுகிறது. பள்ளிக்கூடம், ஆசிரியர் தரம் போன்ற காரணங்களைக் காட்டிலும் பெற்றோரின் சமூகப்பொருளாதார நிலை பிள்ளைகளின் கல்வியில் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்துகின்றது என்று சர்வதேச ஆய்வுகள் கூறுகின்றன.[132] அதைத் தவிர்த்து, குறைந்த சமூகப் பொருளாதார நிலையிலுள்ள பெற்றோர்கள், பொதுவாகக் குழந்தை வளர்ப்பு, குழந்தைகளைப் பராமரிப்பதற்காக நேரம், ஈடுபாடு, பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றில் பின்தங்கியே இருக்கிறார்கள். பள்ளிக்கூடம், ஆசிரியர் தரம் போன்றவற்றை விட மாணவர்கள் மீது பெற்றோர்களின் மேற்குறிப்பிடப்பட்ட கவனிப்பு முக்கியமானவை.[133]



டுரியான் துங்கால் தமிழ்ப்பள்ளி, மலாக்கா

பள்ளியின் புதிய மண்டபத்திற்காக ரிம.500,000 பிரதமரின் சிறப்பு நிதி 2016இல் பூர்த்தியடைந்தது

> இந்தியர்கள் மத்தியில் குடும்பச் சமூகப் பொருளாதாரத் தன்மைகள் பிற இன மக்களைக் காட்டிலும் மிகப் பெரிய விளைவை ஏற்படுத்துகின்றது என்று ஆய்வுச் சான்றுகள் உணர்த்துகின்றன.

முறையான கல்வியறிவைப் பெற்றிராதப் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் மத்தியில், 33 விழுக்காடு பூமிபுத்ரா, 44 விழுக்காடு சீன குழந்தைகள் உயர்க்கல்வி பெற்றிருக்கின்றனர். மாறாக 5 விழுக்காடு இந்தியர் குழந்தைகள் மட்டுமே இந்நிலையை அடைந்துள்ளனர். இன அடிப்படையிலான இந்தப் போக்கு, தொடக்கக்கல்வி, இடைநிலைக் கல்வி பெற்றிருக்கும் பெற்றோர்களின் மத்தியிலும் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறது. மலேசிய இந்தியர்கள் மத்தியில் நிலவும் இனங்களுக்கிடையிலான கல்வியறிவு அடைவு நிலை வேறுபாட்டினைக் களைவதற்கு இந்திய பெற்றோர்கள் மேல்நிலைக் கல்வித்தகுதியைப் பெற்றிருத்தல் இன்றியமையாததாகும்.[134]

2015–இல் யூ.பி,எஸ்.ஆர் தேர்வில் எல்லாப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 54 விழுக்காடாக இருந்த வேளையில் தேசிய சராசரி விகிதமானது 66 விழுக்காடாக இருந்தது.[135] அதே ஆண்டு, எஸ்.பி.எம். தேர்வில் எல்லாப் படங்களிலும் தேர்ச்சி பெற்ற இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 44 விழுக்காடாக இருந்த வேளையில் தேசிய சராசரி விழுக்காடு 55 விழுக்காடாக இருந்தது.[136] இவ்வகை குறைவான தேர்ச்சி அடைவு நிலைக்கு IB40 மாணவர்களே முக்கியக் காரணமாக இருக்க கூடும்.

குறைவான தேர்ச்சி அடைவு நிலையைக் காட்டிலும் மாணவர்கள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே விட்டுச் செல்லுதல் இன்று பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. தொடக்கப் பள்ளிகளில் மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் விழுக்காட்டை மட்டுமே பிரதிபலிக்கும் இந்திய மாணவர்கள், ஆரம்பக்கல்வியை பாதியில் விட்டு விலகியவவர்களில் 13 விழுக்காட்டினராவர். இடைநிலைப் பள்ளி நிலையில் 2014–ஆம் ஆண்டில் படிப்பைப் பாதியிலேயே விட்டுச் சென்ற மாணவர்களின் எண்ணிக்கையில், இந்திய மாணவர்கள் 8 விழுக்காட்டினர் ஆவர். இச்சூழலிலும் அவர்கள் அநேகமாக IB40 மாணவர்களாக இருக்கக்கூடும்.

---

132 Greenstone, M; Looney, A; Patashnik, J; & Yu, M (2013) Thirteen Economic Facts about Social Mobility and the Role of Education, Policy Memo for The Hamilton Project

133 "Class and family in America: Minding the nurture gap" (2015, March 21) The Economist. Accessed at: http://www.economist.com/news/books-and-arts/21646708-social-mobility-depends-what-happens-first-years-life-minding-nurture-gap

134 Climbing the Ladder; Socioeconomic Mobility in Malaysia. Khazanah Research Institute, October 2016

135 "தேசிய நிலை மற்றும் இந்தியர்களின் யூபிஎஸ்ஆர் அடைவுநிலை", மலேசிய கல்வி அமைச்சு

136 "தேசிய நிலை மற்றும் இந்தியர்களின் யூபிஎஸ்ஆர் அடைவுநிலை", மலேசிய கல்வி அமைச்சு

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

அவர்களது பெற்றோர்களாலும் குடும்ப சூழலாலும் ஏற்படுகின்ற விளைவுகளுக்கு முக்கியத்துவம் வழங்கி, தீர்வுக் காணப்பட வேண்டும். மாணவரின் திறமையையும், ஆற்றலையும் வளர்ப்பதில் கல்வித் திட்டத்தின் அளவிற்கு குடும்பத்தின் பங்களிப்பு அங்கீகரிக்கப்படவில்லை. இவை வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள், ஆராய்ச்சி, மற்றும் கொள்கை வரைவுகள் போன்ற சான்றுகள் மூலம் புலனாகின்றன. கள ஆய்வாளர்களின் கருத்துப்படி, நடுத்தர மற்றும் உயர்ந்த வருமான பிரிவைச் சேர்ந்த பெற்றோர்களோடு ஒப்பிடுகையில், IB40 பெற்றோர்கள், பராமரிப்பாளர்களின் குறைந்த கல்வி அடைவு நிலை, பல வேளைகளில் அவர்களால் தங்களது பிள்ளைகளின் பள்ளி பாடங்களில் உதவ முடியாமாலும் நல்லொழுக்கத்தை வலியுறுத்த இயலாமலும் இருப்பதைக் காட்டுகின்றது.[137]



வெஸ்ட் கன்ட்ரி பாராட் தமிழ்ப்பள்ளி, சிலாங்கூர்
ரி.ம. 2.98 மில்லியன் ஊக்குவிப்பு நிதியைக் கொண்டு நிறுவப்பட்ட புதிய பள்ளிக் கட்டிடம், 2015ஆம் ஆண்டில் பூர்த்தியானது

வாழ்வாதாரத்திலும் ஆற்றலிலும் குறைந்த நிலையில் காணப்படும் மாணவர்களைக் கையாளுவது, பள்ளிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் சவாலாக அமைகின்றது. அதிலும் குறிப்பாக, இந்தியக் குடும்பங்களில் சில பிரிவுப் பெற்றோர்கள் சிறை வைக்கப்படுதல், மது, போதை போன்றவற்றிற்கு அடிமைகளாகவும் இருக்கும் சாத்தியமுண்டு. பள்ளிகளும் ஆசிரியர்களும், வசதி குறைந்தக் குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகளின் தேவைகளையும் பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு அவற்றைக் களையும் பயிற்சி வழி அறிவாற்றலோடும் திறனோடும் விளங்க வேண்டும்.

வசதி குறைந்த குடும்பப் பின்னணியைச் சார்ந்த குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் ஆதரவு அளிக்கும் வகையில் அரசு பல வகையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அவற்றுள் சில, மாணவர்களுக்கான கல்வி உதவி நிதி, இலவசப் பாடப் புத்தகம், சத்துணவுத் திட்டங்கள், சிறப்பு வகுப்புகள் போன்றவை அடங்கும். தவிர, இந்தியர்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அணுகுமுறைகள், திட்டங்கள் வழி அரசு சாரா இயக்கங்களுக்குச் சிறப்பு வகுப்பு, வீட்டுப்பாடங்களுக்கான வழிகாட்டல், மதிவுரை வழங்கல், பெற்றோர்களை உட்படுத்திய ஊக்குவிப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் போன்றவற்றிற்கு மானியங்கள் வழங்குவதில் முக்கியத்துவம் காட்டப்படுகிறது.

இவ்வகை நடவடிக்கைகள் பெருமளவில் உதவியாக இருந்தாலும் ஒருங்கிணைக்கப்பட்டால் மேலும் சிறப்பான முடிவுகளைப் பெறலாம். எனவே, கீழ்க்காணப்படும் முயற்சிகளுக்கு ஒரு முழுமையான அணுகுமுறை தேவைப்படுகிறது. முதலாவதாக, IB40 குழந்தைகள் மற்றும் குடும்பங்களில் குறிப்பாக தீவிர செயல்திறன் குறைபாடு உடையவர்கள் மீது போதுமான கவனம் செலுத்தப்படுத்துவதை உறுதிசெய்தல். இரண்டாவதாக, தேவைகளுக்கேற்பவும் குழந்தைகள், பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் பின்னணிக்கேற்பவும் இன்னும் விரிவான, முறையாகக் கட்டமைக்கப்பட்ட உதவித்திட்டங்கள் இயற்றப்பட வேண்டும். மூன்றாவதாக இவ்வாறு மேற்கொள்ளப்படும் முயற்சிகளின், தாக்கத்தினை மதிப்பீடு செய்து, அவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். IB40 குழந்தைகளையும் இளைஞர்களையும் மேம்படுத்துவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை உறுதியாக முன்னெடுக்கவும் எதிர்பார்க்கின்ற முடிவுகளை அடையவும், நிறுவனங்களுக்கிடையிலான நெருக்கமான ஒத்துழைப்பும் அதிகப்படியான சமூக பங்கேற்பும் தேவைப்படுகிறது.

---

137 Periasamy, Santhi (2016) "Underachieving Youths and the Education System: A Case Study of the EWRF Research Programs" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: KITA, pp. 409-425; CHILD submission for the 11th Malaysia Plan

## IB40 பள்ளிச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோர்களது மொழி ஆற்றல்

### IB40 பள்ளிச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோர்கள் தெரிவித்த தங்களின் மொழி திறனுக்கான 'நன்று' நிலை:




### IB40 பள்ளிச் செல்லும் பிள்ளைகளின் பெற்றோர்களது உயர்ந்தக் கல்வி நிலை:




மூலம் : தீபகற்ப IB40 >2,000 குறைந்த வருமானம் பெறுநருடன் நேர்முக ஆய்வு, 2016. மலேசிய இந்தியர் பெருந்திட்ட செயலகம்.

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

IB40 குடும்பங்களைச் சார்ந்த அனைத்துக் குழந்தைகளும், இளைஞர்களும் இவ்வகை உதவி முயற்சிகளிலிருந்து விடுபட்டு விடாமல் இருப்பதை உறுதி செய்ய, இந்தப் பெருந்திட்ட அறிக்கை கீழ்க்கண்ட இலக்கை அடையும் நோக்கத்தைக் கொண்டுள்ளது:

- மலேசிய இந்தியப் பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் IB40 குழந்தைகளின் எழுத்தறிவு மற்றும் கணக்கறிவு அடைவுநிலை, யு.பி.எஸ்.ஆர், எஸ்.பி.எம் தேர்வுகளில் குறைந்தபட்சம் தேசிய சராசரி நிலைக்கு நிகராக இருப்பதை உறுதி செய்தல்.
- தொடக்கப் பள்ளி மற்றும் இடைநிலைப் பள்ளியில் பயிலும் IB40 மாணவர்கள், பாதியிலேயே பள்ளிப் படிப்பை விட்டு விலகும் விழுக்காடு குறைவதை உறுதி செய்தல்.[138]
- மலேசிய இந்தியப் பெருந்திட்டம் செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் IB40 இளைஞர்கள் மத்தியில் (TVET உள்ளடங்கிய) உயர்க்கல்விக் கழகங்களில் சேர்வதிலும் பட்டப்படிப்பை மேற்கொள்வதிலும், 30 விழுக்காடு அதிகரிப்பை உறுதி செய்தல்.[139]

இந்த இலக்குகளை அடைய, இந்த 'MIB' பெருந்திட்டம் கீழ்கண்டவற்றை நடைமுறைப்படுத்த குறிக்கோள் கொண்டுள்ளது:

### 1. IB40 கல்வி செயல் திறன் முயற்சிகளை ஏற்படுத்துதல்

IB40 குழந்தைகள், இளைஞர்களின் கல்வி அடைவு நிலையை கண்காணிக்கவும் மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த முயற்சிகள் வடிவமைக்கப்பட்டும் உறுதிப்படுத்தப்பட்டும் செயல் உருவம் காண வேண்டும். இவ்வாறான 'முயற்சிகளுக்குத் தெளிவான கொள்கையும், மேல்நிலை அரசியல் உத்தரவும், வரையறைக்கு உட்பட்ட முழுமையான திட்டமும், குறியீடுகளும் மைல்கல் இலக்குகளும் தேவைப்படுகின்றது. மேலும் தேவையான நிதி ஒதுக்கீடு, வளங்கள், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையிலான கூட்டு ஒத்துழைப்பு; பொது–தனியார் கூட்டு முயற்சி (PPP); ஆலோசனைக் குழுக்கள், அரசுசாரா அமைப்புகளுடனான கூட்டு ஒத்துழைப்பிற்கான தளங்கள், சமூக அமைப்புகள் மற்றும் தனியார் துறை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அமைந்திருக்கவேண்டும். இம்முயற்சிகளின் முடிவுகள் அவ்வப்போது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். மேலும், இம்முயற்சிகள் வழி கிடைக்கப்பெறும் அனுபவங்கள் படிப்பினையாகக் கொண்டு அணுகுமுறைகளை தொடர்ந்து செம்மைப்படுத்தப்படும்.

IB40 கல்வி செயல் திறன் முயற்சியில் இடம்பெற்றுள்ள குடும்பம் சம்பந்தமான தொகுதிகள் (module), குடும்பத்தை மாற்றியமைக்கும் திட்டத்துடன் தொடர்புப்படுத்தப்பட்டுள்ளது. (அடிப்படைத் தேவைகளை அணுகுதல்' இயலில் கூறப்பட்டுள்ளது.) இதன் வழி, IB40 பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் தங்களுடைய இல்லங்களில் ஆக்ககரமான கற்றல் கலாச்சாரத்தை ஏற்படுத்த முடியும்.



இந்தப் பெரும் முயற்சிகளில் உட்படுத்தப்பட்ட ஒழுங்கு வழக்குகள் அல்லது அபாயத்தை எதிர்நோக்கும் இளையோர் ஒழுக்கம் சம்பந்தமான தொகுதிகள், அபாயத்தை எதிர்நோக்கும் இளையோர் திட்டங்களுடன் தொடர்புப் படுத்தப்படும். (தொடர்ந்து காணப்படும் 'அபாய நிலை இளையோர்' கீழ்க்காணும் பகுதியில் இவ்விவரம் விவரிக்கப்பட்டுள்ளது)

ஆவணங்கள் காரணமாகப் பள்ளியில் சேர இயலாமல் சிரமப்படும் மாணவர்களின் சிக்கல்கள் பற்றிய தொகுதிகள் ஆவணமாக்குதல் திட்டத்தோடு தொடர்புப்படுத்தப்படும் ('சமூகத்தில் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல் ' இயலில் கூறப்பட்டுள்ளது)

138 TVET–இல் அடையாளங்காணப்பட்டவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான சிறார்கள் & இளையோர் திட்டங்களில் நுழைவுப் பெற்றவர்கள் பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களின் எண்ணிக்கையில் உட்படுத்தப்படவில்லை.

139 2016/17 அடிப்படைகளுக்கெதிராக அளவிடப்பட்டுள்ளது

## IB40 கல்வி செயல்திறன் முயற்சிகள் (எடுத்துக்காட்டு)

### நோக்கம்

- அடையாளம் காணுதல் மற்றும் சென்றடைதல்
- முன்மாதிரி உட்பட, மாணவர் கற்றல் தேவைகள் மற்றும் ஆர்வம்
- பெற்றோர் ஈடுபாடு அல்லது வீட்டில் கற்றல் சூழல் (குடும்பத்தை மேம்பாடு முயற்சியோடு தொடர்புப்படுத்துதல்)
- IB40 கல்வி தேவைகளில் ஆசிரியர் மற்றும் பள்ளி ஈடுபாடு
- கூடுதல் ஆதரவு எ.கா. பிரத்தியேக வகுப்பு, சிறப்புக் கல்வி
- தொடர்ச்சியான மேம்பாட்டின் அளவீடு மற்றும் சேவை வழங்குநரின் திறன் வளர்த்தல்

### மைல்கற்கள் /இலக்குகள்

| 2016-2017 | 2018-2020 | 2021-2025 |
|---|---|---|
| • தெளிவான வடிவமைப்பு மற்றும் திட்டங்களை ஏற்படுத்துதல்<br>• மாணவர், குடும்பம், பள்ளி மற்றும் ஆசிரியர் அடையாளம் & தர வரையீடு<br>• படிமமுறையில் 25% தரவுத்தள பதிவுகளுக்குச் செயல்படுத்துதல், தாக்கம் அளவீடு<br>• 2016–ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் இனத்திற்குள் மற்றும் இனங்களுக்கிடையிலான கல்வியறிவு, கணக்கறிவு, யூபிஎஸ்ஆர், எஸ்பிஎம் மற்றும் பள்ளி இடைநீக்கம் இடைவெளியை குறைந்தபட்ச 20% வரை குறைத்தல் | • கற்றல் சார்ந்த திட்டங்கள் மறுசீரமைப்பு அல்லது நனிச்சிறந்த நடைமுறைகள் மேற்கொள்தல்<br>• தொடர்ச்சியான சென்றடைதல் மற்றும் தகவல் செறிவூட்டல்<br>• 2016–17 காலத்தைக் காட்டிலும் படிமமுறையில் 60% தரவுத் தள பதிவுகளை அடைதல்<br>• இனத்திற்குள் மற்றும் இனங்களுக்கிடையிலான கல்வியறிவு, கணக்கறிவு, யூபிஎஸ்ஆர், எஸ்பிஎம் மற்றும் பள்ளி இடைநீக்கம் இடைவெளியை குறைந்தபட்ச 50% வரை குறைத்தல் | • கற்றல் சார்ந்த திட்டங்கள் மறுசீரமைப்பு அல்லது சிறந்த நடைமுறைகள் மேற்கொள்தல்<br>• தொடர்ச்சியான சென்றடைதல் மற்றும் தகவல் செறிவூட்டல்<br>• 2018–20 காலத்தைக் காட்டிலும், படிமமுறையில் 100% தரவுத் தள பதிவுகளை அடைதல்<br>• இனத்திற்குள் மற்றும் இனங்களுக்கிடையிலான கல்வியறிவு, கணக்கறிவு, யூபிஎஸ்ஆர், எஸ்பிஎம் மற்றும் பள்ளி இடைநீக்கம் இடைவெளியை குறைந்தபட்ச 100% வரை குறைத்தல் |

### வளங்கள்

| மக்கள் | பங்குதாரர்கள் & பங்காளர்கள் | நிதி |
|---|---|---|
| • துறை நிபுணர்கள், முழுநேர நிர்வாகிகள் மற்றும் ஆலோசகர்கள்<br>• நிர்வாக அதிகாரிகள் & கூறுகளை மேற்பார்வையிடுதல்<br>• ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்புக் குழு (பகிர்வு) | • சேவை வழங்குநர்கள் அல்லது அரசு சாரா அமைப்புகள் (அளவிட உதவுதல்)<br>• கல்வி அமைச்சு, மகளிர் மற்றும் குடும்ப நல மேம்பாட்டு அமைச்சு மற்றும் தொடர்புடைய பிரிவுகள்<br>• கொடையாளர்கள், பொது–தனியார் கூட்டமைப்பாளர்கள் | • 2020 வரை கடமைப்பாட்டுடைய அரசாங்க நிதியுதவி, 2021–2025 நிதி மறு ஆய்வு<br>• கூடுதல் பொது–தனியார் கூட்டமைப்பு ஆதரவு |

### 2. கல்வி தொடர்பான பிரிவுகள், முயற்சிகள் & வரவு செலவு திட்டங்கள் ஆகியவற்றை இந்தியர் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCIC) கீழ் சீரமைத்தல்

IB40 பிரிவினரின் கல்வி செயல்திறன் முயற்சிகளையும் அது தொடர்பான திட்டங்களையும் செயல்படுத்த, PTST மற்றும் SEDIC பிரிவுகளுக்கு தற்போது ஒதுக்கப்பட்டிருக்கும் வளங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, வலுப்படுத்தப்பட வேண்டும். பின்னர், அவை MIB செயலாக்கப் பிரிவில் ஒரு கல்விக் குழுவாக செயல்படும்.[140] இக்கல்விக் குழுவின் முக்கியப் பணி யாதெனின், இந்தியர் மத்தியிலான குறிப்பாக IB40 குடும்பங்களின் கல்வி செயல்திறன் இடைவெளியைக் களைவதாகும்.





### 3. இந்தியர் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு– கல்வி அமைச்சின் CCIC–MOE கூட்டுப் பணிக்குழு அமைத்தல்

கல்வி அமைச்சின் மூத்த அதிகாரிகள், MIB செயற்குழுவினர், பிற அரசாங்கம் சார்ந்த அதிகாரிகள், இந்தியர் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCIC) கீழு உள்ள பிரிவுகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு, இணை பணிப்படை ஒன்று அமைக்க முன்மொழியப்படுகிறது. இந்த இணை பணிப்படையானது இந்தியர்களின் சிக்கல்களைத் தீர்க்கவும், அவர்களின் கல்வியறிவு அடைவு நிலை தொடர்பான முன்னேற்றக் குறியீடுகளைக் கண்காணிக்கவும், தொடர்ந்து சந்திப்புக் கூட்டங்கள் நடத்த வேண்டும்.

இந்த இணை பணிபடையானது, தேசியத் தொடக்கப் பள்ளி மாணவர்கள், தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் செயல்திறன் குறைந்த B40 குழந்தைகள், அதிலும் குறிப்பாக IB40 குழந்தைகளின் தேவைகளையும் அடையாளம் காணும். மேலும், அவ்வாறு அடையாளங் காணப்பட்டவைகளை களையும் வகையில் பயிற்சி வழங்குவதற்கும் தொடர்ந்து துணைச் செய்வதற்கும் பாடத் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். மேலும் இந்த இணை செயலாக்கக் குழு, செயல்திறன் குறைந்த IB40 மாணவர்களின் ஆசிரியர்களுக்கு உதவும் வகையிலும், மொழி, கலாச்சார நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும் இந்திய ஆசிரியர் உதவியாளர்களையும் மதி உரைஞர்களையும் நியமிக்க வேண்டும்.

140 எம்ஐபி செயலாக்கப் பிரிவுகளைப் பற்றியக் கூடுதல் தகவல் செயலாக்க இயலில் வழங்கப்பட்டுள்ளது

## ஆ . மழலையர் கல்வி

தொடக்கக் கல்வியும் குழந்தை பராமரிப்பும் ஒரு குழந்தை, கல்வியில் வெற்றி பெற்று சிறந்தோங்க மிகவும் இன்றியமையாதவை என்று பல ஆய்வுகள் தெளிவுப்படுத்துகின்றன. இக்குழந்தைகள் மொழி, எழுத்தறிவு, தொடக்கக் கணிதத் திறன்; சமூக, உணர்ச்சி ஆயத்த நிலை; மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நிலைத்திருக்கும் உளப்பாங்கு தொடக்கப் பள்ளி வகுப்புகளில் நீடித்த ஈடுபாடு ஆகிய நேர்மறை விளைவுகளைப் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது.[141] உயர் தரமான தொடக்கக் கல்வி, குறைந்த வருமானப் பின்னணியிலிருந்து வரும் குழந்தைகளின் ஏற்றத் தாழ்வுகளைச் சமநிலைப்படுத்த உதவ முடியும். எடுத்துக்காட்டிற்கு, IB40 குழந்தைகள், தொடக்கக் கல்வி இல்லாமல் தேசியப் பள்ளியில் நுழையும் போது, மொழி பிரச்சினைகள் காரணமாக அவர்கள் இரட்டிப்புப் பாதிப்புகளுக்கு ஆளாகிறார்கள் என்று கூறப்படுகிறது.[142]

5–6 வயதுடைய இந்திய குழந்தைகளின் மழலையர் பள்ளி சேர்க்கை ஏறக்குறைய 55 விழுக்காடு இருக்கும் நிலையில்,[143] மலேசியக் கல்வி பெருந்திட்டத்தில் கூறப்பட்டுள்ளதுபடி 100 விழுக்காடு இலக்கை அடைவதற்கு ஒரு பெரிய இடைவெளி உள்ளது.[144]

மழலையர் பள்ளியில் சேர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலோனோர் தனியாரால் நடத்தப்படும் மழலையர் பள்ளிகளில் அல்லது ABIM, KEMAS[145] போன்ற பல்வேறு அமைப்புகளால் நடத்தப்படும் மழலையர் பள்ளிகளில் சேர்க்கப்பட்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும், மழலையர் பள்ளிக்குச் செல்ல தகுதியான இந்திய குழந்தைகளுள் 10 விழுக்காடு மட்டுமே கல்வி அமைச்சு நடத்தும் மழலையர் பள்ளியில் இணைந்துள்ளனர்.[146] ஒட்டு மொத்தமாக பார்க்கும்போது, கல்வி அமைச்சு ஏற்று நடத்தும் மழலையர் பள்ளிகளின் மொத்த பதிவில் இந்தியக் குழந்தைகள் 3 விழுக்காடு மட்டுமே என்ற நிலையில், சீனர்கள் 5 விழுக்காடாகவும் பூமிபுத்ராக்கள் 92 விழுக்காடாகவும் இருக்கின்றனர்.[147]






லாடாங் சாகா தமிழ்ப்பள்ளி, நெகிரி செம்பிலான்
புதிய பள்ளிக் கட்டிடம் மற்றும் கணினி அறைக்கான சிறப்பு ஊக்குவிப்பு நிதி ரி.ம.4.33 மில்லியன், 2016இல் பூர்த்தியடைந்தது

141 Yoshikawa, H; Weiland, C; Brooks-Gunn, J; Burchinal, MR; Espinosa, LM; Gormley, WT;... Zaslow, MJ (2013) Investing in Our Future: The Evidence Base On Preschool Education Ann Arbor: SRCD

142 பிடிஎஸ்டி & செடிக்–உடன் நேர்க்காணல்

143 தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிற்கான எதிர்காலத் திட்ட வரைவு (பிடிஎஸ்டி) 2014.

144 மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013–2025

145 புறநகர், வட்டார மேம்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் சமூக மேம்பாட்டுத் துறை, புறநகரிலுள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது.

146 “இனரீதியிலான கல்வியில் சேர்க்கை மற்றும் அடைவுநிலை தரவுகள்”, மலேசிய கல்வி அமைச்சு

147 “இனரீதியிலான கல்வியில் சேர்க்கை மற்றும் அடைவுநிலை தரவுகள்”, மலேசிய கல்வி அமைச்சு

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

இந்தப் புள்ளி விவரங்களின் மூலம், IB40 குடும்பங்களிலிருந்து ஏறத்தாழ 26,000 இந்திய மாணவர்கள் (5, 6 வயதுடையவர்கள்) மழலையர் பள்ளிகளில் படிப்பது தெரிய வருகிறது. இந்த எண்ணிக்கை மழலையர் பள்ளியில் சேரும் 55 விழுக்காட்டு இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிகவும் குறைவானதே என்று அனுமானிக்க முடிகிறது. மலிவானதும் மானியம் கிடைக்கப் பெறும் மழலையர் பள்ளி அருகில் இருக்கக்கூடும் என்று வைத்துக் கொண்டால், பல IB40 பெற்றோர்கள், அருகிலுள்ள மழலையர் பள்ளிக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்ப வழிவகை இல்லாமல் இருந்திருக்கக்கூடும். புள்ளி விவரப்படி, கல்வி அமைச்சு, பிற அரசாங்க முகவர்களால் இயக்கப்படும் மழலையர் பள்ளிகளில்[148] கல்விக் கட்டணம் மாதத்திற்கு ரி.ம.10 முதல் ரி.ம.180 வரை இருக்கும்.[149] இதைத் தவிர, ஆண்டுக்கு ஒரு முறை பதிவுக் கட்டணமாக ரி.ம.100 முதல் ரி.ம.900 வரை செலுத்த வேண்டியதாயிருக்கும். தனியார் மழலையர்பள்ளிகள் மாதத்திற்கு ரி.ம.10 முதல் ரி.ம.1000 வரை அல்லது அதற்கும் அதிகமான கட்டணத்தை வசூலிக்கக்கூடும்.[150]

கல்விக் கட்டணத்தைத் தவிர்த்து, போக்குவரத்துச் செலவு, பாதுகாப்புச் சிக்கல் மேலும் பிற காரணங்களும் IB40 பெற்றோர் அவர்களது குழந்தைகளை மழலையர் பள்ளியில் சேர்ப்பதற்குத் தடையாக உள்ளன. குறிப்பிடத்தக்க விழுக்காட்டு IB40 குடும்பங்கள் மழலையர் பள்ளிச் செலவுகளுக்கான நலனுதவி தொடர்பான திட்டத்தைப் பற்றி அறியாமல் இருப்பதும், அத்திட்டங்களில் பதியாமல் இருப்பதும் இந்த நிலைமையை மேலும் மோசமடையச் செய்கின்றது.

மேற்கூறப்பட்ட சிக்கல்களைத் தவிர்த்து, மழலையர் பள்ளி வசதிகள் இல்லாததும், அனைத்து தேசிய மற்றும் தமிழ்ப்பள்ளிகளிலும் பாலர் பள்ளிகள் அல்லது அதற்கான வசதிகள் இல்லை. கீழ்நிலை குறைந்த வருமானம் பெறும் 40% இந்தியர்கள் வாழும் பகுதிகளில் ஆங்காங்கே சில தனியார் பாலர் பள்ளிகள் இருந்தாலும், பாதுகாப்பு அம்சங்களைக் கருதி, பள்ளி வளாகத்தினுள் அமைந்திருக்கும் பாலர் பள்ளிகளுக்கே பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.[151]




**மாசாய் தமிழ்ப்பள்ளி, ஜொகூர்**
2015இல் பூர்த்தியடைந்த பள்ளியின் புதிய கட்டிடத்திற்காக, பிரதமரிடமிருந்து ரி.ம.2 மில்லியன் சிறப்பு நிதி பெற்றது

148 KEMAS, PERPADUAN, PASTI, JPNIN உட்பட இதர பாலர்பள்ளிகளையும் அரசாங்கத்துறைகள் நடத்தி வருகின்றன.

149 "Tadika Pilihan Untuk Anak" (2015, November 13) irrayyan.com. Accessed at: http://www.irrayyan.com/2015/11/tadika-pilihan-untuk-anak.html#

150 Mustafa, Lily Muliana & Azman, Mohamed Nor Azhari (2013) "Preschool Education in Malaysia: Emerging Trends and Implications for the Future" American Journal of Economics 3(6), pp. 347-351

151 பேராசிரியர் டத்தோ டாக்டர் ராஜேந்திரனுடன் நேர்க்காணல் (பிடிஎஸ்டி & செடிக்)



பாயா பெசார் தமிழ்ப்பள்ளி, கெடா
புதிய பள்ளியை நிறுவ அரசாங்கம் ரி.ம.9 மில்லியன் ஒதுக்கியது

தமிழ்ப்பள்ளிகளுக்குப் பயிற்சிப் பெற்ற மழலையர் பள்ளி ஆசிரியர்களைத் தயார்படுத்தி அனுப்புதல், ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்து வருகிறது.[152] 2016 –இல், சுமார் 60 விழுக்காடு தமிழ்ப்பள்ளி மழலையர் பள்ளி ஆசிரியர்கள் பட்டம் அல்லது அதற்கு இணையானத் தகுதிகளைப் பெற்றிருந்தனர். இவ்வாறு தமிழ் அல்லது பிற இந்திய மொழிகளில் கற்றுகொடுக்க நிபுணத்துவம் பெற்றிருப்பவர்கள், மாணவர்களின் தாய்மொழிக்கும், மலாய் மொழி, ஆங்கில மொழிக்கு மத்தியிலான இடைவெளியைப் போக்குவதற்குரிய தகுதியைக் குறைவாகவே பெற்றுள்ளனர்.[153]

'10–ஆம் 11–ஆம் மலேசியத் திட்டம்', 'MEB' திட்டங்களில் இடம்பெற்றுள்ள 'மழலையர் பள்ளி விரிவாக்கம்' முயற்சியின் கீழ், மழலையர் பள்ளிகளுக்கு மாணவர்கள் எளிதில் செல்வதையும், அவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும் அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அரசு இயக்கும் மழலையர் பள்ளி வகுப்புகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து கிட்டத்தட்ட 43,000 வகுப்புகளாக இருக்கின்றன. தவிர 'தனியார் மழலையர் பள்ளி' தொடங்குவதற்கு அரசு வழங்கிய மானியம் வழியாக மேலும் 1700 வகுப்புகள் தனியார் துறையினால் நடத்தப்பட்டு வருகிறது.[154] ஆசிரியர் பயிற்சி வழங்கப்பட்டும் மேற்பார்வை முறைமை நிறுவப்பட்டும் இம்மழலையர் பள்ளிகள் வலிமைப் படுத்தப்பட்டுள்ளன. மேலும், குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு உதவுவதற்கு மாதத்திற்கு ரி.ம.150 வரையிலான மழலையர் பள்ளி கட்டணம் தகுதி பெற்ற குடும்பங்களுக்கு வழங்கப்படுகிறது.[155]

தமிழ்ப்பள்ளிகளில் மழலையர் பள்ளி வகுப்புகள் அமைப்பதற்கும் மழலையர் பள்ளி ஆசிரியர்களைப் பொருத்தமான பயிற்சி திட்டங்களுக்கு அனுப்புவதற்கும் அரசு சாரா அமைப்புகளுக்கு 'செடிக்' தேவையான மானியங்கள் வழங்குகின்றது. இதன் மூலம் செடிக், அரசு முயற்சிகளுக்குத் துணைச்செய்து வருகிறது. இம்முயற்சிகள், விரைவாக மழலையர் பள்ளி நிறுவுதலுக்கு வித்திட்டாலும், B40 குடும்பங்களைச் சார்ந்த 7,550 குழந்தைகள் மட்டுமே இம்முயற்சியினால் பயனடைகின்றனர்.

கீழ்நிலை வருமானம் பெரும் 40% இந்தியக் குடும்பங்கள் அதிகமாக வாழும் பகுதிகளிலுள்ள தேசியப் பள்ளிகள் அல்லது தமிழ்ப்பள்ளிகள் என்று பொருட்படுத்தாது, அப்பள்ளிகளில் போதுமான மழலையர் பள்ளி வகுப்புகளை அமைப்பதை உறுதிப் படுத்த, கல்வி அமைச்சு, தமிழ்ப்பள்ளி மேம்பாடுத் திட்ட வரைவுப் பிரிவு, இந்திய சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டப் பிரிவுகளுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது. மேலும் 'செடிக்' உதவியுடன் தமிழ்ப்பள்ளிகளில் மழலையர் பள்ளிகள் முறைப்படி அங்கீகரிக்கப்பட்டு, கல்வி அமைச்சின் ஒப்புதல் பெற்ற மழலையர் பள்ளிகள் வரிசையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். தொடர்ந்து, கல்வி அமைச்சின் மேற்பார்வை, முறையான ஆசிரியர் பணித்திற மேம்பாடு ஆகிவற்றை உறுதி செய்வதற்கும் மேற்கூறப்பட்ட அரசு நிறுவனங்களுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

இதன் தொடர்பாகத் தமிழ்ப்பள்ளியில் பயிற்சி பெற்ற மழலையர் பள்ளி ஆசிரியர்கள் நியமித்தலை அதிகரிக்க வேண்டும். மேலும், தேசியப்பள்ளிகளிலும் அரசு நடத்தும் பிற மழலையர் பள்ளி வகுப்புகளிலும் இந்திய மழலையர் பள்ளி ஆசிரியர்கள் நியமித்தலை அதிகரிக்க தொடர்ந்து முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இறுதியாக, அனைத்துத் தகுதியான B40 குடும்பங்களிலுள்ள குழந்தைகள் மழலையர் பள்ளிகளில் சேர்வதற்கும் மழலையர் பள்ளிக்குச் செல்வதற்கும் நிதி உதவி ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். மேலும், இம்மாதிரியான உதவிகள் குறிப்பிட்ட பிரிவினர்க்குச் சென்றடைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

151 பேராசிரியர் டத்தோ டாக்டர் ராஜேந்திரனுடன் நேர்க்காணல் (பிடிஎஸ்டி & செடிக்)

152 பேராசிரியர் டத்தோ டாக்டர் ராஜேந்திரனுடன் நேர்க்காணல் (பிடிஎஸ்டி & செடிக்)

153 Rajendran, NS (2016) "Status of Tamil School Education in Malaysia and Future Prospects" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: KITA, pp. 387-407

154 "மலேசிய கல்விப் பெருந்திட்டம் ஆண்டறிக்கை 2014" மலேசிய கல்வி அமைச்சு

155 "சிறப்புக் கல்வி மையம் அல்லது தனியார் பாலர்பள்ளி மாணவர் நுழைவுக் கட்டண உதவிநிதி விண்ணப்பத்திற்கான வழிகாட்டியின் சுருக்கம் (மாற்றியமைக்கப்பட்டது 2015)", மலேசிய கல்வி அமைச்சு

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

100 விழுக்காடு மழலையர் பள்ளி சேர்க்கை என்னும் அரசு இலக்கிற்கேற்ப மழலையர் பள்ளி செல்லும் வயதை அடைந்த அனைத்து இந்திய குழந்தைகளும் மழலையர் கல்வி பெறுவதை உறுதி செய்ய இந்தப் பெருந்திட்டம் பின்வரும் இலக்குகளை அடையும் நோக்கத்தைக் கொண்டுள்ளது:

- வருமானம் மற்றும் ஆவணங்கள் நிலையை பொருட்படுத்தாமல் 4 முதல் 6 வரையிலான இந்திய குழந்தைகளுக்கு, குழந்தைப் பராமரிப்பும் மழலையர் கல்வியும் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.[156]
- MIB தொடங்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் மழலையர் பள்ளிக்கு ஏற்புடையதாக அடையாளங் காணப்படும் தமிழ்ப்பள்ளிகளில், போதுமான மழலையர் பள்ளி வகுப்புகள் நிறுவப்படுதலை உறுதி செய்தல்
- இந்தியர் மழலையர் பள்ளிகளில் எ.கா. தேசிய வகை தொடக்கத் தமிழ்ப்பள்ளிகள், ஆலயங்கள், தனியார் இடங்களில் போதுமான மழலையர் பள்ளித் தகுதிகளையும் பயிற்சியையும் பெற்ற ஆசிரியர்களைப் பணிக்கு அமர்த்துதலை உறுதி செய்தல்

இந்த இலக்குகளை அடைய, இந்தப் பெருந்திட்டம் கீழ்கண்டவற்றை அமல்படுத்தக் குறிக்கோள் கொண்டுள்ளது:



### 1. இந்தியர் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு – கல்வி அமைச்சின் CCIC–MOE கூட்டுப் பணிக்குழு அமைத்தல் (பிரிவு அ–இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

மழலையர் கல்வியைப் பொறுத்தவரையில், கூட்டு பணிப்படையானது, தேசியப் பள்ளிகளிலும், தமிழ்ப்பள்ளிகளிலும் மழலையர் பள்ளிகள், வகுப்புகள் அமைப்பதற்கும் அரசு அங்கீகாரம் கிடைப்பதற்கும் உதவி புரியும் அரசு மேற்பார்வைக்கு உட்படாத அரசு சாரா அமைப்புகள் நடத்தும் மழலையர் பள்ளிகளில், ஆசிரியர் பயிற்சி போன்ற பிற செயலாக்க தொடர்பானச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதில் உதவிகள் வழங்கும்.

மலேசியக் கல்விப் பெருந்திட்டத்திற்கேற்ப 2020 ஆம் ஆண்டு 100 விழுக்காடு மழலையர் பள்ளிச் சேர்க்கை இலக்கை மலேசிய இந்தியர் பெருந்திட்டம் கொண்டுள்ளது பாராட்டுக்குறியதாகும் அதிலும் குறிப்பாக IB40 குழந்தைகளையும் இதில் உட்படுத்தியிருப்பது உயரிய இலட்சிய நோக்கமாகும். இந்த இலக்கினை அடைவதற்கு இணை செயலாக்கக் குழு உறுப்பினர்கள் மத்தியில் வலுவான ஒத்துழைப்பும், போதுமான வளங்கள், தனியார் துறை பங்காளித்துவ ஆதரவு ஆகியவை இருக்க வேண்டும்.

156 2020க்குள் 100% பாலர் பள்ளி மாணவர்கள் நுழைவை உறுதிப்படுத்தும் மலேசியக் கல்விப் பெருந்திட்ட இலக்கிற்கேற்ப அமைந்துள்ளது



பெர்சியாரான் ராஜா மூடா மூசா தமிழ்ப்பள்ளி, சிலாங்கூர்
5 மாடி புதிய கட்டிடத்திற்காக பிரதமரிடமிருந்து ரி.ம.1.2 மில்லியன் சிறப்பு நிதி பெற்றது

## 2. கல்வி தொடர்பான பிரிவுகள், முயற்சிகள் & வரவு செலவு திட்டங்கள் ஆகியவற்றை இந்தியர் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (CCIC) கீழ் சீரமைத்தல் (அ. பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

மழலையர் கல்வி நிலையை பொறுத்தமட்டில், மலேசிய இந்தியப் பெருந்திட்டத்திற்கு உட்பட்ட நெறிப்படுத்தப்பட்ட ‘கல்விக் குழு’ அரசாங்கத்தின் பரந்த முயற்சிகளுக்குத் துணைச் சேர்க்கும் வகையில் தமிழ்ப்பள்ளிகளிலும் பொருத்தமான சமூக இடங்களிலும் மழலையர் பள்ளி வகுப்புகளை அமைக்க வேண்டும். மேலும், தமிழ்ப்பள்ளி மழலையர் வகுப்பு ஆசிரியர்களுக்கு மத்தியிலான தகுதி இடைவெளியையும் களைய முன்வர வேண்டும். முன்னர் இந்தியர் விவகாரங்களுக்கான சிறப்பு அமைச்சரவைக் குழுவின் கீழ் தனியாகச் செயல் பட்டுக்கொண்டிருந்த பிரிவுகளின் வரவு செலவு ஒதுக்கீடு ஒருங்கிணைக்கப்பட்டு மறுசீரமைப்புச் செய்யப்பட வேண்டும். பொது–தனியார் பங்காளித்துவம் வழியாக கூடுதல் நிதியுதவியைப் பெரும் வழி வகைகளும் ஆராயப்பட வேண்டும்.

கல்வி குழுவானது, மழலையர் கல்விக்கும் அதன் தொடர்பான செலவுகளுக்கும் உதவி பெறும் பொருட்டு, IB40 குடும்பங்களை அடையாளம் கண்டு கல்வி அமைச்சு, ‘இ–காசே’ (eKasih), மக்கள் நலத் துறை ஆகியவைகளில் பதிவதற்கு உதவி புரிய வேண்டும். மேலும் இக்குழு கல்வி குழுவானது, தற்காலிக அரசாங்கத் திட்டங்களுக்குத் துணை செய்யும் வகையில், குறிப்பிட்ட உதவி, எடுத்துக் காட்டுக்கு, அரசு நடத்தும் அல்லது அரசு மானியம் பெற்று நடத்தப்படும் மழலையர் பள்ளி இல்லாத இடங்களில் அமைந்துள்ள தனியார் மழலையர் பள்ளிகளில் பயில்வதற்கான ‘கட்டண உறுதிச் சீட்டை’ (voucher) வழங்கலாம்.



## இ. ஆரம்பத் தமிழ்ப்பள்ளிகள்

குறிப்புகளின்படி, ஆங்கிலத் தோட்ட உரிமையாளர்கள் தோட்டத்தில் பணிபுரியும் தமிழ்த் தொழிலாளர் குழந்தைகளின் அடிப்படை கல்வித் தேவையைப் பூர்த்திச் செய்வதற்காகவே மலேசியாவில் தமிழ்ப்பள்ளிகளை நிறுவினர். இப்பள்ளிகள் வெறும் அடிப்படை வசதிகளை மட்டுமே கொண்டிருந்ததோடு தமிழ் படித்த தோட்ட குடிமக்களில் ஒருவரை அல்லது இந்தியாவிலிருந்து வருவித்து வேலைக்கு அமர்த்தப்பட்ட ஆசிரியர்களையோ கொண்டு நடத்தப்பட்டு வந்துள்ளது.[157] இன்று, குறிப்பாக B40 மக்களிடையே தமிழ்மொழியையும் பாரம்பரிய கலாசாரத்தையும், பாதுகாக்கும் முக்கியமான கல்வி நிறுவனமாகத் தொடக்கத் தமிழ்ப்பள்ளிகள் கருதப்படுகின்றன. B40 மக்களிடையே பெரிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வின்படி, 79 விழுக்காடு மக்கள் பிற வகை பள்ளிகளைக் காட்டிலும் தமிழ்ப்பள்ளிகளையே அதிகம் விரும்புகின்றனர். இதற்கு, பெரும்பான்மையோர் கலாசாரத்தையும் மொழியையுமே காரணங்களாக மேற்கோள் காட்டியுள்ளனர்.[158] தமிழ்ப்பள்ளிகளில் மலாய் மொழி, ஆங்கில மொழி பாடங்கள் தவிர்த்து ஏனைய பாடங்கள் அனைத்தும் தமிழ்மொழியையே தொடர்பு மொழியாகத் தொடர்ந்து பயன்படுத்தி வந்துள்ளது.



ரீஜெண்ட் தமிழ்ப்பள்ளி, நெகிரி செம்பிலான்
புதிய பள்ளிக் கட்டிடம் மற்றும் திடலுக்கான சிறப்பு ஊக்குவிப்பு நிதி ரி.ம.8.55 மில்லியன்

2014 வரையில் அரசாங்கத்திடமிருந்து முழு உதவி பெறும் தமிழ்ப்பள்ளிகள் 155 ஆகவும் அரசாங்கத்திடமிருந்து பகுதி உதவி பெறும் தமிழ்ப்பள்ளிகள் 368 ஆகவும் இருந்து வருகின்றன.[159] 70 விழுக்காட்டுக்கும் மேலான தமிழ்ப்பள்ளிகள் கிராமப்புற இடங்களில் அமைந்துள்ளன.[160] நகர்ப்புற மீள்குடியேற்றம், தோட்டப்புறங்களிலிருந்து அதிக எண்ணிக்கையிலான புதிய தலைமுறையினர் வெளியேற்றம் ஆகியவற்றின் காரணமாகத் தமிழ்ப்பள்ளிகளுக்கான தேவை, அதிலும் குறிப்பாக இந்திய குடும்பங்கள் அதிக அளவில் வசிக்கக்கூடிய புறநகர் பகுதிகளில், அதிகரித்துள்ளன.

ஒப்பீட்டளவில் பார்க்கும்போது 2015–இல் தமிழ்ப்பள்ளிகளின் மதிப்பு மக்களிடையே அதிகரித்துள்ளது என்று துணிந்து கூற முடியும். 2000–இல் தமிழ்ப்பள்ளிக்குச் சென்ற 47 விழுக்காடு மாணவர்களோடு ஒப்பிடும் போது, 2015–இல் தொடக்கப்பள்ளிக்குச் சென்ற இந்தியச் சிறார்களுள் (85,474 மாணவர்கள்) 55 விழுக்காடு மாணவர்கள் தமிழ்ப்பள்ளிக்குச் சென்றுள்ளனர்.[161]

157 Moorthy, Ravichandran (2016) "Ethnic Indians in Malaysia: History and Issues of Development" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: KITA, pp. 39-56.

158 ஜூலை முதல் செப்டம்பர் 2016 வரை எம்ஜபி செயலகம் மேற்கொண்ட, 40% கீழ்நிலை வருமானம் பெறும் 2,037 மலேசிய இந்தியர்களுடனான நேர்முக ஆய்வு

159 பகுதி உதவி பெறும் தமிழ்ப்பள்ளிகள், வேறுபட்ட மூலங்களிலிருந்து மீதமுள்ள நிதியுதவிகளை அரசாங்கத்திடமிருந்து பகுதியாக பெறும் பள்ளிகளாகும், பிடிஎஸ்டி.

160 "மலேசியக் கல்வி புள்ளிவிபரங்கள் 2015", மலேசிய கல்வி அமைச்சு

161 2013–2025 மலேசிய இந்தியர் பெருந்திட்டத்திலிருந்து 2,000 தரவுகள் எடுக்கப்பட்டன. 2015 தரவுகள் மலேசிய தமிழ்ப்பள்ளிகளுக்கான எதிர்கால மேம்பாட்டுத் திட்ட பிரிவிலிருந்து 2014 தரவுகள், கல்வியமைச்சில் பதிவுப்பெற்ற இந்தியக் குழந்தைகளின் நுழைவு புள்ளிவிபரங்களிருந்து எடுக்கப்பட்டதாகும்.



டெங்கிள் தமிழ்ப்பள்ளி, சிலாங்கூர்
பள்ளியின் புதிய கட்டிடம் மற்றும் அறிவியல் அறைக்காக, பிரதமரிடமிருந்து ரி.ம.330,000 சிறப்பு நிதி பெற்றது

தேசிய சராசரிக்குக் கீழ் இவர்களது அடைவுநிலை இருந்த போதிலும் பல வருடங்களுக்கு முந்தையவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது தமிழ்ப்பள்ளி மாணவர்களின் செயல்திறன், முன்னேற்றத்தையே காட்டுகிறது. 2015–இல், 66 விழுக்காடான[162] தேசிய சராசரி புள்ளியோடு ஒப்பிடுகையில், SJKT மாணவர்களுள் 47 விழுக்காடு மட்டுமே UPSR தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர்.[163] எனினும், ஒப்பீட்டின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் செயல்திறன், முன்னேற்றம் கண்டுள்ளது – UPSR தேர்வில், தமிழ்ப்பள்ளிகளுக்கும் பிற பள்ளிகளுக்கிடையிலான தேசிய சராசரி புள்ளியின் இடையிலான இடைவெளி, 2010–ஆம் ஆண்டு 0.27 புள்ளியிலிருந்து 2014–ஆம் ஆண்டு 0.07 புள்ளிக்குக் குறைந்துள்ளது. இது நல்லதொரு முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.எனினும் இந்த இடைவெளி 2015–ஆம் ஆண்டு மீண்டும் 0.25 புள்ளிக்கு உயர்ந்துள்ளது.[164]
(இது தேர்ச்சி முடிவுகளில் பின்னடைவைக் காட்டுகின்றது)



சிம்பாங் லீமா தமிழ்ப்பள்ளி, சிலாங்கூர்
3 நான்கு மாடிக் கட்டிடங்கள் மற்றும் இதர வசதிகளுக்காக, கொமுனிட்டி செஸ்ட் (TCC) ரி.ம.6 மில்லியன் வழங்கியது

162 பிடிஎஸ்டி

163 “தேசிய நிலை மற்றும் இந்தியர்களின் யூபிஎஸ்ஆர் அடைவுநிலை”, மலேசிய கல்வி அமைச்சு

164 தேசிய சராசரி புள்ளிகள் (GPN) குறிப்பிட்ட தேர்வில் நாடுமுழுவதுமுள்ள அனைத்து பள்ளிகளின் மாணவர்கள் அடைந்த சராசரி புள்ளிகளைக் குறிக்கும். (GPN)புள்ளிகள் மிகச்சிறந்த புள்ளிகளைக் குறிக்கும் 1லிருந்து 5 வரை உள்ளது. யூபிஎஸ்ஆர் தேர்வு முஜயில் ஏற்பட்ட மாற்றங்கள், உயர்தர சிந்தனை சார்ந்த கேள்விகளை எதிர்க்கொள்வதில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் தயாரற்ற நிலை மட்டுமின்றி கண்டிப்பான திருத்தல் திட்டம். மூலம்: ஆசிரியர்கள் மற்றும் தேர்வு ஆணைய தலைவர், கல்வியமைச்சுடன் பிடிஎஸ்டியின் கலந்துரையாடல்கள்



கணிதப் பாடத்தில் தொடர்ச்சியாகவே உயர் செயல்திறனைக் காண முடிகிறது. இருப்பினும் அறிவியலிலும் பிற மொழிப் பாடங்களிலும் (தமிழைத் தவிர்த்து), கீழ்க்காணும் அட்டவணையில்[165] உள்ளது போன்ற சீரற்ற செயல்திறன் நிலைமையே காணப்படுகிறது. இப்பாடங்களில் மாணவர்களின் செயல்திறன் குறைவாகவே உள்ளது. மலாய் மொழி தொடர்பு மொழியாக இருக்கும் தேசிய இடைநிலைப் பள்ளிகளுக்கு மாறும் பொழுது இம்மாணவர்கள் பெறும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். இச்சிக்கல்களைத் தற்போது நடப்பிலுள்ள புகுமுக வகுப்புகள் வழி, முழுமையாகத் தீர்க்க முடியாது.



ஒப்பீட்டளவில் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் சரியான செயல்திறன் குறைபாடு இருந்த போதிலும், பிற கல்வி எல்லைகளினூடே நோக்கும்போது தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தடத்தை நோக்கிச் செயலாற்றுவதற்கான குறியீடுகள் தென்படுகின்றன. எடுத்துக்காட்டுக்குப் பாதியில் பள்ளியை விட்டு விலகும் மாணவர்களின் எண்ணிக்கை தேசியப் பள்ளி மாணவர்களைக் காட்டிலும் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளதைத் தமிழ்ப்பள்ளி ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும், தேசியப்பள்ளி இந்திய மாணவர்களைக் காட்டிலும் அதிகத் தமிழ்ப்பள்ளி இந்திய மாணவர்கள், படிவம் 5–ஐ நிறைவு செய்வதும் கண்டறியப் பட்டுள்ளது.[166]

165 யூபிஎஸ்ஆர் சாதனைகள் குறித்த ஆய்வு. மூலம்: பிடிஎஸ்டி மற்றும் தேர்வு கூட்டமைப்பு, கல்வியமைச்சு.

166 26 கலந்துரையாடல்களில் கலந்துக் கொண்ட 323 அரசு சாரா அமைப்புகளின் பிரதிநிதிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற கருத்துகள். மூலம்: பிடிஎஸ்டி அறிக்கை, 2014

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

தமிழ்ப்பள்ளி எதிர்கொள்ளும் மிக முக்கியமான சிக்கல் பலவீனமான உள்கட்டமைப்பு ஆகும். இருப்பினும், கடந்த சில ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பள்ளிகளின் பலவீனமான நிலையை ஒப்புக்கொண்டுள்ள அரசாங்கம், தமிழ்ப்பள்ளிகளிலுள்ள வகுப்பறைகளின் நிலையையும் வசதிகளையும் மேம்படுத்தப் பொறுப்பேற்றுக் கொண்டு, 2009 ஆம் ஆண்டு முதல் ஏறக்குறைய ரி.ம.800 மில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளது.[167] தமிழ்ப்பள்ளிகளின் தொடர் மேம்பாட்டு முயற்சிகளின் செயல்பாட்டை உறுதிப்படுத்த, குறிப்பாக பகுதி உதவி பெறும் பள்ளிகளில், அரசாங்கம் 2012–இல் பிரதமர் துறையின் கீழ் தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டுத் திட்ட வரைவுப் பிரிவை உருவாக்கியுள்ளது.

தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டுத் திட்ட வரைவு உருவாக்கப்பட்டதிலிருந்து ஏறத்தாழ 346 பள்ளிகள் மேம்படுத்தப் பட்டுள்ளன.[168] இருப்பினும், மேலும் 140 பள்ளிகள் இன்னும் பலவீனமான நிலையிலேயே இருப்பதாகக் கணிக்கப் பட்டுள்ளது.[169] தேசிய பாடத்திட்டத்தை முழுமையாக செயல் படுத்துவதற்குத் தேவையான கணினி ஆய்வகத்தை, 40%–க்கும் குறைவான தமிழ்ப்பள்ளிகள் மட்டுமே கொண்டிருக்கின்றன. நிர்வாகச் செயலாற்றல் வேகத்தை அதிகரிப்பதற்கும், அரசு முழு உதவிப் பெறும் தமிழ்ப்பள்ளிகளும் மேம்பாடு உதவிகளைப் பெறுவதை உறுதிப்படுத்தவும், சம்பந்தப்பட்ட அரசு துறைகளுக்கிடையில் நெருங்கிய ஒருங்கிணைப்பும் பொறுப்புணர்வும் தேவைப்படுகிறது. பகுதி அரசு உதவி பெறும் பள்ளிகளில், உள்சார்ந்த அரசியல் அல்லது நிதி தட்டுப்பாடு காரணமாக ஏற்படும் கால தாமதத்தைக் கட்டுப்படுத்த பள்ளி மேலாளர் நிர்வாகம் கூடுதல் பொறுப்பையும் ஒளிவு மறைவின்மையற்ற கொள்கையும் கொண்டு செயல் பட வேண்டும்.

தமிழ்ப்பள்ளிகளில் குறிப்பிட்டு கவனிக்க வேண்டிய இன்னுமொரு சிக்கல் ஆசிரியர் தகுதி ஆற்றலாகும். 45 விழுக்காட்டு தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே இளங்கலை அல்லது அதற்கும் மேலான கல்வித் தகுதியைக் கொண்டுள்ளனர்; மீதமுள்ள பெரும்பான்மையோர் எஸ்.பி.எம். சான்றிதழையே உயர் தகுதியாகக் கொண்டுள்ளனர்.[170] முறையான தகுதியைத் தவிர்த்து, ஆசிரியர்களிடையே உள்ள மென்திறன் குறைபாடும் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு உள்ளதாகக் களப் பணியாளர்களால் கண்டறிந்துள்ளனர். இதனால், இவர்களுக்குச் செயல்திறன் குரைபாடுள்ள மாணவர்களையும் சவால்மிக்க மாணவர்களையும் கையாளும் திறன் இன்மை இருப்பதை உணர முடிகிறது. (இருப்பினும் இது தமிழ்ப்பள்ளி மட்டுமே உள்ள சிக்கல் அன்று) கருத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு சிக்கல் யாதெனின், மலாய், ஆங்கில மொழிகளை நன்கு கற்பிப்பதற்குச் சரளமாகத் தமிழ் பேசும் ஆசிரியர்களின் பற்றாக்குறையாகும்இம்மாதிரியான ஆசிரியர்களே தமிழ்ப்பள்ளிகளிலுள்ள மொழிகளுக்கிடையிலான மொழிபெயர்ப்பு கருத்துணர்தல் ஆகியவற்றின் இடைவெளியை நிவர்த்தி செய்ய முடியும்.[171]



### தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் கல்வித் தகுதி




167 பிடிஎஸ்டி

168 பிடிஎஸ்டி

169 "மலேசிய இந்தியர்களும் புதிய பொருளாதார மாதிரியும்", இன ஆய்வுக் கழகம் (KITA), மலேசிய தேசியப் பல்கலைக்கழகம் (UKM)

170 பிடிஎஸ்டி

171 தமிழ்ப்பள்ளிகளில் 585 மலாய் போதனை ஆசிரியர்களும் 374 ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. மூலம்: பிடிஎஸ்டி அறிக்கை, 2014



தேசியக் கல்வி பெருந்திட்டத்தின் செயல்பாட்டோடு ஒத்திருக்கும் வண்ணம், ஆசிரியர்களுக்குத் தொடர் தொழில்முறை முன்னேற்றத் திட்டம் ஒன்றை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்களில் ஆசிரியர்களின் பயிற்சியைத் துரிதப்படுத்தவும், கல்வி அமைச்சுடன் இணைந்து மொழி ஆசிரியர்கள் அல்லாத பிற ஆசிரியர்களைப் பல்துறை ஆசிரியர்களாக ("Guru Opsyen") மாற்றவும், பயிற்சி அளிக்கவும் மறுபணியமர்வு செய்யவும், தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாடுத் திட்ட வரைவுப் பிரிவும் இந்திய சமூகப் பொருளாதார மேம்பாடுத் திட்டப் பிரிவும் துணையாக இருந்துள்ளன. குறிப்பிட்ட பாடங்களில் காணப்படும் பற்றாக்குறையைத் தவிர்க்க இம்மாதிரியான பயிற்சிகள் தொடரப்பட்டும் துரிதப்படுத்தப் படவும் வேண்டும். மேலும் IB40 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது போல, தமிழ்ப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் உட்பட்ட வசதியற்ற வீடுகளிலிருந்து வரும் செயல்திறன் குறைபாடு உள்ள சிறார்களின் தேவையை அறிந்து, அவர்களுக்கு உதவுவதற்கு பள்ளிகளும் ஆசிரியர்களும் தேவையான பாடத் துணைப் பொருள்களையும், தகவல்களையும், பயிற்சிகளையும் பெற்றிருக்க வேண்டும்.

மலாய் மொழி தொடர்பு மொழியாய் உள்ள இடைநிலைப் பள்ளிச் சூழலை முதன்மைப் படுத்தி, அதனை எதிர்கொள்வதற்குப் போதுமான தயார் நிலையில் இல்லாததும் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் வேறொரு சிக்கலாகும். மலாய் மொழியைப் போதுமான அளவு கற்றுணராத மாணவர்களுக்குப் பாடங்களைக் கிரகித்துக் கொள்வதில் மட்டுமின்றி, பிற இன மாணவர்களுடன் பொதுவில் தொடர்பு கொள்வதற்கான நம்பிக்கையும் இல்லாதிருப்பர்.[172]

இது போன்ற மாணவர்களுக்கு உதவுதற்குத் தொடக்கப் பள்ளியில் 4 முதல் 6 வரையிலான வகுப்புகளிலுள்ள பின் தங்கிய மாணவர்களுக்குத் தீவிர ஆதரவு அளிக்கும் வகையில், பொதுவான ஒரு மலாய் மொழி பாடத் திட்டத்தை அரசு (MEB 2013–2025 வழி) அறிமுகப் படுத்தியுள்ளது. இம்மாணவர்களுக்குத் தீர்வாக, பள்ளி நேரம் முடிந்த பின்னர் சிறப்பு மலாய் மொழி வகுப்புகள் நடைபெறும். ஆங்கில மொழி அறிவாற்றலை இன்னும் மேம்படுத்த, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணித (STEM) ஆகிய பாடங்களைக் கற்பிக்க இரட்டை மொழித் திட்டத்தை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.[173] இந்த முயற்சிகளுக்கு உதவும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மலாய் மொழி, ஆங்கில மொழிகளில் முழு அளவிலான முகாம்களை நடத்துவதற்கு செடிக் நிதியுதவி வழங்கியுள்ளது. தேர்வுகளில் அதிகம் புள்ளிகளை பெறுவதை மட்டுமே கருத்தில் கொள்ளாமல், உண்மையாகவே மொழி பயன்பாடு கைவர பெற்றிருப்பதற்கு இம்முயற்சிகள் மேலும் தொடரப்படவும் மெருகேற்றப்படவும் வேண்டும்.



தகவல், தொலைத் தொடர்பு தொழில்நுட்ப (ICT) கல்வியறிவானது, அறிவு வளத்தைத் உருவாக்கவும், தமிழ்ப்பள்ளி மாணவர்கள் இத்துறையில் பின் தங்கி விடாமல் இருப்பதை உறுதிப்படுத்த முக்கியமான ஒன்றாகும். தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே தகவல் தொழிற்நுட்பத்தின் (ICT) கல்வியறிவை மேம்படுத்த உருவாக்கப்பட்ட 'தித்தியான் டிஜிட்டல்' (Titian Digital) திட்டம், ஒரு முன்மாதிரியான முயற்சியாகும்.[174] தற்போது, பகுதி அரசு உதவு பெறும் 58 தமிழ்ப்பள்ளிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வழி சம்பந்தப்பட்ட பள்ளிகளில் பங்கு பெறுவது, தத்தம் பள்ளிகளில் ICT ஆய்வகம் அமைக்கப்பட்டு, மாணவர்களுக்கு ICT கல்வியறிவுக்கான பயிற்சி வழங்கப்படுகின்றது.

இறுதியாக, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எண்ணிக்கையிலான தமிழ்ப்பள்ளிகள் இடப்பெயர்ப்புச் செய்ய வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. இப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை மிகவும் குறைவாகவும், புதிய மாணவர் பதிவும் முற்றாக இல்லாத நிலையிலும் உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம், தோட்டப் புறங்களிலும் கிராமப் புறங்களிலும் வாழ்ந்த இந்தியர்கள் இன்று தொழில் வாய்ப்புகள் கருதி பட்டணப்புறங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளனர். இதனால் தோட்டம், கிராமப் புறத் தமிழ்ப்பள்ளி மிகக் குறைந்த மாணவர்களே மிஞ்சியுள்ளனர். மலேசியாவில் உள்ள 523 தமிழ்ப்பள்ளிகளில் 322 அல்லது 62 விழுக்காடு பள்ளிகளில் 150–க்கும் குறைவான எண்ணிக்கையைக் கொண்டு மாணவர்கள் உள்ளனர். இவற்றுள் பாதி அல்லது 158 பள்ளிகளிலில் 50–க்கும் குறைவான மாணவர்களே உள்ளனர்.[175]

172 பிடிஎஸ்டி, செடிக் மற்றும் இதர அரசு சாரா அமைப்புகளுடன் நேர்க்காணல்கள்

173 இரு மொழித் திட்டம் தகுதிபெற்ற பள்ளிகளுக்கு STEM பாடங்களை ஆங்கிலத்தில் கற்றுவிக்க விருப்பத்தேர்வை வழங்குகிறது. மூலம்: கல்வியமைச்சு

174 மலேசிய அரசாங்கத்தின் ஆதரவில், மலேசிய சமூகம் & கல்வி அறவாரியத்தின் கூட்டமைப்பில் இந்து இளைஞர் அமைப்பு மேற்கொண்டது

175 பிடிஎஸ்டி

## தொடக்கத் தமிழ்ப்பள்ளிகள், “U-ETS மாணவர்கள் எண்ணிக்கை” அட்டவணை

**மொத்தம் 322 பள்ளிகள்**

| மாணவர்கள் | பள்ளிகள் |
|---|---|
| 101 – 150 மாணவர்கள் | 59 பள்ளிகள் |
| 51 – 100 மாணவர்கள் | 105 பள்ளிகள் |
| 26 – 50 மாணவர்கள் | 84 பள்ளிகள் |
| 11 – 25 மாணவர்கள் | 58 பள்ளிகள் |
| 0 – 10 மாணவர்கள் | 16 பள்ளிகள் |



மாணவர் பதிவு எண்ணிக்கை குறைவாக உள்ள பள்ளிகளில் தரத்தைப் பேணுதல் ஒரு சவாலாக உள்ளது. மேலும், தோட்டப்புறங்களிலும் கிராமப்புறங்களின் உட்புறப்பகுதியில் காணப்படும் சிறிய தமிழ்ப்பள்ளிகளுக்கு மக்களை ஈர்ப்பது, போதிய எண்ணிக்கையிலான உயர் செயல்திறன் கொண்ட ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களைக் கொண்டிருப்பது, விரிவான இணை பாடத்திட்டத்தை வழங்குவது, வசதிகளை மேம்படுத்துவது அல்லது நிலை நிறுத்துவது ஆகியவை மிகச் சிரமமாகும். இது மாணவர்களின் வருகையையும் கல்வியினால் கிடைக்கக்கூடிய பலனையும் பாதிக்கும்.

அதே நேரத்தில், மாணவர் பதிவு குறைவாக உள்ள பள்ளிகளை வேறு இடங்களுக்கு மாற்றுவதோ பள்ளிகளை இணைப்பதோ சவாலும் சிக்கலும் கொண்ட செயலாகும். இடச்சூழல், அதிக தூரம் காரணமாக இடம் பெயர்த்த புதிய மாற்று பள்ளிகளுக்கு போக்குவரத்துச் செலவினங்களை ஏற்கக்கூடிய வலிமை பல குடும்பங்களுக்கு இல்லாமல் இருக்கும். பெரும்பாலான குடும்பங்கள், தத்தம் பிள்ளைகள் வீட்டு அருகிலேயே இருக்க வேண்டும் என்பதற்காக, மாணவர் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், பள்ளிகள் அவர்கள் வசிக்கும் இடங்களில் இருப்பதையே விரும்புவர்.[176]

பதிவு எண்ணிக்கை குறைவாக உள்ள பள்ளிகளை இடம் மாற்றுவதில் சூழலுக்கு ஏற்ற அணுகுமுறை தேவை. இதனை ஏற்கும் விதமாக, சமூகத்தை ஈடுபடுத்தவும் மாணவர் எண்ணிக்கை குறைவாக உள்ள 22 SJKT–க்கள் இட மாற்றத்தை நிர்வகிக்கவும், அரசாங்கம் சாரா அமைப்பிற்கு[177], SEDIC நிதி உதவி வழங்கியுள்ளது. பாதிப்புக்கு உள்ளான குடும்பங்களுடனான விரிவான கலந்துரையாடலையும் கவனமாக தேர்ந்தெடுக்கப் பட்ட நடைமுறைக்கு ஏற்றதான பள்ளிகளின் புதிய இடச்சூழலையும் இந்த முயற்சி உள்ளடக்கி இருக்கும். தொலைவு காரணமாக நடக்கும் இட மாற்றத்தை நிறைவேற்ற வாய்ப்பிருக்கக் கூடிய அதிகமான பள்ளிகளுக்கு இந்த முயற்சியை விரிவு படுத்த வேண்டும். இட மாற்றத்திற்கு வாய்ப்பற்ற பாதிக்கப்பட்ட பள்ளிகளில், MOE வழங்கியுள்ள இணையம் வழியிலான கல்விக்கான தளத்தோடு இணைக்கவும் அதன் உள்ளடக்கத்தை SJKT–க்கு ஏற்றபடி மாற்றவும் அதிகமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.[178]

176 செடிக் மற்றும் பிடிஎஸ்டி–களுடன் நேர்க்காணல்கள்; மலேசிய கல்விப் பெருந்திட்டம் 2013–2025

177 தமிழ்ப்பள்ளி மேம்பாடு மற்றும் முன்னேற்ற அமைப்பு (PPST)

178 மலேசியத் திட்டத்தில், ஆன்லைன் கற்றலை அனைத்துப் பள்ளிகளிலும் அரசாங்கம் வலுப்படுத்த திட்டமிட்டுள்ளது. தோற்றநிலை மற்றும் இடைவினைக் கற்றலை நோக்கி பாலர் முதல் இடைநிலைப்பள்ளி பாடத்திட்டம் வரை டிஜிட்டல் உள்ளடக்க வளர்ச்சித் திட்டம் உருவாக்கப்படும் .

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

மலேசிய இந்திய சமூகத்தினரின் கோரிக்கைக்கு இணங்க, 2012–இல் முழு நிதி ஆதரவு பெறும் 6 கூடுதல் SJKT–க்களை அதிக அளவில் இந்தியர்கள் குடியிருக்கும் பகுதிகளில் நிறுவ அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது. அரசாங்கம், உயர் அளவிலான கற்றலை வலியுறுத்தும் கொள்கைக்கு ஆதரவு அளிக்கும் வேளையில், இதனை, சமூக ஒருங்கிணைப்பு மற்றும் தேசிய அடையாளம் ஆகியவற்றின் நன்மைகளோடு சமச்சீர் ஆக்க வேண்டும். எனவே, இந்த செயல்திட்டம், உள்ளூர் சமூக தேவைக்கான மதிப்பீட்டையும் தேசியப் பள்ளிகளில் தாய்மொழியிலான போதனையை வலிமையாக்குதல் போன்ற மாற்று வழிமுறைகளை சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிய SJKT–க்கான அனுமதியைப் பெறும் சார்பிலேயே தொடர்ந்து இருக்கும்.

SJKT–இல் இருக்கும் செயல்பாடு குறைபாட்டின் இடைவெளியை களைவதோடு மாணவர்கள் மலாய் மொழி தொடர்பு மொழியாக இருக்கும் இடைநிலைப்பள்ளி சூழலுக்குத் தங்களை மாற்றிக் கொள்வதைக் குறித்தும் இந்த செயல்திட்டத்தின் முழு கவனமும் இருக்கும். அதனை ஏற்கும் வகையில் இந்த செயல்திட்டம், SJKT–க்காக கீழ்காணும் இலக்குகளை அடைய நோக்கம் கொண்டுள்ளது:

- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், யு.பி.எஸ்.ஆர் தேர்ச்சி நிலை, எழுத்தறிவு, எண்ணறிவு பாடங்களில் தமிழ்ப்பள்ளிகளுக்கும், சீன மற்றும் மலாய்ப் பள்ளிகளுக்கிடையிலான இடைவெளி முற்றாகக் களைவதை உறுதிப்படுத்த வேண்டும்.
- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், தமிழ்ப்பள்ளிகளின் உள்கட்டமைப்பு, பணியாளர் நியமனம், பள்ளியின் தரத்தை குறிக்கும் இதர முக்கியக் குறியீடுகள் ஆகியவற்றில் குறைந்தபட்சத் தரத்தை அடைவதை உறுதிப்படுத்த
- அனைத்து தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களும், முறையாக வகுக்கப்பட்ட பணித்திற மேம்பாட்டுத் திட்டங்களையும் தெளிவான தொழில் வளர்ச்சி பாதையையும் துணையாகக் கொண்டு அவர்களது பணியில் முன்னேற்றம் காண்பதை உறுதிப்படுத்த வேண்டும்.
- MIB தொடங்கப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் தங்களது மொழித் திறனை மேம்படுத்திக் கொண்டு இடைநிலைப் பள்ளிக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வதையும் புகுமுக வகுப்பை தவிர்ப்பதையும் உறுதிப்படுத்துதல்.

இந்த செயல்திட்டம், இலக்கை வழங்குவதற்கு, கீழ்க்காணும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:



### 1. தமிழ்ப்பள்ளி நடவடிக்கைத் திட்டம்

2014–இல் PTST–இல் பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப்பள்ளி நடவடிக்கை திட்டம், விரிவான அளவீடுகள் கொண்ட தமிழ்ப்பள்ளி வகுப்பறைகள் மற்றும் வசதிகள் மேம்பாடடைதல்; ஆசிரியர்களின் தகுதி மற்றும் திறன் உயர்வடைதல்; மாணவர்கள் முதன்மை நிலைக்கு வருவதற்குத் தயார் செய்தல்; மாணவர் எண்ணிக்கை குறைவான பள்ளிகள் இட மாற்றம் செய்யப்படுதல் அல்லது வலுவூட்டப் படுதல் ஆகியவற்றை உறுதி செய்வதையும் உள்ளடக்கியுள்ளது.

தமிழ்ப்பள்ளி நடவடிக்கை திட்டத்தின் செயலாக்கம், செயல்திட்ட காலம் முழுதும் கண்காணிக்கப்படும்.

# குறிப்பு: தமிழ்ப்பள்ளிகளின் நடவடிக்கைத் திட்டக் கண்ணோட்டம்

| கருப்பொருள் | இலக்குகள் | முக்கிய நடவடிக்கைகள் |
|---|---|---|
| பாலர் பள்ளி | ஒவ்வொரு தமிழ்ப்பள்ளி மாணவருக்கும் பாலர் பள்ளிக்குச் செல்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் | • அனைத்து தமிழ்ப்பள்ளிகளிலும் பாலர் பள்ளியை அமைத்தல்<br>• அனைத்து தமிழ்ப்பள்ளிகளிலும் முழு பாலர் பள்ளி வசதி இருத்தல்<br>• தமிழ்மொழியில் திறன் பெற உதவும் ஆசிரியரைப் பணியமர்த்தல் |
| உள்கட்டமைப்பு | உகந்த கல்விச் சூழலை உருவாக்க அனைத்து தமிழ்ப்பள்ளிகளும் கண்டிப்பாக தேவையான வசதிகளோடு ஆயத்த நிலையில் இருக்க வேண்டும் | • முழு வசதிகளை உறுதிப்படுத்துதல், எ.கா. நூலகம், அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம், இசை அறைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பல தேவையான வசதிகளை விரைவாக சீர்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் |
| ஆசிரியர்கள் | அனைத்து தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களும் தொழில்முறையில் பயிற்சி பெற்றுள்ளதோடு தொடர் தொழில்முறை மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் | • ஆசிரியர்களுக்கு தொழில்முறை பயிற்சிகள் வழங்குவதோடு தொடர் தொழில்முறை மேம்பாட்டை ஊக்கப்படுத்துதல்<br>• தமிழில் பேசக்கூடிய ஆசிரியர்கள் எண்ணிக்கையை உயர்த்துதல் |
| மாணவர்களும் சாதனைகளும் | வாசித்தல், எழுதுதல், கணக்கறிவோடு 21ஆம் நூற்றாண்டுக்குத் தேவையான இதர திறன்களையும் அனைத்து | • சிறப்புத் தீர்வு வகுப்புகள் 4ஆவது வகுப்பில் தொடங்கப்படுவதை உறுதிப்படுத்துதல்<br>• LINUS திட்டத்தில் தமிழ்மொழியைச் சேர்த்தல்<br>• தொழில் முனைவோர் திறனைக் கற்பித்தல் |
| பாடத்திட்டம் | தமிழ்ப்பள்ளி பாடத்திட்டத்தை தேசிய கல்விக் கோட்பாடு, பாடத்திட்டம் & அனைத்துலக கல்வித் தரம் ஆகியவற்றோடு ஒத்திருக்கச் செய்தல் | • ஆக்கத்திறனுடன் போதிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல்<br>• தகுதியான உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமித்தல்<br>• ICT சார்ந்த கல்வியை அதிகரித்தல்<br>• HOTS கற்றலை திட்டமிட்டு செயல்படுத்துதல்<br>• தரமான உள்ளடக்கத்தை வழங்க போதிய கண்காணிப்பு உதவும் பணியாளர்களை வழங்குதல் |
| தலைமைத்துவம் | பள்ளியின் ஒட்டுமொத்த செயல்திறனை வழிநடத்த அனைத்து தமிழ்ப்பள்ளிகளும் உயர் தர தலைமையாசிரியர் மற்றும் ஆதரவளிக்கக்கூடிய தலைமைத்துவ குழுவைப் பெறுதல் | • தலைமைத்துவம், நிர்வாகத்திறன் சமூக கடப்பாடு & நிதி சார்ந்த பயிற்சிகள் ஆகியவற்றில் தலைமையாசிரியர்கள் கலந்துக் கொள்ளுதல்<br>• NPQEL தகுதி கொண்ட தலைமையாசிரியர்கள் |
| பெற்றோர்களும் சமூகமும் | அனைத்து தமிழ்ப்பள்ளி தலைமைத்துவமும் பெற்றோர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம், அரசு சாரா அமைப்பு, பள்ளி வாரியக்குழு, தனியார் துறை போன்றவற்றோடு பயனளிக்கும் கூட்டுறவுக் கொண்டிருத்தல் | • பெற்றோர்களின் பங்கேற்போடு மேம்பாடு மற்றும் கண்காணிப்பு செயற்குழு ஒன்றை நிறுவுதல்<br>• பெற்றோர்கள், அரசு சாரா அமைப்பு மற்றும் கோவில்களோடு சேர்ந்தக் கூட்டுறவு தொடர் பேச்சு வார்த்தை அமர்வுகள் |
| இட மாற்றம் (சமூகப் பங்காளர்களின் சம்மதத்தோடு) | ஒவ்வொரு மலேசிய குழந்தைக்கும் தங்களின் தேர்வுக்கேற்ற கல்வியைப் பெற சமமான உரிமை உண்டு. (குறைந்த மாணவர்கள் எண்ணிக்கையைக் கொண்ட பள்ளிப் பிரச்சினைகள் தவிர) | • தமிழ்ப்பள்ளிகளை இட மாற்றம் செய்தலை கல்வியமைச்சு துரிதப்படுத்த வேண்டும்<br>• அரசாங்க ஆதரவு பெற்ற தமிழ்ப்பள்ளிகளை அரசாங்கத் தமிழ்ப்பள்ளிகளாக மாற்றுதல் |
| சுழல் நிதி & இதர | தமிழ்ப்பள்ளிகளுக்கு நிலையான நிதி வளத்தை மேம்படுத்த பல்வேறு பங்குதாரர்களோடு இணைதல் | • தமிழ்ப்பள்ளிகளுக்கு ஆதரவளிக்க அறக்கட்டளை நிதியை ஏற்படுத்துதல்<br>• தமிழ்ப்பள்ளிகளின் முன்னேற்றத்திற்கு மாநில அரசாங்க சிறப்பு நிதியை நிறுவுதல் |




## 2. இடைவெளியைக் களைவதற்கு உதவ சமூகத்தின் ஈடுபாட்டை உயர்த்துதல்.

சமூகத்தின் நேரடி ஈடுபாடு (பள்ளி நடவடிக்கைகள்) அல்லது நேரடியல்லாத ஈடுபாடு, செயலாக்கத்தைத் துரிதப் படுத்த உதவும். நேரடி ஈடுபாட்டைப் பொருத்த அளவில், இந்த செயல்திட்டம், MIB செயலாக்கப் பிரிவின் நெறிபடுத்தப்பட்ட கல்விக் குழுவின் வரம்பிற்கு உட்பட்ட தமிழ்ப்பள்ளி மேம்பாட்டு ஆலோசனை வாரியத்தை உருவாக்க முன்மொழிகிறது. இவ்வாரியம், தமிழ்ப்பள்ளிகளின் நீண்ட கால முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய திட்டமிடுவதோடு அதற்கு ஆதரவும் அளிக்கும்.

தமிழ்ப்பள்ளி வசதிகளை மேம்படுத்தவும், ஆசிரியர்களின் திறனை உயர்த்தவும், தமிழ்ப்பள்ளி மாணவர்களிடையே மொழி, எண்ணறிவு மற்றும் ICT கல்வித்திறனை மேம்படுத்துவதற்கும், அதிகமான பொது–தனியார் கூட்டுறவு அமைப்பினையும் நிறுவ, இந்தச் செயல்திட்டம் முன்மொழிகிறது. மாணவர் எண்ணிக்கை குறைவாக உள்ள பள்ளிகளையும் உள்ளடக்கிய, இலக்காக கொள்ளப்பட்ட தமிழ்ப்பள்ளிகளில், விரைவான அல்லது பரந்த அளவிலான செயல்திறன் முன்னேற்றத்தைக் கொண்டு வர, மாதிரி அறக்கட்டளை பள்ளியைச்[179] செயல்படுத்துவது குறித்து ஆராய இந்தச் செயல்திட்டம் முன்மொழிகிறது.

நேரடியல்லாத சமூக ஈடுபாட்டைப் பொருத்த வரையில், ஒப்பீட்டளவில் குறைந்தபட்ச தர அளவினைக் கொண்ட பள்ளியின் அனைத்து தரத்திற்கான குறியீடுகளின் வழி, தமிழ்ப்பள்ளியின் செயல்திறனை மதிப்பிடும் புள்ளி அட்டவணை ஒன்றை வெளியிட இந்தச் செயல்திட்டம் முன்மொழிகிறது. பள்ளிகள், தங்களின் மேம்பாட்டுத் திட்டங்கள், பெற்றோர்களை அழைத்தல், உள்ளூர் சமூக பங்கேற்பு மற்றும் பின்னூட்டம் ஆகியவற்றை வெளியிட ஊக்கப்படுத்தப் படலாம்.

179 A Malaysian Trust School exemplar is the partnership between the MOE and Yayasan Amir. Under this arrangement, Yayasan Amir supports MOE in selected areas including pedagogy and performance tracking amongst others

## D. தேசிய ஆரம்ப & இடைநிலைப்பள்ளி இந்திய சிறார்கள் & இளையோர்

38% ஆரம்பப்பள்ளி வயது இந்திய சிறார்கள் தேசிய ஆரம்பப்பள்ளிக்கு செல்லும் அதே வேளையில் ஏறத்தாழ 80% இடைநிலைப்பள்ளி வயதுடைய இந்திய இளையோர் தேசிய இடைநிலைப்பள்ளிக்குச் செல்கின்றனர்.[180] 2015–இன் அனைத்து இந்திய மாணவர்களின் தேர்ச்சி விகித தகவல்களை ஆராயும்போது, UPSR தேர்வில் (54%) தேசிய மாதிரி ஆரம்பித் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சியானது (47 விழுக்காடு), தேசியத் தொடக்கப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சியைக் காட்டிலும் குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக இருப்பதைக் காட்டுகிறது. இருப்பினும், அவர்களது தேர்ச்சி அவ்வளவு சிறப்பாக இல்லையென்றே புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன. இவர்களது, செயல்திறன் இடைநிலைப்பள்ளி நிலையில் ஏற்கனவே 'IB40 மாணவர்கள் மற்றும் இளையோர்' பிரிவில் கூறப்பட்டது போல, 2015–ஆம் ஆண்டு SPM தேர்வில் தேசிய சராசரி விழுக்காட்டோடு (55 விழுக்காடு) ஒப்பிடும்போது வெறும் 44 விழுக்காடு இந்திய மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர். தொடக்கத் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் மலாய் மொழி வழியிலான கல்விச் சூழலுக்கு மாற வேண்டியிருப்பதும் இம்மாதிரியான குறைந்த தேர்ச்சி அடைவு நிலைக்கான காரணமாக அமையலாம். ஆயினும், UPSR தேர்ச்சியோடு ஒப்பிடும்போது SPM தேர்வில் மாணவர்களின் குறைவான அடைவு நிலையின் விளக்கத்தை உணர முடியவில்லை. மேலும், ஒத்த வயதுடைய பிற மாணவர்களுக்குக் கிடைப்பது போன்ற மேல் படிப்பு வாய்ப்புகளுக்கான போதிய ஆதரவும் வழிகாட்டுதலும், SPM தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கும் நிலையையும் அறிய முடிகிறது.[181] (மேலே 'IB40 சிறார்கள் மற்றும் இளையோர்' பிரிவில் கூறப்பட்டுள்ளது.)

குடும்ப பொருளாதார நிலையும் குண்டர் கும்பல் மற்றும் அபாய நிலை இளையோர் (கீழே 'அபாய நிலை இளையோர்' பிரிவில் கூறப்பட்டுள்ளது.) தொடர்புடைய விளைவைத் தவிர்த்து, தேசிய பள்ளிகளில் இந்திய மாணவர்களின் செயல்திறன் குறைபாடு இனங்கள் சார்ந்த சவால்களுக்குக் காரணமாக அமையலாம்.



**38%**
இந்தியக் குழந்தைகள் தேசிய ஆரம்பப் பள்ளிகளில் பயில்கின்றனர்

**80 %**
இளைஞர்கள் தேசிய இடைநிலைப்பள்ளியில் சேர்ந்துள்ளனர்




180 Estimates based on census data and "Enrolment Statistics of Indian Children in MOE-registered Schools 2014" provided by the Ministry of Education.

181 அரசாங்கத் துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பல பங்கேற்பாளர்களுடன் நேர்க்காணல்கள்

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

இனம் தொடர்பான சவால்களில் ஒன்றாக அமைவது பாகுபாடு பார்ப்பதாகும். கல்வித் துறையில் இனம் (பாலினம் உட்பட) அடிப்படையில் பாகுபாடு பார்ப்பது வழக்கமான ஒன்றாகிவிட்டது. பல நாடுகளில் சிறுபான்மை மாணவர்களை ஆசிரியர்கள் நடுநிலையற்ற முறையில் நடத்துவது அடிக்கடி நிகழும் ஒன்றாக ஆய்வுகள் காண்பிக்கின்றன. உயர் பண்பாடுடைய ஆசிரியர்கள் மத்தியிலும் இது காணப்படுகிறது. நடுநிலையற்ற தன்மையானது, பல்வேறு நிலையிலான மாணவர் செயல்திறன் குறித்த எதிர்பார்ப்பு தொடங்கி, செலவழிக்கப்பட்ட நேரம், ஆற்றல் வரை தொடர்ந்து, கடும் கண்டிப்புகள் மற்றும் தண்டனைகள் வரை நீளும்.

தேசியப் பள்ளி வகுப்பறைகளில் இனப் பாகுபாடு இருப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டாலும்,[182] அச்செய்திகள் பொதுவில் வெளிவருவது அரிதாகிறது. இதனாலேயே, இந்தச் சிக்கல் போதிய அளவில் ஆராயப்படாமலும் தீர்க்கப்படாமல் உள்ளது. மேலும், வழங்கப்பட்ட தீர்வுகளும் இனத்தைச் சார்ந்ததாகவோ ஒரே மாதிரியான தீர்வாகவோ அமைந்து விடுகின்றன. எடுத்துக்காட்டாக, இனத்தை மையப்படுத்தும் அமைப்புகளை அதிகமாக கொண்டிருப்பதால் இச்சிக்கலின் முல காரணத்தைக் களைவதில் சிரமம் ஏற்படுகின்றது.கல்வியமைச்சு பாகுபாட்டால் ஏற்படும் சிக்கலைத் தீர்க்க பன்முகத்தன்மையும் ஒற்றுமையும் என்னும் கொள்கையை தொடக்க நடவடிக்கையாக அறிமுகப்படுத்தியது.





பள்ளிகளுக்கு இடையிலான பன்முகத்தன்மை உடன்பாடு, மதிப்பு மற்றும் மேலாண்மை ஆகியவற்றை மதிப்பிட ‘ஒற்றுமைக் குறியீடு’ ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதில் எடுக்கப்பட்ட முன்னோட்ட கணக்கெடுப்பின்படி, ‘பன்முகத்தன்மையை மேலாண்மை செய்வது’ என்பதில் ஆக உயர்ந்த புள்ளியையும் ‘பன்முகத்தன்மைக்கு உடன்படுதல்’ என்பதில் ஆகக்குறைந்த புள்ளிகளையும் ஆசிரியர்கள் பெற்றுள்ளனர். மாணவர்களுக்கு மத்தியிலோ, மிக அதிகமான புள்ளியை ‘பன்முகத்தன்மையை மதித்தல்’ என்பதிலும் ஆகக்குறைந்த புள்ளியை ‘பன்முகத்தன்மைக்கு உடன்படுதல்’[183] என்பதிலும் பெற்றுள்ளனர். உடன்பாட்டுக்கான முன்னேற்றத்தை நோக்கி செல்வதற்குரிய புள்ளிகளுக்குப் பின்னால் இருக்கக்கூடிய இயக்கவியலை புரிந்துகொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது.

இது போன்ற உடன்பாடுகளை தேசிய சிக்கலாக கட்டமைக்கப்பட்டால், இந்தியர்களின் கல்வி நிலையை மேம்படுத்தப்படலாம். கல்வியில் நடுநிலைத்தன்மையை நிலைநிறுத்துவதற்கு இந்தியர்களின் கல்வி நிலையில் மேலோங்க வேண்டிய நிலை மட்டுமின்றி, குறைந்த செயல்திறன் கொண்ட இந்தியர்கள், சமுதாய அளவில் ஒடுக்கப் பட்டிருத்தல் மற்றும் குற்றவியல் ஆகியவற்றின் பொது செலவினங்களைக் குறைத்தலும் இன்றியமையாததாகும். பள்ளிகள், ஆசிரியர்கள், அதிகாரிகள், சமுதாயப் பற்றாளர்கள் ஆகியோரிடையே விழிப்புணர்வையும் உளவியல் புரிந்துணர்வையும் மேம்படுத்த முறையான அணுகுமுறை தேவைப்படுகிறது.[184]

---

182 அரசாங்கத் துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பல பங்கேற்பாளர்களுடன் நேர்க்காணல்கள். Further reference on peer-to-peer racial bias: Mohamad Salleh, Norshidah & Zainal, Khalim (2014) “Bullying Among Secondary School Students in Malaysia: A Case Study”, International Education Studies Vol. 7 No. 13, pp. 184-191

183 மலேசிய கல்விப் பெருந்திட்டம் ஆண்டறிக்கை 2014

184 குறைந்த செயல்திறன் மற்றும் பிரச்னைக்குரிய மாணவர்களை எதிர்கொள்ள ஆசிரியர்கள் மற்றும் பள்ளியின் திறன் இன்னொரு சிக்கலாகும். இதில் பலர் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து வந்துள்ளனர். இச்சிக்கல் ‘IB40 சிறார்கள் & இளையோர்’ பகுதியில் அடையாளங்காணப்பட்டுள்ளது.

தமிழ்ப்பள்ளியிலிருந்து இடைநிலைப்பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு மலாய், சீன மாணவர்களுடன் ஒன்றினைந்துச் செயல்படுவது இனம் தொடர்பான மற்றொரு சவாலாக அமைகிறது. இடைநிலைப் பள்ளியில், தமிழ்மொழி அல்லாமல் வேற்று மொழியில் எல்லாவற்றையும் அறிவதோடு மட்டுமல்லாமல் புதிய கலாச்சாரத்தோடு / சூழலோடு தங்களைப் பொருந்திக்கொள்ள வேண்டியுள்ளது. புகுமுக வகுப்பிற்குச் செல்ல வேண்டியவர்களோ, தனிமைப்படுத்தப்படுதல், அடிக்கடி குறைந்து மதிப்பிடப் படுதல், ஆசிரியர்களாலும் சக மாணவர்களாலும் ஒதுக்கப்படுதல் போன்றவற்றால் இன்னும் அதிகமான சவால்களை எதிர்கொள்கின்றனர்.[185] புதுமுக வகுப்புகள் தொடரக் கூடாது என்று 62 விழுக்காடு தமிழ்ப்பள்ளி மாணவர்களின் பெற்றோர்கள் கூறுகின்றனர்.[186]

பல்வேறு பள்ளிகளுக்கிடையே மட்டுமின்றி பள்ளிகளுக்குள்ளும் உள்ள இனங்களுக்கு இடையிலான தொடர்பினை மேம்படுத்த, கல்வி அமைச்சு மாணவர்களின் ஒற்றுமைக்கான ஒருங்கிணைப்புத் திட்டத்தின் (RIMUP) செயல்பாட்டினைத் தீவிரப்படுத்தியுள்ளது. 70 விழுக்காட்டிற்கு மேலான பள்ளிகளில் மாணவர்கள் பிற இன மாணவர்களுடன் இணைந்து உட்காருதல், பாடத்திட்ட நடவடிக்கைகளில் பிற இன மாணவர்களுடன் குழுக்களில் கலந்தவாறு செயல்படுவது போன்ற ஒருங்கிணைப்பு பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதைப் பள்ளி மேற்பார்வை ஆய்வுகள் காட்டுகிறது.[187] பெற்றோர்களும் இது போன்ற நடவடிக்கைகளில் தங்களின் பிள்ளைகள் மற்ற இனத்தவரோடு கலந்துரையாடுவதை ஊக்கப்படுத்தப்படுகிறார்கள். பல்லின சூழலில் இலகுவாகப் பழகுவதற்கு தவிக்கும் மாணவர்களுக்கு உதவும் இத்தகைய முயற்சிகள் மேலும் தொடர வேண்டும்.



கற்பித்தல் மற்றும் பள்ளி நிர்வாக ஊழியர் இடையிலான பன்முகத்தன்மை குறைபாடும் இச்சிக்கலுக்கு வழி வகுக்கும். MEB–யைப் பொருத்தவரை தேசிய பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் குழு குறைந்த பன்முகத்தன்மை கொண்டதாகவும் தேசிய மக்கள் தொகையைக் குறைந்த அளவில் பிரதிபலிப்பதாகவும் உள்ளது.[188]

2011–இல், தேசிய பள்ளிகளின் ஆசிரியர்களுள் 5 விழுக்காடு மட்டுமே இந்தியர்களாக இருந்துள்ள வேளையில், 81 விழுக்காடு பூமிபுத்ரா ஆசிரியர்களும், 14 விழுக்காடு சீன ஆசிரியர்களாகவும் உள்ளனர்.[189] ஆசிரியர்களுக்கு இடையிலான இன பன்முகத்தன்மை, அதிலும் குறிப்பாக நகர்ப்புறங்களில் மேம்படுத்தப் பட வேண்டும்.

## இன ரீதியிலான ஆசிரியர்கள் விழுக்காடு




185 Nagappan, R; Maniam, M; Periasamy, S; Rao, R; Devarajoo, K & Velu, J (2012) Exploring Remove Classes in Malaysia; A Study to Evaluate Their Effectiveness Kuala Lumpur: EWRF

186 ஜூலை முதல் செப்டம்பர் 2016 வரை எம்ஜபி செயலகம் மேற்கொண்ட, 40% கீழ்நிலை வருமானம் பெறும் 2,037 மலேசிய இந்தியர்களுடனான நேர்முக ஆய்வு

187 மலேசிய கல்விப் பெருந்திட்டம் 2013–2025

188 மலேசிய கல்விப் பெருந்திட்டம் 2013–2025

189 மலேசிய கல்விப் பெருந்திட்டம் 2013–2025

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

பள்ளிகளுக்கிடையிலான கல்வி அடைவு நிலையில் இனங்களுக்கிடையிலான இடைவெளியைக் களைய, இச்செயல்திட்டம் கீழ்க்காணும் இலக்குகளை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது:

- MIB செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் தேசியப் பள்ளி இந்திய மாணவர்களுக்கும், தமிழ்ப்பள்ளி, சீனப்பள்ளி மாணவர்களுக்கும் மத்தியில் இருக்கக்கூடிய மொழி திறன், கணிதம் மற்றும் யு.பி.எஸ்.ஆர் தேர்வு ஆகிவற்றுக்கு இடையிலான கல்வி அடைவு நிலையில் இடைவெளி களையப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- MIB செயல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் இந்திய பி.தி.3, எஸ்.பி.எம். மாணவர்களுக்கும் இதர மாணவர்களுக்கும் இடையிலான கல்வி அடைவு நிலையில் இடைவெளி களையப் படுவதை உறுதி செய்ய வேண்டும்.

- இடைநிலை கல்வியைத் தொடர்ந்து மேலும் கல்வியறிவு பெறத் தகுதி பெறும் IB40 மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து இந்திய பிள்ளைகளும் குடும்பங்களும் (PT3–க்குப் பிறகு) இடைநிலை கல்விக்குப் பிறகான கல்வி, பயிற்சி, தொழிற்பயிற்சி / தொழில் ஆகிய வாய்ப்புகளுக்கான வழிகாட்டலை முன்கூட்டியே பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

இச்செயல்திட்டத்தின் இலக்கை அடைவதற்கு, கீழ்க்காணும் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டுள்ளது:

### 1. IB40 கல்வி செயல்திறன் நடவடிக்கை அமைத்தல் (பகுதி A–இல் குறிப்பிடப் பட்டுள்ளது போல)

முயற்சிகளுக்கான ஆணையானது, தாய்மொழிப் பள்ளிகளிலும், தேசியப் பள்ளிகளிலும் கற்கும் இந்திய மாணவர்களுக்காகும். தேசிய பள்ளியில் பயிலும் இந்திய மாணவர்கள் கண்காணிக்கப்படுவதையும் அவர்களின் தேவைகளை அடையாளம் காணப்படுவதையும் உறுதிப்படுத்துவதாகும்.



### 2. கல்வி தொடர்பில் இந்தியர் விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு– கல்வி அமைச்சின் CCIC–MOE கூட்டுப் பணிக்குழு அமைத்தல் (பிரிவு அ–இல் குறிப்பிடப்பட்டுள்ளதை போன்று)

இந்த இணை செயலாக்கக் குழு, தேசிய பள்ளி மாணவர்களின் இன அடிப்படையிலான கல்வி செயல்திறன் இடைவெளியோடு ஒற்றுமைக்கான குறியீட்டைக் காட்டும் பள்ளி விவர அட்டவணை அடிப்படையில் நடவடிக்கைகள் நடத்தப்படுவதை கண்காணிக்கும். ஆசிரியர்கள் மற்றும் பள்ளி தலைமைத்துவத்தின் புரிந்துணர்வை வலிமையாக்க நடத்தப்படும் இந்த நடவடிக்கையின் வளர்ச்சியை உறுதி செய்வதற்கு மாதிரி நடவடிக்கை மேற்கொள்ளல், வடிவமைக்கப்பட்ட திட்ட தொகுதிகளை உருவாக்குதல், போன்றவற்றை செயல்படுத்துவதாகும். இன ஒற்றுமையில் மேலோங்கிய பள்ளிகளையும் கல்வி அடைவி நிலையில் சிறந்து விளங்கக்கூடிய பள்ளிகளையும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்த பள்ளிகளையும் அடையாளங்கண்டு அங்கீகரிக்கப்படும்.

MIB செயலாக்கப் பிரிவுவோடு இந்த இணை செயலாக்கக் குழு இணைந்து தமிழ் மொழிக் கல்வியையும் கலை கலாசாரக் கல்வியையும் சீரமைக்கப்பட்ட/செம்மைப்படுத்தப்பட்ட தாய்மொழி வகுப்புகள் ‘POL2.0’– மூலம் நடத்துவதற்கான ஆய்வுகளை மேற்கொள்ளும். இம்மாதிரியான முயற்சிகளால், மலேசிய இந்தியப் பெற்றோர்கள் தேசியப் பள்ளிகளில் தங்களது பிள்ளைகளை அனுப்புதில் தயக்கம் கொள்ள மாட்டார்கள்.

பகுதி A–வில் குறிப்பிட்டிருப்பது போல (‘IB40 பிள்ளைகள் மற்றும் இளையோர்) கூட்டு கடமைப்படை, குறைந்த செயல்திறன் கொண்ட இந்திய மற்றும்/அல்லது IB40 மாணவர்களின் ஆசிரியர்களுக்கு உதவ, இந்தியர்களுக்கான கற்பித்தல் உதவியாளர்கள் மற்றும்/அல்லது மொழி மற்றும் கலாசார ஆதரவுக்கான ஆலோசகர்களை நியமித்தலுக்கும் ஆய்வு மேற்கொள்ளும்.

## உ. உயர்க்கல்வி & பயிற்சி

**சமீப ஆண்டுகளில், உயர்நிலைக்கு கல்வி நிலையங்களில் இந்தியர்கள் சேர்க்கை சரிவிகித அளவு இருப்பதை உறுதி செய்ய தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்தியர்களுக்கான வருடாந்திர இருக்கை ஒதுக்கீடு அரசாங்க திறன் பயிற்சி நிலையங்களிலும், மெட்ரிகுலேஷன் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்களிலும், பல்கலைக்கழகங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. கல்வி உதவித்தொகை, நிதி மானியங்கள், கல்வி கடன் உதவி ஆகியவை அரசாங்க நிதி அமைப்புகளோடு தனியார் நிறுவனங்களும் வழங்குகின்றன.**

திறன் பயிற்சிகளுக்கான கல்வி நிறுவனங்களைத் தவிர்த்து, ஏனைய உயர் கல்விக் கழகங்களில் இந்திய மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கைகளை நிரப்புவது சவாலாக உள்ளது. பொது உயர் கல்வி நிறுவனங்களின் (IPTA) மிக அண்மைய தகவலின்படி (2014) மொத்த விண்ணப்பதாரர்களில் இந்தியர்களுடைய எண்ணிக்கை 4.5% மட்டுமே உள்ளது.[190] இந்நிலையை ஊகிக்கக்கூடிய அளவிலேயே SPM தேர்வுகளில் அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்ற இந்திய மாணவர்களின் விழுக்காடு தேசிய சராசரியைக் காட்டிலும் குறைவாக உள்ளது; எடுத்துக்காட்டாக அதே ஆண்டு, தேசிய சராசரி விழுக்காடான 56%–ஐக் காட்டிலும், 46% இந்திய மாணவர்கள் மட்டுமே அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

91% பூமிபுத்ரா விண்ணப்பத்தாரர்களுடனும் 93% சீன விண்ணப்பதாரர்களுடனும் ஒப்பிடும்போது தகுதி பெற்றோ அல்லது பொதுப்பல்கலைக்கழகங்கள் தேவைகளை பூர்த்தி செய்தோ, இந்தியர்களுள் 79% விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்வு பெறுகின்றனர். மேலும், தகுதி பெற்ற இந்திய விண்ணப்பதாரகளுள் 58% மட்டுமே வெற்றிகரமாக பொதுப்பல்கலைக்கழகங்கள் செல்கின்றனர். இந்த விழுக்காடு பூமிபுத்ரா (52%) விண்ணப்பதாரர்களைக் காட்டிலும் அதிகமாகவும் சீன விண்ணப்பதாரர்களைக் காட்டிலும் (71%) குறைவாகவும் உள்ளது.[191]

மற்றொரு புறம், 2014–இல், தனியார் கல்வி நிறுவனங்களில் தங்கள் மேற்படிப்பை தொடர்ந்த ஏறத்தாழ 50,000 இந்திய மாணவர்களுள் பெரும்பான்மையோர் நடுத்தர அல்லது உயர் வருமான குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.[192]



| கல்வி நுழைவு வருடம் 2014/2015 | விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | மொத்த % | தகுதிபெற்ற விண்ணப்பதாரர்கள் | வெற்றிப்பெற்ற விண்ணப்பதாரர்கள் |
|---|---|---|---|---|
| பூமிபுத்ரா | 54,702 | 73.9% | 50,022 | 26,039 |
| சீனர்கள் | 10,018 | 13.5% | 9,357 | 6,620 |
| இந்தியர்கள் | 3,363 | 4.5% | 2,666 | 1,533 |
| மற்றவர்கள் | 5,988 | 8.1% | 5,343 | 3,275 |
| மொத்தம் | 74,071 | 100% | 67,388 | 37,467 |

190 பொது/தனியார் பல்கலைக்கழகங்களில் இந்திய விண்ணப்பதாரர்களின் நுழைவு புள்ளிவிபர அடிப்படையிலிருந்து எடுக்கப்பட்டது, மலேசிய உயர்க்கல்வியமைச்சு

191 நேர்க்காணல் அடிப்படையில், தகுதிப் பெற்ற விண்ணப்பதாரர்கள் பொது பல்கலைக்கழகத்திற்கு நுழைய முடியாததற்கு, பாடத்திட்டங்களும் வழங்கப்பட்ட இடங்களில் அவர்களின் தெரிவுப் போக்கும் காரணங்களாக அமைகின்றன

192 பொது/தனியார் பல்கலைக்கழகங்களில் இந்திய விண்ணப்பதாரர்களின் நுழைவு புள்ளிவிபர அடிப்படையிலிருந்து எடுக்கப்பட்டது, மலேசிய உயர்க்கல்வியமைச்சு

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

ஒப்பீட்டளவில் IPTA–விற்கு விண்ணப்பிப்பதற்கும் தகுதி பெறுவதற்கும் காட்டக்கூடிய குறைந்த புள்ளியானது, இந்திய மாணவர்களின் இடைநிலை மற்றும் ஆரம்பிக்க கல்வி நிலை ஆகியவற்றின் செயல்திறன் குறைவே என்னும் தகவலை உறுதிப்படுத்துகிறது.




இந்த நிலையில் இந்தியர்களின் செயல்திறனை மேம்படுத்துவது மூன்றாவது நிலைக்கான பதிவு நிலையை முன்னேற்றத்தை நோக்கி நகர்த்த உதவும். தேர்வுகளின் அடைவு நிலையைத் தவிர்த்து, மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உயர் கல்வி வாய்ப்புகள் குறித்தும், அதன் வழிமுறைகள் குறித்தும் விரைவாக வழிகாட்டப்பட வேண்டும். பல இடைநிலைப்பள்ளி இந்திய மாணவர்களுக்கு இடைநிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததும் எங்கு, எப்படி, எந்த படிப்பைத் தொடர்வது என்ற விவரங்கள் தெரிவதில்லை., குறிப்பாக பல IB40 குடும்பங்களுக்கு பெற்றோரிடமிருந்தோ சமூகத்திலிருந்தோ போதுமான கிடைப்பதில்லை.[193] இதனைக் கையாள, மாணவர்கள் உயர்கல்வி கூடங்களில் கல்வியைத் தொடர்வதற்கு தங்களைத் தயார் படுத்த உதவும் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளவும் வழிகாட்டவும் SEDIC அரசு சாரா இயக்கங்களுக்கு மானியம் வழங்கியுள்ளது; இந்த முயற்சி தொடர வேண்டும்.

193 Malaysian Indians & The 11th Malaysia Plan (2016-2020), "Tapping the Opportunities & Plugging in" by Datuk Dr. Denison Jayasooria

அரசாங்க உயர்க்கல்வி கூடங்களில் குறைவான மாணவர்கள் பதிவிற்கு குறைந்த கல்வி அடைவுநிலையும் பொருளாதார சிக்கலும் காரணமாக இருக்கலாம். மிகக் குறைந்த நிலையிலிருந்து நடுநிலை வரை தேர்ச்சியடையும் பல பல மாணவர்கள், குடும்பச் சுமையைக் குறைப்பதற்காக வேலைக்குச் செல்வதால் அவர்களால் உயர்க்கல்வியைத் தொடர முடியாமல் போகிறது என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.[194] இந்த சிக்கலுக்கான காரணம் தெரியாமல் இருப்பதால், இதனைப் புரிந்து கொள்வதற்கு பல முயற்சிகள் செய்ய வேண்டும்.



நிறுவன முதலாளிகளால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிகளோடு கூடிய தொழில்நுட்ப திறன்களுக்கான கல்வியைத் தொடர, மாணவர்களுக்கு மற்றொரு வாய்ப்பாக, தொழில்நுட்ப & தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) வழங்குகிறது. பல தொழில் துறைகளுக்கு, பல்கலைக்கழக தகுதிகளுக்குச் சமமான அல்லது காத்ர்கு நிகரான உயர்தர வேலைகளுக்கான வாய்ப்பை TVET வழங்குகிறது. 2020–க்குள், பொருளாதார மாற்ற திட்டம் ("ETP")–இன் கீழுள்ள, 12 தேசிய பகுதி ("NKEA") துறைகளுக்காக, மலேசியாவிற்கு மேலும் 1.5 மில்லியன் திறன் வாய்ந்த பணியாளர்கள் தேவைப் படுகிறார்கள்.

இத்தேவையைப் பூர்த்தி செய்ய TVET முக்கிய பங்களிக்கிறது. உயர்க்கல்வி அமைச்சு (MOHE), தொழிலாளர் ஆள்பல அமைச்சு (MOHR) போன்ற அரசாங்க அமைச்சுக்களும் தனியார் நிறுவனங்களும் பற்பல TVET திட்டங்களை உயர்க்கல்வி கூடங்களில் வழங்கி வருகிறது. மும்பரிமாண அசைவூட்டக் கல்வி முதல் பொறியியல், விருந்தோம்பல் போன்ற படிப்புகளை TVET நிலையங்களில் வழங்கப் படுகின்றன. இந்தியர்கள் மீது தனிக்கவனம் வைத்து ஏற்படுத்தப் படும் முயற்சிகளுக்கு, அதிலும் குறிப்பாக B40 சார்ந்த மாணவர்களுக்கு, திறன் முன்னேற்றத் துறை ("JPK") உள்ளிட்ட பொருத்தமான அமைப்புகளின் ஒத்துழைப்போடு, SEDIC, தனியார் திறன் பயிற்சி மையங்களோடு இணைந்து செயல்படுகிறது.மலேசிய இந்திய இளையோரிடத்தில் TVET –இன் முயற்சியானது ஊக்கப்படுத்த வேண்டிய ஒன்றானது.

TVET திட்டங்களின் செயற்பாடுகள் குறித்த இன்னும் அதிகமான விழிப்புணர்வை மலேசிய இந்திய இளையோரிடத்தில் ஏற்படுத்த வேண்டும். பல்கலைக்கழக நிகரான கல்வியையும் வேலை வாய்ப்புகளையும் TVET–யின் தொழிற்கல்வி தரவல்லது என்பதனை இந்திய சமூகத்தினரிடையே உணர்த்தப்பட வேண்டும். அரசாங்க திறன் பயிற்சி நிறுவனங்களில் இணையும் இந்திய இளையோர் எண்ணிக்கையைக் கண்காணிக்கவும் உயர்த்தவும் செய்வதோடு அம்மாணவர்களின் பயிற்சிக்குப் பிறகான வேலை வாய்ப்புகள் வழங்குவதனை உறுதி செய்யும் கடப்பாடு செடிக் பிரிவிற்கு உண்டு.



194 அரசாங்கத் துறைகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் பல பங்கேற்பாளர்களுடன் நேர்க்காணல்கள்

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

இச்செயல்திட்டமானது உயர்க்கல்வி, மற்றும் தொழிற்திறன் பயிற்சிகளில் இந்தியர்களின் விகிதத்தை உயர்த்த, கீழ்காணும் இலக்குகளை அடைய நோக்கம் கொண்டுள்ளது:

- இச்செயல்திட்டமானது உயர்க்கல்வி, மற்றும் தொழிற்திறன் பயிற்சிகளில் இந்தியர்களின் விகிதத்தை உயர்த்த, கீழ்காணும் இலக்குகளை அடைய நோக்கம் கொண்டுள்ளது:
- MIB தொடங்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் அனைத்து அரசாங்கக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், தொழிற்பயிற்சி கல்லூரிகளிலும், இதர மேல்நிலைக் கல்விக் கூடங்களிலும், நுழைவு தரத்தைப் பாதிக்காமல் குறைந்தப்பட்சம் 7 விழுக்காடு இந்தியர்களின் நுழைவு அனுமதிக்கப்படுவதை உறுதி செய்தல்

இச்செயல்திட்டமானது இலக்கினை அடைய, கீழ்காணும் நடவடிக்கைகளை செயல்படுத்த நோக்கம் கொண்டுள்ளது:



### 1. IB40 கல்வி செயல்திறன் முயற்சிகள் (பகுதி A–இல் குறிப்பிட்டுள்ளதன்படி)

இந்தியர்களின் கல்வி செயல்திறன் முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக இடைநிலை பருவத்திலேயே, 4–ம் மற்றும் 5–ம் படிவ மாணவர்களுக்கு, உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளோடு விண்ணப்ப வழிமுறைகளையும் உள்ளடக்கிய திட்டங்கள், அவர்களைத் தயார்படுத்தவும் வழிகாட்டவும் மேற்கொள்ளப்படும் முயற்சியாக அமையும். மூன்றாம் கல்வி நிலையில், இடையிலேயே கல்வியை நிறுத்தும் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் போதிய ஆதரவு வழங்கவும் அவர்களின் செயல்திறன் கண்காணிக்கப்படும்.

### 2. IB40 மாணவர்களுக்கான உயர் கல்வி நிதி ஆதரவு திட்டம்

பொது–தனியார் கூட்டமைப்பின் வழியிலான பொது மற்றும் தனியார் வளத்தில் இருந்து எடுக்கப்பட்ட நிதியைக் கொண்டு, தீவிர நிதி உதவி (போதனை கட்டணத்திற்கும் மேலாக) தேவைப்படும் IB40 மாணவர்களின் சுயவிவரம் கொண்ட தகவல் தளம் ஒன்று உருவாக்கப்படும்.

### 3. இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்

இருக்கை ஒதுக்கீடு முழுமையாக பூர்த்தி அடைவதை உறுதிசெய்தலும் கண்காணித்தலும் இதனுள் அடங்கும்: அரசாங்க திறன் பயிற்சி நிறுவனங்களில் 7% இருக்கைகள்; IPTA மற்றும் இதர மூன்றாம் நிலை பொது கல்வி நிறுவனங்களில் 7% இருக்கைகள்; அரசாங்க பாலிடெக்னீக்களில் 10% இருக்கைகள்; ILP, ADTEC, GMI போன்ற TVET கல்வி நிறுவனங்களில் 7% இருக்கைகள்: அரசாங்க மெட்ரிகுலேஷன் படிப்புகளில் 1,500 இருக்கைகள்; மற்றும் JPA, மத்திய & மாநில கல்வி உபகாரச் சம்பளத்திற்கு 7% இடங்கள்.

## ஊ. அபாய நிலை இளையோர்

**செயல்திறன் குறைபாடும், இடையில் கல்வியை நிறுத்துவதும், (அதிலும் குறிப்பாக இந்திய ஆண் பதின்ம வயதினருக்கு மத்தியில் ) தீவிரச் சிக்கல்கள் உருவாவதற்கான அறிகுறிகளாக அமையும்.**

2012 மற்றும் 2013–க்கும் இடையே, வன்முறை குற்றங்களில் ஈடுபடும் மாணவர்களின் எண்ணிக்கை 50%–ஆக உயர்ந்துள்ளதாக உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. [73] 2014–இல், கைது செய்யப்பட்ட இந்தியர்களுள் 10% பேர் 7–18 வயது கொண்டவர்கள்.[196]



2016–இல் 2,000 IB40 குடும்பங்கள் இடையே எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, 45 விழுக்காட்டினர் தங்கள் பிள்ளைகள் குண்டர் கும்பலில் ஈடுபடுவதற்கான பாதுகாப்பற்ற அபாய நிலையில் இருப்பதை நம்புகின்றனர். இதற்கு, சுற்று வட்டாரம், தத்தம் பிள்ளைகளின் சக வயத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியவை முக்கிய காரணங்களாக கூறப்பட்டுள்ளன. கள பணியாளர்களின் கூற்றுப்படி, குண்டர் கும்பலில் ஆட்களை சேர்க்கும் இடமாக பள்ளிகள் இருப்பதோடு 11 அல்லது 12 வயது இளம் மாணவர்கள் கும்பலில் சேர்க்கப்படுகின்றனர்.

குண்டர் கும்பல்கள் பதின்ம வயதினர்களுக்கு பாதுகாப்பு, உடைமைகள், நம்பகத்தன்மைகளை வழங்குகிறது. மாணவர்கள் மற்றவர்களால் தாங்கள் சிறுமைப்படுத்தப்படாமல் இருக்கவும், வீட்டில், பள்ளியில் கிடைக்காத ஆதரவை வெளியே பெறுவதற்கும், பொருளாதாரப் பயன்களுக்காகவும் இவ்வகை குண்டர் கும்பல்களில் இணைகின்றனர். இடைநிலைப் பள்ளியை முடித்த பிறகு சிலர் இந்தக் கும்பல் கும்பலிலிருந்து வெளிவந்த போதிலும், ஆய்வாளர்களின் கூற்றுப்படி, சில பதின்ம வயதினர், குறிப்பாக குறைவான சலுகைகள் பெறும் குடும்பங்களிலிருந்து வருபவர்கள், அல்லது பிளவுற்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், குண்டர் கும்பல் நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு தீவிர குற்றச்செயல்களை செய்கின்றனர். அதன் விளைவாக, அதிக எண்ணிக்கையிலான இந்திய இளைஞர்கள், வன்முறை குற்றங்களுக்காகக் கைது செய்யப்படுகின்றனர்; சிறையில் இருக்கின்றனர். 2014–இல், வன்முறை குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களுள், 31 விழுக்காட்டினர் இந்தியர்கள்.[197] சிறை வைக்கப்பட்டவர்களுள் இந்திய இளையோர் கைதிகள் 11 விழுக்காடு.[198] மேலும், நாட்டில் குண்டர் கும்பல்களைச் சார்ந்தவர்களில் 70 விழுக்காட்டினர் இந்தியர்கள் என கணிக்கப்படுகிறது.[199]



195 Teoh, El Sen "Students involved in violent crime and gangsterism on the rise" (2014, March 29) Astro Awani. Accessed at: http://english.astroawani.com/malaysia-news/students-involved-violent-crime-and-gangsterism-rise-32766

196 52% of arrests are aged 19-30 years. "No. of Arrests by Type of Crime and by Ethnicity", Crime Investigation Unit, Royal Police Department of Malaysia, 2014

197 "No. of Arrests by Type of Crime and by Ethnicity", Crime Investigation Unit, Royal Police Department of Malaysia, 2014

198 "No. of Youth Prisoners Held in Prisons by Ethnicity" Malaysia Prisons Deparment, 2014

199 Attributed to Bukit Aman's CID director, as reported in "The 'taikos' behind Indian gangs" (2013, August 28) Malaysia Today. Accessed at: http://www.malaysia-today.net/the-taikos-behind-indian-gangs/

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

குடும்பச் சூழ்நிலைகளே இளையோர்களின் தவறான நடவடிக்கைகளுக்கு முக்கியக் காரணமாக அமைகிறது. “அரவணைப்பும் ஆதரவும் குறைவாக உள்ள குடும்பங்கள், நிர்வாகத்திறன் குறைபாடு உள்ள குடும்பங்கள், முரண்பாடு அல்லது வன்கொடுமைக்கு ஆளான குடும்பங்களில் வளரும் பிள்ளைகள் குற்றம் புரிபவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. மாறாக, நல்ல குடும்ப சூழ்நிலைகளில் வளரும் பிள்ளைகளுக்கு போதிய கவனிப்பும் ஆதரவும் கிடைக்கப் பெறுவதோடு பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகளைச் சண்டை சச்சரவுகளிலிருந்தும் பாதுக்காப்பற்ற வெளி சூழல்களிலிருந்தும் பாதுகாத்துக் கொள்கின்றனர்” என ஆய்வுகள் கூறுகின்றன. பெற்றோர்களின் கண்காணிப்பின்மையும், கவனிப்பின்மையும் பிள்ளைகள் தீயச் செயல்களில் ஈடுபடுவதற்குக் காரணமாக அமைகிறது.[200]




2014–இல் மலேசியாவில் சவால்மிக்க நகர்ப்புற இளையோர்கள் குறித்தும், கடுங்குற்றங்களுக்காக சிறைப்படுத்தப்பட்ட நகர்ப்புற இளையோர்கள் குறித்தும் இரு வெவ்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. அவ்விரு ஆய்வுகளின் முடிவில் பொதுவான முடிவுகளாகக் கண்டறியப்பட்டது என்னவென்றால், இளையோர்கள் எதிர்மறையான விளைவுகளை செய்வதற்கு முக்கிய காரணமாக அமைவது “வலுவற்ற உறவுகள் கொண்ட குடும்ப சூழ்நிலையும்”,[201] “தந்தையோ அதற்கு நிகரானவரோ இளையோர் வாழ்க்கையில் இல்லாததே”,[202] ஆகும். சிக்கல்களை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு உதவ சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதமர் துறையின் கீழ் இயங்கும் இந்திய சமூகப் பொருளாதாரப் பிரிவின் (SEDIC) வழி, சவால்மிக்க இளையோர் சீரமைப்புகள் குறித்த திட்டங்கள், பெற்றோரை ஈடுபடுத்தும் திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்கள் தெரிவு செய்யப்பட குடும்பங்களுக்கு முறையான, நிலையான ஆதரவினை வழங்குவதற்கு, பரிசீலிக்கப்பட்டு கட்டமைக்கப்பட்ட வேண்டும். திட்டம் முழுமையாக அனைவருக்கும் சென்றடைதலும் அனைவரும் ஒரே சிந்தனையோடு இருத்தலும் மற்றொரு முக்கியச் சிக்கலாக அமைகிறது.

2014–இல், இளையோர் மற்றும் விளையாட்டு துறை அமைச்சு சவால்மிக்க இளையோரை இலக்காகக் கொண்டு தொடங்கிய Program Angkat dan Upaya (PADU) என்னும் 6 மாத திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டம் சவால்மிக்க இளையோர்கள் போதிய ஆலோசனை, வழிகாட்டுதல்கள் வழி தங்கள் திறமைகளை வளர்க்க செய்வதற்காக தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை பற்றிய அறிமுகம் சவால்மிக்க அனைத்து இளையோர்களையும் சென்றடையவில்லை. இத்திட்டத்தில் ஆயிரத்திற்கும் குறைவான இளைஞர்கள் கலந்துக் கொண்ட போதிலும், இது சில தொடக்க வெற்றிகளைக் காட்டியது.

200 Smith, CA & Stern, SB (1997) "Delinquency and Antisocial Behavior: A Review of Family Processes and Intervention Research" Social Service Review, 71, pp. 382-420.

201 Adaickalam, Jasmine (2015) "Strategies to Meet the Needs of High Risk Indian Youths and Ensure Them Psycho-Socially Included into Mainstream Development of the Nation" Input to Indian Development Blueprint 2016-2020 (Unpublished).

202 Ibid.



இதனைத் தவிர்த்து, தேசிய நீலக் கடல் வியூக நிலையம் (National Blue Ocean Strategy Institute) பாதுகாப்பு மற்றும் அமலாக்கத்துறையுடன் இணைந்து 'இலக்கைக் கொண்ட இளையோர் திட்டம்', என்னும் திட்டத்தினை அமல்படுத்தியது. இத்திட்டம் மலேசிய சவால்மிக்க இளையோரின் காரணிகளைக் குறைக்கும் நோக்கத்தோடு நடத்தப்பட்டது.

திட்டங்கள் இந்திய இளையோரை சென்றடைதலை உறுதிப்படுத்த இன்னும் அதிகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தவிர, சவால்மிக்க இளையோரை கையாளுவதற்கு செடிக்-இன் துணையோடு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்களுக்கு போதிய ஆதரவு வழங்குவதும் ஒரு முக்கிய சிக்கலாகும்.

சவால்மிக்க இளையோருக்கான மறு வாய்ப்புகளுக்காக வழிமுறைகள் எதிர்பார்த்ததைவிட குறைவாகவே உள்ளன; உதாரணமாக, பல தொழிற்கல்வி பயிற்சிகளிலும்/கல்லூரிகளிலும் (IKBN/ILP) இணைவதற்கு பி.எம்.ஆர் (தற்போது PT3) சான்றிதழ் தேவைப்படுகிறது. இதற்கு (பி.எம்ஆர் சான்றிதழ் பெறுவதற்கு) முன்பாகவே பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களோ, ஒழுக்கமின்மையினால் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டவர்களோ, தொழிற்கல்விக்கூடங்களில் கற்கும் வாய்ப்பை இழக்கின்றனர். இத்தகைய இளையோர்களுக்கு மற்றொரு வாய்ப்பாக, மைஸ்கீல் அறவாரியம் (MySkills Foundation), 18 வயதிற்கு கீழுள்ள 1,000 இளையோர்களுக்குப் பல்வேறு திறன் பயிற்சிகளை வழங்கி வருகிறது. அதில் ஒன்று 'Transformasi Holistik Belia Berisiko Tinggi'[203] என்னும் முயற்சியாகும். இத்திட்டதினை செயல்படுத்துவதற்கு 'செடிக்' மானியம் வழங்கியுள்ளது. இதனைத் தவிர்த்து, IB40 குடும்பங்களைச் சேர்ந்த இந்திய இளைஞர்களின் நிலையை உயர்த்துவதற்காக விளையாட்டு திட்டங்களுக்கும் செடிக் மானியம் வழங்கியுள்ளது.[204] பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்தியவர்களுக்கு இத்தகைய வாய்ப்புகள் மறுவாய்ப்பாகவும் மறுசீரமைப்பாகவும் உள்ளதா என்று பரிசீலனைக்கப்பட வேண்டும். சரியான சீரமைப்பும் முதலீடு செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தவும் இந்தச் சிக்கலுக்கான கணக்கெடுப்பு தேவைப்படுகிறது.



203 மைஸ்கில்ஸ் அறவாரியம் மேற்கொண்டது

204 மலேசிய இந்திய விளையாட்டு மன்றம்– குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சார்ந்த மலேசிய இந்திய விளையாட்டாளர்களைப் பெரும்பாலும் உட்படுத்திய மலேசிய இந்திய பந்துவிளையாட்டு சங்கம், 2017இல் மலேசிய பிரிமியர் லீக்–இல் தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்திக் கொண்டது.

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

இச்செயல்திட்டம் சவால்மிக்க இளையோர் குறித்த சவால்களைக் கையாள கீழ்க்காணும் இலக்குகளை அடைய நோக்கம் கொண்டுள்ளது:

- குற்றச் செயல்களில் இந்திய இளையோர் ஈடுபடுவதையும் இளம் குற்றவாளிகள் எண்ணிக்கை குறைவதையும் உறுதிப்படுத்துதல்.
- இந்தியச் சிறார், இளையோரிடையே தீயச்செயல்களில் ஈடுபடுதல், குற்றம் புரிதல் போன்ற நடவடிக்கைகளின் எண்ணிக்கையை குறைப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.[205]

இலக்கினை அடைய, இந்த செயல்திட்டமானது கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுக்க நோக்கம் கொண்டுள்ளது:

### 1. குடும்ப முழு முன்னேற்ற முயற்சிகளை நிலைநாட்டுவது. (அடிப்படைத் தேவைகளை அறிதல் என்ற பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது)

குடும்ப முன்னேற்ற செயல்பாடுகளானது, சிக்கல்கள் நிறைந்த குடும்பங்களுக்கு செயல்படா தன்மையினூடே உதவுவதை நோக்கமாகக் கொண்ட உறுதியான ஆலோசனை முயற்சியாகும். அடையாளம் காணப்பட்ட அபாய நிலை இளையோர் உள்ள குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து, அதில் உள்ள இளையோர் அவர்கள் சார்பான திட்டங்களில் சேர்க்கப்பட முன்னுரிமை அளிக்கப்படும்.

உதாரணமாக, 13 வயதிற்கும் மேலுள்ள அடையாளம் காணப்பட்ட அபாய நிலை இளையோர், தொழிற்கல்வி பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் இட ஒதுக்கீட்டிற்கான (அதற்கான சூழலைப் பொறுத்து) முன்னுரிமை வழங்கப்படும். போதிய இருக்கைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை உறுதி செய்ய, MIB செயலாக்கப் பிரிவு சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களோடு ஆலோசிக்கும்.

### 2. அபாய நிலை இளையோர் திட்டங்களில் போதிய பங்கேற்பு இருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.

IB40 இளையோர்களுக்காக தற்போதுள்ள அபாய நிலை இளையோர் திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள, MIB செயலாக்கப் பிரிவின் கல்விக் குழு, இளையோர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சுடனான உடனுழைப்பு குறித்து ஆராயும்.

சமூகப் பணியாளர்கள், கள நிபுணர்கள் மற்றும் திட்ட பங்கேற்பாளர்களிடமிருந்து கிடைக்கும் கருத்துகளின் அடிப்படையில் சீரமைப்புகளை பரிந்துரைக்கும் வகையில், சம்பந்தப்பட்ட அரசாங்க மற்றும் ஏஜென்சிகளுடன் இப்பெருந்திட்ட செயலாக்கப் பிரிவின் கல்விக் குழு இணைந்து செயலாற்றும்.

### 3. மலேசிய அபாய நிலை இளையோர் சூழல் மற்றும் இடைவெளி அறிதல் ஆகியவற்றோடு கூடுதல் முதலீடு குறித்த சீராய்வு நடத்தப்பட வேண்டும்.

MIB செயலாக்கப் பிரிவு, மலேசிய இந்திய அபாய நிலை இளையோர் மற்றும் வெவேறு விதமான சீரமைப்புகளுக்கும் திட்டங்களுக்குமான அவசியம் குறித்த அளவீடுகள் பற்றியும் சீராய்வு நடத்தும். இந்தச் சீரமைப்பானது, தீவிரமாக தேவைப்படுபவர்களுக்கு (பள்ளியில் இருந்து இடைநீக்கம் அல்லது முழுமையாக நீக்கப்பட்டவர்கள் உள்ளடங்கியவர்கள்) முழு அளவிலான மாற்றம் மற்றும் திறன் பயிற்சி நிறுவனங்கள் தொடங்கி குறைந்த அளவு அபாயம் கொண்டவர்களுக்கான தற்காலிக திட்டங்கள் வரை அடங்கும்.

தற்போதைய அரசாங்க திட்டங்களிலோ அல்லது மையங்களிலோ பயன் முழுமையில் இடைவெளி ஏற்படுமாயின், அதிகமாகத் தேவைப்படும் இடங்களில் சீரமைப்புகளை நிலைநாட்ட அரசாங்க நிதி அல்லது பொது–தனியார் கூட்டமைப்பின் வழி கூடுதல் முதலீடு செய்யப்படும். மலேசிய இந்திய அபாய நிலை இளையோர்களை இலக்காக வைத்து நடத்தப்படும் முன்னோட்ட திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கும், கூடுதல் முதலீடுகள் பயன்படுத்தப்படும்.

---

205 களப் பயிற்சியாளர்கள் அடையாளங்கண்ட குடும்ப சூழல், பொருள் பயன்பாடு, தனிப்பட்ட மனநிலை போன்ற ஆபத்துக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, ஆபத்து மதிப்பீட்டுக் கருவிகள் மேம்படுத்தப்பட்டு 2017/18 செயல்படுத்தப்பட வேண்டும்





# இயல் 4

# வாழ்வாதாரத்தையும் சொத்துடைமையும் வளப்படுத்துதல்



# வேலை வாய்ப்பும் வணிக வாய்ப்பும்

ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், மலேசிய இந்தியர்கள் சமூகப் பொருளாதார ரீதியில் தேசிய வளர்ச்சி நீரோடைக்கு நிகரான முன்னேற்றத்தை எட்டியுள்ளனர். கடந்த 44 ஆண்டுகளில் (1970 முதல் 2014 வரை) மலேசிய குடும்பங்களின் சராசரி மாதாந்திர வருமானம், ஆண்டுக்கு 7.8 விழுக்காடு அதிகரித்தது. அதே காலக்கட்டத்தில் மலேசிய இந்தியர்களின் மாதாந்திர வருமானம் 7.5 விழுக்காட்டு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.[206]

மலேசிய இந்தியர்கள் சமூகப் பொருளாதாரத் துறையில் அதீத வளர்ச்சியை எட்டிப் பிடித்துள்ளனர் என சமீபத்திய ஆய்வு ஒன்று, சுட்டிக்காட்டுகியது. ஆகக் கடைசியாக, 2014ஆம் ஆண்டில் மலேசியப் புள்ளி விவரத் துறை மேற்கொண்ட ஓர் ஆய்வில், மலேசிய மக்களின் இடைநடு மாதாந்திர குடும்ப வருமானம் ரிம.4,585 என பதிவான நிலையில் மலேசிய இந்தியர்கள் ரிம.4,627 ஆக உயர்ந்திருப்பது தெரிய வந்துள்ளது. இதே காலக் கட்டத்தில் பூமிபுத்ராக்களின் மாதாந்திர இடைநடு குடும்ப வருமானம் ரிம.4,214 என்றும் சீனர்கள் ரிம.5,708 ஆகவும் பதிவாகியிருக்கிறது.




இத்தகைய சமூகப் பொருளாதார அடைவு நிலையானது பெருஞ்சாதனையாகப் பார்க்கப்பட்டாலும் இந்திய சமூகத்தில் உள்ள இதர பிரிவினரிடையே நிலவிவரும் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டுகிறது.[207] அவர்கள் பாரம்பரிய வரலாற்று ரீதியாக வெவ்வேறான தொழில்துறைகளைச் சார்ந்திருப்பதால் இந்த வேற்றுமை தொடர்ந்து நிலவுகிறது. அனைத்து பிரிவினரின் பொருளாதாரம் உயர்வு கண்டிருந்தாலும், அதிக வருவாய் பெறும் முதல் 20 விழுக்காடு (T20) குழுவினரும் 40 விழுக்காடு (எம் 40) நடுத்தர பிரிவினரும் இந்திய சமூகத்தில் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

## சராசரி மாதாந்திர மொத்த குடும்ப வருமானம்

வருமானப் பிரிவு & இன ரீதியாக (ரி.ம)




206 2014 Household Income Survey, Department of Statistics Malaysia.

207 As described in the 'Contextual Overview' section of the Introduction chapter

இவ்விரு பிரிவிகளிலிருந்து 61 விழுக்காட்டினர், இந்தியர்களின் மொத்த வருமானத்தில் 83 விழுக்காட்டை கொண்டுள்ளனர். எஞ்சிய 39 விழுக்காட்டினர் அதாவது (ஐபி40) குறைந்த வருமானம் பெறுகின்ற 227,600 இந்திய குடும்பங்கள், சமூகத்தின் மொத்த வருமானத்தில் வெறும் 17 விழுக்காட்டையே பெறுகின்றனர்.[208]

இந்த வருமானப் பகிர்வு, நாட்டின் இதர முதன்மை இனங்களுக்கு ஈடாக உள்ளது. மலேசியாவில் பல்லினத்தவர்களுக்கு இடையிலான ஏற்றத் தாழ்வுகள் பெரும் சவாலாக உள்ளது. எனினும், சமசீரற்ற நிலையை சரி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.




40% கீழ்நிலை வருமானப் பிரிவின் மாத சராசரி குடும்ப வருமானம், (ரி.ம) 1995-2014

| CAGR | பூமிபுத்ரா | சீனர் | இந்தியர் |
|---|---|---|---|
| (1995 - 2014) | 7.8% | 5.8% | 6.1% |
| (2001 - 2014) | 9.5% | 7.0% | 7.2% |
| (2009 - 2014) | 12.7% | 10.5% | 11.5% |




40% நடுத்தர வருமானப் பிரிவின் மாத சராசரி குடும்ப வருமானம், (ரி.ம) 1995-2014

| CAGR | பூமிபுத்ரா | சீனர் | இந்தியர் |
|---|---|---|---|
| (1995 - 2014) | 6.9% | 5.5% | 5.7% |
| (2001 - 2014) | 8.0% | 6.0% | 6.1% |
| (2009 - 2014) | 9.7% | 9.1% | 9.6% |




20% உயர்நிலை வருமானப் பிரிவின் மாத சராசரி குடும்ப வருமானம், (ரி.ம) 1995-2014

| CAGR | பூமிபுத்ரா | சீனர் | இந்தியர் |
|---|---|---|---|
| (1995 - 2014) | 6.3% | 4.9% | 5.7% |
| (2001 - 2014) | 6.3% | 4.9% | 5.7% |
| (2009 - 2014) | 7.1% | 8.2% | 8.4% |

208 பிரதமர் துறை அமைச்சர், டான் ஸ்ரீ வாஹிட் ஓமார் அம்பாங் எம்பி சூரைடா கமருதீனுக்கு அனுப்பிய குடும்ப வருமானம் மற்றும் செலவுகள் 2014 அறிக்கை எனும் எழுத்துப்பூர்வ பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. . As reported in "Bumis majority of top earners - but disparity widest, too" (2015, November 26) Malaysiakini. Accessed at: https://www.malaysiakini.com/news/321081

## இனத்திற்குள்ளான வருமானப் பகிர்வு






2012ஆம் ஆண்டில் மேற்கொண்ட ஜினி ஆய்வின்படி , இனங்களுக்கிடையிலான சமசீரற்ற வருமான விகிதாச்சாரத்தில் மலேசிய இந்தியர்களின் விகிதாச்சாரம் மிகவும் அதிகமானதாக இருந்தது.[209] இந்தியர்களுக்கிடையிலான சமசீரற்ற வருமான விகிதம் 0.44 விழுக்காடாக இருந்த வேளையில், பூமிபுத்ரா மற்றும் சீனர்களின் நிலை 0.42 விழுக்காடாக இருந்தது.

ஆயினும், 2014ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இந்நிலை சற்று மாறுபட்டு இந்தியர்களுக்கிடையிலான சமசீரற்ற வருமான விகிதாச்சாரம் 0.39 விழுக்காடாக குறைந்தது. இந்நிலையானது பூமிபுத்ராக்களுக்கிடையிலான சமசீரற்ற வருமான விகிதாச்சாரத்துடன் ஒத்து இருந்தது. ஆனால், சீனர்கள் மத்தியிலான சமசீரற்ற வருமான விகிதாச்சாரம் 0.41 விழுக்காடாக இருந்தது. (இந்த விகிதாச்சார மேம்பாட்டிற்கு பிரிம் அல்லது ஒரே மலேசியா மக்கள் உதவித் தொகை காரணமாக இருக்கலாம். ஆனால், வருமான உயர்வு அல்லது உபரி வருமானம் இதற்கு காரணமாக இருக்கவில்லை).[210]

நிதியுதவித் திட்டங்கள் வாழ்க்கை செலவினங்களை குறைப்பதில் தற்காலிக உதவி புரியலாம். எனினும், இந்த திட்டத்தின் நோக்கம் நாட்டின் குறைந்த வருமானம் பெறும் பி40 பிரிவில் இருக்கும் இந்தியர்களின் வருமானத்தை உயர்த்துவதே ஆகும். அவர்களின் வருமானம் அதிகரிப்பதற்கும் அதை நீடிக்கச் செய்வதற்கும் உதவி புரிவதும் இதில் அடங்கும். இப்பிரிவினரின் வாழ்க்கை தரத்தையும் சொத்துடைமையையும் மேம்படுத்த ஒரு குறிப்பிட்ட இலக்கும் ஆக்கப்பூர்வத் திட்டங்களும் இல்லாமல் பி40 மக்களின் சமூக பொருளாதார மேம்பாடு என்பது சாத்தியம் ஆகாது.

209 ஜீனி குணகம், 0–1 குறியீட்டின் மூலம் வருமான சமமின்மையைக் குறிக்கும். என் கூடினால், சமமின்மையும் கூடும்

210 குடும்பங்களின் நிலை II அறிக்கை, கசானா ஆய்வு மையம்




நமது பூர்வீக வரலாறு வேறுவிதமாக இருக்கலாம் ஆனால் தொழில்துறைக்கு தேவையான திறனாற்றல் குறைவும் சந்தை மற்றும் சேவை தரமும் நடப்புச் சூழலுக்கு ஏற்ப இல்லாததுமே மலேசிய இந்திய சமூகத்தில் காணப்படும் எழ்மை சூழலுக்கு காரணங்களாக இருக்கின்றன. தலைமுறை மாற்றத்தில் தொழில்திறனாற்றல் மற்றும் வருமானம் அடைந்த வளர்ச்சி குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், மற்ற இனங்களுடன் ஒப்பிடுகையில் மலேசிய இந்தியர்களின் வளர்ச்சி மிகவும் குறைவாகவே இருக்கின்றது. பூமிபுத்ரா இளம் தலைமுறையினர் 25 விழுக்காடும் சீனர்கள் 39 விழுக்காடும் வளர்ச்சியடைந்துள்ள வேளையில்[211], மலேசிய இந்திய இளம் தலைமுறையினர் வெறும் 19 விழுக்காட்டை மட்டுமே பதிவு செய்துள்ளனர்.[212]

இந்நிலை வருமான உயர்விலும் பிரதிபலிக்கிறது. தங்கள் பெற்றோர்களைப் போலவே குறைந்த வருமான நிலையில் 27 விழுக்காட்டு பூமிபுத்ரா தலைமுறையிரும் 11 விழுக்காட்டு இளம் சீன சமூகத்தினரும் இருக்கின்றனர்.[213] ஆனால், இந்திய சமூகத்திலோ இளம் தலைமுறையினர் 38 விழுக்காட்டினர் தங்கள் பெற்றோர்களின் குறைந்த வருமானச் சூழலிலேயே இன்னும் உழன்று வருகின்றனர்.

பெற்றோர்களின் சமூக பொருளாதார நிலையை பெண் பிள்ளைகளைக் காட்டிலும் ஆண் பிள்ளைகள் குறைவாக சார்ந்துள்ளதும் ஆய்வில் தெரிய வந்துள்ளது. பெற்றோர்களுடன் வருமான சார்ந்த உறவு கொண்டிருப்பதில் மற்ற சமூகப் பெண்களைக் காட்டிலும் இந்திய சமூகப் பெண்கள் முன்னணி வகிக்கின்றனர். இதன் காரணமாக இந்திய பெண்கள் மேம்பாடு காணும் வாய்ப்பு குறைவாக உள்ளது.[214]

கல்வி, தொழில்திறன் மற்றும் வர்த்தக தொழில்திறன் ஆகியவற்றின் வழியாகவும் வர்த்தகத்திற்கு தேவையான உதவிகள் வழங்குவதன் வழியாகவும் மலேசியர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அரசாங்கம் திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகிறது. இந்த நடவடிக்கைகளின் வழி குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு உதவ 11ஆவது மலேசிய திட்டத்தில் பல்வேறு வியூகங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் வகுத்துள்ள வியூகங்களை பி40 பிரிவைச் சேர்ந்த இந்திய சமூகத்தினர் முழுமையாகப் பயன்படுத்தி நன்மை அடையவும் அவர்களின் மாத வருமானத்தை 2020க்குள் இரட்டிப்பாக உயர்த்த உதவுவதே இந்த வரைவு திட்டத்தின் நோக்கமாகும்.



211 மலேசிய வேலைத் தர வகைப்பாடு 2008 அடிப்படையில், வேலைககள் வகைப்படுத்தப்படுகின்றன, மலேசிய புள்ளிவிபரத் துறை, மலேசிய மற்றும் உலக வங்கி

212 Climbing the Ladder; Socioeconomic Mobility in Malaysia. Khazanah Research Institute, October 2016

213 Ibid. Income quintiles are derived by sorting and dividing the study's sample. Thus, income quintiles for parents and children would differ according to the income distribution of the respective generations

214 Ibid.

# வாழ்வாதாரத்தையும் சொத்துடைமையையும் வளப்படுத்துதல் : இலக்குகள்

11ஆவது மலேசிய திட்டத்தின் இலக்குகளை மனதில் கொண்டு சம்பந்தப்பட்ட அமைச்சுகளும் அரசு நிறுவனங்களும் வகுத்துள்ள திட்டங்கள் வழி கீழ்க்காணும் இலக்குகளை அடைய மலேசியப் பெருந்திட்டம் நோக்கம் கொண்டுள்ளது.

## அ. வேலைவாய்ப்பு

- இனங்களிடையே காணப்படும் வேலை இல்லாதோர் எண்ணிக்கை இடைவெளியை அடுத்த 5 ஆண்டுக்குள் குறைக்க வேண்டும். இதில் 30 வயதுக்கும் குறைவான இளையோருக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.
- பி40 பிரிவின் குடும்பங்களின் சராசரி நடுத்தர வருமானத்தை இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 5 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குதல்.[215]

## ஆ. வணிகம்

- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுக்குள் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனங்களின் எண்ணிக்கையும் வர்த்தகங்களை பதிவு செய்து தனியாகவும் பங்காளித்துவ முறையில் செயல்படும் இந்திய வணிகர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து ஏற்றம் பெறச் செய்தல்.[216]
- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளில், தேசிய முக்கியப் பொருளாதார பகுதியைச் சேர்ந்த துறைகளில் இடம்பெற்றிருக்கும் இந்திய நிறுவனங்கள் அல்லது இந்தியர்கள் பங்காளித்துவம் பெற்றுள்ள எண்ணிக்கையை அதிகரித்தல்.[217]
- மலேசிய இந்தியர்களுக்கு சொந்தமான அல்லது பங்காளித்துவம் பெற்றுள்ள சிறு நடுத்தர வர்த்தகங்கள் பெறப்படும் வருவாய் தொடர்ந்து அதிகரிப்பதை இத்திட்டம் உறுதி செய்தல்.

## இ. சொத்துடைமை

- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுக்குள் பி40 பிரிவைச் சேர்ந்த குடும்பத்தினரின் சொத்துடைமைகளை அதிகரித்தல்.[218]

---

215 11 மலேசியத் திட்டத்திற்கேற்ப, 2015 ஆண்டின் அடிப்படையில்

216 மலேசிய நிறுவன ஆணையத்தில் பதிந்துள்ள நிறுவனங்கள் (எஸ்எஸ்ஆம்)

217 2017ஆம் அடிப்படையைக் காட்டிலும் உயர்ந்துள்ளது

218 2017ஆம் அடிப்படையைக் காட்டிலும் உயர்ந்துள்ளது

## அ. வேலை வாய்ப்பு

2015ஆம் ஆண்டில் நாட்டில் மொத்தம் 868,800 வேலை செய்யும் இந்தியர்கள் இருந்தனர். இவர்களில் 22.1 விழுக்காட்டினர் உற்பத்தி துறையில் வேலை செய்து வந்த நிலையில் 15.1 விழுக்காட்டினர் மொத்த, சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தனர். மேலும் 10.9 விழுக்காட்டினர் போக்குவரத்து துறையில் பணிப் புரிந்தனர்.

மலேசிய இந்தியர்களில் 50 விழுக்காட்டுக்கும் அதிகமானோரில் 17.4 விழுக்காட்டினர் விற்பனை சேவை துறையிலும், தொழில்சாலைகளில் இயந்திரங்களை இயக்குபவர்களாகவும் சாதாரண ஊழியர்களாகவும் 22.5 விழுக்காட்டினரும், கடை நிலை ஊழியர்களாக 10.2 விழுக்காட்டினரும் , மிகவும் குறைந்த வருமானம் பெறும் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.[219]



இந்தியர்களின் இந்த வகையான வேலை நிலைக்கு முக்கியக் காரணம் குறைந்த கல்வி தகுதியும் தொழில்திறனாற்றல் இல்லாததுமே ஆகும். 2010 ஆம் ஆண்டில் நகர்ப்புற ஏழை இந்தியர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், இத்தரப்பினரில் 32 விழுக்காட்டினர் ஐந்தாம் படிவ கல்வி தகுதியும் 41 விழுக்காட்டினர் மூன்றாம் படிவம் வரையிலான கல்வி தகுதியும் பெற்றுள்ளனர் என்பது தெரிய வந்தது. மேலும் 11.1 விழுக்காட்டினர் ஆரம்பக் கல்வி தகுதியும் எஞ்சிய 5 விழுக்காட்டினர் முறையான கல்வி அறிவு பெற்றிருக்கவில்லை.[220]

பி40 பிரிவின் உட்பிரிவில் சுமார் 25,000 இந்தியர்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்களில் சிலர் நாடற்றவர்களாகவும் மேலும் பலர் ஆவணங்கள் தொடர்பான சிக்கலில் இருக்கின்றனர். முறையான ஆவணங்கள் இல்லாத காரணத்தால் பலர் முறையான கல்வி பெற முடியாமலும், வேலை கிடைக்காமலும் தவிக்கின்றனர். இந்த விவகாரம் 'சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்' எனும் அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

வேலையில்லாத பிரச்சினையே மலேசிய இந்திய சமூகம் எதிர்நோக்கும் முக்கிய விவகாரமாக உள்ளது. 2015ஆம் ஆண்டில், நாட்டின் வேலை இல்லாதோர் சராசரி விகிதாச்சாரம் 3.3 விழுக்காடாக இருந்த வேளையில் இந்தியர்களின் சராசரி விகிதாச்சாரம் 4.3 விழுக்காடு இருந்தது. பூமிபுத்ரா சமூகத்தில் வேலை இல்லாதோர் 3.6 விழுக்காடாகவும் சீன சமூகத்தில் 2.3 விழுக்காட்டினர் மட்டுமே வேலை இல்லா பிரச்சினையை எதிர்நோக்கினர்.[221] வேலை இல்லாதோரை ஆண் பெண் என்ற ரீதியில் பிரித்து கணக்கிடுகையில் மலேசிய ஆண்களில் சராசரியாக 2.9 விழுக்காட்டினர் வேலை இல்லாமல் இருந்த வேளையில் இந்திய சமூகத்தில் இந்த சராசரி விகிதாச்சாரம் 4 விழுக்காடாக இருந்தது தெரிய வந்தது. அதேவேளையில், நாட்டில் வேலையில்லா பிரச்சினையை 3.2 விழுக்காடு பெண்கள் சந்திக்கும் வேளையில், இந்திய சமூகப் பெண்களில் 5.2 விழுக்காட்டினர் வேலை கிடைக்காமல் இருக்கின்றனர்.[222] ஆண் பெண் இரு பாலருக்கும் இடையிலான இந்த பெரிய இடைவெளி ஏற்பட்டதற்கு குறிப்பிட்ட காரணம் எதனையும் கூற முடியவில்லை.

ஆயினும் கலாச்சார எதிர்ப்பார்ப்புகள், குழந்தை பராமரிப்பு தேவைகள் போன்றவை இந்திய பெண்களில் பலர் வேலை இல்லாத பிரச்சினையை எதிர்நோக்குவதற்கு காரணமாக இருக்கக் கூடும்



219 வேலைவாய்ப்பு எண்ணிக்கை இனரீதி மற்றும் வேலை வகைகள். மூலம்: தொழில்துறை அமைச்சு விசாரணை, தேசிய புள்ளிவிபரத்துறை, 2015.

220 Survey was conducted in Selangor in 2010 by Professor Mahendiran Nair's research team at Monash University Malaysia, extracted from Malaysian Indian Economic Development Report For RMK-11, by SEED Steering Committee

221 தொழில் வள ஆய்வு மேற்கொண்ட இனவாரியான மற்றும் வயதுப்பிரிவினரின் வேலை வாய்ப்புகள், மலேசிய புள்ளி விபரங்கள்

222 Extracted from Inclusive Development and Malaysian Indians by Muhammed Abdul Khalid - Contemporary Malaysian Indians, edited by Denison Jayasooria and K.S. Nathan




இன்னும் ஆழமான ஆய்வுகள் இது குறித்து செய்யப்படுவது அவசியமாகும். இந்திய சமூகப் பொருளாதார விவகாரத்தில் பெரும் தாக்கத்தை இந்த ஆய்வின் முடிவு நிச்சயம் ஏற்படுத்தும். இந்திய இளைஞர்கள் மத்தியிலான வேலை இல்லாத பிரச்சினை முக்கிய விவகாரமாக உருவெடுத்துள்ளது. மற்ற இன இளைஞர்களுடன் ஒப்பிடுகையில், அதிகளவிலான இந்திய இளைஞர்கள் வேலை கிடைக்காமல் இருக்கின்றனர். உதாரணமாக, 15 வயதுக்கும் 19 வயதுக்கும் இடையிலான இந்திய இளைஞர்களில் 25.5 விழுக்காட்டினர் வேலை இல்லாதவர்களாக பட்டியலிடப்பட்டுள்ளனர். பூமிபுத்ராக்களில் 18.1 விழுக்காட்டினரும் சீனர்களில் 12.1 விழுக்காட்டினர் மட்டுமே இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். அதேவேளையில், 20 வயதுக்கும் 24 வயதுக்கும் இடையிலான இந்திய இளைஞர்களில் 14.5 விழுக்காட்டினரும் பூமிபுத்ரா சமூகத்தில் 11.6 விழுக்காட்டினரும் சீன சமூகத்தில் 8.0 விழுக்காட்டினரும் வேலை இல்லாதோராக பட்டியலிடப்பட்டுள்ளனர். இந்த பட்டியலிலும் இந்தியர்கள் அதிகம் இடம்பெற்றிருப்பது கவலை அளிப்பதாக உள்ளது.[223]

## இனரீதியாக வேலையின்மை விகிதங்கள் (%)




223 Employment Rates By Ethnicity And Age Group 2015 by Penyiasatan Tenaga Buruh, Jabatan Perangkaan Malaysia

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

குறைந்த திறன், கல்வி தகுதி இடைவெளி ஆகிய காரணங்களால், குறைந்த வருமானம் பெறுவோர் (B40) வேலை கிடைப்பதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அண்மைய காலமாக மலேசிய இந்தியர்களிடையே குறைந்த வருமானம் ஈட்டுவோரை தொழில்முனைவு வழி மேம்படுத்த தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. வேலை வாய்ப்பு, திறன் மேம்பாடு ஆகியவற்றின் வாயிலாக வருமானத்தை அதிகரிக்கும் வளங்கள் மீது குறைவான கவனம் செலுத்தப்படுகிறது. மலிவான வெளிநாட்டு தொழிலாளர்களின் போட்டித்தன்மையாலும், ஆள்பலத்தேவையைக் குறைக்கும் தொழிட்நுட்பங்கள் ஏற்படுத்திய பாதிப்புகளாலும் நிலைமை மேலும் கடுமையாகியுள்ளது.

இந்த நகல் திட்ட இலக்குகளைச் செயல்படுத்த, அமலாக்கங்களில் காணப்படும் இடைவெளி சரிசெய்யப்பட வேண்டும்.




குறிப்பாக வேலைக்கு அமர்த்தும் திட்டங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். திறன் மற்றும் வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் பல்வேறு திட்டங்களை அரசாங்கம் விரிவாக்கியுள்ளது. டேலன்ட்கோர்ப் -இன் கீழ் கல்லூரி, பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கென பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் பங்கேற்பாளர்கள் வேலை சந்தைக்கு ஏற்ப போட்டியாற்றலை அதிகரித்து கொள்ள பயிற்சியளிக்கப்பட்ட பின்னர் வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். அதே போல, ஒரே மலேசியா பயிற்சி திட்டத்தின் கீழ், பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர், அரசாங்க தொடர்புடைய நிறுவனங்களில் வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது. வேலை சந்தையில் இடம்பெறுவதற்கு முன்னதாக, மாணவர்களைத் தயார்ப்படுத்தும் அணுகுமுறைகளும் உயர்கல்வி அமைச்சின் கீழ் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரணமாக பட்டம் பெறுவதற்கு முன்னர் மதிப்பீட்டு முறையை வலுப்படுத்துவது, தேர்வு செய்த கல்வி துறையின் பாடத்திட்டத்திற்கு ஏற்ப தொழில்துறையிலும் ஆழமான அனுபவங்களை வழங்குவது அதிலடங்கும்.

நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி துறைகளைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு, இளைஞர், விளையாட்டு அமைச்சின் கீழ் உள்ள தேசிய இளைஞர் திறன் கழகம், மனிதவள அமைச்சின் கீழ் உள்ள தொழிற்துறை பயிற்சி கழகம், கல்வி அமைச்சின் கீழ் உள்ள சமூகக் கல்லூரிகள் மற்றும் பல கழகங்கள் சில திறன் பயிற்சி திட்டங்களை வழங்கி வருகின்றன. நாடு முழுவதும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து இருநூறு திறன் பயிற்சி மையங்கள் எண்ணெய் - எரிவாயு, மோட்டார் பழுதுபார்த்தல், வாகனத் தயாரிப்பு தொழிட்நுட்பம், ஹோட்டல் நிர்வாகம், சமையல், பத்திரி தொழில் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சிகளை வழங்கி வருகின்றன.

224 An example is the Integrated Cumulative Grade Point Average (iCGPA) where students are assessed across seven indicators including communication skills and problem-solving abilities

225 An example is the 2u2i program where students spend two years in university and the next two years in a work-based learning program as opposed to short bursts of internships or industrial training

தேசிய அடைவுநிலைக்கான முக்கிய துறைகள் (NKEA)[226] கீழ் எண்ணெய், எரிவாயு & எரிசக்தி: செம்பணை எண்ணெய் & ரப்பர்; சில்லறை & மொத்த வியாபாரம்; நிதி சேவைகள்; சுற்றுலா; மின்னியல் & மின்சாரம்; வியாபாரம்; தொடர்பு சேவை; கல்வி; விவசாயம்; சுகாதார பராமரிப்பு பயிற்சி திட்டங்கள் உருவாக்கப்பட்டன. உதாரணமாக எண்ணெய் & எரிவாயு துறையில் தேசிய இளைஞர் திறன் கழகம் போன்ற கழகங்கள் பெட்ரோனாஸ் நிறுவனத்துடன் ஒத்துழைப்பை ஏற்படுத்தி கொண்டுள்ளன. இந்த ஒத்துழைப்பின் கீழ் ஜொகூர், பெங்கேராங்கில் பெட்ரோலிய ரசாயன ஒருங்கிணைந்த மேம்பாட்டு திட்டம் (ரேபிட்), பெட்ரோலிய ரசாயன சுத்திகரிப்பு ஆகிய துறைகளில் நுட்ப பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.



பயிற்சிக்குப் பின்னர், பங்கேற்பாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை உறுதி செய்யவே திறன் பயிற்சி கழகங்களுக்கும் - தொழிற்துறையினருக்கும் இடையே ஒத்துழைப்பு நிலவ வேண்டுமென அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இத்தகைய திட்டங்களுக்கான தேவை அதிகமாக உள்ளது. மலேசிய இந்தியர்களில், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் தரப்பினரின் (IB40) பங்கேற்பு சமமாகவும், நியாயமாகவும் இருப்பது உறுதி செய்யப்படுவது அவசியம். அண்மைய ஆண்டுகளில், தேசிய இளைஞர் திறன் கழகத்தில் பதிவு பெறும் மொத்த பங்கேற்பாளர்களில், இந்தியர்களின் பங்கேற்பு 10 விழுக்காடு அதிகரித்துள்ளது. இந்நிலையை எட்ட உதவிய, இளைஞர், விளையாட்டு அமைச்சு,ஆதரவு நிறுவனங்களுக்கு இவ்வேளையில் நன்றி. எனினும், இதுவரை மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில், குறைந்த வருமானம் பெறும் IB40 தரப்பினர் அரசாங்க திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி கொள்ளவில்லை. அந்த வாய்ப்புகள் மீதான குறைவான விழிப்புணர்வு, மொழி ஆற்றலின்மை, பண்பாட்டு தடைகள், தன்னம்பிக்கையின்மை போன்றவை இதற்குக் காரணங்களாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. இவ்விவகாரத்தில், பாலின பிரிவுகளுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.



IB40 வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் ஆராயப்பட வேண்டும். பயிற்சிகள், குழந்தைகள் பராமரிப்பில் ஆதரவு போன்றவற்றை வழங்குவது மூலம் தொழிற்துறையில் அவர்கள் உற்பத்தியாற்றலுடன் திகழ்வதற்கு வழிவகுக்கும். பி40 பிரிவைச் சேர்ந்த இந்தியர்களைக் கவர பல்வேறு நடவடிக்கைகளை செடிக் மேற்கொண்டது. இந்தியர்களுக்கு பொருத்தமான தொழில்திறன் பயிற்சிகளை அளிக்க தனியார் தொழில்திறன் பயிற்சி கழகத்துடன் ஒத்துழைத்தது. இந்நடவடிக்கைகள் யாவும் மிகவும் பயன்மிக்கதாக இருப்பினும் அரசாங்கம் சார்ந்த திட்டங்கள் போன்று பரவலாக சென்று அடையவில்லை. எனவே, அரசாங்கம் வழங்கும் தொழில் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலை வாய்ப்புகள் போன்ற திட்டங்கள் பற்றிய தகவல்கள் ஏழை இந்தியர்களை சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

கல்வி தகுதி, திறனாற்றல் ஆகியவற்றில் காணப்படும் பலவீனம் காரணமாக வேலை வாய்ப்புகள் குன்றியுள்ளன என்றாலும், இந்தியத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் முதலாளிகள் சிலர் பாரபட்சமாக இருப்பதும் ஒரு காரணம் என்ற புகாரும் கூறப்படுகிறது.[227] இந்த குற்றச்சாட்டின் நம்பகத்தன்மை குறித்து ஆராய்வதோடு பி40 பிரிவைச் சேர்ந்த இந்தியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க முதலாளிகளை ஊக்குவிப்பது அவசியமாகும்.

226 The NKEAs are oil, gas & energy; palm oil & rubber; wholesale & retail; financial services; tourism; electronics & electrical; business services; communications content & infrastructure; education; agriculture; and healthcare

227 இனரீதி மற்றும் வயது குழு அடிப்படையில் வேலை வாய்ப்பு 2015, மலேசிய புள்ளிவிபரத்துறை

## மலேசிய இந்தியப் பெருந்திட்டத்தின் பரிந்துரைகளும் செயல்திட்டங்களும்

இந்த வரைவுத்திட்டம் கீழ்க்காணும் இலக்குகளை அடைய நோக்கம் கொண்டுள்ளது :

- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் இனங்களுக்கிடையிலான வேலை இல்லாதோர் விகிதாச்சார இடைவெளியை குறைத்தல். இதில் 30 வயதுக்கும் குறைவான இளைஞர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 5 ஆண்டுகளுக்குள் பி40 பிரிவைச் சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சராசரி மாத வருவாயை இரட்டிப்பாக்க வேண்டும்.[228]

இந்த இலக்குகளை அடைய இந்தப் பெருந்திட்டம் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ள எண்ணம் கொண்டுள்ளது.

### 1. வருவாய் அதிகரிப்பு தொடர்பான நிகழ்ச்சிகளை மீண்டும் ஏற்பாடு செய்வதுடன் இதே போன்ற நிகழ்ச்சிகளை நடத்தும் சம்பந்தப்பட்ட இலாகா/ குழுவுடன் ஒத்துழைப்பு நல்குவது

மலேசிய இந்தியர்கள் மத்தியில் வர்த்தகத் துறை குறித்து விளக்கம் மற்றும் உதவிகள் புரிவதற்காக தோற்றுவிக்கப்பட்ட சீட் அமைப்பை தொழில்முனைவர் பயிற்சிகள் வழங்கும் அரசு அமைப்புகள் இணைத்துக் கொள்ள வேண்டும். நாடு முழுவதிலும் பரவலாக பயிற்சிகள் நடத்தும் வசதியைக் கொண்டுள்ள இந்த அரசு நிறுவனங்கள் சீட் அமைப்பை இணைத்துக் கொண்டால், சம்பந்தப்பட்ட பயிற்சிகள் அதிகளவிலான இந்தியர்கள் பங்கெடுக்க துணை புரியும். மலேசிய இந்தியர்கள் இது போன்ற பயிற்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் பல்வேறு தொழில்திறன்களை கற்று பயன்பெற வேண்டும் என்ற சீட்டின் இலக்கு நிறைவேறுவதற்கு இந்த வகையான ஒத்துழைப்பு அவசியமாகும். இது போன்ற பயிற்சிகளை நடத்திய அனுபவம் கொண்டுள்ள சீட் அதிகாரிகளின் திறனாற்றலால் அரசு நிறுவனங்களும் பயன் பெறலாம்.



இந்தக் குழுவானது இந்தப் பயிற்சி திட்டங்களில் கலந்து கொள்ளும் பெண் பங்கேற்பாளர்கள் தங்கள் திறனாற்றலை மேம்படுத்திக் கொள்ளவும் வேலை கிடைப்பதற்கான தகுதியை உயர்த்திக் கொள்ளவும் உதவும். குழந்தை பராமரிப்பு சேவை, வசதிகள் தொடர்பான துறைகளில் உள்ள வேலை வாய்ப்புகள் இந்த பங்கேற்பாளர்கள் அறிந்து பயனடைய செய்ய வேண்டும்.

### 2. தொழில்திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பு திட்டங்களில் நிறுவனங்களையும் முதலாளிகளையும் பங்காளிகளாக பதிவு செய்வது

சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்வதன் வழி இந்நிறுவனங்களில் கிடைக்கப்பெறும் வேலைவாய்ப்புகள் இந்திய பட்டதாரி இளைஞர்களுக்கு சென்றடைவதை இக்குழு உறுதி செய்யும்.
மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள், உதாரணமாக தோட்டத் தொழில்நிறுவனங்களுடன் இணைந்து இந்திய இளைஞர்களுக்கு தொழில்திறன் பயிற்சிகளும் வழங்கப்படும். இதன் வழி சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகளை அடையாளம் காணப்படும்.

வேலைக்கமர்த்தும் முதலாளிகளின் செலவினத்தை குறைக்கும் வண்ணம் ஓர் உக்குவிப்புத் திட்டம் ஒன்றையும் இக்குழு செயல்படுத்தும். புதிய ஊழியர்களுக்கான சேமநிதி தொகையில் ஒரு பகுதியை அல்லது முதலாமாண்டு அல்லது மாத ஊதியத்தை இத்திட்டக்குழு ஏற்றுக் கொள்ளும்,

228 11ஆவது மலேசியத் திட்டத்திற்கேற்ப, 2015ஆம் ஆண்டின் அடிப்படையில்.

## ஆ. தொழில்முனைவர் துறை

இந்நாட்டில் நல்ல வருமானத்தை தரும் பல்வேறு துறைகளை மலேசிய இந்திய சமூகம் இன்னும் ஊடுருவவில்லை என்றே கூற வேண்டும். வணிகத் துறையில் ஈடுபட்டுள்ளோரில் சீனர்கள் 23.2 விழுக்காட்டினரும் பூமிபுத்ரா 22.4 விழுக்காட்டினரும் ஈடுபட்டிருக்கும் வேளையில் இந்தியர்கள் வெறும் 14.3 விழுக்காடு மட்டுமே ஆகும்[229]. 2005 ஆம் ஆண்டுக்கும் 2013ஆண்டுக்கும் இடையில் மொத்தம் 38,138 இந்தியர்கள் மட்டுமே வணிகத் துறையில் ஈடுபட்டிருந்த வேளையில், இவர்களில் 91 விழுக்காட்டினர் சிறு வர்த்தகங்களில் ஈடுபட்டுள்ளனர் என புள்ளி விவரங்கள் குறிக்கின்றன.[230]




கடந்த பத்தாண்டுகளில் சுமார் 1.5 விழுக்காட்டுக்கும் 1.6 விழுக்காட்டுக்கும் இடையிலான இந்திய நிறுவனங்கள் மட்டுமே பங்கு சந்தை பட்டியலில் இடம்பெற்றுள்ளன. மற்ற இனங்களுடன் ஒப்பிடுகையில் இது மிகவும் குறைவாகும். இந்தியர்களில் வெகு சிலர் மட்டுமே பெருவர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.[231]

229 Labour Force Survey Report, 2014

230 Ibid.

231 11ஆவது மலேசியத் திட்டத்திற்காக, சீட் வழிகாட்டும் செயற்குழுவின் மலேசிய இந்தியப் பொருளாதார மேம்பாட்டு அறிக்கை

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

இந்திய வர்த்தக உரிமையாளர்களின் தொழில்திறன் குறைவே இத்துறையில் அவர்கள் எதிர்நோக்கும் முக்கிய விவகாரமாகவும் சவாலாகவும் இருக்கிறது. நாட்டில் உள்ள பல இந்திய சிறு வர்த்தகங்கள் மற்றும் நிறுவனங்களின் சந்தை மதிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த மதிப்பை பெருநிறுவனங்களின் மதிப்புக்கு மாற்றுவதும் கடினமாக இருக்கிறது. இந்த வர்த்தகர்களிடம் தொழில்திறன் ஆற்றல், சந்தை பற்றிய அறிவு, நிதி ஆகியன குறைவாக இருப்பதே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. மேலும் வர்த்தக கட்டமைப்புகளுடன் இவர்கள் சிறந்த தொடர்பை பேணுவதில்லை.



இளம் தொழில்முனைவர்களுக்கு பல்வேறு தொழில்பயிற்சிகள், நிதிதிட்டங்களை அரசாங்கம் நடத்தி வருகிறது. அண்மையக் காலம் வரையில், இந்திய தொழில்முனைவர்கள் இந்த வாய்ப்புகளை சரிவர பயன்படுத்தாமல் இருந்தனர். இது போன்ற திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததும், மேலும் இவற்றில் பங்கெடுப்பதில் தன்னம்பிக்கை இல்லாததும் இதற்கு காரணமாகும். ஆயினும், சீட் தோற்றுவிக்கப்பட்டது முதல், இந்த வியூக அமைப்பு வர்த்தகங்களுக்கு அரசாங்கம் வழங்கும் கடனுதவி திட்டங்கள் குறித்து இந்திய தொழில்முனைவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, அரசாங்க வர்த்த கடனுதவிகளுக்கு விண்ணப்பிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது.



தொழில் பயிற்சி, வழிகாட்டுதல் போன்ற சீட்டின் நடவடிக்கைகள் இந்திய வர்த்தகர்கள் அரசாங்க சேவைகளைப் பெற ஊக்குவித்துள்ளன. இந்த அறிக்கை வெளியிடும் நாள் வரையில், 29,115 இந்திய தொழில்முனைவர்களுக்கு மொத்தம் 1.2 பில்லியன் வெள்ளி கடனுதவியை சீட் பெற்றுத் தந்துள்ளது.[232] மேலும் திறனாற்றல் மேம்பாட்டு திட்டங்கள் வழியாக 3,500 இந்திய வர்த்தகர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. அரசாங்க நிறுவனங்களுடன் கொண்டுள்ள வியூகப் பங்காளித்துத்தை அனைத்து வகையான அரசு திட்டங்களில் இந்தியர்கள் பங்கேற்பு கணிசமாக இருப்பதை சீட் செய்து வந்துள்ளது. உதாரணமாக சீட் - தெக்குன் சிறப்பு திட்டம் ஸ்பூமி ( SPUMI) போன்ற திட்டங்களின் விண்ணப்பதாரர்களை நேர்க்காணல் செய்ததுடன் அவர்கள் தொழில் தொடங்குவதற்கான நிதியைப் பெற்றுத் தந்துள்ளது. இதுவரை 18,201 சிறிய தொழில்முனைவர்களுக்கு சுமார் 245 மில்லியன் வெள்ளி நிதியுதவியை சீட் பெற்றுத் தந்துள்ளது.[233]

மேலும், அமானா இக்திஹார் மலேசியா எனும் அமைப்புடன் இணைந்து இந்திய தொழில் முனைவர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு வர்த்தக கடனுதவிகள் வழங்கியுள்ளது. பெண்கள் சார்ந்த தொழில்நிறுவனங்களுக்கு நிதியுதவி, தொழில் பயிற்சி போன்றவற்றை வழங்கும் நோக்கத்தை ஏய்ம் கொண்டுள்ளது. சீட்– ஏய்ம் பங்காளித்துவம் வழியாக 9,310 இந்திய பெண் தொழில்முனைவர்களுக்கு சுமார் 114 மில்லியன் வெள்ளி நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.[234]

---

232 As reported by SEED, the data is compiled from micro financing channels such as TEKUN, AIM, SEED Start Up Nation and SME financing channels such as SME Bank, SME Corp, MIDF, Credit Guarantee Corporation (CGC), Shariah-compliant SME Financing Scheme (SSFS) as well as other initiatives such as Small Retailer Transformation Program (TUKAR) and Automotive Workshop Modernisation (ATOM)

233 தெக்கூன் நேஷனல் மாதாந்திர மேம்பாடு புதுப்பித்தல்

234 மாதந்தோறும் புதுப்பிக்கப்படும் ஏஐஎம் தரவுகள்




இதனிடையே, சற்று பெரிய இந்திய தொழில் நிறுவனங்களுக்கு உதவும் நோக்கத்தில்  சிறு நடுத்தர வங்கியுடன் சீட் இணைந்து மை சீட் எஸ்.எம்.இ வங்கியுடன் கூட்டு ஒப்பந்தம் புரிந்துள்ளது, இத்திட்டம் வழியாக 2008ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை 181 இந்திய வர்த்தகங்களுக்கு மொத்தம் 291 மில்லியன் நிதியுதவி கிடைக்க சீட் உதவியுள்ளது.[235]

மேலும் 2015 ஆண்டு எஸ்.எம்.இ. வங்கி தொழில்முனைவர் மேம்பாடு மற்றும் ஆய்வு மையம் ஒன்றை தொடங்கியது. இதன் வழி அவ்வங்கி இதன் கடனுதவி விண்ணப்பதாரர்களுக்கு வர்த்தம மேம்பாட்டு பயிற்சிகளை அளித்து வருகிறது. சீட் பரிந்துரைத்த இந்திய வர்த்தகர்களுக்கும் இப்பயிற்சிகளை இவ்வங்கி அளித்து வந்துள்ளது. இதன் வழி கடனுதவி விண்ணப்பங்களின் வெற்றி வாய்ப்பு 31 விழுக்காட்டில் இருந்து 89 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

அதேவேளையில் மலேசிய தொழில்துறை மேம்பாட்டு நிதி நிறுவனத்தின் ஆதரவுடன்  2009ஆம் ஆண்டு தொடங்கி இதுவரை மொத்தம் 93 இந்திய வர்த்தகங்களுக்கு 100 மில்லியன் வெள்ளிக்கும் அதிகமான நிதியுதவியை சீட் பெற்று தந்துள்ளது.[236] சீட்டின் இந்த முயற்சிகள் தொடர வேண்டும். அதேவேளை இதன் நடவடிக்கைகள் அடுத்த கட்டத்திற்கு முன்னேறி அரசாங்கத்தின் வர்த்தக நிதியுதவிகளை இந்தியர்களுக்கு பெற்று தரும் வகையில், சம்பந்தப்பட்ட அரசு நிறுவனங்களுடனான உறவை வலுப்படுத்த வியூகங்கள் வகுக்க வேண்டும்.

அரசாங்க தொடர்பு நிறுவனங்களின் விற்பனையாளர் மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் குத்தகைகளை இந்திய நிறுவனங்களும் பெறுவதற்கான வழிவகைகள் அமைக்க வேண்டும்.  இதுவரை சிறு நடுத்தர வர்த்தக நிதியுதவிகளை பெற்றுத் தருவதில் வெற்றி கண்டுள்ள சீட்,  இந்திய இளம் தொழில்முனைவர்களை வலுப்படுத்தும் ஓர் ஆதரவு அமைப்பாக தொடர்ந்து செயல்பட வேண்டும். இந்தியர்களுக்கு தேவையான கட்டமைப்பு ஆதரவையும் சீட் வழங்கிட வேண்டும்.

235 காலாண்டில் புதுப்பிக்கப்பட்ட எஸ்எம்ஈ வங்கி தரவுகள்

236 காலாண்டில் புதுப்பிக்கப்பட்ட எம்ஐடிஎஃப் தரவுகள்

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

இந்தப் பெருந்திட்டம் கீழ்க்காணும் இலக்குகளை அடையும் நோக்கம் கொண்டுள்ளது.

- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளில் நிறுவன இலாகாவில் பதிந்து கொள்ளும் இந்தியர்களுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் இந்தியர்கள் பங்குரிமை கொண்ட நிறுவனங்கள் தொடர்ந்து அதிகரிக்க வேண்டும்.[237]
- தேசிய முக்கிய பொருளாதார பகுதிகளில் இந்தியர்களுக்கு சொந்தமான நிறுவனங்கள் மற்றும் இந்தியர்கள் பங்குரிமை கொண்ட நிறுவனங்களின் பங்கேற்பு அதிகரித்தல்.[238]
- இத்திட்டம் அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளில் மலேசிய இந்தியர்களுக்கு சொந்தமான அல்லது பங்காளித்துவம் பெற்றுள்ள சிறு நடுத்தர வர்த்தகங்களின் வருவாய் தொடர்ந்து அதிகரிப்பதை உறுதி செய்தல்.

மேற்காணும் இலக்குகளை அடைய , கீழ்க்காணும் நடவடிக்கைகளை அமல்படுத்த இந்தப் பெருந்திட்டம் எண்ணம் கொண்டுள்ளது:

### 1. சீட் திட்டங்களை செம்மையாக்கி விரிவாக்கம் செய்தல்

மேலே கூறப்பட்டுள்ள தொழில்முனைவு துறை இலக்குகளை அடைய சீட்டின் மேம்பாட்டு திட்டங்கள் மேலும் அதிகமான இந்தியர் தொழில்முனைவர்களை கவர்ந்திழுக்க வேண்டும். புதிய தொழில்முனைவர்களை அடையாளம் காண்பதுடன் அதிக லாபமளிக்கும் வர்த்தகங்களையும் அடையாளம் காண வேண்டும்.



ஐபி40 இந்திய வர்த்தகம், ஐஎம்40 இந்திய வர்த்தகம் ஆகிய இரு முக்கிய பிரிவுகளை தெளிவாக விளக்குவதுடன் அவற்றை மேம்படுத்து பல்முனை வியூகங்களை அடையாளம் காண்பதும் சீட் மேற்கொள்ள வேண்டிய முதல் செம்மைபடுத்தும் நடவடிக்கையாகும் ஐபி40 இந்திய வர்த்தகம் என்பது பி40 பிரிவில் இடம்பெற்றுள்ள இந்திய சிறு வர்த்தக நடவடிக்கைளாகும். அதேவேளையில் ஐஎம்40 என்பது எம்40 பிரிவில் இடம்பெற்றுள்ள சிறு நடுத்தர இந்தியர வர்த்தக நிறுவனங்களாகும். தற்போது இந்த பிரிவுகளில் முறையே 34,705 நிறுவனங்களும் 3,433 நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளன.[239]

ஐபி40 வர்த்தகங்களுக்கு நிதியுதவி கிடைப்பதற்கு உதவும் நடவடிக்கை தொடரப்படுவதோடு மேலும் செம்மைபடுத்தப்படும். நடப்பு வர்த்தகங்களுக்கு கட்டம் கட்டமாக வழங்கப்படு கடனுதவிகளும் கடனுதவி உச்சவரம்பும் மறு ஆய்வு செய்யப்படும். அதேவேளையில் புதிய வர்த்தகங்களுக்கான தொடக்க மூலதனம் வழங்கும் புதிய நிதியுதவி திட்டம் வடிவமைக்கப்படும். வர்த்தகங்கள் தொடர்பான பயிற்சிகளில் பங்கேற்கும் வர்த்தகர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் அதிகரிக்கப்படும். மேலும், அதிக வளர்ச்சி அடையும் சாத்தியம் உள்ள சிறு நடுத்தர வர்த்தகங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படும்.

ஐஎம்40 வர்த்தகங்களுக்கு உதவும் வகையில் நிதி கழகங்கள் வழி அரசாங்கம் வழங்கும் நிதியுதவிகள், ஒதுக்கீடுகள் கிடைக்க உதவும் நடவடிக்கைகள் தொடரப்படும். ஆக்கப்பூர்வமான ஆதரவு நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் வர்த்தக தொடர்பு நிதியுதவி திட்டங்களில் மலேசிய இந்திய வர்த்தகர்களின் ஒதுக்கப்படும் தொகையை அறிவிக்க நிதிகழகங்களுக்கு ஆலோசனை தெரிவிக்கப்படும்.

237 மலேசிய நிறுவன ஆணையத்தில் பதிந்துள்ள நிறுவனங்கள் (எஸ்எஸ்.ஆம்)

238 2017 அடிப்படையைக் காட்டிலும் உயர்ந்துள்ளது

239 மலேசிய நிறுவன ஆணையம் (எஸ்எஸ்எம்) 2005–2013




ஆயினும், சிறு நடுத்தர வர்த்தக கடனுதவி பெறுவதில் இருக்கும் சிக்கல்கள் அடையாளம் காணபட்டுள்ளன. நிதிக்கழகங்களிடம் கடனுதவி விண்ணப்பதாரர்களில் பலரின் நிதிநிலை குறித்த புள்ளிவிவரப் பற்றாக்குறை, இணை உத்தரவாதம் உட்பட பல ஆவணங்கள் முறையாக இருப்பதில்லை. இது இந்தியர்கள் மட்டுமின்றி அனைத்து மலேசிய சிறு நடுத்தர வர்த்தகர்களிடம் காணப்படும் பல்வீனங்களாகும். சிறு நடுத்தர வர்த்தகக் குறித்த கல்வியறிவை போதிப்பதற்கு அப்பால் நிதிகழகங்களில் நடைமுறைகள் குறித்தும் மாற்று கடனுதவிகள் பெறும் வழிவகைகள் குறித்தும் போதிக்கப்படும்.

SEED–LEAP எனும் எஸ்.எம்.இ. வங்கியுடனான தொழில்முனைவர் மேம்பாட்டு திட்டம் மேலும் முனைப்புடன் செயல்படுத்தப்படும். தேசிய முக்கிய பொருளாதார பகுதி வர்த்தக துறைகளில் காணப்படும் வாய்ப்புகள் முழுமையாக பயன்படுத்தப்படுவது உறுதிசெய்யப்படும். அதிக வளர்ச்சி, மதிப்பு கொண்ட வர்த்தக துறைகளில் ஈடுபடும் நடவடிக்கை மேம்படுத்தப்படும். மேலும் மார்டிரேட்டின் உதவியின் ஒத்துழைப்புடன் மலேசியாவிற்கு வெளியே இருக்கும் சந்தைகளை ஊடுறுவும் நடவடிக்கை ஊக்குவிக்கப்படும்.

மேலும் இந்திய தொழில்முனைவர்கள் அடங்கிய கட்டமைப்பு ஒன்றும் தோற்றுவிக்கப்படும். இந்த கட்டமைப்பு வளர்ந்து வரும் அல்லது புதிய தொழில்முனைவர்களுக்கு ஆலோசனையும் ஆதரவு நல்கும்.



## 2. அரசாங்கத்திலும் அரசாங்க தொடர்பு நிறுவனங்களிலும் இந்தியர்களின் பங்கேற்பை உறுதிபடுத்தும் பிரதிநிதித்துவம்

மற்றும் அரசு தொடர்பு நிறுவனங்களுடன் பங்காளித்துவ அடிப்படையில் இவற்றின் திட்டங்களின் இந்தியர்களின் பங்கேற்பை உறுதிபடுத்தும். அரசு தொடர்புடைய நிறுவனங்களின் விற்பனையாளர் மேம்பாட்டு திட்டங்களில் மட்டும் இன்றி அவற்றின் கொள்முதல் திட்டங்களிலும் இந்திய தொழில்முனைவர்களின் பங்கேற்பதை கண்காணிக்கும். மேலும், தகுதி பெற்ற இந்திய நிறுவனங்கள் அல்லது இந்தியர்கள் பங்குரிமை பெற்ற நிறுவனங்கள் குறிப்பாக சிறு நடுத்தர வர்த்தக நிறுவனங்கள், அரசாங்க கொளுமுதல் திட்டங்களில் பங்கேற்பதற்கு இந்தப் பெருந்திட்டக் குழு துணை புரியும்.

## இ. சொத்துக்களை ஈட்டுதல், தக்க வைத்தல்

பல வருமான துறைகளுக்கு நல்ல அரோக்கியமான நிதிநிலையை கொண்டிருப்பதும் எதிர்பாராத சோதனைகளை எதிர்கொள்வது பெரும் சவாலாக இருக்கிறது. குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இது இன்னும் கடுமையான சவாலாக இருக்கிறது. அன்றாட செலவினங்களை சமாளிக்க பல்வேறு நிதியுதவிகளை இவர்கள் பெறுவதால், வளமிக்க பொருளாதாரத்தை பேணுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

ஐபி 40 பிரிவு மீது இந்தப் பெருந்திட்ட செயலகம் மேற்கொண்ட ஆய்வில் இப்பிரிவினரில் 16 விழுக்காட்டினர் மட்டுமே நீண்ட கால சேமிப்புகளை கொண்டிருக்கின்றனர். ஆயினும் இவர்களில் பெரும்பாலோர், அவசரத் தேவைகளின்போது தங்கள் சேமிப்புகளில் இருந்து பணத்தை மீட்டு விடுகின்றனர்.[240] இப்பிரிவினரில் 81 விழுக்காட்டினர் அடுத்த 3 மாத வாழ்க்கை செலவினங்களுக்கு தேவையான சேமிப்புகளை கூட கொண்டிருக்கவில்லை என்பதும் ஆய்வில் கண்டறியப்பட்டது.[241]

வாழ்க்கை செலவின அதிகரிப்பால் இந்த சூழல் மேலும் மோசமடைந்துள்ளது. 2009ஆம் ஆண்டில் இந்த பி40 பிரிவினரின் மாதாந்திர செலவினமாக இருந்த 1,248 வெள்ளி ஆண்டுதோறும் 10.1 விழுக்காடு அதிகரித்து 2014ஆம் ஆண்டில் 2,015 வெள்ளியாக உயர்ந்துள்ளது.[242]

மாதம் 3 ஆயிரம் வெள்ளி அல்லது அதற்கும் குறைவான வருமானம் பெறும் குடும்பங்கள் தங்கள் குடும்பத்தின் 7 ஆண்டுகள் வருமான அளவிற்கு கடன் சுமைகள் கொண்டுள்ளன என்பது 2014ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தெரிய வந்தது. அதேவேளையில் மாதந்தோறும் 5 ஆயிரம் வெள்ளி வருமானம் பெறும் குடும்பங்கள், 3 அல்லது 4 ஆண்டு வருமான அளவுக்கு கடன் சுமைகளை கொண்டுள்ளன.[243]

மேலும், இந்த பி40 பிரிவு குடும்பங்களில் 82 விழுக்காட்டு குடும்பங்கள் ஏதாவது ஒரு கடன் சுமைகளை கொண்டிருப்பதும் இந்த ஆய்வில் அம்பலமானது. இதில் 39 விழுக்காட்டு குடும்பங்கள் சமாளிக்கும் அளவில் கடன்கள் இருப்பதாக கூறிய வேளையில் 24 விழுக்காட்டினர் கடன் சுமை தங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.[244]



240 2016 ஜூலை முதல் செப்டம்பர் வரை தீபகற்ப மலேசியாவில் 2,087 கீழ்நிலை வருமானம் பெறும் மலேசிய இந்தியர்களுடன் நேருக்கு நேராக நடத்தப்பட்ட ஆய்வு. எம்ஐபி செயலகம்

241 Ibid.

242 குடும்ப வருமானம் & செலவுகள் ஆய்வு 2014

243 11ஆவது மலேசியத் திட்டத்தின் வியூகத் தாள் 2, பொருளாதாரத் திட்டமிடல்பிரிவு

244 2016 ஜூலை முதல் செப்டம்பர் வரை தீபகற்ப மலேசியாவில் 2,087 கீழ்நிலை வருமானம் பெறும் மலேசிய இந்தியர்களுடன் நேருக்கு நேராக நடத்தப்பட்ட ஆய்வு. எம்ஐபி செயலகம்

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

தாங்கள் ஈட்டும் வருமானத்தில் ஒரு பகுதியை சேமித்து அதை சொத்தாக வளர்ப்பது என்பது குறைந்த வருமானம் பெறுவோருக்கு சாத்தியமாகாத ஒரு காரியமாக இருந்து வருகிறது. அதிலும் வாழ்க்கை செலவினங்கள் கட்டுபாடின்றி அதிகரித்து வரும் இந்த சூழலில் அவர்களுடை வருமானத்தில் பெரும்பகுதி வாழ்க்கை செலவினத்தை சமாளிப்பதில் செலவழிந்துவிடுகிறது. 2013ஆம் ஆண்டு மலேசிய தேசிய வங்கி மேற்கொண்ட ஆய்வில், மாதம் 1,000 வெள்ளி வருமானம் பெறும் குடும்பங்கள், தங்கள் அடிப்படை செலவினம் போக மீது இருக்கும் தொகையில், சராசரியாக ஒரு வெள்ளியில் 81 காசு செலவிடுகின்றனர் என்று கண்டறிந்தது. அதேவேளையில், மாதம் ஓராயிரம் வெள்ளி முதல் ஈராயிரம் வெள்ளி வரை ஈட்டும் குடும்பங்கள், தங்களிடம் எஞ்சியிருக்கும் தொகையில், ஒரு வெள்ளியில் 74 காசு செலவிடுகின்றனர் என்றும் அந்த ஆய்வு கூறியது.

### வருமான ரீதியாக குடும்பங்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம், (2013)




அடிப்படை செலவுக்கு மிஞ்சிய தொகையை செலவிடும் விகிதாச்சாரம் அடுத்த கட்ட வருமான (மாதம் 2 ஆயிரம் வெள்ளிக்கும் அதிகமாக ஈட்டும்) குடும்பங்கள் தொடங்கி குறைவதை ஆய்வு காட்டியுள்ளது.[245] எனவே, இந்த குடும்பங்கள் இந்த எஞ்சிய தொகையை சேமிக்க அல்லது வருமானத்தை உயர்த்தும் நடவடிக்கைக்கு பயன்படுத்த வேண்டும்




பி40 பிரிவு குடும்பங்களின் சேமிப்பையும் சொத்துக்களையும் உயர்த்த 11ஆவது மலேசிய திட்டத்தில் அமானா சஹாம் வாவாசான், அமானா சஹாம் 1மலேசியா, அமானா சஹாம் கெமிலாங் ஆகிய யுனிட் டிரஸ்ட் திட்டங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெருந்திட்டம் இந்த சேமிப்பு/முதலீட்டு திட்டங்களை வரவேற்கிறது. ஐபி40 பிரிவினர் இத்திட்டங்களில் அதிகளவு பங்கேற்று தங்கள் பொருளாதார வளமாக்கி கொள்ள இத்திட்டம் பல்வேறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

245 குடும்ப வருமான பிரிவினர்களிடையே இறுதிநிலை பயனீடு நாட்டம், மலேசிய தேசிய வங்கி பணித்தாள், 2013

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

இந்த பெருந்திட்டம் கீழ்க்காணும் இலக்குகளை அடையும் நோக்கம் கொண்டுள்ளது:

- இத்திட்டம் அமலாக்கப்பட்ட 10 ஆண்டுகளுக்குள் ஐபி40 பிரிவினரின் சொத்துடைமை/சொத்துகளை அதிகரிக்க வேண்டும்.[246]

மேற்காணும் இலக்குகளை அடைய , கீழ்க்காணும் நடவடிக்கைகளை அமல்படுத்த இந்தப் பெருந்திட்டம் எண்ணம் கொண்டுள்ளது:

### 1. துவக்க நிதியும் சேமிக்கும் பழக்க ஊக்குவிப்பும்

ஐபி40 குடும்பங்களின் குறிப்பாக வறுமை கோட்டிற்கு கீழே இருக்கும் குடும்பங்களின் சேமிப்புகளை உயர்த்த 500 மில்லியன் வெள்ளி துவக்க நிதி ஒதுக்கப்படும். இது ஒட்டுமொத்தமாக ஐபி 40 குடும்பங்களை இலக்காக கொண்டிருந்தாலும் வருமான நிலைக்கு ஏற்ப இந்நிதி தொகை மாறுபட்டிருக்கும்.[247] இந்நிதி குறிப்பிட்ட சில காலத்திற்கு மீட்க முடியாத வகையில் பிஎன்பி யூனிட் டிரஸ்ட் போன்றவற்றில் வைக்கப்பட்டிருக்கும். ஆயினும் ஆபத்து அவசர வேளைகளில் இதனை மீட்க அனுமதிக்கப்படும்.

அதேவேளையில், இப்பிரிவு குடும்பங்களில் சேமிப்புகளை உயர்த்த கூடிய தனியார், அரசு சாரா மற்றும் சமூகங்களின் ஆக்கப்பூர்வ பரிந்துரைகளை இத்திட்ட அமலாக்க பிரிவு வரவேற்கிறது. இந்திய சிறார் மற்றும் இளைஞர்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தையும் நிதிநிலை குறித்த அறிவாற்றலை அதிகரிக்கும் பரிந்துரைகளாக அவை இருக்க வேண்டும்.



246 2017 அடிப்படையைக் காட்டிலும் உயர்ந்துள்ளது

247 சமூக மற்றும் பெருந்திட்ட பங்காளர்களுடன் நடைபெற்ற மாறுபட்ட நேர்க்காணல்கள் அடிப்படையில்




இப்பிரிவு குடும்பங்களில் சேமிப்புகளை உயர்த்த கூடிய தனியார், அரசு சாரா மற்றும் சமூகங்களின் ஆக்கப்பூர்வ பரிந்துரைகளை இத்திட்ட அமலாக்க பிரிவு வரவேற்கிறது. இந்திய சிறார் மற்றும் இளைஞர்கள் மத்தியில் சேமிக்கும் பழக்கத்தையும் நிதிநிலை குறித்த அறிவாற்றலை அதிகரிக்கும் பரிந்துரைகளாக அவை இருக்க வேண்டும்.




# இயல் 5

# சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்



# மலேசியாவின் பண்பாட்டுப் பல்வகைமையின் அங்கமாகவும் உரிமை உள்ளவர்களாகவும் விளங்குதல்

மலேசியாவில் குறிப்பிடத்தக்க சிறுபான்மை இனமாக இந்திய சமூகம் விளங்குகிறது. மலேசியாவின் மொத்த மக்கள் தொகையில் இந்தியர்கள் 7 விழுக்காட்டினராக மட்டுமே இருந்தாலும், நாட்டின் வரலாற்றுப் பூர்வ சமூகப் பொருளாதார மேம்பாட்டிலும், பண்பாட்டுப் பல்வகைமையிலும், அன்றாட வாழ்க்கை முறையிலும் அவர்கள் குறிப்பித்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர். பொதுவாக நல்லிணக்கத்தோடு வாழ்ந்தாலும், மற்ற நாடுகளில் வாழும் சிறுபான்மை இனத்தைப் போன்றே, மலேசியாவில் வாழும் இந்திய சமூகமும் பல்லின சமூகத்தின் ஒரு அங்கமாக ஒருங்கிணைந்து வாழ்வதில் சவால்களை எதிர்நோக்குகிறது.

பொதுவாக இந்தப் பிரச்னைகள், சமூகத்தில் குறைந்த வருமானம் பெறும் தரப்பினரால் உணரப்படுகிறது. 2016ஆம் ஆண்டில் IB40 பிரிவினரைச் சேர்ந்த மலேசிய இந்தியர்களிடையே நடத்தப்பட்ட கருத்து கணிப்பின்படி, 55 விழுக்காட்டினர் தாங்கள் கவனிப்பார் அற்ற நிலையில் உள்ளதை மிகவும் உணர்வதாகக் குறிப்பிட்டுள்ளனர். மாறாக, அந்தக் கருத்துக் கணிப்பில் 23 விழுக்காட்டினர் மட்டுமே அவ்வாறு இல்லை எனக் கூறியிருந்தனர்.[248] வேலை வாய்ப்புகளைப் பெறுவதிலும், பல்கலைக்கழகங்களில் இடம் கிடைப்பதில் ஏற்படுத்தப்படும் சிக்கல்களோடு பதிவு பெறாத கோயில்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் இந்த எண்ணம் உருவாவதற்கு முதன்மை காரணங்களாகச் சுட்டப்பட்டன.[249] குறிப்பிடத்தக்க வகையில், இந்த ஆய்வில் 74 விழுக்காடு மலேசிய இந்தியர்கள், அரசாங்கம் குறைந்த வருவாய் ஈட்டும் இந்தியர்களுக்கு உதவும் திட்டத்தில் கவனம்



செலுத்த வேண்டும் என விருப்பத்தைத் தெரிவித்த வேளையில், 25 விழுக்காட்டினர் மட்டுமே குறைந்த வருவாய் பெறும் எல்லா இன மக்களுக்கும் அரசாங்கம் திட்டம் வகுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளனர்.[250]

மற்ற இயல்களில் விவரிக்கப்பட்டுள்ளதைப் போன்று, மலேசிய இந்தியர்களுள் பின்தங்கிய சமூகப் பொருளாதார நிலையில் உள்ள பிரிவினர், பல்லாண்டு காலமாக தோட்டப்புறங்களில் தனிமைப்படுத்தப் பட்ட நிலையில் வாழ்ந்து வந்ததால், இவர்களுக்கு வெளியில் உள்ள பரந்த சமுதாயத்துடன் ஒருங்கிணைந்து வாழும் வாய்ப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. அவர்கள், தோட்டப்புறங்களில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து வெளியே வந்த போதுதான், சமூகத்தில் தங்களுக்குரிய இடத்தை அடையாளம் காண்பதில் சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இச்சவால்கள் பல தலைமுறைகளுக்கு தொடர்கதையாகவும் உள்ளன.

மலேசிய இந்திய சமூகத்தினரைச் சார்ந்த பல்வேறு பிரச்சனைகளின் அதிகரிப்பு அவர்கள் புறந்தள்ளப்படுகின்றனர் என்ற உணர்வை மேலோங்கச் செய்தது. அவற்றுள் முதலாவதாக, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான இந்தியர்களுக்குச் சிக்கல்களை ஏற்படுத்தும், குறிப்பாக இளைய தலைமுறையினருக்குப் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தும் குடியுரிமை, அடையாள ஆவணங்கள் தொடர்பான சிக்கல்களாகும். பாதிக்கப்பட்டவர்கள் அதிகாரப்பூர்வமாக மலேசியர்கள் என அங்கீகரிக்கப்படாததால், கிடைக்க வேண்டிய சலுகைகளைப் பெறுவதில் இவர்கள் தகுதியை இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.




இரண்டாவதாக, கோவில் இடமாற்றம் செய்யப்படுவதும் சமய சடங்குகளுக்காகப் பொது மண்டபங்களைப் பயன்படுத்துவதற்கான அனுமதி மறுக்கப்படுவதும் கூட தாங்கள் ஒதுக்கப்படுகின்றனர் என்ற உணர்வுகளை ஏற்படுத்தக்கூடும். பண்பாட்டுப் பல்வகைமை கொண்டுள்ள சமுதாயத்தில், இத்தகைய விவகாரங்கள் முறையாகக் கையாளப்படாவிடில், பல்லினங்களுக்கு இடையிலான பதற்றத்தை அதிகரிக்கக் கூடும்.

மூன்றாவதாக, பொது வாழ்க்கையில் இந்தியர்களின் பங்கேற்பு எந்த அளவிற்கு குறைந்து இருக்கிறதோ, அந்த அளவிற்கு அவர்கள் சமூகத்தின் ஓர் அங்கமாக அங்கீகரிக்கப்படவில்லை என்ற உணர்வை ஏற்படுத்தும். மலேசிய இந்தியர்கள் நன்மை விளைவிக்கும் துறைகளைக் காட்டிலும், தீமைகளை விளைவிக்கும் துறைகளில் அதிகம் ஈடுபடுவதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக உயர்கல்வி, திறனாற்றல் மிக்க வேலை, தொழில்முனைவு, பொதுச் சேவைத் துறை போன்றவற்றில் இந்தியர்கள் குறைந்த அளவிலேயே அங்கம் பெற்றுள்ளனர். மாறாக, குண்டர் கும்பல், குற்றச் செயல் உள்ளிட்ட தீமையை விளைவிக்கும் செயல்களில் இந்தியர்களின் ஈடுபாடு அதிகமாக உள்ளது.

248 The remaining 22% respondents selected 'did not know'. Source: Face-to-face survey of 2,087 Malaysian Indians in B40 households throughout Peninsular Malaysia conducted in July to September 2016. MIB Secretariat

249 Ibid.

250 Ibid.



ஸ்ரீ மரத்தாண்டவர் ஆலயம் மாரான்
நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக அரசாங்கத்தினால் ரி.ம 800,000 வழங்கப்பட்டது

இந்த இயலின் முதல் பகுதி மலேசிய இந்தியர்களிடையே நிலவும் குடியுரிமை பிரச்சினையையும், அடையாள ஆவணங்கள் இல்லா பிரச்சினையையும் மையப்படுத்தி விளக்குகிறது. நாடற்ற நிலையாலும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லாத நிலையாலும் இளைஞர், சிறார் உள்ளிட்ட சுமார் 25 ஆயிரம் மலேசிய இந்தியர்கள் இன்னமும் பாதிப்புகுள்ளாகி இருக்கின்றனர். இதனால், இவர்கள் மலேசிய சமூகத்தின் ஓர் அங்கமாக இணைத்துக்கொள்ளப்படாத நிலை ஒருபுறமிருக்க, முறையான அடையாள ஆவணங்கள் இல்லாத சிறார்களும் இளையோர்களும் அரசாங்கப் பள்ளிகளில் சேர்ந்து கல்வி கற்க இயலாமல் போவதால், பின்னர் முறையான தொழில்களைப் பெறுவதிலும் சிக்கலை எதிர்நோக்குவர். இந்நிலை அவர்கள் குடும்பங்களில் வறுமை நிலை தொடர்கதையாக நீடிப்பதற்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது.

இந்த இயலின் இரண்டாவது பகுதி மலேசிய இந்திய சமூகத்தின் சமயக் கடைப்பிடிப்பை ஒட்டிய சிக்கல்களை மையப்படுத்தியுள்ளது. தனியார் நிலங்களில் நிர்மாணிக்கப்பட்ட ஆலயங்கள், நெடுங்காலமாய் இயங்கி வந்த ஆலயங்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அப்புறப்படுத்தப்படுதல் முதலிய பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. நல்லிணக்கத்தை நீடிக்கச் செய்யவும், அரசியலாக்கப்படுவதைத் தவிர்க்கவும், ஆலயங்கள் அமைக்கப்படுவதும் வேறு இடங்களுக்கு மாற்றப்படுவதும், நியாயமாகவும் முறையான வழியிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றொரு சிக்கல் என்னவெனில், பொது மண்டபங்களில், முஸ்லீம் அல்லாதார் சமயச் சடங்குகளை மேற்கொள்வதை தடை விதிப்பதாகும். இதில், பிற சமயத்தினரின் உணர்வுகளைப் பாதிக்கா வகையிலும், நியாயமான முறையிலும், போதுமான பொது மண்டப வசதிகளை வழங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதே வேளையில், பிற சமயத்தவருடன் பொது இடங்களைப் பகிர்ந்து பயன்படுத்தும் முறையையும், குறிப்பிட்ட ஒரு



சமயத்தவரின் தனித்துவத்திற்கு மற்றொரு சமயத்தவர் மதிப்பளிக்காததால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றியும் பொது மக்கள் அறிந்திருக்குமாறு செய்ய வேண்டும்.

சமயத்தைக் கடைப்பிடித்து ஒழுகும் நிலையை இரு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று மலேசிய இந்திய சமூகத்தின் சமய தேவைகளுக்கு மதிப்பளித்து அவற்றை நிறைவு செய்வது. மற்றொன்று, சமய அமைப்புகளின் பங்களிப்பைக் கூர்ந்து கவனிக் வேண்டியுள்ளது. குறிப்பாக, மக்களிடமிருந்து மிகப்பெரிய அளவில் நன்கொடைகளைப் பெற்றுகொள்ளும் சமய அமைப்புகளின் பங்களிப்புகள் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவையாகும். இந்திய சமூகத்தை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்ற வேண்டியது ஆலயங்களின் கடமையாகும். இக்கடமையை உறுதிசெய்ய ஆலயங்கள் கூடுதல் பங்களிப்பை வழங்குவது அவசியமாகும்.

இந்த இயலின் மூன்றாம் பகுதி, பொது வாழ்க்கையில் இந்திய சமூகத்தின் பங்கேற்பை மையப்படுத்துகிறது. குண்டர் கும்பல், குற்றச் செயல்கள் முதலிய தீய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக இந்திய சமூகம் தனித்துக் காட்டப்படுகிறது. அவர்கள் மீது இத்தகைய எதிர்மறையான முத்திரை குத்தப்பட்டுள்ளது என்றாலும், பொதுவாக இந்தியர்களின் நடைமுறை வாழ்க்கை அதை மெய்ப்பிக்கும் வகையிலேயே உள்ளது. எனவே, நேர்மறையான பலன்களை விளைவிக்கும் துறைகளில் இந்திய சமூகத்தின் பங்கேற்பு கண்கூடாகத் தெரிவது அவசியமாகும். இந்தியர்களுக்கான இப்பெருந்திட்ட வரைவு இலக்கு கொண்டுள்ள விளைபயன் மிக்க சமூகப்பொருளாதார மேம்பாடு ஒருபுறமிருக்க, இந்திய சமூகத்தின் மீது இதர சமூகங்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்தையும், இந்திய சமூகத்தின் மீது அச்சமூகமே கொண்டுள்ள கண்ணோட்டத்தையும் மேம்படுத்துவது அவசியமாகும்.

ஸ்ரீ மகா மாரியம்மன் தேவஸ்தான ஆலயம், கோலாலம்பூர்
நிர்மான மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக அரசாங்கம் ரி.ம. 1 மில்லியன் வழங்கியது
கோவில், இயலின் முகப்பக்கத்தில் உள்ளது.

# சமூகத்தில் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்: இலக்குகள்

## அ. குடியுரிமையும் ஆவணப்படுத்துதலும்

- மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB) அமல்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள், மலேசியாவில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் இல்லாத அல்லது குடியுரிமை அற்ற 25 ஆயிரம் இந்தியர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இவர்களுள் சிறார்களுக்கும் இளைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

## ஆ. சமயக் கடைப்பிடிப்பு

- ஆலயங்கள் நிறுவுதல், அவற்றைப் பதிவு செய்தல், இட மாற்றம் செய்தல் ஆகிவற்றின் தொடர்பாக தேசிய அளவிலும் மாநில அளவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறுவுதல்.
- இந்திய சமூகத்திற்கு, ஆலயங்கள் மற்றும் இதர சமய வழிபாட்டுத் தலங்களின் பங்களிப்பை அதிகரித்தல்.
- பொது மண்டபங்களின் பயன்பாடு குறித்த சர்ச்சைகளுக்குத் தீர்வு காண போதுமான பொது மண்டப வசதிகளை ஏற்படுத்தித் தருதல் அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்து தருதல். குறிப்பாக, குறைந்த விலை வீடமைப்புப் பகுதிகளில் தேவையான பொது மண்டபங்கள் இருப்பதை உறுதி செய்தல் அவசியம்.

## இ. பொது வாழ்க்கையில் பங்கேற்பு

- மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB) அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், பொதுச்சேவைத் துறையில், நிர்ணயிக்கப்பட்ட நுழைவுத் தகுதிகள் மீறப்படாமல், எல்லா கிரேடுகளையும் சார்ந்த பதவிகளில் மலேசிய இந்தியர்களுக்குக் குறைந்தது 7 விழுக்காடு இடங்களை ஒதுக்குதல்.
- மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB) அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், அதிக எண்ணிக்கையில் இந்தியர்கள் எதிர்மறையான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவதையும் போலீசாரால் கைதுசெய்யப்படுவதையும் குறைத்தல்.
- மலேசிய இந்திய சமூகத்தினர் தங்கள் மீது தாங்களே கொண்டுள்ள கண்ணோட்டத்தையும் பிற சமூகத்தினரும் மலேசிய இந்தியர்கள் மீது கொண்டுள்ள கண்ணோட்டத்தையும் மேம்படுத்துதல்.[251]

---

251 2017இல் மதிப்பீடு உருவாக்கப்பட்டு, அடித்தளம் மதிப்பிடப்படும்

## அ. குடியுரிமையும் ஆவணப்படுத்துதலும்

**பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றப் பிறகு மலாயாவின் புதிய அரசாங்கம், நாட்டுக்குள் தொழிலாளர்களாகக் கொண்டு வரப்பட்ட சீனர்களுக்கும் இந்தியர்களுக்கும் வேலை பெர்மிட் முறையை அறிமுகப்படுத்தியது. மலாயா நாட்டுக் குடியுரிமையைப் பெறுவதற்கு அம்முறையின் கீழ் பதிந்துகொள்வது அவசியமாக்கப்பட்டது. எனினும், ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கினர், அதிலும் பெரும்பான்மையாகத் தோட்டத் தொழிலாளர்கள், பின்னாளில் தாங்கள் குடியுரிமையைப் பெறுவதற்கு வழிவகுத்த வேலை பெர்மிட்டுகளுக்குப் பதிவு செய்யத் தவறிவிட்டனர். இதற்குத் தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் தொலை தூரத்தில் அமைந்திருந்த தோட்டங்களின் இடச்சூழல், அறியாமை, கல்வியறிவின்மை, நடைமுறைச் சவால்கள் ஆகியவை காரணங்களாகக் சுட்டப்படுகின்றன.**

இப்பிரச்சினை பல தலைமுறைகளாகத் தொடர்கிறது. இப்பிரச்சினையைக் களைவதில் அக்கறை காட்டும் அரசு சாரா இயக்கம் ஒன்றின் ஆய்வின்படி,[252] ஏறக்குறைய 12 ஆயிரத்து 300 மலேசிய இந்தியர்கள் தற்போது நாடற்றவர்களாக உள்ளனர்.[253] மேலும் 13 ஆயிரம் பேர் முறையான ஆவணங்கள் இன்றி அல்லலுறுகின்றனர்.[254] பதிவுப் பெறாத திருமணங்கள், கைவிடப்பட்ட பிள்ளைகள், அதிகாரப்பூர்வமற்ற தத்தெடுப்புகள் முதலியவை இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளதோடு நீடிக்கவும் செய்துள்ளன.

குடியுரிமை இன்றி, ஒருவர் தனது 12–வது வயதில் மை கார்ட் எனும் அடையாள அட்டையைப் பெற முடியாது என்பதோடு, பின்னர் தன்னுடைய திருமணத்தையும் பதிவு செய்ய இயலாது. அதுமட்டுமின்றி, தனக்குப் பிறக்கும் குழந்தைகளையும் மலேசியர்கள் என உரிமை கொண்டாட இயலாது. ஆக, நாடற்றவர்கள் எனக் கருதப்படுபவரால் அல்லது ஆவணப் பிரச்னைகளை எதிர்நோக்கி இருப்பவரால் அரசு வழங்கும் சமூக நல உதவி, கல்வி, மருத்துவம் முதலிய சேவைகளைப் பெற இயலாமல் போகின்றது. மேலும், இவர்களுக்கு முறையான வேலை வாய்ப்பு இல்லாததால் குறைந்த தொழில்திறன் தேவைப்படும் வேலைகளைச் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவதோடு வறுமையின் பிடியிலும் சிக்கித் தவிக்கின்றனர்.



252 புறநகர்களில் மனித வள மேம்பாடு (டிரா)

253 எந்தவொரு அடையாள ஆவணமுமின்றி எந்த ஒரு நாட்டின் பிரஜையென்றும் அங்கீகரிக்கப்படாதவர்களைக் குறிக்கிறது.

254 குடியுரிமைக்கான ஆதாரங்களான பிறப்புச் சான்றிதழ், திருமண சான்றிதழ் இன்றி சிவப்பு நிற (நிரந்தர குடியிருப்பாளர்) அல்லது மைகாஸ் (தற்காலிக குடியிருப்பாளர்) அடையாள அட்டைகளைக் கொண்டுள்ளவர்களை குறிக்கிறது.

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

**முறையான குடியுரிமை மற்றும் பதிவு பெற்ற ஆவணங்கள் இல்லாததால் மிகவும் பாதிப்புக்கு இலக்காகக் கூடியவர்களாக விளங்குபவர்கள் இளைஞர்களும் சிறார்களும் ஆவர். முறையாகப் பதிவுப்பெற்ற ஆவணங்கள் இல்லாததால், சிறுவர்களையோ இளைஞர்களையோ அரசாங்கப் பள்ளிகளில் பயில சேர்த்துக்கொள்ள இயலாமல் போகிறது. இவர்களுள் பெரும்பாலானோர் அரசு சாரா இயக்கங்களால் (NGO) நடத்தப்படும், வீட்டிலிருந்தே பயிலும் பள்ளிகளின் வழி கல்வியைப் பெறுகின்றனர் அல்லது அறவே கல்வி கற்காமல் இருக்கின்றனர்.**

பெரும்பாலான சவால்கள், நடப்பு கொள்கைகளோடும் செயல்முறைகளோடும் தொடர்புடையனவாக உள்ளன. தேசிய பாதுகாப்பு மீதான அக்கறை கூடுதலாக இருப்பதால், முறையான ஆவணங்கள் இல்லாத ஒருவர் தான் மலேசியாவில் பிறந்ததுள்ளார் என்பதையும், குடும்பச்சந்ததி வரலாற்றையும் நிரூபிக்கும் நிபந்தனைகள் கடுமையாக உள்ளன. பிறப்புச் சான்று ஆவணங்கள் இல்லா நிலையில் சிக்கலைக் களைய மாற்று வழிகளைக் கண்டறிய அதிகம் ஆராய வேண்டியுள்ளது. பரிசீலனைக்கு நீண்ட காலம் பிடிக்கும் செயல்முறைகளை மறு ஆய்வு செய்வதால் கால அவகாசத்தைக் குறைக்க இயலும். எடுத்துக்காட்டாக ஒருவர் தன்னுடைய திருமணப்பதிவு பற்றிய தகவலில் மாற்றம் செய்ய விரும்பினால் அவ்விண்ணப்பத்தாரர் மீண்டும் தன் திருமணப்பதிவிற்குத் தொடக்கம் முதல் விண்ணப்பிக்க வேண்டியுள்ளது.

இதனிடையே, குடியுரிமைக்கு விண்ணப்பம் செய்வதற்கான செலவினம் அதிகமாக இருப்பதும் ஒரு சவாலாக விளங்குகிறது. தரவுகள் தேடல், விண்ணப்பத்தை பரிசீலித்தல், தந்தையை மெய்ப்பிக்க நடத்தப்படும் சோதனை முதலியவை அடங்கிய ஒரு குடியுரிமை விண்ணப்பத்திற்கு ஆயிரத்து 500 ரிங்கிட் வரை செலவாகிறது.[255] அதுமட்டுமின்றி தாமதமாக செய்யப்படும் சில விண்ணப்பங்களுக்கு 100 ரிங்கிட் முதல் 300 ரிங்கிட் வரை அபராதம் விதிக்கப்படுகிறது.[256] அபராதத் தொகை விதிக்கப்பட்டதால், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான B40 பிரிவினர் தங்களுடைய விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு குடியுரிமை வழங்கப்பட்டிருந்தாலும் இன்னும் அதைக் கோராமலேயே உள்ளனர். இச்சிக்கலை எதிர்கொள்ள, நிதியுதவி அல்லது கொள்கை நிலையிலான ஆதரவு வழங்கப்பட வேண்டும்.



255 Department of Chemistry Malaysia. Accessed at: http://www.kimia.gov.my/v3/en/about-us/forensic/paternity.html

256 National Registration Department. Accessed at: http://www.jpn.gov.my/en/kp/permohonan-gantian-hilang-kad-pengenalan-mykad-atau-mypr/#1458528203078-8acbfa91-eb1b

குடியுரிமை விண்ணப்பங்களைப் பரிசீலிக்க சில மாதங்களோ ஆண்டுகளோ ஆகலாம். அதன் பரிசீலனைச் செயல்முறைகள் சூழலை மேலும் சிக்கலாக்குகின்றன. பொதுவாக, விண்ணப்பதாரர்கள், தேசிய பதிவுத்துறை (NRD) அலுவலகத்திற்கு அடிக்கடி பயணிக்க வேண்டியுள்ளது. அது அவர்களின் நேரத்தையும் பணத்தையும் அதிகம் உறிஞ்சுகின்றது. அதே வேளை, வயதான விண்ணப்பத்தாரர்கள் நோய்த் தாக்கத்தின் காரணத்தாலும் நடமாட இயலாத காரணத்தாலும் மேலும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்குக் குடியுரிமை அங்கீகரிக்கப்படும் கால அவகாசம் மேலும் நீட்டிக்கப்படுகிறது.

மக்களை நேரடியாக அணுகும் சில திட்டங்களின் வாயிலாக, நடைமுறைச் சவால்கள் சற்றுக் குறைந்துள்ளன. சிறப்பு அமலாக்கப் பணிக்குழு SITF ஏற்பாடு செய்திருந்த ‘MyDaftar’ இயக்கத்தின் போது, தேசிய பதிவு இலாகாவின் (NRD) நடமாடும் பதிவுப் பிரிவு போக்குவரத்துச் சிக்கலைப் வெகுவாகக் குறைக்க பெரிதும் கைகொடுத்தது. அதே சிக்கல்களை எதிர்நோக்கும் உட்புறப் பகுதி மக்களின் குடியுரிமை பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் அத்திட்டம் குறிப்பிடத் தக்க அளவில் உதவியுள்ளது எனலாம். விண்ணப்பதாரர்களுக்கு குடியுரிமை அற்ற நிலையின் பாதிப்பு விளக்கப்பட்டதோடு அதைப் பெறுவதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.



குடியுரிமை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவை தொடர்பான தகவல் பரிமாற்றங்கள் விண்ணப்பத்தாரரை வந்தடைவது சவாலாக உள்ளது. பெரும்பாலும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணங்கள் விண்ணப்பத்தாரர்களிடம் முறையாகக் கூறப்படுவதில்லை. இதனால், தங்கள் விண்ணப்பங்களில் உள்ள குறைகளைப் போக்கிக்கொள்ள வழியில்லாமல் போய்விடுகிறது. விண்ணப்பத்தாரர்கள் இதனிடையே, தேசிய பதிவு இலகாவில் (NRD) கோரப்படாமலேயே உள்ள குடியுரிமைச் சான்றிதழ்கள் அதிகமாய் உள்ளன. விண்ணப்பதாரர்களின் அண்மைய வசிப்பிட முகவரி பதிவு செய்யப்படாமல் உள்ளதால் விண்ணப்பத்தாரர்களைத் தொடர்பு கொள்வதில் சிரமம் எற்படுகிறது; சான்றிதழ்களும் கோரப்படாமல் உள்ளன.

இறுதியாக, நடைமுறைச் சிக்கல்களைக் களைவதற்கு ஏற்புடைய வழிமுறைகளைக் காண இயலாத நிலையால் குடியுரிமை விண்ணப்பங்களின் பரிசீலனையில் குறிப்பிடத்தக்க நிருவாகச் செயற்பாட்டுச் சவால்கள் காணப்படுகின்றன. குடியுரிமை மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பாக மலேசிய இந்தியர் பெருந்திட்டவரைவில் காணப்படும் இலக்குகளை அடைய, அதன் (MIB) அமலாக்கப் பிரிவு போதுமான எண்ணிக்கையாலான உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை உருவாக்க வேண்டும். அதுமட்டுமின்றி அக்குழு அதிகாரம் பெற்றிருப்பதோடு தேசியப் பதிவுத் துறையுடனும் NRD உள்துறை அமைச்சுடனும் கொள்கைகள், செயல்முறைமைகள் தொடர்பானவற்றில் ஒருங்கிணைந்து செயலாற்றுவது அவசியமாகும். அதே வேளையில் குடியுரிமை மற்றும் ஆவணப்படுத்தல் தொடர்பான சிக்கல்களை விளைபயன் மிக்க வகையில் களைய சமூக நிலையில் உதவுவோரோடு ஒருங்கிணைந்து செயல்படுவதும் அவசியமாகும்.



## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

தனி மனிதன் ஒருவர் நாட்டின் குடிமகனாக அங்கீகாரிக்கப்படும் போதுதான் அவர் உள்ளத்தில் தானும் தேசியத்தின் ஓர் அங்கம் என்ற உணர்வு தொடங்குகிறது. இதனை அரசாங்கம் மிகவும் முக்கியமெனக் கருதுவதற்கு 'MyDaftar' போன்ற பதிவு திட்டங்களும் விழிப்புணர்வு இயக்கங்களும் சான்றாக அமைகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு, இப்பெருந்திட்டம் பின்வரும் இலக்குகளை அடைய உறுதிப் பூண்டுள்ளது:

- மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB) அமல்படுத்தப்பட்ட 5 ஆண்டுகளுக்குள், மலேசியாவில் வாழும் சுமார் 25 ஆயிரம் நாடற்ற மற்றும் முறையான ஆவணங்கள் இல்லாத நிலையில் உள்ள இந்தியர்களின் பிரச்னைக்கு, குறிப்பாக சிறார்களுக்கும் இளையோருக்கும் முன்னுரிமை வழங்கி, தீர்வு காணுதல்.

இந்த இலக்கை அடைய, இப்பெருந்திட்டம் கீழ்க்காணும் திட்டங்களை வரையறுத்துள்ளது:

### 1. இந்திய சமூகத்திற்கான அமைச்சரவைக் குழுவும் (CCIC) உள்துறை அமைச்சும் (NRD) இணைந்த பணிக்குழுவை உருவாக்குதல்.

உள்துறை அமைச்சு, தேசிய பதிவிலாகா (NRD), மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), மற்றும் தொடர்புடைய பிற அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றைப் பிரதிநிதிக்கும் மூத்த அதிகாரிகளை உறுப்பினர்களாகக் கொண்ட பணிக்குழுவை உருவாக்க வேண்டும். அப்பணிக்குழுவின் தலையாய பணிகள் பின்வருமாறு:

- முந்துரிமை வழங்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் தொடர்புடைய ஆவணங்களை அடையாளம் காணுதல், பதிவு செய்தல், பரிசீலனையை விரைவுப் படுத்துதல்.
- அடையாள ஆவணம் இல்லாததால் அதிக பாதிப்புக்கு இலக்காகும் இளைஞர்களுக்கும் சிறார்களுக்குமான தற்காலிக அல்லது இடைகால குடியுரிமை சான்றிதழ் வழங்குவதை பரிசீலனை செய்தல். (எடுத்துக்காட்டு: MyKAS). அதேவேளை, ஆவணங்கள் இல்லாத பிள்ளைகளை பள்ளியில் பதிவு செய்யவும் அவர்களுக்குத் தற்காலிக சான்றிதழைப் பெறவும் விண்ணப்பிப்பதை ஊக்குவிக்க பெற்றோருக்கு ஊக்கச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும்.
- குறிப்பாக, இளைஞர்களையும் சிறார்களையும் உட்படுத்திய, ஆவண விண்ணப்பதைப் பரிசீலிக்க எடுத்துக்கொள்ளப்படும் சராசரி கால அளவைக் குறைப்பதற்கும் செயல் முறைமைகளை எளிமைப் படுத்துவதற்கும் ஏதுவாக கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆராயப் படவேண்டும்.[257]
- எல்லா விண்ணப்பங்களையும் பரிசீலனை செய்வதற்கு ஏடுத்துக்கொள்ளும் கால அளவை கண்டறிந்து அறிவிப்பதோடு விண்ணப்பங்களின் நிலையையும் அறிவிக்க வேண்டும்.



மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவில் (MIB) இந்தியர்களிடையே காணப்படும் நாடற்ற நிலையையும் ஆவணங்கள் இல்லா நிலையையும் களைய அப்பிரிவு வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் பணியாளர்களை நியமிக்கவும், நிதி ஒதுக்கீடுகளைச் செய்யவும் போதுமான அளவு நிதி வளங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

257 For example, explore automatic granting of birth certificates for hospital births, waiving the current 14-day claiming period

## ஆ.சமய நடவடிக்கைகள்

பொதுவாகவே, மலேசியா பல்லின மக்களிடையே ஒற்றுமையையும் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுவோரிடையே நல்லிணக்கத்தையும் பேணும் நாடாகும். தேசிய அரசியலமைப்புச் சட்டத்தில், பிரிவு 11–இன் கீழ் சமயச் சுதந்திரம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. வழங்கப்பட்டு உள்ள இந்த உரிமை மதிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் ஒரே மலேசிய (1Malaysia) கொள்கைக்கு ஏற்ப, பல்லின மக்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் ஒற்றுமையும் ஒன்றோடு ஒன்று இறுக்கமாகப் பின்னிப் பிணைக்கப் பட்டுள்ளன.



இருப்பினும், சில வேளைகளில் இனங்களுக்கிடையிலான பதற்றச் சூழ்நிலைகள் உருவாகி உள்ளதோடு அத்தகைய உணர்வுகளைத் தூண்டும் சூழ்நிலைகள் கவனக் குறைவுடன் கையாளப்படும் போது பதற்றத்தை மேலும் அதிகரிக்கிறது. மலேசிய இந்திய சமூகம் நெடுங்காலமாக எதிர்நோக்கி வரும் சவால்கள் நியாயமாகக் கவனிக்கப்பட வேண்டியவையே. ஆலய உடைப்புகள், சமய சடங்குகளை மேற்கொள்ள பொது இட வசதிகள் மறுக்கப்படுவது முதலியவை சவால்களாக விளங்குவது மெய்ப்பிக்கப் பட்டுள்ளது.

மலேசியர்களுள் மிகப் பலருக்கும் சமயம் முக்கிய வாழ்வியல் கூறாகத் திகழ்கிறது. மற்ற சமயத்தைச் சார்ந்தவர்களுக்கு மதிப்பளிக்கும் அதே வேளையில், இந்திய சமூகத்தினர் சமயத்தைக் கடைப்பிடிக்க வழிசெய்யும் வகையில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் களைய தீர்வுகளைக் காண வேண்டும்.

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

பல்வேறு தகவல் மூலங்கள் வாயிலாகப் பெறப்பட்ட தகவல்களின் படி, 2006–ஆம் ஆண்டு முதல் 2007–ஆம் ஆண்டு வரை, சுமார் 79 இந்துக் கோயில்கள் தகர்க்கப்பட்டுள்ளன.[258]

கோயில்கள் தகர்ப்பும் அவை இடமாற்றம் செய்யப்படும் நடவடிக்கைகளும் இரு வகையாகப் பிரிக்கலாம்:

- முதலாவது வகை, சுதந்திரத்திற்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட கோயில்களாகும். பெரும்பாலும் இக்கோயில்கள் தோட்டப்புறங்களில் அமைந்தவையாகும்.
- இரண்டாம் வகை, அண்மையக் காலமாக அதிக எண்ணிக்கையிலான பதிவுபெறாத கோயில்களாகும். மலேசிய இந்தியர்களின் மக்கள் தொகை அதிகரிக்கும் வேளையில் அனுமதியின்றி அரசாங்க நிலங்களிலும் தனியார் நிலங்களிலும் கட்டப்படும் கோயில்களின் எண்ணிக்கையும் அதிகரித்த வண்ணம் உள்ளது. இது, நாட்டில் முஸ்லீம் அல்லாதோருக்கான வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிக்கும் விதிமுறையை[259] மீறுவதாக அமைந்துள்ளது.



ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம், பத்து மலை

நிர்மாணிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக அரசாங்கத்தினால் 2 மில்லியன் வழங்கப்பட்டது

அடிப்படையில், கோயில்கள் உடைக்கப்படுவது சட்ட விவகாரமாக இருந்தாலும், அது உணர்வுகளைத் தூண்டும் வகையில் உள்ளதால், அரசியல் சாயம் பூசப்பட்டு இன விவகாரமாக உருவாக்கப்படுகிறது.

தற்சமயம் கூட்டரசுப் பிரதேச மற்றும் நகர்ப்புற நல்வாழ்வு ஊராட்சி அமைச்சின் கீழ் செயல்படும் முஸ்லீம் அல்லாதோருக்கான வழிபாட்டுத் தலங்களின் ஆலோசனைக் குழு (RIBI), கோயில்கள் இடமாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்ட பிரிவினரிடம் நடத்தி வருகின்றனர். வழிப்பாட்டுத் தலங்கள் நிறுவுதல், இடமாற்றம் மற்றும் தகர்ப்பு ஆகியன தொடர்பில் நியாயமான மற்றும் நேர்த்தியான நெறிமுறையை அமைப்பதோடு மட்டுமின்றி அவை பரவலாக அறியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டால் மட்டுமே (RIBI)யின் பணிகள் வலுவடையக்கூடும்.

258 Malhotra, Sunder "Is there any international outcry to stop demolishing Hindu temples in Malaysia?" (2007, December 2) NRIInternet.com. Accessed at: http://nriinternet.com/NRIhindu/MALAYSIA/Malaysia-demolshing_Hindu_Temples/index.htm

259 Guideline issued by Islamic Affairs Unit, Prime Minister's Department, 'Cadangan Garis Panduan Pembinaan Rumah-Rumah Ibadat Bukan Islam' & Malaysia Hindu Sangam's, 'Temple Guide Handbook'



மற்றொரு நிலையில், மலேசிய இந்திய சமூகத்தின் மேம்பாட்டிற்கு ஆலயங்களும் பெரும் பங்கினை ஆற்றுவது அவசியமாகும். பொது மக்களோடு மேற்கொள்ளப்பட்ட கருத்துப் பரிமாற்றத்தில், கோயில்களும் மற்ற சமய அமைப்புகளும் இந்திய சமூகத்திற்குச் சேவைகள் வழங்குவதில் முனைப்பில்லாத நிலையையோ வெளிப்படையற்ற போக்கையோ கடைப்பிடிப்பதாக மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

சில கோயில்கள் தங்கள் சமூகத்திற்கு ஆற்றும் சேவையில் தீவிரம் காட்டினாலும் பொதுத் தேவைகளை அறிவதில் உள்ள குறைகளைக் களைய வேண்டும். இதனிடையே, இந்திய சமூகம் எதிர்நோக்கும் மற்றொரு சவால், பொது மண்டபங்களின் பயன்பாட்டுடன் தொடர்புடையனவாகும். உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய இச்சிக்கல்கள் பெரும்பாலும் சமய, பண்பாட்டு வேறுபாடுகளைக் கொண்டுள்ள, மக்கள் மிகுதியாக வசிக்கும், பொது வீடமைப்புத் திட்ட குடியிருப்புகளில் (PPR) உள்ள ஒரே மண்டபத்தைப் பயன்படுத்தும்போது அதிகமாக எழுவதைக் காணமுடிகிறது.

இச்சிக்கலைக் களைய இந்திய சமூகத்திற்கான அமைச்சரவைக் குழு (CCIC), அதிகமாக இந்தியர்கள் வசிக்கும் பகுதிகளில் 15 சமூக மண்டபங்களையும் தகனம் செய்வதற்கான 15 சுடலைகளையும் நிர்மாணிக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

| நிலவரம் | தகனம் செய்யும் இடம் | மண்டபம் |
|---|---|---|
| பூர்த்தி செய்யப்பட்டது | 2 | 3 |
| கட்டுமானப் பணியில் உள்ளது | 4 | 2 |
| திட்டமிடல் கட்டத்தில் உள்ளது[260] | 9 | 10 |

மூலம் : CCIC

260 Include land identification/negotiation, construction approval, funding, contractor/ vendor selection, etc.

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும்

மலேசிய இந்தியர் பெருந்திட்டம் கீழ்க்காணும் இலக்குகளை அடைய உறுதி கொண்டுள்ளது:

- ஆலயங்கள் நிறுவுதல், அவற்றைப் பதிவு செய்தல், இட மாற்றம் செய்தல் ஆகியவற்றின் தொடர்பாக தேசிய அளவிலும் மாநில அளவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறுவுதல்.
- இந்திய சமூகத்திற்கு, ஆலயங்கள் மற்றும் இதர சமய வழிபாட்டுத் தலங்களின் பங்களிப்பை அதிகரித்தல்.
- பொது மண்டபங்களின் பயன்பாடு குறித்த சர்ச்சைகளுக்குத் தீர்வு காண போதுமான பொது மண்டப வசதிகளை ஏற்படுத்தித் தருதல் அல்லது மாற்று ஏற்பாடுகளைச் செய்து தருதல். குறிப்பாக, குறைந்த விலை வீடமைப்புப் பகுதிகளில் தேவையான பொது மண்டபங்கள் இருப்பதை உறுதி செய்தல் அவசியமாகும்.

அந்த இலக்குகளை அடைய மலேசிய இந்தியர் பெருந்திட்டம் பின்வரும் சில நடவடிக்கைகளை வரையறுத்துள்ளது.

### 1. கோயில்களுக்கான தேசிய தரவு தளத்தை நிறுவுதல்

கோயில்கள் பற்றிய விரிவான தரவு தளத்தை (database) உருவாக்க மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), நகர் மற்றும் புறநகர் திட்டமிடல் இலாகா (JPBD), ஊராட்சி மன்றங்கள் மற்றும் சில முக்கிய அரசு சாரா இயக்கங்கள் (NGO's) ஒன்றிணைந்த ஒரு அமைப்பு நிறுவப்படும். இத்தரவு தளத்தின் வாயிலாக எல்லா ஆலயங்களையும் கண்காணிக்கவும், வருங்காலத்தில் அவை எதிர்நோக்கவிருக்கும் சிக்கல்களை அறியவும் இது துணைப்புரியும்.

மத்திய, மாநில அரசுகளும் கலந்தாய்வு மேற்கொள்ளும் நடுவர் தரப்புகளும் அந்தத் தரவுகளைத் தங்கள் மேற்கோள்களாகப் பயன்படுத்துவதற்கு ஏற்புடைய வகையில் அது துணைபுரியும். எடுத்துக்காட்டாக, புதிய ஆலயங்களுக்கு மானியங்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் ஆலயத் தரவுகளின் வழி பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அமலாக்க ஒருங்கிணைப்புப் பிரிவு, முஸ்லீம் அல்லாதோருக்கான வழிபாட்டுத் தலங்களுக்கான கட்டட விதிமுறைகளையும் இதர நிபந்தனைகளையும் மானியம் பெற விழையும் அந்த ஆலயம் முழுமையாகக் கடைப்பிடித்துள்ளதா என்பதை மதிப்பீடு செய்யும்.



ஸ்ரீ சுப்ரமணியர் சுவாமி ஆலயம், கோல சிலாங்கூர்

கட்டுமான மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக அரசாங்கத்தினால் ரி.ம. 150,000 வழங்கப்பட்டது

### 2. சமய அமைப்புகளைக் கண்காணிக்கும் நெறிகளும் மதிப்பீட்டு முறைமைகளும் உருவாக்குதல்.

கூடுதல் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் அவசியம் என வலியுறுத்தும் சமூகத்தின் வேண்டுகோளை நிறைவு செய்யும் வகையில், மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), கோயில்கள் மற்றும் சமய அமைப்புகள் சமூகத்திடமிருந்து பெறுகின்ற நிதியையும் அந்நிதி நிர்வகிக்கப்படுகின்ற முறைகளையும் மதிப்பிடுவதற்கு, பல்வேறு நிலையில் கலந்தாலோசித்து, அந்த ஆய்வின் வழி பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் ஒரு தளத்தை அல்லது வழிமுறைகளை உருவாக்கும். சமூகத்திடமிருந்து பெறப்படும் நிதியை நிர்வகிப்பதில் வெளிப்படைத்தன்மையை மட்டுமே மதிப்பிடுவதை இது நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை, மாறாக ஒப்பீட்டு அடிப்படையில் நன்மை பயக்கும் ஒரு அளவுகோலை (benchmarking) நிர்ணயிப்பதற்கும் சிறப்பாகச் செயல்படுவோருக்கு அங்கீகாரமும் பாராட்டுதலும் வழங்குவதையும் நோக்கமாகவும் கொண்டுள்ளது. இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்பு நெறிகளும் மதிப்பீட்டு முறைமைகளும் தெளிவான நிலையில் வடிவமைக்கப்பட்டு 2018–ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தும் இலக்கைக் கொண்டுள்ளது.



### 3. பொது மண்டபங்கள் அதிகரிப்பும், இடங்களைப் பகிர்ந்து பயன்படுத்துவதில் சகிப்புத்தன்மையும்

இந்திய சமூகத்திற்கான அமைச்சரவைக் குழு (CCIC) வாக்குறுதி அளித்துள்ளதைப் போல, இந்தியர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில், அவர்கள் பயன்பாட்டிற்கு சமூக மண்டபங்களையும், சுடலைகளையும் கட்டி முடிப்பதைக் கண்காணிக்கும். அதே வேளையில் ஏற்கெனவே உள்ள பல்நோக்கு மண்டபங்கள், பள்ளிகள், ஆலயங்கள் முதலியவை இந்தியர்கள் பயன்பாட்டிற்கு அடையாளம் காட்டப்படும். பொது இடங்களின் பயன்பாட்டில் பற்றாக்குறைகள் இருப்பின், அது கருத்தில் கொள்ளப்படுவதோடு, மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB) அப்பகுதிக்குப் பொறுப்பாளர்களோடு ஒருங்கிணைந்து சிக்கல்களைக் களையும். மக்களுக்குத் தேவைப்படும் பொது இட வசதிகள் இல்லாத இடங்களில் அத்தேவையைப நிறைவு செய்ய பொது–தனியார் பங்காளித்துவம் பரிந்துரைக்கப்படும்.



சிலிம் ரீவர் சமூக மண்டபம்

ரி.ம.500,000 கொண்டு நிறுவப்பட்ட சமூக மண்டபம், அரசாங்கத்தினால் இந்திய சமுதாயத்திற்கு வாக்குறுதியளிக்கப்பட்ட 15 மண்டபங்களில் ஒன்று

நடுத்தர மற்றும் குறைந்த விலை வீடுகளை, குறிப்பாக அடுக்கங்களில் கட்டப்படும் வீடுகளின் வடிவமைப்பு வழிகாட்டியை உருவாக்குவதற்கு, நகர் மற்றும் புறநகர் திட்டமிடல் இலாகா (JPBD), மாநில அரசுகள் ஆகியவற்றோடு மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB) ஒருங்கிணைந்து பணியாற்றும். எல்லா இனத்தவரும் பகிர்ந்து பயன்படுத்தும் பொது இடங்களின் அளவு, குறிப்பாக பல்வேறு சமயத்தவர் தங்கள் சமயச் சடங்குகளை மேற்கொள்ள போதுமானதாக இருக்கும் வடிவமைப்பை உறுதிச்செய்வதே இதன் நோக்கமாகும். .

மேலே கூறப்பட்டவற்றிற்கு வலு சேர்க்கும் வகையில், அடையாளம் காணப்பட்ட அடுக்கங்கள், வீடமைப்புப் பகுதிகளில் அதிகமாக வசிக்கும் இந்தியர்களிடையே பல்லின சமயங்களைப் பற்றிய புரிந்துணர்வையும் சகிப்புதன்மையையும் அதிகரிக்க, மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), தேசிய ஒருமைப்பாடு மற்றும் ஒருங்கிணைவு இலாகாவோடும் (JPNIN), அரசு சாரா இயக்கங்களோடும் (NGO), எல்லா இனங்களையும் சார்ந்த உள்ளூர் தலைவர்களோடும் இணைந்து பணியாற்றும்.



## C1. சமூகத்தில் இந்தியர்களின் பிரதிநிதித்துவம் : பொதுச் சேவைத்துறையில் ஆள் சேர்ப்பும் பதவி உயர்வும்

மலேசியாவில் உள்ள 1.6 மில்லியன் பொதுச் சேவை பணியாளர்களில் 4.1 விழுக்காட்டினர் மட்டுமே இந்தியர்கள் ஆவர்.[261] 2015–ஆம் ஆண்டில், அரசாங்கத் துறைகளுக்கு 69,052 இந்தியர்கள் விண்ணப்பம் செய்த வேளை மிகச் சிறிய அளவிலான 1,157 இந்தியர்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.[262] 1980–ஆம் ஆண்டு முதல் பொதுச்சேவைத் துறையில் இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதைக் காண முடிகிறது. 2004ஆம் ஆண்டில், நாடாளுமன்றச் செயலாளர் குறிப்பிடுகையில் 23 ஆண்டுகளில் பொதுச் சேவைத்துறையில் 9.8 விழுக்காடாக இருந்த இந்தியர்களின் எண்ணிக்கை 5.2 விழுக்காடாகச் சரிந்துள்ளதைப் புள்ளி விவரங்கள் காட்டுவதாகக் கூறினார்.[263]

### முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

நிலைத்தன்மையற்ற உலகப் பொருளாதாரச் சூழ்நிலையின் காரணமாக 2015–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரசாங்கத் துறைகளுக்கான ஆள்சேர்ப்புக்கு நகாலவரையறை அற்ற முடக்கத்தை அரசாங்கம் அறிவித்தது. எனினும், சில துறைகளின் தேவைக்கேற்ப, தற்காலிக பணியாளராகவும், ஒப்பந்தப் பணியாளர்களாகவும் அவ்வப்போது ஆட்கள் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இத்திட்டவரைவை எழுதும் நேரத்தில், பொதுச்சேவைத்துறையில் இந்தியர்களின் பிரதிநிதித்துவத்தை நிறைவு செய்யும் வகையில், இந்தியர்களுக்கான சிறப்புப் பணிக்குழு (SITF), பொதுச் சேவைத் துறையுடன் இணைந்து, தகுதிப் பெற்ற இந்திய விண்ணத்தாரர்களுக்கு, குறிப்பிட்ட விழுக்காட்டிலான தற்காலிக மற்றும் ஒப்பந்த நிலையிலான அரசாங்கப் பணிகள் கிடைக்க முயற்சியை மேற்கொள்கிறது. முன்னர் குறிப்பிடப்பட்ட பொதுச் சேவைத் துறையில் காணப்படும் இந்தியர்களின் குறைவான பிரதிநிதித்துவத்திற்கு வேலைக்கு மனு செய்வோரிடம் அப்பதவிகளுக்குத் தேவைப்படும் போதுமான தகுதிகள் இல்லாததும் மனுச்செய்யும் முறைகளில் காணப்படும் குறைபாடுகளுமே மாபெரும் சவாலாகக் கருதப்படுகின்றன.[264]



ஒவ்வோர் ஆண்டும் பொதுச் சேவைத் துறைக்கு விண்ணப்பிக்கும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும், அவர்களின் பெரும்பாலான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. அதற்கு நிர்ணயிக்கப்பட்டதைக் காட்டிலும், குறைவான கல்வித் தகுதி, இணையம் மூலம் உரிய காலத்திற்குள் அல்லது முறையாக விண்ணப்பிக்கத் தவறுதல், நேர்முகத் தேர்வில் தோல்வி அடைதல்18 முதலியவை அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கு முக்கியக் காரணங்களாக அறியப்படுகின்றன.[265]

மனு செய்வோர் தேவைப்படும் தகுதிகளைப் பெற்றிருந்து தேர்ச்சி அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு, அவர்களுள் தகுதியுடையோரை தெரிவு செய்து, முறையான வழிகாட்டல்களை வழங்குதல் அவசியமாகும்.

---

261 மலேசிய பொது சேவை ஆணையம் 2015 (புள்ளிவிபரங்கள்)

262 மலேசிய பொது சேவை ஆணையம் 2015 (புள்ளிவிபரங்கள்)

263 http://www.freemalaysiatoday.com/category/nation/2015/05/09/lack-of-non-bumi-in-civil-service-must-be-addressed/

264 பெரும்பாலான தகுதி வாய்ந்த இந்தியர்கள் தனியார் துறையில் பணிப்புரிய எண்ணலாம்.

265 எஸ்ஐதிஎஃப் மற்றும் இதர பங்கேற்பாளர்களுடன் நடத்தப்பட்ட நேர்காணல்கள்

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB), அமல்படுத்தப்பட்ட 10 ஆண்டுகளுக்குள், பொதுச்சேவைத் துறையில், நிர்ணயிக்கப்பட்ட நுழைவுத் தகுதிகள் மீறப்படாமல், எல்லா கிரேடுகளையும் சார்ந்த பதவிகளில் மலேசிய இந்தியர்களின் எண்ணிக்கையைக் குறைந்தது 7 விழுக்காடாக உயர்த்தும் இலக்கைக் கொண்டுள்ளது.

அந்த இலக்கினை அடைய மலேசிய இந்தியர் பெருந்திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை வரையறுத்துள்ளது.

### 1. எதிர்காலத்திற்கான புதிய பணியாளர்கள் சேர்ப்புத் திட்டத்தை வலுப்படுத்துதல்

மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), பொதுச் சேவைத் துறையுடன் (PSD) அணுக்கமாக ஒத்துழைத்து, அன்றாட ஊதியம் அடிப்படையிலான பகுதி நேர பணியாளர்களுக்கும் (Pekerja Sambilan Harian), சிறப்பு ஒப்பந்தப் பணியாளர்களுக்குமான வேலை வாய்ப்புகளை அடையாளம் கண்டு அதற்கான ஒதுக்கீடுகளை நிர்ணயிக்கும். பொதுச் சேவைத்துறையில் நிரந்தர வேலை வாய்ப்புகள் உருவாகும்போது இப்பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

அதேவேளை, மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), விண்ணப்பிக்கத் தகுதியும் ஆற்றலும் உடையோரை அடையாளம் கண்டு, அவர்களின் எண்ணிக்கையை, குறிப்பாக IB40 பிரிவினரிடையே, அதிகரிக்க அவர்களைச் சென்றணுகும் வழிமுறைகளை மீளாய்வு செய்யும். பொதுச் சேவைத்துறையில் பணிகளுக்கு விண்ணப்பிப்போருக்கான தகுதித் தேர்வுகள், மதிப்பீட்டுத் தேர்வுகள், நேர்முகப் பேட்டிகள் ஆகியவற்றை எதிர்கொள்ளும் வகையில் அவர்களைத் தயார்படுத்துவதற்கு நடத்தப்படும் பட்டறைகளும் இதில் அடங்கும்.

உயர் நிலை தகுதி கொண்டவர்கள் பொதுச் சேவைக்கு விண்ணப்பம் செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களை நேரடியாகச் சென்றணுகுவதற்குப் பொருத்தமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சமூக உணர்வு கொண்ட விண்ணப்பதாரர்களை ஈர்க்க, பொதுச் சேவைத்துறையில் உள்ள மூத்த இந்தியப்பணியாளர்கள் முன் மாதிரியாகக் காட்டப்படுவதோடு அவர்களைச் சென்றணுகும் தூதர்களாகவும் செயல்பட ஆவன செய்யப்படும்.



## 2. பொதுச் சேவைத்துறையில் உள்ள மலேசிய இந்தியப் பணியாளர்களை அடையாளம் கண்டு, அவர்களின் பணி உயர்வுக்கு வழி காணுதல்

மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), பொதுச் சேவைத் துறையுடன் (PSD) இணைந்து செயல்பட்டு, பொதுச் சேவைத் துறையில் எல்லா கிரேடுகளிலும் பணியாற்றும் இந்தியப் பணியாளர்களின் எண்ணிக்கையை அடையாளம் காணும். பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட அடைவுத் தகுதிகளும் தேவைப்படும் அனுபவமும் மீறப்படாமல் இருப்பதை உறுதிச்செய்து, பொதுச்சேவைத் துறையில் அவர்களின் சமச்சீரான பிரதிநிதித்துவம் உறுதிசெய்யப்படும்.
சமசீரான பிரதிநித்துவத்தில் காணப்படும் இடைவெளியைக் குறைப்பதற்காக இலக்கு அடைவுத் திட்டங்கள் வரையப்பட்டு, மிகுந்த ஆற்றல் உடைய பணியாளர்கள் அடையாளம் காணப்பட்டு, பதவி உயர்வுக்கோ இட மாற்றத்துக்கோ தயார்படுத்தப்படுவர்.



## 3. பொருத்தமான பகுதிகளில், இந்திய அதிகாரிகள் அமர்த்தப்படுவதை அதிகரித்தல்.

மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), இந்தியர்கள் அதிகமாக வாழும் பகுதிகளில், முக்கிய பொதுச் சேவைகளை வழங்கும் காவல்துறை, அரசாங்க மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள், ஊராட்சி மன்றங்கள் முதலியவற்றில் தலைமைத்துவப் பொறுப்பிலும் பிற முகப்புச் சேவைகளிலும் இந்தியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருக்கும் நிலையை மதிப்பீடு செய்யும். சேவைகளில் அவர்களை அமர்த்தும். பொதுச் சேவைத்துறை மற்றும் மாநில அரசுகளுடன் இணைந்து செயலாற்றி, செந்தூல், பிரிக்ஃபீல்ஸ், காஜாங் முதலிய இடங்களில் மலேசிய இந்திய அதிகாரிகளை முக்கிய பொறுப்புகளுக்குப் பரிந்துரை செய்யும். இதன் வழி மக்களுடனான தொடர்பு அதிகரித்து அதன் வாயிலாக சேவைத்தரம் உயர்வடைவதோடு சமூகத்தில் நிலவும் சிக்கல்களைக் களைய வழி பிறக்கும்.



## C2. சமூக வாழ்க்கையில் இந்தியர்களின் பிரதிநிதித்துவம்: குற்றச் செயல்

பரந்த சமுதாயத்தில் ஓர் இனம் குற்றச் செயல்களில் ஈடுபடுவது, குறிப்பாக குண்டர் கும்பல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, அந்த இனம் ஒடுக்கப்பட்டுள்ளதற்கான அறிகுறியாக கருதப்படுகிறது. மலேசியாவில் உள்ள 70 விழுக்காட்டு குண்டர்கள், இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.[266] இவர்களுள் பலர், தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும், தற்காப்புக்காகவும், இள வயதிலேயே குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இந்தத் திட்ட வரைவில் ‘கல்வி’எனும் அத்தியாயத்தில், ‘அபாயத்தில் சிறார்களும் இளையோர்களும்’ எனும் தலைப்பின் கீழ் இது குறித்து சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முதிர்ச்சி அடைந்தவுடன் சிலர் குண்டர் கும்பல்களில் இருந்து வெளியேறினாலும், பலரும் குற்றச் செயல்களை ஈடுபடுவதையே தங்கள் தொழிலாகத் தொடர்கின்றனர்.




### 2015–ஆம் ஆண்டில், இன அடிப்படையிலும் குற்றச்செயல் அடிப்படையிலும் போலிசாரால் கைது செய்யப்பட்டவர்கள்.

மலேசிய காவல் துறை வெளியிட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், இதர இனங்களைக் காட்டிலும் வன்செயல் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களுள் இந்தியர்களே எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது.[267]




| | பூமிபுத்ரா | சீனர்கள் | இந்தியர்கள் | இதர |
|---|---|---|---|---|
| மொத்தம் | 47,729 | 8,403 | 14,417 | 17,128 |
| வன்முறைக் குற்றங்கள் | 11,619 | 2,398 | 7,599 | 4,765 |
| வன்முறையற்றக் குற்றங்கள் | 36,110 | 6,005 | 6,548 | 12,363 |

266 Attributed to Bukit Aman's CID director, as reported in "Indian gangs originated from Chinese triads" (2013, August 27) The Sun Daily. Accessed at: http://www.thesundaily.my/news/808352

267 கொலை, திட்டமிட்ட கொலை, கற்பழிப்பு, கூடா ஒழுக்கம், ஆயுதமேந்தியக் கொள்ளை, ஆயுதமில்லாக் கொள்ளை உள்ளிட்ட வன்முறை குற்றங்கள். மூலம்: குற்றப்புலனாய்வுப் பிரிவு, பிடிஆர்எம் 2014

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

மலேசிய இந்தியர்களிடையே குற்றச் செயல்களின் விகிதம் உயர்வாக இருப்பதற்கான முக்கிய காரணங்களுள் ஒன்றாக விளங்குவது அச்சமூகத்தில் காணப்படும் மோசமான சமூகப் பொருளாதார நிலையாகும். அடிப்படை தேவைகள் நிறைவு செய்யப்படாத நிலை, குறைவான கல்வி அடைவு நிலை, குறைந்த வருமானம் ஆகியவை தனி நபர்களைக் குற்றச் செயல்களிலும் குண்டர் கும்பல் நடவடிக்கைகளிலும் ஈடுபடத் தூண்டுகின்றன.

குண்டர் கும்பல்களில் ஈடுபட்டுள்ளவர்களைப் பாதுகாப்பாக மீட்கவும், அதில் மேலும் பலர் சேர்க்கப்படுவதைத் தடுக்கவும் அதிகம் செய்ய வேண்டியுள்ளது. சிறைச்சாலைகளில் தங்கள் தண்டனைக் காலத்தைக் கழித்த முன்னாள் கைதிகளுக்கு சமூகமும் அரசாங்கமும் தங்கள் ஆதரவைப் அதிகப்படுத்த வேண்டும். குறிப்பாக, சமூகத்தில் மீண்டும் தங்களை ஓர் உறுப்பினராக இணைத்துக்கொள்வதில் முன்னாள் கைதிகள் சவாலை எதிர்நோக்குகின்றனர். சமூகம் அவர்களைப் புறக்கணிப்பதால், மீண்டும் அவர்கள் பழைய நிலைக்கே திரும்புகினறனர். கைதிகளின் தண்டனை காலத்தின் போது அவர்களுக்கு முறையான மறுவாழ்வு திட்டங்களைச் சிறைச்சாலைத் துறை வழங்கினாலும், சிறையில் இருந்து வெளியேறிய பிறகே அவர்களுக்குக் கூடுதல் ஆதரவு தேவைப்படுகிறது. மீண்டும் அவர்கள் சமூகத்துடன் இரண்டறக் கலக்கின்ற காலக்கட்டம் மிகுந்த சவால் மிக்கதாக விளங்குகிறது.



## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB) அமல்படுத்தப்பட்டு 10 ஆண்டுக்குள், போலிசாரால் கைது செய்யப்படும் இந்தியர்களின் எண்ணிக்கையைக் குறைக்க, இத்திட்டம் இலக்கு கொண்டுள்ளது.

அந்த இலக்கினை அடைய மலேசிய இந்தியர் பெருந்திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை வரையறுத்துள்ளது.

### 1. IB40 பிரிவினரின் கல்வி மற்றும் சமூகப் பொருளாதாரத்தை உயர்த்துவதை உறுதிப்படுத்துதல்

இந்த இலக்கை அடைவதற்கு பன்முனை அணுகுமுறை அமல்படுத்தப்படும். இந்த அமலாக்கங்கள் குறித்த விளக்கங்களுக்கு 'அடிப்படை தேவைகள், 'கல்வி, 'வருமான மேம்பாடு' ஆகிய இயல்களைக் காணவும்.

### 2. இந்நாள் கைதிகளுக்கும் முன்னாள் கைதிகளுக்கும் தேசிய நிலையில் ஆதரவளிக்கும் ஒரு முறைமையை உருவாக்குதல்.

சிறைச்சாலைத் துறை மற்றும் இதர முக்கிய தரப்புகளின் ஒத்துழைப்புடன், மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB), இந்திய கைதிகளின் மறு வாழ்வுக்கும், அவர்கள் வழக்கமான வாழ்க்கை முறைக்குத் திரும்பவும், விடுதலைக்குப் பிந்திய வேலை வாய்ப்புகளுக்கும் வழிகாட்டித் திட்டத்தை வகுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இதில் முன்னாள் கைதிகளை முக்கியமான நெறியாளராகப் கொண்டு குற்றச்செயல்களில் ஈடுபட விழைவோருக்கு நெறியுரைகள் வழங்கி குற்றவியல் வாழ்க்கையில் ஈடுபடுவதில் இருந்து அவர்களை மீட்டெடுக்க வேண்டும்.



## C3. பொது வாழ்க்கையில் இந்தியர்களின் பிரதிநிதித்துவம் : சமூக அடையாளம்



எந்தவோர் இனமும் மாற்றமில்லாமல் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் குறிப்பிட்ட செயல்களின் அடிப்படையில் பிற இனத்தவரால் அதன் மீது தனி முத்திரை குத்தப்படுவதையோ அவ்வினம் அதன் பண்புகளால் தனித்துக்காட்டப்படுவதையோ தவிர்க்க இயலாது. அவ்வாறு தனித்துக் காட்டப்படுவது நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ அமையலாம். இது வேடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட செயல் என்றாலும், காலவோட்டத்தில் பிற இனத்தவருக்கும் சம்பந்தப்பட்ட அவ்வினத்தவருக்கும் கூட அது உண்மை என்றே கருதத்தோன்றும். தங்கள் மீது இடப்பட்டுள்ள எதிர்மறையான முத்திரையை உண்மையென அவ்வினமே கருதும் சூழலில், அவர்கள் தங்கள் மீதே தாங்கள் கொண்டுள்ள நன்மதிப்பையும் குறைக்கிறது. அதுமட்டுமின்றி எதிர்மறையான இத்தகையச் செயலால் அவ்வினம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களின் அனுபவங்களும் அதிகரிக்கின்றன. இவை அவ்வினம் மேம்பாடடைய விழையும் கல்வி முதலிய பிற துறைகளில் அவர்களின் அடைவு நிலைக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துகிறது. குறிப்பிட்ட ஓர் இனத்தோடு அதிக தொடர்பில்லாத பிற இனத்தவர், அவ்வினம் எதிர்மறையாகத் தனித்துக் காட்டப்படுவதை உண்மை என நம்பும்போது பிற இனத்தவரால் அவ்வினம் ஒடுக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படலாம்.

எதிர்மறையான கூற்றுகளால் குறைந்த வருமானம் பெறும் மலேசிய இந்திய சமூகத்தினர் தனித்து அடையாளம் காட்டப்படுவதைப் அச்சமூகமே பொய்மையாக்கும் வலிமை அற்ற நிலையில் இருப்பதால், இவர்களே பரவலாக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இப்பிரிவினர் முன்னேற்றம் அடைய வேண்டுமெனில், இவர்கள் மீது ஏற்றிச்சொல்லப்படுகின்ற எதிர்மறையான இழிச்சொற்களால் ஆன கட்டுகள் அவிழ்க்கப்பட்டு அதிலிருந்து அவர்களை விடுபடச் செய்யவேண்டும். அவ்வாறு செய்வதற்குச் சமூகத்தில் இவர்களும் வலிமை மிக்கவர்கள் எனப் உருமாற்றப்படுவதற்கு வலுவான காரணங்கள் உள்ளன.

## முக்கியச் சிக்கல்கள் & நடப்பு தலையீடுகள்

இந்திய சமூகத்தினர், தோலின் நிறம் முதலிய புறத் தோற்றத்தோடும், கடைப்பிடித்து ஒழுகும் பண்பாடு, சமய நடைமுறைகளோடும், குடிப் பழக்கம், வன்முறை, குற்றச் செயல்கள், குண்டர் கும்பல் நடவடிக்கைகள் முதலிய சமூக பிரச்சினைகளில் ஈடுபடுவதோடும் தொடர்புப்படுத்தப்பட்டு எதிர்மறையாகத் தனித்துக் காட்டப்படுகின்றனர்.




சமூகம் பொதுவாக எதிர்ப்புகளைத் தெரிவித்தாலும், அதிகாரத்தில் உள்ளவர்களால் இந்தியர்களுக்கு எதிரான இன அவமதிப்புகள் பல நிகழ்ந்துள்ளன.[268] இதன் விளைவால், இந்தியர்கள் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுவதில் இருந்து ஓரங்கட்டப்படுகினறனர். இந்தியர் அல்லாதோர் தங்கள் வீடுகளை இந்தியர்களுக்கு வாடகைக்குக் கொடுக்க மறுக்கும் சம்பவங்கள் கூட ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன. ஓர் இனத்தைப்பற்றிய எதிர்மறையான எண்ணங்களோடு அவ்வினத்தின் பண்பாட்டைப் பற்றிய குறைவான புரிதலும் கைகோர்க்கும்போது, அவை இனங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்படத் தூண்டுதலாக அமைந்துவிடும். கடந்த காலங்களில் நிகழ்ந்துள்ள அத்தகைய சம்பவங்கள் சான்றுகளாகும்.[269]

இதுவரையில், பின்பற்றத்தக்க நேர்மறையான முன்னுதாரணங்களை வழங்கி மக்கள் பார்வையில் மலேசிய இந்திய சமூகத்தின் மீது படிந்துள்ள கறையைப் போக்கும் முயற்சிகள் யாவும் இந்திய சமூகத்தால் அச்சமுகத்திற்குள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி, இச்சிக்கலைச் சார்ந்த கருத்துப் பரிமாற்றங்களைத் தேசிய அளவிற்கு முன்னெடுத்துச் செல்ல ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியமாகின்றன.

---

268 “மலேசியா: இன களங்கம் தொடர்பில் இந்தியர்கள் தங்களிடம் மன்னிப்புக் கேட்கும்படி கோரினர்.” (2008, ஆகஸ்டு 6) News18.com. அணுகலாம்: http://www.news18.com/news/india/malaysia-indians-demand-apology-in-racial-slur-case-294267.html

269 In March 2001, a violent clash between Malay and Indian groups was triggered in Kampung Medan, Petaling Jaya, by an argument over road access for an Indian funeral possession and a Malay wedding party. The violence spread over 3 weeks to the surrounding areas, resulting in 6 deaths and over a hundred people wounded. Source: media reports.

## அடுத்தக் கட்ட செயல்பாடுகள்: பரிந்துரைகளும் முயற்சிகளும்

மலேசிய இந்தியர் பெருந்திட்டம் (MIB), மலேசிய இந்தியர்கள் தங்களைப் பற்றி தாங்களே கொண்டுள்ள கண்ணோட்டத்தையும் பிறர் தங்கள் மீது கொண்டுள்ள கண்ணோட்டத்தையும் சீர்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.[270]

அந்த இலக்கினை அடைய மலேசிய இந்தியர் பெருந்திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை வரையறுத்துள்ளது



### "சமூகப் பெருமை" எனும் பிரச்சாரத்தை துவங்குதல்

பிற இனங்களோடு கைக்கோர்த்து, தேசிய ரீதியில் பல்வேறு துறைகளில் மலேசிய இந்தியர்கள் அடைந்துள்ள சாதனைகள் குறித்த, விழிப்புணர்வை ஏற்படுத்துவது இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும். அவ்வகையில், சிகரத்தைத் தொட்ட எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், தொழில்முனைவர்கள், அறிவியலாளர்கள், கொடைநெஞ்சர்கள், விளையாட்டாளர்கள், கலைஞர்கள், இளம் சாதனையாளர்கள் முதலிய தனி நபர்கள் அல்லது குழுவினரின் வெற்றி வரலாறுகள் மக்களிடையே பகிரப்படும். விளையாட்டு, குறிப்பாக இளையோர் மத்தியில், இந்தியர்களின் தோற்றத்தை மேம்படுத்திக் காட்டவல்ல முக்கியமான துறையாகக் கருதப்படுகிறது, இப்பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக, குறிப்பாக விளையாட்டுத் துறையில் இந்தியர்களின் பங்கேற்பை அதிகரிக்க, மலேசிய இந்தியர் பெருந்திட்ட அமலாக்கப் பிரிவு (MIB) அமைச்சுகள், நிறுவனங்கள், அரசு சாரா இயக்கங்கள், தனியார் துறைகள் முதலியவற்றோடு இணைந்து செயல்படும்.

இன நல்லிணக்க உணர்வை மேம்படுத்த மலேசிய சமூகத்திற்கு இந்தியர்களின் பங்களிப்புகள், அவர்களால் படைக்கப்பட்ட சாதனைகள் யாவையும் இன பாகுபாடின்றி அனைத்து மக்களாலும் பேசப்படும் ஒன்றாகத் திகழ வேண்டும். இனம், சமூகப் பிரிவு ஆகியவற்றால் எதிர்மறையாக ஓர் இனம் தனித்துக் காட்டப்படும் சூழ்நிலையிலிருந்து விடுபட, IB40 தரப்பினரின் வெற்றிக் கதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.



270 மதிப்பீடு உருவாக்கப்படும், 2017 அடிப்படையில் மதிப்பிடப்படும்




இந்தச் சமூக விழிப்புணர்வு இயக்கம், பொதுவாக இந்திய சமுதாயத்தில், குறிப்பாக சிக்கல் மிகுந்த குடும்பங்களில், மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதாகும். இயல்பான ஒன்று எனக் கருதப்படும் மிதமிஞ்சிய குடிப்பழக்கம், வன்முறை முதலியவற்றால் இந்திய சமூகத்தினருக்கு ஏற்பட்டுள்ள எதிர்மறையான அவப்பெயரைப் போக்க மாற்றங்களைக் கொண்டுவர இந்த விழிப்புணர்வு இயக்கம் முயற்சிக்கும். சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக பல கேள்விகளுடனும் உதவியைப் பெறுவதற்கான பல கோரிக்கைகளுடனும் வரும் இந்தியக் குடும்பங்களுக்கு விளக்கமளிக்கவும் வழிகாட்டுதல்களை வழங்கவும் சேவை வசதிகள் செய்து தரப்படும்.





# இயல் 6

# மலேசிய இந்தியப் பெருந்திட்டப் பகிர்வு



# செயலாக்கம் & ஆளுமை

இந்நாட்டின் சமூகப் பின்னணியில் ஒரு முக்கிய அங்கமாகத் திகழும் மலேசிய இந்தியர்கள், நாட்டின் பொருளாதார முன்னேற்றம், வளமான கலாச்சாரம், தேசிய அடையாளம் ஆகியவற்றின் முக்கியத் தூணாகவும் விளங்குகின்றனர். நாட்டின் மக்கள் தொகையில் 7% விழுக்காடாக இருக்கும் மலேசிய இந்தியர்கள், மலேசியாவில் வாழும் இரண்டாவது மிகப்பெரிய சிறுபான்மை குழுவினராவர்.[271]

மேலோட்டமாகப் பார்க்கையில், மலேசிய இந்திய சமுதாயம் நாட்டின் வளர்ச்சியோடு சேர்ந்தே வளமடைந்துள்ளது: இந்தியர்களின் இடைநடு மற்றும் சராசரி அளவு வருமானம் தேசிய சராசரி வருமானத்தைக் காட்டிலும் சற்று அதிகமாகவே உள்ளது. இருப்பினும், இந்திய உட்பிரிவுகளுக்கிடையில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் இதனூடே மறைந்துள்ளன. கொள்கை ரீதியிலான தலையீடின்றி, இந்தியர் உட்பிரிவின் தற்போதைய அவலநிலை மேலும் வலுவடைந்து அவை சமூகப்பொருளாதார வளர்ச்சி நீரோட்டத்திலிருந்து பின்தங்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடும்.



இந்திய சமுதாயம் எதிர்நோக்கும் விளைவை அறிந்த அரசாங்கம், இவ்விவகாரங்களை சீரிய முறையில் மறுபரிசீலனை செய்யவும், முக்கிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கவும் 2008ஆம் ஆண்டில் இந்தியர் விவகாரங்களுக்கான சிறப்பு அமைச்சரவைக் குழு ஒன்றை அமைத்தது. அடையாளங்காணப்பட்ட இந்தியர் சார்ந்த விவகாரங்களுக்குத் தீர்வு வழங்கும் நோக்கில் நான்கு பிரிவுகளும் அமைக்கப்பட்டன: 1) குடியுரிமை மற்றும் பிறப்பு ஆவணங்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில் முக்கியப் பங்காற்றும் சிறப்பு செயலாக்க பணித்திட்டக் குழு (எஸ்ஜதிஎஃப்), 2) தமிழ்ப்பள்ளிகளுக்கான மேம்பாட்டுத் திட்ட வரைவுக்குழு (பிடிஎஸ்டி), 3) இந்திய தொழில்முனைவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் வழிகாட்டும் இந்திய தொழில்முனைவர் மேம்பாட்டுத் திட்ட சிறப்புச் செயலகம் (சீட்); 4) இறுதியாக இந்திய சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி வழங்கிவரும் இந்தியர்களுக்கான சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு (செடிக்) ஆகியவனவாகும்.

இப்பிரிவுகள் அவற்றின் துவக்கக்காலம் முதல், தத்தம் தீர்மானங்களில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன. சம்பந்தப்பட்ட அரசு அலுவலகங்கள், அரசு சார்பற்ற சமூக அமைப்புகளுடன் கூட்டமைப்பின் வழி, கீழ்வரும் பல நன்மைகளையும் அடைந்துள்ளன: தமிழ்ப்பள்ளி அடிப்படை வசதிகளின் முதலீடுகளில் ஏற்றம், ஆசிரியர்கள் தரத்தில் முன்னேற்றம்; 29,115 இந்திய சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கு நிதியுதவிக்கான மேற்பார்வை, நூற்றுக்கும் மேற்பட்ட சமூக அடிப்படையிலான திட்டங்கள் மூலம் பல்கலைக்கழக நுழைவு முதல் தனித்து வாழும் தாய்மார்களுக்கான திறன் பயிற்சிகள்; குடியுரிமைப் பதிவிற்காக 6,000க்கும் மேற்பட்ட இந்தியர்கள் முன்வர உறுதுணையாக இருந்துள்ளமை ஆகியவையாகும்.



271 மலேசிய குடியுரிமையற்ற எ.கே:அந்நியத் தொழிலாளர்களும் உட்படுவர். மூலம்: 2015 மக்கள்தொகை கணிப்பு, மலேசிய புள்ளிவிபரத் துறை



சம்பந்தப்பட்ட அரசாங்க ஏஜென்சிகள் தொடர்ந்து தத்தம் கடமைகளைச் செய்துவர, இணை பங்குதாரர்களான இந்த நான்கு சிறப்புப் பிரிவுகளின் வருகை இந்திய சமூகத்தினரிடையே விழிப்புணர்வை உண்டாக்கவும், தற்போது உள்ள அரசாங்கத் திட்டங்களில் பங்கேற்க ஊக்கமும் வாய்ப்பும் அளிக்கவும், இந்தியர்களை மையப்படுத்தும் உள்ளடக்கத்தைத் தேவையான நடவடிக்கைகளில் வழங்கவும் காரணியாக உள்ளது.

இந்தத் தீர்மானங்களின் செயலாக்கத்தைத் தொடருகையில், சமுதாயத்தின் மீது அக்கறைக் கொண்ட பிரிவினர் அவற்றை வலிமையாக்கும் நோக்கில் செம்மைப்படுத்தும் பரிந்துரைகளையும் வழங்கியுள்ளனர். தகவல், வளங்கள், ஆய்வு, வலைத்தொடர்பு பரிமாற்றம் மற்றும் நனிச்சிறந்த நடைமுறைகள் ஒருங்கிணைந்து அமைய மேற்கூறப்பட்ட நான்கு பிரிவுகளுக்கும் இடையே ஒருமித்த தன்மையும் ஏற்படுவதை துரிதப்படுத்த வேண்டும். அதிகமான தகவல் பயன்பாடு, இலக்கை நிர்ணயித்தல் மற்றும் செயல்திறன் கண்காணிப்பு ஆகியவைக் குறித்தும் பேசப்பட்டுள்ளன.



வரையறுக்கப்பட்டுள்ள கொள்கைப் பகுதிகளை அடையாளங்கண்டு, அப்பகுதிகளில் பெருந்திட்ட இலக்குகளை அடைய செயலாக்க நடைமுறை உறுதி செய்வதை இப்பெருந்திட்ட மேம்பாடு அவசியமாக்குகிறது. இந்த கொள்கை வளாகங்கள் பின் வருமாறு:



### 1 கல்வி அடைவு & இளைஞர்

தமிழ்ப்பள்ளிகளுக்கு அப்பாற்பட்டு மேல் நிலைக்கல்வியில் இந்திய மாணவர்களின் செயல்திறன், அபாயத்தின் விளிம்பில் உள்ள குழந்தைகள் & இளைஞர்கள் வரை இக்கொள்கைப் பகுதியின் தீர்மானத்திற்கு உட்பட்டுள்ளனர்.

### 2 வருமானத்தை உயர்த்துதல்

தொழில் முனைவர் மற்றும் தொழில் எ.கா: திறன் பயிற்சி மற்றும் பணியில் அமர்தல் ஆகிய இரு பிரிவினையும் இக்கொள்கை பகுதியின் அமலுக்குள் வருகிறது. குறைந்த வருமானம் பெறும் 40% கீழ்நிலை இந்தியக் குடும்பத்தினரிடையே நிதி, சொத்துடைமை விழிப்புணர்ச்சி குறித்தும் இப்பகுதி கவனம் செலுத்தும்.





### 3 பொதுநலம் & அடித்தளம்

முற்றிலும் ஏழ்மை, வசிக்க வீடற்று, சுகாதாரமின்றி, அடையாள ஆவணப் பிரச்சினைகள், தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்படக்கூடிய அபாயம் உட்பட இந்திய சமுதாயத்தில் அதிகம் பாதிப்படையக்கூடிய குழுவினர் எதிர்கொள்ளும் சவால்களை இக்கொள்கை பகுதி கையாளும்.

### 4 அடையாளம் & உட்படுத்துதல்

இந்த கொள்கை பகுதி சமய நெறிகள் தொடர்பான பிரச்சினைகள், இந்தியர்களை ஒரு சமுதாயமாக புறக்கணிக்கும் (எ.கா. இனங்கள் குறித்த எதிர்மறை சிந்தனை மற்றும் பாகுபாடு) பிற சமய, கலாச்சார அல்லது அரசியல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க முற்படும்.



மேலுள்ள இலக்குகளுக்கேற்ப, 2017–2030ஆம் ஆண்டு வரை இந்திய சமுதாயத்திற்கு பயனுள்ள வகையில் பின்வரும் செயலாக்க அணுகுமுறை தோற்றுவிக்கப்படும்

# மலேசிய இந்தியப் பெருந்திட்டம் அமலாக்கம்: கோட்பாடுகள்

மலேசிய இந்தியப் பெருந்திட்டத்தின் செயலாக்க அணுகுமுறை அல்லது நடைமுறை கீழ்க்காணும் நான்கு மைய கோட்பாடுகளை வழிகாட்டியாகக் கொண்டிருக்கும்:

## ஒருங்கிணைப்பு

- இந்திய சமுதாயம் அதிலும் குறிப்பாக கீழ்நிலை வருமானம் பெறும் 40% இந்தியக் குடும்பங்களின் முழுமையான மேம்பாட்டை நோக்கிய பகிர்வு குறிக்கோளின் மீது எம்ஜபி செயலாக்கப் பிரிவு ஒரு வலுவான உணர்வைக் கொண்டுள்ளது.
- எம்ஜபி செயலாக்கப் பிரிவு உட்பிரிவுகளுக்கிடையில் உள்ள ஒத்துழைப்பையும் கற்றலையும் மேம்படுத்த முற்படும்.

## தாக்கம்

- எம்ஜபி பெருந்திட்ட செயலாக்கப் பிரிவு அரசாங்கத்துடன் இணைந்து செயலாற்றும் தகுதி, அதிகாரம் மற்றும் நம்பகத்தன்மையைக் கொண்டுள்ளது.
- எம்ஜபி பெருந்திட்ட செயலாக்கப் பிரிவு அதன் தாக்கத்தை அறிந்து, அதற்கேற்றவாறு திட்டங்களை திட்டமிட்ட முறையிலும் திறன்மிக்க செலவிலும் சீர்படுத்தும்.
- ஆய்வு, சிறந்த நடைமுறை, தகவல் மற்றும் வலைத்தொடர்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் எம்ஜபி செயலாக்கப் பிரிவு அதன் செயல்திறனைத் தொடர்ந்து மேம்படுத்தும்.

## உட்படுத்துதல்

- மலேசிய சமுதாயம் எனும் சூழமைவுக்கு ஏற்றவாறு மலேசிய இந்திய சமுதாயத்தின் சமூகப்பொருளாதார மேம்பாட்டையும் நல்வாழ்வையும் எம்ஜபி செயலாக்கப் பிரிவு ஒருங்கிணைக்க முற்படுகிறது.
- சமுதாயத்தின் அனைத்து தரப்பிலிருந்தும் திறமை, அறிவாற்றல், ஆலோசனைகள் மற்றும் மனித வளங்களுக்கு இப்பெருந்திட்டம் ஊக்கமளிக்கும்.

## ஒருமைப்பாடு

- எம்ஜபி செயலாக்கப் பிரிவு தற்போதுள்ள அரசாங்கத் திட்டங்களில் ஒன்றிணைந்து, சம்பந்தப்பட்ட அமலாக்க முகவர்களோடும் அவர்தம் தளங்களிலும் பணியாற்றவுள்ளது.
- கொள்கை மற்றும் நீண்டகால நடைமுறைக்கிணங்க சம்பந்தப்பட்ட அனைத்து அரசாங்க ஏஜென்சிகளிலும் இந்தியர்களின் பங்கேற்பு அடையாளங்காணப்பட்டு ஒருங்கிணைங்கப்படுவதை எம்ஜபி செயலாக்கப் பிரிவு தொடர்ந்து உறுதிசெய்யும்.[272]

272 2030ஆம் ஆண்டுகளுக்குப் பிறகும், சமூக அந்தஸ்து மற்றும் பங்கேற்பாளர்களின் எண்ணிக்கைக்கான கண்காணிப்பு செயல்பங்கு தொடரும்

## A. நடைமுறை & கட்டமைப்பு

### மாதத்திற்கு ஒரு முறை சந்திப்பின் வழி, உட்பிரிவுகளின் செயலாக்கப் பிரச்சினைகளை களையவும் முன்னேற்றத்தை கண்காணிக்க முற்படும் CCIC நிர்வாகச் செயற்குழுவின் ஆதரவோடு ஒட்டுமொத்த மேற்பார்வைப் பணிகளை CCIC தொடர்ந்து மேற்கொள்ளும்.

முதன்மை செயலாக்க அமைச்சு மற்றும் நிறுவனங்களின் கூட்டாண்மையில் CCICஇன் கீழ் உள்ள பிரிவுகள் தத்தம் இலக்குகளைச் சென்றடையும் மற்றும் எளிதாக்கும் கடமைகளைத்[273] தொடர்ந்துச் செய்து வரும். மலேசிய இந்தியப் பெருந்திட்டத்தின் நோக்கத்தை அடைவதற்கும், சிறப்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகள் மறுசீரமைக்கப்பட்டு அநேகமாக, தற்போதுள்ள இந்தியர்களுக்கான சமூகப்பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு எனும் பெயர் மற்றும் சட்டப்பூர்வ சாசனத்தின் கீழ் ஒரே அமைப்பில் இணைக்கப்படும். இப்பிரிவு மலேசிய இந்தியர் பெருந்திட்ட செயலாக்கத்தை முன்னிறுத்தும் முதன்மை பிரிவாக செயல்படும்.

புதிய செடிக் பிரிவு, மறுசீரமைக்கப்பட்ட உட்பிரிவுகளை உள்ளடக்குவதோடு, மேற்குறிப்பிட்டுள்ள கொள்கைப் பகுதிகளுக்கேற்ப, ஆய்வு மற்றும் சிறப்பு முன்னோடித் திட்டங்களுக்கும் புதிய ஆதரவாக விளங்கும். சமூகம் சார்ந்த பல்வேறு திட்டங்களுக்கு நிதி வழங்கும் தற்போதைய செடிக் பிரிவின் செயல்பாடு, சம்பந்தப்பட்ட கொள்கைப் பகுதிகளை கண்காணிக்கும், சீரமைக்கப்படவிருக்கும் உட்பிரிவுகளால் உள்வாங்கப்படும். சம்பந்தப்பட்ட அரசாங்க கொள்கை உருவாக்கும் அமைச்சுகள் மற்றும் செயலாக்க நிறுவனங்களுடன், இந்த உட்பிரிவுகளும் மலேசிய இந்தியர் பெருந்திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டிருக்கும் முயற்சிகளை மேற்பார்வையிடவும் கண்காணிக்கும் வேளையில், தேவைப்படும் இடங்களில் பொருத்தமான திருத்தங்களைச் செய்யவோ அல்லது முன்மொழியும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

CCIC மற்றும் CCIC நிர்வாகச் செயற்குழுவிற்கு, வெளிப்புறத்திலிருந்து இயங்கும் தொலைத்தொடர்பு மற்றும் செயல்திறன் கண்காணிப்பு செயல்பாடுகள் துணைப் புரியும்.




273 துணை பகுதிகளோ அல்லது புதிய முயற்சிகளோ தோன்றுமாயின், இப்பிரிவு தொடர்ந்து செயலாக்கப்பணிகளை அல்லது இணை செயலாக்கப்பணிகளைத் தொடர்ந்து செய்யும்.

## முழுமையான செயல்பாட்டு நடைமுறை மற்றும் கட்டமைப்பு பின்வருமாறு:

செயல்திறமுடைய சமூக பங்குதாரர்களுடனான நெருங்கியத் தொடர்பை உறுதிப்படுத்தும் வகையில், சமூகம், ஆய்வு, வர்த்தகம் மற்றும் சமூக நிறுவனங்கள் சார்ந்த் தலைவர்கள் உள்ளிட்ட செடிக் கலந்தாய்வு மற்றும் ஆலோசனைக் குழுமம் நிறுவப்படும். சமூகத்தைச் சென்றடையும் பிரச்சாரம் மற்றும் கடப்பாடு திட்டங்களின் (எ.கா: மக்கள் மன்ற நிகழ்வுகள்) வாயிலாக மலேசிய இந்தியப் பெருந்திட்ட விவகாரங்களில் இந்திய சமூகத்தை ஈடுபடுத்தவும் செடிக் முனையும்.



## B. பொது & தனியார் கூட்டமைப்பு

செயல்திட்டத்தின் வெற்றியானது அரசாங்க முகவர்களுக்கிடையிலான அணுக்கமான ஒத்துழைப்பை மட்டுமின்றி அரசு சாரா அமைப்புகள், நிறுவனங்கள், தனி நபர்கள் உள்ளிட்ட அரசாங்கம் சாரா செயலாற்றுனர்களின் ஈடுபாட்டையும் சார்ந்துள்ளது. மலேசிய இந்தியப் பெருந்திட்டத்தின் செயல்திட்டம், கள நிபுணர், நிதியுதவிகள், சேவை வல்லுநர்கள் அல்லது இதர வகை பங்களிப்பு உள்ளிட்ட அனைத்து துறைகளின் ஈடுபாட்டையும் சாத்தியமாக்குவதை தளமாகக் கொண்டுள்ளது.

அரசு சாரா அமைப்புகள் மற்றும் இதர சேவை வழங்குநர்களின் திட்டங்களுக்கு முழு அல்லது பகுதி நிதி வழங்குவதன் மூலம், தற்போதுள்ள 4 CCIC பிரிவுகள் ஏற்கெனவே பொது தனியார் கூட்டமைப்பை மேற்கொண்டு வருகின்றன. பெருந்திட்ட செயல்திட்டக் காலத்தில், அவற்றின் இலக்குகளை அடைய, நிதி வழங்கப்பட வேண்டிய திட்டங்களை இலக்காகக் கொள்ளும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையை மேற்கொள்வதன் மூலம் அவை மேலும் வலுப்படுத்தப்படும். அரசு சாரா அமைப்புகள் மற்றும் சேவை வழங்குநர்களிடையே நனிச்சிறந்த நடைமுறைகள் மற்றும் செயல்திறனைப் பகிர்ந்துக்கொள்ளும் தளங்கள் நிறுவப்பட்டு சிறந்த செயல்திறனுடையவர்களை முன்னேற்றி, உதவிக்கரம் நீட்டவோ இதர சேவை வழங்குநர்களுடன் இணையவோ வாய்ப்பளிக்கப்படும்.



பொது தனியார் கூட்டமைப்பின் மற்றொரு வடிவம், குறிப்பாக கொள்கை மற்றும் திட்ட விளைவு குறித்த சமுதாய பங்குதாரர்களின் ஈடுபாடாகும். மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல நிறுவப்படவிருக்கும் செடிக்கின் கலந்தாய்வு மற்றும் ஆலோசனைக் குழுமத்திற்கு, மக்களைச் சென்றடையும் பிரச்சாரம் மற்றும் கடப்பாடு திட்டங்கள் துணை நடவடிக்கைகளாக அமையும். செடிக்–இன் ஒவ்வொரு உட்பிரிவும், துறை வல்லுநர்கள், களப் பணியாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இதர பங்களிப்பாளர்கள் அடங்கிய ஆலோசனை செயலாற்றும் குழுவினை உருவாக்கலாம்.

பொது தனியார் கூட்டமைப்பின் இறுதி வடிவம், பெருந்திட்ட செயலாக்கக் காலக் கட்டத்தில் முனைப்புடன் மேற்கொள்ளப்படவிருக்கும் இணை நிதியுதவி மற்றும்/அல்லது பெருந்திட்டம் வழிமொழியும் முயற்சிகளுக்கும் திட்டங்களுக்குமான இணைச் செயலாக்கமாகும். தனியார் துறை மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (CSR) ஆகியவற்றின் ஆதரவில், துணை நிதியுதவி மூலம் மட்டுமின்றி, தகவல், திட்ட மேலாண்மை மற்றும் பணியாளர்கள் போன்ற பங்களிப்புகளால் பல முயற்சிகள் நன்மைகளைப் பெறவும் வாய்ப்பு உண்டு.

Khazanah Nasional Berhad's Yayasan Amir–க்கு கீழ் இயங்கும் மாதிரி அறக்கட்டளை பள்ளி தொடங்கி பல பங்குதாரர்களைக் கொண்ட மாதிரி திட்டமான Yayasan Peneraju Pendidikan Bumiputera வரை, முயற்சிகளுக்கு ஏற்றவாறு பலவிதமான திட்ட மாதிரிகளை உபயோகிக்கலாம். இதுபோன்ற பொது தனியார் கூட்டமைப்பை ஊக்கப்படுத்தும் வண்ணம், ஊக்கத்தொகை நிறுவப்படும் (எ. கா. ஊக்க வரிவிதிப்பு).



# C. விளைவு & வளர்ச்சிக் கட்டங்கள்

இப்பெருந்திட்டத்தின் வளர்ச்சி மற்றும் தாக்கம் ஆகியவை, வரையறுக்கப்பட்டிருக்கும் தலையாய இலக்குகளின் அடைவைக் கொண்டு மதிப்பிடப்படும். இந்நிலையில், இப்பெருந்திட்ட செயலாக்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகள் சம்பந்தப்பட்டுள்ள அமைச்சுகள் மற்றும் பிரிவுகளுக்கு, முக்கிய செயல்திறன் குறியிலக்குகளாக (KPI–கள்) அமையும்.




இப்பெருந்திட்டத்தில் இடம்பெற்றிருக்கும் பல இலக்குகளுக்குத் தொடக்கப் புள்ளியை அமைக்க, அடித்தளம் நிறுவுவதே 2017–இல் முக்கிய நடவடிக்கையாக அமையும். இப்புதிய செடிக், CCIC –இன் செயல்திறன் கண்காணிப்புப் பிரிவு, CCIC–இன் தகவல் தொடர்பு பிரிவு ஆகியன பெருந்திட்ட செயல்திட்டம் குறித்த வருடாந்திர அறிக்கை வெளியீட்டிற்குப் பொறுப்பேற்கும். செயல்திட்ட அனுபவம் அல்லது புதிய தகவல் அல்லது இதர காரணிகள் அடிப்படையில், இப்பெருந்திட்ட தாக்கத்தின் குறியீடுகள் நேரத்திற்கு நேரம் சீரமைக்கப்படவோ சேர்க்கப்படவோ கூடும்.

பெரும்பான்மையான இலக்குகளை முழுமையாக அடையும் காலவரை இப்பெருந்திட்ட வெளியீட்டின் 10 ஆவது ஆண்டான, 2027ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

பெருந்திட்ட செயலாக்க வளர்ச்சி கட்டங்கள் பின்வருமாறு:

### 2017–2018: ஒன்றிணைத்தல் மற்றும் அடித்தளமிடல்

- பிரிவுகளில் முழு மறுசீரமைப்பு மற்றும் பணியாளர் நியமனம்
- பெருந்திட்ட செயலாக்க கூட்டமைப்பில் அடங்கும் அமைச்சு மற்றும் நிறுவனங்களின் கொள்கை மட்டுமின்றி அதன் வருடாந்திர மற்றும் அரையாண்டுத் திட்டம் & வரவு செலவுத் திட்டங்களில் இப்பெருந்திட்ட குறிக்கோள் மற்றும் இலக்குகளை ஒருங்கிணைத்தல்
- முதன்மை முன்னெடுப்புகள் மற்றும் கூட்டமைப்புத் தளங்களின் தொடக்கம்
- சம்பந்தப்பட்ட குறியீடுகளின் தகவல் சேர்க்கை மற்றும் அடித்தளங்களை அளவிடுதல்

### 2019–2021 முதற்பாதிச் செயலாக்கம்

- அனைத்து முயற்சிகளும், வருடாந்திர மறுஆய்வு மற்றும் மெருகூட்டலுடன் செயல்படுதல்.
- தேவைக்கேற்ப, பெருந்திட்ட இலக்கு சாதனைகள் மற்றும் திருத்தங்கள் குறித்த இடைக்கால மறுஆய்வு.

### 2022–2026: இரண்டாம் பாதிச் செயலாக்கம்

- அனைத்து முயற்சிகளும், வருடாந்திர மறுஆய்வு மற்றும் மெருகூட்டலுடன் செயல்படுதல்.
- முயற்சிகள் மற்றும் இலக்குகளைத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க அமைச்சுகள் / முகவர்களிடம் ஒப்படைக்க துவங்குவதோடு அவற்றை முதன்மைப் படுத்துதல்.
- செடிக் மற்றும் அரசாங்க செயலாக்க முகவர்களின் பங்கை மறுஆய்வு செய்தல்.

### 2027–2030: முதன்மைப் படுத்துதல்

- முயற்சிகள் மற்றும் குறியிலக்குகளை முழுமையாக அரசாங்க செயலாக்க கூட்டமைப்புடன் ஒருங்கிணைத்தல் ஒப்படைத்தல்
- மலேசிய இந்தியப் பெருந்திட்டத்தின் இலக்குகள் அல்லது KPI–கள் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் முகவர்களால் பின்பற்றப்படுவதையும் அவற்றின் செயலாக்கத்தையும் உறுதி செய்யும் வகையில் பிரதமர் துறையின் கீழ் இயங்கும் கண்காணிப்பு செயல்பாட்டுடன் ஒருங்கிணைக்கப்படும்.

# முடிவுக்குறிப்புகள் பட்டியல்

## இயல் 1: அறிமுகம்

| எண் | முடிவுக்குறிப்பு |
|---|---|
| 1,2,3 | 2014 குடும்ப வருமான ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை |
| 4 | இந்த இயலில் வரும் பொருளாதார சவால்கள் எனும் துணைப் பகுதியைப் பார்க்கவும் |
| 5 | Climbing the Ladder; Socioeconomic Mobility in Malaysia. Khazanah Research Institute, October 2016 |
| 6 | மலேசிய குடிமகன் அல்லாதவர் உட்பட எ.கா: புலம்பெயர்ந்த தொழிலாளர்கள். மூலம்: மக்கள் தொகை கணிப்பு, மலேசிய புள்ளி விபரத்துறை. |
| 7,8,9,10, 11,12,13,14 | Moorthy, Ravichandran (2016) "Ethnic Indians in Malaysia: History and Issues of Development" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: KITA, pp. 39–56. |
| 15,16,17,18 | Marimuthu, T (2016) "The Malaysian Indian Community: Continuing Concerns" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: Institute of Ethnic Studies UKM, pp. 95–107. |
| 19 | Nagarajan, S (2009) "Marginalisation and Ethnic Relations: The Indian Malaysian Experience" in Lim, TG; Gomes, A & Rahman, A (Eds.) Multiethnic Malaysia: Past, Present and Future, Petaling Jaya: SIRDC. |
| 20 | மூர்த்தி, op. cit. |
| 21,22,23 | மாரிமுத்து, T, op. cit. |
| 24 | மூர்த்தி, op. cit. |
| 25 | பிரதமர் துறை அமைச்சர், டான் ஸ்ரீ வாஹிட் ஓமார் அம்பாங் எம்பி சூரைடா கமருதீனுக்கு அனுப்பிய குடும்ப வருமானம் மற்றும் செலவுகள் 2014 அறிக்கை எனும் எழுத்துப்பூர்வ பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது. . As reported in "Bumis majority of top earners – but disparity widest, too" (2015, November 26) Malaysiakini. Accessed at: https://www.malaysiakini.com/news/321081 |
| 26 | 2015/2016 பொருளாதார அறிக்கை மலேசிய வருமானப் பிரிவுகளில் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்புகள் பின்வருமாறு: கீழ்நிலை 40%–இன் வருமானம் ரிம.3,855, நடுநிலை 40%–இன் வருமானம் ரிம.3,855 – ரிம.8,319க்கும் இடையில், மேல்நிலை 20%த்தினரின் வருமானம் ரிம.8319க்கும் மேல். |
| 27 | ஜீனி குணகம், 0–1 குறியீட்டின் மூலம் வருமான சமமின்மையைக் குறிக்கும். என் கூடினால், சமமின்மையும் கூடும். |
| 28 | 2014 குடும்ப வருமான ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை |
| 29 | பிரிம் நிதியுதவி, வருமான சமமின்மையும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பங்குகளை குறைக்கும். International studies such as Joumard I, Pisu M, Bloch D (2012), Tackling Income Inequality: The role of taxes and transfers, OECD Journal and the Malaysia Economic Report 2016/2017 |
| 30,31,32 | 2014 குடும்ப வருமான ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை |
| 33 | 2010 மக்கள் தொகை பரவல் மற்றும் அடிப்படை மக்கள்தொகை கணக்கெடுப்பு, மலேசிய புள்ளி விபரத் துறை |
| 34 | மாரிமத்து, op. cit. |
| 35 | தொழிலாளர் வள ஆய்வு அறிக்கை, 2014 |
| 36 | Professor Mahendhiran Nair (2014)"Equitable & Inclusive Economic Development: The Current State of Socioeconomic Development of Malaysian Indians" |
| 37 | Lin, Mui Kiang (2016) "Millennium Development Goals & The Indian Community: Focus On The Bottom 40 Percent" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: Institute of Ethnic Studies UKM, pp. 239–262. |
| 38 | 2015 இனம் மற்றும் வயது வாரியான வேலைவாய்ப்பு விகிதங்கள், தொழிலாளர் வள ஆய்வு, மலேசிய புள்ளி விபரத் துறை, தொழிலாளர் வள ஆய்வு அறிக்கை, 2014 |

## இயல் 1: அறிமுகம்

| எண் | முடிவுக்குறிப்பு |
| --- | --- |
| 39 | தொழிலாளர் வள ஆய்வு அறிக்கை, 2014 |
| 40 | மலேசிய நிறுவன ஆணையம் (SSM), 2009 - 2013 |
| 41 | 11ஆவது தேசிய வரவு செலவுத் திட்டத்திற்காக, சீட் வழங்கிய மலேசிய இந்தியர் பொருளாதார மேம்பாட்டு அறிக்கை |
| 42 | 2010 குடும்பத்தினர் இயல்புகள் ஆய்வு, மலேசிய புள்ளி விபரத்துறை |
| 43 | Muhammed Abdul Khalid, PhD, UKM, (2011) "NEP to NEM: Who Cares? Wealth Distribution in Malaysia" |
| 44 | மக்களின் கல்வி மற்றும் சமூக இயல்புகள் (2010) மலேசிய புள்ளி விபரத் துறை |
| 45 | Bennett, J (2008) Early Childhood Services in the OECD Countries: Review of the literature and current policy in the arly childhood field: UNICEF Innocenti Research Centre and Duncan, JG, Magnuson, K (2013) Investing in Preschool Programs: Journal of Economic Perspective Vol.27 No.2 pp. 109–132 (24) |
| 46 | தமிழ்ப்பள்ளிகளின் எதிர்காலத்திற்கான மேம்பாட்டுத் திட்ட வரைவு (பிடிஎஸ்டி) 2014 |
| 47 | மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013–2025 |
| 48 | டத்தோ டாக்டர்.என்.எஸ் ராஜேந்திரனுடனான நேர்க்காணல் (பிடிஎஸ்டி & செடிக்) |
| 49 | மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013–2025 |
| 50 | கல்வி அமைச்சு, ஆசிரியர்களின் சம்பளத்திற்கான மேம்படுத்தப்பட்ட இயங்குமுறை செலவினங்கள் இதில் உள்ளடங்காது |
| 51 | அரசாங்க உதவி பெறும் பள்ளிகள், அரசு சார்பற்ற பங்குதாரர்களால் நிறுவப்பட்டு அரசின் பகுதி உதவியுடன் இயங்கி வருகிறது. அரசாங்கப் பள்ளிகள் கல்வி அமைச்சின் கீழ் இயங்குகிறது |
| 52 | Nagappan, R; Maniam, M; Periasamy, S; Rao, R; Devarajoo, K & Velu, J (2012) Exploring Remove Classes in Malaysia; A Study to Evaluate Their Effectiveness Kuala Lumpur: EWRF. |
| 53 | கல்வி அமைச்சு |
| 54,55 | 2014– கல்வி அமைச்சின் கீழ் பதியப்பட்ட பள்ளிகளில் இந்திய மாணவர்களின் பதிவு புள்ளியியல், மலேசியக் கல்வி அமைச்சு |
| 56 | பொதுப் பல்கலைக்கழகங்கள், உயர்க்கல்வி பொது பல்கலைக்கழகங்கள் (IPTA) எனவும் குறிப்பிடப்படுகிறது |
| 57 | Ismail, Noor Azina (2011) "Graduates' Characteristics and Unemployment: A Study Among Malaysian Gradu–ates", International Journal of Business and Social Science, Vol. 2 No. 16, p. 94. |
| 58 | டிரா எனப்படும் Development of Human Resources for Rural Areas' அரசு சார்பற்ற அமைப்பு அடையாள ஆவணப் பிரச்சினைகளைக் கையாளுகிறது. நாடற்றவர், தற்காலிக அடையாள அட்டை (சிவப்பு நிற அடையாள அட்டை) இருந்தும் மலேசியாவில் தங்களின் பிறப்பை நிரூபிக்கவும் நிரந்த அடையாள ஆவணங்களை பெறவும் பிரச்சினைகளை சந்திக்கின்றனர். இருப்பினும், நாடு தழுவிய நிலையில் அடையாள ஆவணங்கள் இல்லாத இந்தியர்களின் சரியான எண்ணிக்கை கணக்கெடுப்பு அமலாக்க அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| 59 | குறைந்த செலவிலான வீடுகளில் தோட்டத் தொழிலாளர்களை மறுகுடியேற்ற, தோட்ட நிறுவனங்கள் மற்றும் மாநில அரசு சமீபத்திய ஆண்டுகளில் பெருமளவு முயற்சித்து வருகிறது, பல தரப்புகளுடன் நீடித்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின் பிரச்சினைகளின் அடிப்படைக்கேற்ப தீர்வுக் காணப்படுகிறது. |
| 60 | இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (2015), தொழிலாளர் துறை |

## இயல் 1: அறிமுகம்

| எண் | முடிவுக்குறிப்பு |
| --- | --- |
| 61 | பலக் காலங்களாக மறுகுடியேற்பு செய்யப்படாத இந்தியர்கள் இன்றளவும் புறம்போக்கு பகுதிகளிலும் தற்காலிக நீண்ட வீடுகளிலும் வசிக்கின்றனர். இவர்களின் எண்ணிக்கை தெரியா விட்டாலும், அரசின் பூஜ்யம் புறம்போக்கு வீடுகள் என்ற கொள்கைக்கேற்ப இவர்களின் எண்ணிக்கை குறைந்துக் கொண்டே வருகிறது என்பது களப்பணியாளர்களின் கருத்து. |
| 62 | 10ஆவது மலேசியத் திட்டப் பரிந்துரைகள்: மலேசிய இந்தியர்கள் & புதிய பொருளாதார மாதிரி, இன ஆய்வுகள் இன்ஸ்டிடுயூட், மலேசிய தேசியப் பல்கலைக்கழகம் (யூகேஎம்) |
| 63 | 2014 புள்ளிவிபர அறிக்கை. மலேசிய சமூகநலத் துறை |
| 64 | Attributed to Bukit Aman's CID director, as reported in "Indian gangs originated from Chinese triads" (2013, August 27) The Sun Daily. Accessed at: http://www.thesundaily.my/news/808352 |
| 65 | அரச மலேசிய காவல் துறையுடன் நேர்க்காணல் |
| 66 | கொலை, கொலை முயற்சி, கற்பழிப்பு, கூடா ஒழுக்கம், ஆயுதக் கொள்ளை அல்லது வன்மம் உட்பட்ட குற்றச்செயல்கள். குறிப்பு: இதர இனத்தினர் வன்முறை குற்றச்செயல் கைதுகளில் எஞ்சியுள்ள 7 விழுக்காட்டினராவர் |

## இயல் 2: அடிப்படைத் தேவைகளை அணுகுதல்

| எண் | முடிவுக்குறிப்பு |
| --- | --- |
| 67 | மனிதர்களின் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் உடல்நலம், கல்வி, வீட்டு வாடகை, துணி, போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு வசதியின்றி அவதியுறுவதே வறுமை என மலேசிய அரசாங்கம் வறுமை என வகைப்படுத்தியுள்ளது. இப்பிரிவுகளில் மிகக்குறைந்த நிலையையே வறுமைக்கோடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூலம்: மலேசிய நகர்ப்புற வறுமையும் சமமின்மையும்: அயலார் சார்ந்த சமூக சேவைத் திட்டத்தின் மூலம் மலேசிய இந்தியர்களை மேம்படுத்துதல், Chamhuri Siwar எழுதிய 'Contemporary Malaysian Indians' எனும் புத்தகம் |
| 68 | வறியநிலை ஏழ்மை என்பது வாழ்வாதாரத்திற்கான அடிப்படைத் தேவை ஆதரவின்றி அவதியுறுவதைக் குறிப்பதாகும். வறுமைக்கோட்டின் பாதியளவில் அதாவது ரிம.465இல் இது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மூலம்: 11ஆவது மலேசியத் திட்டம் |
| 69 | இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்கள் எண்ணிக்கை (2015), மலேசிய தொழிலாளர் துறை |
| 70 | அரசாங்க அதிகாரிகள், அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் இதர கூட்டமைப்பாளர்களுடனான நேர்க்காணல்கள் |
| 71 | 11ஆவது மலேசியத் திட்டத்தின் இலக்கிற்கேற்ப 2020க்குள் கீழ்நிலை வருமானம் பெறும் 40% இந்தியர்களின் நிகர மற்றும் சராசரி மாத வருமானத்தை இரட்டிப்பாக்குதல் |
| 72 | இ–காசே தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட மலேசிய ஏழை இந்தியக் குடும்பங்களின் சேமிப்பின் தொடர்பான ஆய்வின் அடிப்படையில் 2017இல் அடித்தளம் நிர்ணயிக்கப்படும் |
| 73 | 2017ஆம் ஆண்டுக்கு முந்தைய பதிவுகள் |
| 74 | 2016ஆம் ஆண்டு முடிவின் அடித்தள அடிப்படையில் |
| 75 | வறிய நிலை மொத்த குடும்பங்களில் 0.1% ஆகும். மூலம்: 11ஆவது மலேசியத் திட்டம் |
| 76 | வறுமைக் குறியீட்டில் ஏற்பட்டிருக்கும் பல பரிமாண மாற்றத்தில் பிரதிபலிக்கிறது. 11ஆவது மலேசியத் திட்டம் |
| 77 | சராசரி குடும்ப அளவு 4.3 அங்கத்தினர் ஆவர். மூலம்: செயலாக்க ஒருங்கிணைப்புப் பிரிவு |
| 78 | ஒவ்வொரு குடும்பத்தாரின் வறுமைக் கோட்டின் நிலை இடம், குடும்ப அளவு, குடும்பத்தின அங்கத்தினர் போன்றக் காரணங்களால் மாறுபட்டிருக்கும். ஒரு குடும்பம் வறுமைக் கோட்டிற்கு மேல் சம்பாதித்தாலும் கூட ஏழைகள் என கருதப்படுவர். எ.கா. அவர்களது தனிப்பட்ட வறுமைக் கோடு, குடும்பத் தன்மைகளையும் சார்ந்துள்ளது. |

## இயல் 2: அடிப்படைத் தேவைகளை அணுகுதல்

| எண் | முடிவுக்குறிப்பு |
|---|---|
| 79 | குடும்ப வருமான ஆய்வு 2014. மலேசிய புள்ளி விபரத் துறை |
| 80 | குடும்ப வருமான ஆய்வு, 2012. மலேசிய புள்ளி விபரத் துறை. 19,000 குடும்பங்களுக்கிடையிலான வித்தியாசம் குடும்பத்தின் அளவு, அமைப்பிடம் மற்றும் இதர காரணிகளின் வேறுபாடுகளை பிரதிபலிக்கிறது. |
| 81 | பூமிபுத்ராக்களின் வறுமைப் பிரச்சினை நகர்ப்புறம் மற்றும் புறநகருக்கிடையில் சரிசமமாக வேறுபட்டுள்ளது. மூலம்: குடும்ப வருமானம் மற்றும் அடிப்படை வசதிகள் ஆய்வு 2014 |
| 82 | செயலாக்க துறைகளின் திட்டத் தேர்வுகளின் மூலங்களில் இ–காசே முதன்மையாகும். மூலம் செயலாக்க ஒருங்கிணைப்புப் பிரிவு |
| 83 | உதாரணத்திற்கு, பிரிம் பொதுமக்கள் விழிப்புணர்வுக்கு காரணம், எளிதான மொழி மற்றும் பல்வேறு ஊடகங்களில் நடத்தப்பட்ட பிரச்சாரங்கள். மூலம்: களப் பணியாளர்களுடனான நேர்க்காணல் |
| 84 | செயலாக்கத் துறைகள் தங்களுக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி அடையாள ஆவணமற்ற இந்தியர்களுக்கு உதவலாம். |
| 85 | அடையாள ஆவணங்கள் இயல்4, சமூகத்துடன் சேர்ந்திருத்தலை அதிகரித்தல்–இல் முழுமையாக கவரப்பட்டுள்ளது |
| 86 | தரவுத்தளத்திலுள்ள பதிவு நேரடியாக உதவிகளுக்கு மாற்றலாகாது, மாறாக செயல்திட்ட துறைகள் திட்டத்திற்கேற்றாற் போல் தேர்ந்தெடுப்பர். |
| 87 | மூத்த குடிமக்கள், ஏழைக் குழந்தைகள், உடல் செயலிழப்பு, போலீஸ் அல்லது இராணுவத்தைச் சேர்ந்த வாழ்க்கைத் துணையை இழந்தவர்களளுக்கு ஆக்கப்பூர்வமான சமூக நல உதவிகளை வழங்கும் 1 மலேசிய மக்கள் சமூகநலத் திட்டம் (KAR1SMA) மூலம்: 1.மலேசியா.கோம் |
| 88 | மகளிர், குடும்ப மற்றும் சமூக நல மேம்பாட்டு அமைச்சு (KPWKM) |
| 89 | உதாரணத்திற்கு, பயன்படுத்தப்பட்ட மொழி |
| 90 | அரசாங்க அதிகாரிகள் மற்றும் கள தொழிலாளர்களுடனான நேர்க்காணல்கள் |
| 91 | 'ரிந்திஸ்' திட்ட நிர்வாக விதிமுறைக் குறிப்புகள், 2 வருடத் திட்டம், சமூகநலத் துறை, 2014 |
| 92,93 | 2016 ஜூலை முதல் செப்டம்பர் வரை தீபகற்ப மலேசியாவில் 2,087 கீழ்நிலை வருமானம் பெறும் மலேசிய இந்தியர்களுடன் நேருக்கு நேராக நடத்தப்பட்ட ஆய்வு. எம்ஐபி செயலகம் |
| 94 | 11ஆவது மலேசியத் திட்ட இலக்கிற்கேற்ப |
| 95 | இ–காசே தரவுத்தளத்தில் பதிவு செய்யப்பட்ட மலேசிய ஏழை இந்தியக் குடும்பங்களின் சேமிப்பின் தொடர்பான ஆய்வின் அடிப்படையில் 2017இல் அடித்தளம் நிர்ணயிக்கப்படும் |
| 96 | பெருந்திட்ட செயலாக்க பிரிவு மற்றும் பொருளாதார அமைச்சு உள்ளடக்கிய குழு பொருத்தமான விகிதத்தை நிர்ணயித்தல் |
| 97 | குடும்ப இயல்புகள் ஆய்வு,2010 மலேசிய புள்ளி விபரத் துறை |
| 98 | 'NEP to NEM: Who Cares? Wealth Distribution in Malaysia', Muhammed Abdul Khalid, UKM, 2011 |
| 99 | 11ஆவது மலேசியத் திட்டம் |
| 100 | 2016 ஜூலை முதல் செப்டம்பர் வரை தீபகற்ப மலேசியாவில் 2,087 கீழ்நிலை வருமானம் பெறும் மலேசிய இந்தியர்களுடன் நேருக்கு நேராக நடத்தப்பட்ட ஆய்வு. எம்ஐபி செயலகம்<br>வருமான ஆவணங்கள் குறைவு, குறிப்பாக கூலி அல்லது நாள் அடிப்படை வேலைகள் உட்பட காரணங்களாகும் |
| 101 | பொது மக்களின் கவனத்தால், சமீபகாலமாக தோட்டப்புற நிறுவனங்கள் மற்றும் மாநில அரசுகள் தோட்டத் தொழிலாளர்களை மலிவு விலை வீடுகளுக்கு மறுகுடிப்பெயர்வு செய்யும் முயற்சிகளில் முன்னேற்றம் காண்கிறது. |
| 102 | இது பெரும்பாலும் பல தரப்பட்ட பேச்சுவார்த்தைக்குக்கான வெற்றி தனிப்பட்ட பிரச்சினையின் அடிப்படையிலே சார்ந்திருக்கும் இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (2015) மலேசியத் தொழிலாளர் துறை |

## இயல் 2: அடிப்படைத் தேவைகளை அணுகுதல்

| எண் | முடிவுக்குறிப்பு |
|---|---|
| 103 | இன ரீதியிலான தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை (2015) மலேசியத் தொழிலாளர் துறை |
| 104,105 | தேசிய தோட்டத்துறை தொழிற்சங்க வேலையாட்கள் மற்றும் கள நிபுணர்களுடன் நேர்க்காணல் |
| 106 | தற்போதைய தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டுடைமை உதவிப்புரிய, தொழில் வளத்துறை மேற்கொண்ட முயற்சியாகும். மூலம்: “தோட்ட தொழிலாளர்களின் சமூகப்பொருளாதார நிலை மற்றும் SKRE–உடனான தொடர்புக் குறித்த ஆய்வு”, தொழில்வளத் துறை, 2014 |
| 107 | விண்ணப்பதாரர்கள், வங்கியாளர் பங்குதாரர்களால் கடன் மதிப்பீட்டிற்கும் ஒப்புதலுக்கும் உட்பட்டுள்ளனர், சிம்பானான் நேஷனல் வங்கி. உயர் நிராகரிப்பு விகிதங்களால் (81%) விதிமுறைகள் மறு ஆய்வு செய்யப்படலாம் |
| 108 | நகர்ப்புற நல்வாழ்வு, வீடமைப்பு, ஊராட்சித் துறை அமைச்சு |
| 109 | குறைந்தப்பட்ச வருமான நிலை, வேலை நிலை மற்றும் தோட்ட அளவில் நிலவி வரும் காரணம் |
| 110 | 2017ஆம் ஆண்டுக்கு முந்தைய பதிவுகள் |
| 111 | அரசாங்க அதிகாரிகள், அரசு சார்பற்ற அமைப்புகள் மற்றும் இதர கூட்டமைப்பாளர்களுடனான நேர்க்காணல்கள் |
| 112 | Aspirations of Malaysian Indians Towards 2020’ written by Dr. Denison Jayasooria, 2015 |
| 113 | மலேசிய குடும்பநலன் குறியீடு , 2011 |
| 114,115,116 | சமூகநலத்துறை கணக்காய்வு அறிக்கை 2014 |
| 117 | ஏஜென்சிகள் மற்றும் சமூகத் தொழிலாளர்களுடனான நேர்க்காணல்கள் |
| 118,119 | அரசாங்க அமைப்புகளுடன் நேர்க்காணல்கள் |
| 120 | ‘Binge Drinker’ என்றால் ஒற்றை அமர்வில் (ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட) மதுபானங்களை அதிக அளவில் எடுத்துக்கொள்பவரைக் குறிக்கிறது. ‘Current Drinker’ கடந்த 12 மாதங்களாக மதுபானங்களை உட்கொள்ளபவர் என்று வரையறுக்கப்படுகிறது.மூலம்: தேசிய சுகாதார ஆய்வு 2015 – தொற்றாத நோய்கள், அபாய காரணிகள் மற்றும் மற்றும் சுகாதார சிக்கல்கள், சுகாதார அமைச்சு |
| 121 | 2016ஆம் ஆண்டு முடிவின் அடித்தள அடிப்படையில் |
| 122 | அதிக குடிப்பழக்கத்திற்கு எதிரான தலையீடுகள் ‘சமூகத்துடன் சேர்ந்திருக்கும் நிலையை அதிகரித்தல்’ இயலில்வழங்கப்பட்டுள்ளது |

## இயல் 3: ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்

| எண் | முடிவுக்குறிப்பு |
|---|---|
| 123 | Haveman, Robert & Smeeding, Timothy (2006) “The Role of Higher Education in Social Mobility” The Future of Children Vol. 16 No. 2 pp. 125–150 |
| 124 | மக்களின் கல்வி மற்றும் சமூகத் தன்மைகள் (2010) மலேசிய புள்ளி விபரத் துறை |
| 125 | மழலையர் கல்வி, உள்கட்டமைப்பு, வசதிகள், ஆசிரியர்கள் & ஆசிரியர் பயிற்சி, மாணவர்கள், கல்வி அடைவு, பள்ளிகளின் அமைப்பிடங்கள், பாடத்திட்டம், சிறப்புக் கல்வி, தலைமைத்துவம், பெற்றோர் மற்றும் சமூக ஈடுபாடு மற்றும் நிதி விவகாரங்கள் உட்பட்ட பகுதிகளில் நிலவும் இடைவெளி |
| 126 | பிடிஎஸ்டி |
| 127 | இந்திய சமுதாயத்தின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுப் பிரிவு |

# இயல் 3: ஒவ்வொரு குழந்தையின் இயல் ஆற்றலை வெளிக்கொணர்தல்

| எண் | முடிவுக்குறிப்பு |
|---|---|
| 128 | TVET–இல் அடையாளங்காணப்பட்டவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான சிறார்கள் & இளையோர் திட்டங்களில் நுழைவுப் பெற்றவர்கள் பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களின் எண்ணிக்கையில் உட்படுத்தப்படவில்லை. |
| 129 | 2016/17 அடிப்படைகளுக்கெதிராக அளவிடப்பட்டுள்ளது |
| 130 | 2020க்குள் 100% பாலர் பள்ளி மாணவர்கள் நுழைவை உறுதிப்படுத்தும் மலேசியக் கல்விப் பெருந்திட்ட இலக்கிற்கேற்ப அமைந்துள்ளது |
| 131 | களப் பயிற்சியாளர்கள் அடையாளங்கண்ட குடும்ப சூழல், பொருள் பயன்பாடு, தனிப்பட்ட மனநிலை போன்ற ஆபத்துக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு, ஆபத்து மதிப்பீட்டுக் கருவிகள் மேம்படுத்தப்பட்டு 2017/18 செயல்படுத்தப்பட வேண்டும். |
| 132 | Greenstone, M; Looney, A; Patashnik, J; & Yu, M (2013) Thirteen Economic Facts about Social Mobility and the Role of Education, Policy Memo for The Hamilton Project |
| 133 | "Class and family in America: Minding the nurture gap" (2015, March 21) The Economist. Accessed at: http://www.economist.com/news/books-and-arts/21646708-social-mobility-depends-what-happens-first-years-life-minding-nurture-gap |
| 134 | Climbing the Ladder; Socioeconomic Mobility in Malaysia. Khazanah Research Institute, October 2016 |
| 135 | "தேசிய நிலை மற்றும் இந்தியர்களின் யூபிஎஸ்ஆர் அடைவுநிலை", மலேசிய கல்வி அமைச்சு |
| 136 | "தேசிய நிலை மற்றும் இந்தியர்களின் யூபிஎஸ்ஆர் அடைவுநிலை", மலேசிய கல்வி அமைச்சு |
| 137 | Periasamy, Santhi (2016) "Underachieving Youths and the Education System: A Case Study of the EWRF Research Programs" in Denison, J & Nathan, KS (Eds.) Contemporary Malaysian Indians, Bangi: KITA, pp. 409–425; CHILD submission for the 11th Malaysia Plan |
| 138 | TVET–இல் அடையாளங்காணப்பட்டவர்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான சிறார்கள் & இளையோர் திட்டங்களில் நுழைவுப் பெற்றவர்கள் பள்ளிப் படிப்பை நிறுத்தியவர்களின் எண்ணிக்கையில் உட்படுத்தப்படவில்லை. |
| 139 | 2016/17 அடிப்படைகளுக்கெதிராக அளவிடப்பட்டுள்ளது |
| 140 | எம்ஜபி செயலாக்கப் பிரிவுகளைப் பற்றியக் கூடுதல் தகவல் செயலாக்க இயலில் வழங்கப்பட்டுள்ளது |
| 141 | Yoshikawa, H; Weiland, C; Brooks-Gunn, J; Burchinal, MR; Espinosa, LM; Gormley, WT;... Zaslow, MJ (2013) Investing in Our Future: The Evidence Base On Preschool Education Ann Arbor: SRCD |
| 142 | பிடிஎஸ்டி & செடிக்–உடன் நேர்க்காணல் |
| 143 | தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டிற்கான எதிர்காலத் திட்ட வரைவு (பிடிஎஸ்டி) 2014. |
| 144 | மலேசியக் கல்விப் பெருந்திட்டம் 2013–2025 |
| 145 | புறநகர், வட்டார மேம்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் சமூக மேம்பாட்டுத் துறை, புறநகரிலுள்ள மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ளது. |
| 146 | "இனரீதியிலான கல்வியில் சேர்க்கை மற்றும் அடைவுநிலை தரவுகள்", மலேசிய கல்வி அமைச்சு |
| 147 | "இனரீதியிலான கல்வியில் சேர்க்கை மற்றும் அடைவுநிலை தரவுகள்", மலேசிய கல்வி அமைச்சு |
| 148 | KEMAS, PERPADUAN, PASTI, JPNIN உட்பட இதர பாலர்பள்ளிகளையும் அரசாங்கத்துறைகள் நடத்தி வருகின்றன. |
